

வது 60 அகவையில்

# உதயநாயகன்

உதயன், சுடர்ஒளி பத்திரிகைகளின் நிறுவுனரும், உதயன் குழுமத் தலைவரும்,
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

**கௌரவ. ஈஸ்வரபாதம் சரவணபவன்**

**அவர்களின்**

மணிவிழாச் சிறப்பிதழ்

உதயன், சுடர்ஒளி பத்திரிகைகளின் நிறுவுனரும், உதயன் குழுமத் தலைவரும்,
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

## கௌரவ. ஈஸ்வரபாதம் சரவணபவன்
அவர்களின்



# மணிவிழாச் சிறப்பிதழ்

## 12.07.2014

# நுழைவாயிலில்..

**அ**றுபது வயது பராயத்தை அடைந்ததும், மணி விழாக் கொண்டாடும் பாக்கியம் அனைவருக்கும் கிடைக்காது. பல வேதனைகளைச் சந்தித்துச் சாதனைகளைப் படைத்த, அதுவும் சிலருக்கே அந்த யோகம் வாய்க்கப்பெறுவது உண்டு. அவ்வேளையில் அவர்களது வரலாறு ஆவணமாக வெளியிடப்படுவதும் உண்டு. அதாவது அவர் ஆற்றிய, ஆற்றுகின்ற செயற்பாடுகள் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்படுவது உண்டு.

அந்தவகையில் நினைத்ததை சவால்களின் மத்தியிலும் நடத்தியே முடிக்கும் மணிவிழா நாயகனின் மணிவிழாவை கொண்டாட உத்தேசித்து, அவரது அன்பர்கள் சிலர் திரு. சரவணபவன் அவர்களை அணுகியபோது, பலத்த தயக்கம் மற்றும் ஆழ்ந்த மௌனத்தின் பின்னர், கடந்த 15.11.2013 இற்கு முன் பின்னதாகத்தான் 'ஓரளவு பச்சைக் கொடி' காட்டினார்.

அவரது பிறந்த தினம் 15.12.2013. அதற்குள் மலர் ஒன்றை ஆக்குவதற்கும் வெளியிடவும் கால அவகாசம் போதாது என்பதை இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்ட எவரும் அறிவர். கடந்த சுமார் 30 ஆண்டுகால அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளில் அவரது வரலாறு, சிறுவர் முதல் பெரியவர்வரை, நிலத்திலும், புலத்திலும் அறியப்பட்டதொன்றாகவே திகழ்கின்றது. இந்த மலர் ஒரு வரலாற்றுப் பொக்கிஷமாக, காவியமாக அமையும் என்ற எதிர்பார்ப்போடு ஆக்கப்படவில்லை. 'மல்லிகை மலருக்கு விளம்பரம் அவசியம் இல்லை' என்ற போதிலும், மணிவிழாவின்போது மலர் ஒன்றும் வெளியிடப்படுவது 'மரபு' என்பதற்கமைய, குறுகிய - மிகக் குறுகிய கால எல்லையுள், இம்முயற்சியில் ஈடுபட்டோம்.

எனினும் தெய்வத்தை நம்பிச் சில செயலில் இறங்குவதுபோல, இதில் ஈடுபடத் தொடங்கினோம். இது தொடர்பில் நாம் சந்தித்த எவரும் மறுப்புச் சொல்லாது, தமது அன்பையும் ஆதரவையும் தெரிவித்தமை ஊக்கம் தருவதாக இருந்தது.

இதிலடங்கும் பல படங்களும் விடயங்களும் எங்கோ பார்த்தவை, கேட்டவை, வாசித்தவை போன்ற உணர்வு தங்களுக்கு ஏற்படும். அது தவிர்க்க முடியாதவை. ஏனெனில் தாங்கள் தரிசித்தவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட சில மட்டுமே இவை. இதிலடங்காதவை பல. பலரிடமும் வாழ்த்துச் செய்திகளும், ஆக்கங்களும் பெற்று இதில் சேர்க்க விருப்பம் கொண்டிருந்தபோதிலும் கால அவகாசம் கருதி அவை தடைப்பட்டுப் போயின. மன்னிக்கவும்.

குறுகிய இக்கால எல்லைக்குள் எம்மால் முடிந்ததைத் தர முயற்சித்தோம். ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், ஆக்கங்கள் வழங்கியோர், பக்க வடிவமைப்புச் செய்தோர் மற்றும் துரித கதியில் அச்சிட்டோர் ஆகியோருக்கும் எமது உளங் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

**மணிவிழா மலர்க்குழு**

நாடாளுமன்ற உறுப்பினரும்,
உதயன் முகாமைத்துவப் பணிப்பாளருமான

# கௌரவ ஈ.சரவணபவன் அவர்களது

# மணிவிழாச் சபை

**குழு உறுப்பினர்கள் :**

ம.வ.கானமயில்நாதன்
*(உதயன் பிரதம ஆசிரியர்)*

பேராசிரியர் க.தேவராஜா
*(தலைவர், வணிகத்துறை,
வணிக முகாமைத்துவப் பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்)*

பேராசிரியர் கி.விசாகரூபன்,
*(தலைவர், தமிழ்த் துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

பேராசிரியர் மா. சின்னத்தம்பி,
*(கல்வியில் துறை,
யாழ். பல்கலைக் கழகம்)*

பேராசிரியர். கே. குகபாலன்,
*(புவியிற் துறை, பல்கலைக் கழக
கவுன்சில், உறுப்பினர்,
யாழ். பல்கலைக்கழகம்,
சமாதான நீதவான் (இலங்கை)*





# அருளாசிச் செய்தி

உலகெலாம் ஒளிபரப்பி நிற்கும் சூரிய பகவானின் பெயரில் 'உதயன்' நாளிதழாக மலர்ந்து தினமும் நாம் ஆவலோடு பார்க்கின்ற பத்திரிகையாக அதனை வளர்த்தெடுத்து, அதன் நிர்வாக இயக்குநராக விளங்குகின்ற எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய திரு.ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்கள் மணிவிழாக் காண்பதை யிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

ஊடகத்துறையில் சிறந்து விளங்குவதோடு எல்லோராலும் விரும்பி வாங்கிப் பார்க்கின்ற மதிப்பார்ந்த பத்திரிகையாகிய 'உதயன்' நாளிதழின் இயக்குநரின் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு இறும்பூதெய்துகின்றோம்.

திரு. சரவணபவன் அவர்கள் எங்களது ஆதீனத்துடன் நெருங்கிய தொடர்புடையவர். ஆரம்ப காலந்தொட்டு எம்முடன் குடும்ப சகிதம் வந்து எமது ஆன்மீகப் பணிக்கும் சமுதாயப் பணிக்கும் உறுதுணையாக உதவி வருபவர். அவரது நல்லெண்ணமும் பரந்த நோக்கமும் சமூக அபிவிருத்திக்கும் கல்வி வளர்ச்சிக்கும் உதவும் மனப்பாங்கும் எல்லோரும் வாழவேண்டும் என்று அவர் விரும்பும் பண்பும் பாராட்டப்படவேண்டிய சிறப்பம்சங்களாகும்.

அவருடைய அறப்பணி மேன்மேலும் வளர்ந்து சிறப்புடன் திகழ்வதோடு ஊடகப் பணியும் சமூக, கல்விப் பணியும் மேலோங்கி இன்னும் பல அபிவிருத்திக்கு ஆணிவேராக நிற்கவேண்டும். அதற்கு இறைவன் அருள்பாலிக்க வேண்டும்.

எல்லாம் வல்ல இறைவன் நல்ல தேகாரோக்கியத்தையும் மனத்துணிவையும் அவருக்குத் தொடர்ந்து நல்க வேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இன்று மணிவிழா நாயகனாக விளங்கி அனைத்து மக்களின் பேராதரவோடு 'உதயன்' நாளிதழ் சிறக்க முற்று முழுதாகப் பணியாற்ற நல்லைக் குருமணியின் பாதங்கள் பணிந்து ஆசி வழங்கி சீரோடுஞ் சிறப்போடும் வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குருமுதல்வர்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்.




# மக்கள் மனம் நிறைந்த நாளிதழின் நாயகனுக்கு ஆசிகள்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ் என்று அழைக்கப்படும் உதயன் நாளிதழின் முகாமை யாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈ.சரவணபவன் அவர்களின் 60ஆவது மணி விழாவில் நானும் ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இலங்கைத் தமிழ் மக்களின் சோகம் நிறைந்த வரலாற்றுடன் உதயனும் பங்கெடுத்திருக்கின்றது. அன்றாடச் செய்திகளை உடனுக்குடனே நடு நிலையில் நின்று உண்மைக்குச் சான்று பகர்ந்து, செய்திகளைப் பிரசுரிக்கும் நாளிதழ்களின் வரிசை யில் உதயன் பத்திரிகை மூலம் தனது திறமையைக் கொண்டு சிறந்த பணியாளனாக ஈ.சரவணபவன் அவர்கள் திகழ்வது மட்டுமன்றி நாடாளுமன்ற உறுப்பினராகத் தனது சேவையினை நாட்டுக்கும், சமூகத்துக்கும் ஆற்றிவருகின்றார் என்பது யாவரும் அறிந்த உண்மை.

மனித வாழ்க்கையில் அகவை 60ஐ அடை வதற்கு இறைவன் இவருக்கு ஆசி வழங்கியுள் ளார். இவருடைய சமூக சேவைகளையும், நற்பணி களையும் நாம் அறிவோம். இம்மணிவிழா நாயகன் இன்றுபோல் என்றும் நலமுடன் வாழவும் அவருடைய பணி சிறப்பாகத் தொடரவும் உடல், உள நலம்பெற்று வாழவும் இறையாசீர் கூறி நிற்கின்றேன்.

**பேரருட் திரு. இ.தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ். ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.



## வாழ்ந்து வளம் பெறுக பல்லாண்டு

**அ**றுபதாவது அகவையில்

அகலக்கால் பதிக்கும்

அவைமன்றத் தலைவர்

அனைத்து மக்கள் தேவையை

அறிந்து சேவையாற்றுபவர்

அரசியல் பிரமுகராக

அறிமுகமான அறிவுடையவர்

ஈ.சரவணபவன் என்பதை

எடுத்தியம்பி இன்னும் அவர்

எம்மத்தியில் பல்லாண்டு காலம்

வாழ்ந்து வளம் பல பெற

வாழ்த்துகின்றேன்

அவர் காத்திரமான சேவை வளரவும்

பிரார்த்திக்கின்றேன். இறைவனை!

**மௌலவி. அல்ஹாஜ் ஏ.எம்.ஏ.அஸீஸ் (காஸிமி)**
யாழ்/கிளி.மாவட்ட உலாமா சபைத் தலைவர்






விழாநாயகனை இம்மண்ணுக்கு ஈந்துவந்தளித்த பெருந்தகைகள்




யாழ். இந்துக் கல்லூரியின் குருளைச் சாரணனாக...



நல்லறமாம் இல்லறத்தில் மனைவி யசோதையுடன் இணைந்தபோது...



குழந்தை லக்ஷ்மியுடன்...



யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க
(Old Student Association not OBA) கிளை அமெரிக்காவில்
ஆரம்பிக்கப்பட்டபோது உறுப்பினர்களுடன்
விழா நாயகன்.




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு கூடைப் பந்தாட்டத்
திடலை அமைத்துக்கொடுத்து, அதனைக் கல்லூரி நிர்வாகத்திடம்
கையளித்த நிகழ்வில் விழாநாயகன்



அமெரிக்காவின் புகழ்பூத்த சர்வதேச விருந்தினர் தலைமைத்துவ நிகழ்வில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடன்...



ஸ்கொட்லாந்தில் உள்ள றோட்டரிக் கழகத்தின் உறுப்பினர்களுடன் சரவணபவனின் ஒரு இராப்போசனம்.



இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சபை 'துணிச்சல்மிக்க பத்திரிகை' விருதை உதயன் பத்திரிகைக்கு வழங்கியது. அந்த விருதை பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டபீல்ட்டுடன் சேர்ந்து உதயன் ஆசிரியர் பீடத்தினரிடம் கையளிக்கிறார் சரவணபவன்.




1996இல், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடன் அரசியல் களநிலவரம் குறித்து பேச்சு நடத்தியபோது...



அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பதில் செயலாளர்
மற்றும் அமெரிக்கத் தூதருடன் உதயன் அலுவலகத்தில்...



சர்வதேச பிரதிநிதிகளுடன் தீவிரமான அரசியல்
கலந்துரையாடலில்...



அமைதிக்கான ஒரு சூழலில் நோர்வே சிறப்புத் தூதுவர் ஹன்ஸ் போவர் உதயன் பத்திரிகைக்கு வருகைதந்து சரவணபவனுடன் ஆலோசிக்கிறார்.




சர்வதேச பிரதிநிதிகளுடனான அரசியல் கலந்துரையாடல் ஒன்றில்...



பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு வருகைதந்தபோது ஊடக சுதந்திரத்தின் நிலைபற்றி விளக்குகிறார் விழாநாயகன்



பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச்செயலாளர்
கமலேஷ் சர்மாவை உதயன் அலுவலகத்தில் சந்தித்தபோது...



ஆஸ்திரேலியாவில் அரசியல் விவகாரக்
கலந்துரையாடல் ஒன்றில்...



உதயன் முதற்பிரதியை விழாநாயகனின் தந்தையார் பெறுகிறார்



உதயன் பத்திரிகையின் புதிய அலுவலக ஆரம்ப நாளில்...



பெரும் யாக நிகழ்வு ஒன்றில்...



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர், வடமாகாண முதலமைச்சர் மற்றும் நாடாளுமன்ற
உறுப்பினர்களுடன் தீவிரமான அரசியல் பணியில்...



வவுனியாவில் நடந்த மக்கள் போராட்டத்தில்
உரையாற்றுகையில்...



கிறீஸ்பூதம் பிரச்சினையின்போது ஓடோடிச்சென்று
மக்கள் துயர் கேட்டறிந்த வேளையில்...



சுழிபுரம் நூல் நிலையத்திற்கு உதவி வழங்கியபோது...



சனசமூக நிலையத்திற்கு நூல்களை
அன்பளிப்புச் செய்தபோது...



யாழ். பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான
மாணவியொருவருக்கு மேற்படிப்புக்கு உதவி வழங்கியபோது...



பாடசாலைச் சிறுமியின் கல்விக்கு உதவிநிதி
வழங்கியபோது...



மெய்கண்டான் பாடசாலைக்கு நீர்த்தாங்கி
அன்பளிப்புச் செய்தபோது...



பளை மத்திய கல்லூரிக்கு உதவி வழங்கியபின்னர்
சிறுவர்களுடன் மகிழ்ச்சியான தருணம் ஒன்றில்...



வறுமையில் வாடும் குடும்பத்திற்கு வாழ்வாதார உதவியாக
தையல் இயந்திரம் அன்பளிப்புச் செய்தபோது...



மாற்றுத் திறனாளிகளுக்கு வலி. வடக்கில் சக்கர நாற்காலிகளை
அன்பளிப்புச் செய்தபோது...




அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்திற்கு
விளையாட்டு உபகரணங்கள் வழங்கியபோது...



சிவபூமி முதியோர் இல்லத்திற்கு விஜயம்
மேற்கொண்டபோது அங்குள்ளவர்களுடன்...



இளைஞர்களுக்கான வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு
நிறுவனத்தை தனது சொந்த முயற்சியில் ஆரம்பித்து,
சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்துநின்ற தருணத்தில்...



தனது வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவனம் ஊடாக
சுயதொழில் ஊக்குவிப்பு முயற்சிக்கு
அனுசரணை வழங்கி நின்றபோது...




யாழ்ப்பாண மக்களுக்கு உதவ வந்த கொரிய நாட்டு மருத்துவர்
மற்றும் யாழ். நகர பிதா கந்தையன் ஆகியோருடன்
ஒரு சமூக சேவையாளனாக ...



அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைப்பதில்
ஆர்வமுடன்...




சர்வதேச றோட்டறிக் கழகத்திற்கு 5000 அமெரிக்க
டொலர் நிதியை அன்பளிப்புச் செய்தபோது...




'மக்கள் சேவை' விருதை உதயன்
பத்திரிகைக்காகப் பெற்றபோது...



உதயன் பத்திரிகைக்கு எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு வழங்கிய சர்வதேச விருதை
உதயன் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதனுடன் இணைந்து பெற்றுக்கொள்கிறார் விழா நாயகன்



எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் என்ற சர்வதேச ஊடக அமைப்பின் பிரதிநிதிகளுடன் பிரான்ஸில்...




சர்வதேச விருதைப் பெற்றபின்னர் உதயன் பிரதம ஆசிரியர் வ.ம. கானமயில்நாதனுடன் பிரான்ஸில் விழாநாயகன்




யாழ்ப்பாணத்தில் நடந்த பத்திரிகையாளர்
போராட்டத்தில்...



மாணவர்கள் போராட்டத்தில்...



ஏனையோரையும் தன் தாயாக எண்ணும்
பக்குவம் கொண்டவர் சரா...



பாதிக்கப்பட்ட மக்களுடன் அவர்களில் ஒருவராக...




அமைதியும் அபிவிருத்தியுமே சரவணபவனின் ஒரே இலக்கு



# தளராது சமராடும் வீரர்

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநரு மான ஈ.சரவணபவன் எனக்கு நீண்டகாலமாகத் தெரிந்தவர். அவரது மணி விழாவை ஒட்டி இந்தச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஊக்கமும், விடாமுயற்சியும், கடும் உழைப்பும்மிக்க ஒருவராகவே அவர் எப்போதும் என் மனதில் தோன்றுகின்றார். தன்னுடைய எத்தனங்களினால் வெற்றியீட்டுவதற்காகத் தளராது சமராடும் ஒரு வீரராக அவரைப் பார்க்கின்றேன். உண்மையில் அப்படி அவர் ஜெயம் பெற்றுமிருக்கின்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனது மக்களுக்கான நிறைவான சேவையையும் முழு திருப்தி தரும் வகையில் மிகுந்த கவனிப்புடனும் அக்கறையுடனும் அவர் மேற்கொண்டு வந்துள்ளார். அந்தப் பணியை திடசங்கற்பம் மற்றும் பற்றுறுதியுடன் அவர் நிறைவு செய்து வருகிறார் என்பது வெளிப்படையானது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் என்ற முறையில் அதனைச் சாதுரியமாக நிர்வகிப்பதில் அவர் முகம் கொடுக்கும் சவால்கள் மிகக் கடினமானவை, சிக்கலானவை, தேர்ந்த வல்லமையுடன் எதிர்கொள்ள வேண்டியவை.

பத்திரிகையாளர் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் மீதான நேரடித் தாக்குதல்கள் உட்பட ஊடக சுதந்திரத்துக்கு எதிரான அடக்குமுறை எல்லையில்லாமல் தலைவிரித்தாடும் ஒரு

சூழலுக்கு மத்தியில் தனது சுயாதீனம் என்ற தனித்துவத்தை விட்டுக்கொடாமல் தொடர்ந்து வெற்றிகரமாகப் பேணியபடி ஒரு பத்திரிகையை நடுநிலை தவறாது கொண்டு நடத்துவது என்பது ஓர் இமாலய சாதனையன்றி வேறில்லை. அச்சமின்றி, திடசங்கற்பத்துடன் செயற்படும் தனது ஆசிரிய பீடத்தவர்களின் ஒத்துழைப்புடன் அந்தப் பணியை அவர் செவ்வனே ஆற்றி வருகின்றார். அதனை நிரூபித்து ஊர்ஜிதப்படுத்தும் வகையில்தான் உதயனுக்கு பல சர்வதேச விருதுகளும் அங்கீகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்டு வருகின்றன. எப்போதும் மனதுக்கு இனியவராகவும், பண்புள்ளவராகவும் பழகுபவர் சரவணபவன். அவரது துணைவியார் யசோதையும் மகள் லக்ஷ்மியும் எப்போதும் அவருக்கு உத்வேகம் தரும் வலிமையான அன்புறவுகள்.

எதிர்காலத்திலும் சரவணபவனும் அவரது குடும்பத்தவர்களும் மேலும் சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

**இரா.சம்பந்தன்,**<br>
நாடாளுமன்ற உறுப்பினர் - திருகோணமலை.<br>
தலைவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



# தமிழர்களின் தலைநிமிர் கழகத்தின் முத்து

சைவத்தின் காவலர் சைவ சேனாதிபதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க விரும்பிய பல சைவப் பெரியவர்களின் கூட்டுமுயற்சியினால் தோற்றம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சைவத்தமிழர்களின் உயர்கல்வி நிலையமாக நூற்றாண்டு கடந்தும் ஒளி வீசிப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இக்கல்லூரியை உருவாக்கிய மாணவர்கள் பலர் ஈழத்தில் மாத்திரமல்லாது புலம்பெயர் நாடுகளிலும் உயர் பதவிகளில் இருந்து சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார்கள். வைத்திய கலாநிதிகளாக, பொறியியலாளர்களாக, சட்டத்தரணிகளாக, கணக்காளர்களாக, நிர்வாக அதிகாரிகளாக, பேராசிரியர்களாக, இலக்கிய ஈடுபாடு உடையவர்களாகப் பலதுறைகளிலும் பணியாற்றி வருகின்றார்கள்.

ஈழத்தில் தமிழர் வாழும் பிரதேசம் முழுவதும் கடந்த மூன்று தசாப்தங்களாக யுத்த பூமியாகவே காணப்பட்டது. வார்த்தைகளால் சொல்லமுடியாத துன்பங்களையும் துயரங்களையும் நமது மக்கள் அனுபவித்தார்கள். இந்த அவலமான சூழ்நிலையில் தமிழ் மக்களின் குரலாக மக்கள் பட்ட துன்பங்களை வெளிப்படுத்தும் ஊடகமாக 'உதயன்' பத்திரிகை மிளிர்ந்தது. திரு. சரவணபவன் அவர்கள் இந்தப் பத்திரிகையில் உரிமையாளராகவும் நிர்வாகியாகவும் இருந்து பணியாற்றி வருகின்றார். கடந்த காலத்தில் உதயன் பத்திரிகைக்குப் பல சோதனைகளும் வேதனைகளும் ஏற்பட்டன. இவற்றையெல்லாம் போதனையாகப் படிப்பினையாக ஏற்றுக்கொண்டு

இன்றும் சாதனைகள் பல புரியும் பத்திரிகையாக உதயன் மிளிர்வதற்கு நிர்வாக இயக்குனர் திரு. சரவணபவனின் மனப் பலமும் ஆன்மீக பலமுமே காரணமாக அமைந்துள்ளது. "தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை" என்ற கம்பனின் வாக்கிற்கு அமைய. நினைத்ததைச் செய்துமுடிக்கும் ஆற்றல் யாழ். இந்துக் கல்லூரியில் படித்த மாணவர்களிடம் இயல்பாகவே அமைந்துள்ளது.

பெற்றோரின் பண பலத்தையோ பதவிகள் அந்தஸ்துகளையோ கருத்திற்கொண்டு யாழ். இந்துக் கல்லூரியில் மாணவனுக்கு அனுமதி வழங்கப்படுவில்லை. காலம் காலமாகத் திறமையின் அடிப்படையிலேயே மாணவன் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டான். எங்கள் பாடசாலையில் அரசாங்க அதிபரின் மகனும் படிக்கின்றார். நகர சுத்திகரிப்புத் தொழிலாளியின் மகனும் படிக்கின்றான் என இந்துக் கல்லூரியின் அதிபர் ஒருவர் பாடசாலை நிகழ்வு ஒன்றில் ஒருமுறை கூறியிருந்தார். நாட்டுப் பற்றாளர்களாகவும் மனித விழுமியங்களை மதிப்பவர்களாகவும் மொழிப்பற்று, சமயப்பற்று நிறைந்தவர்களாகவும் சமுதாய உணர்வு உள்ளவர்களாகவும் இந்துக் கல்லூரி மாணவர்கள் உருவாகினார்கள்.

திரு.ஈ.சரவணபவனிடம் இருந்த சமய உணர்விற்கும் தான் கற்ற பாடசாலை மீது கொண்டிருந்த பற்றுக்கும் மாணவர் நலனில் இருந்த அக்கறைக்கும் நான் நேரிலே கண்ட சில உதாரணங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இக்கல்லூரியின் பழைய மாணவனாகிய நான் அக்காலத்தில் அங்கு ஆசிரியராகக் கடமையாற்றினேன். நூற்றாண்டு விழாவின் முதல் நிகழ்வாகத் திருமுறை மாநாடு மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து நடராஜர் படத்துடன் திருமுறைச் சுவடிகள் காங்கேசன்துறை வீதி வழியாகத் தமிழ் வேதமாகிய திருமுறைகள் ஒலிக்க ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆன்மீகச் செல்வர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டார்கள். திருமுறை மாநாட்டில் பல பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டு திருமுறைகளைப் பாடினார்கள். ஒவ்வொரு திருமுறையிலும் ஆழமான அறிவு கொண்டவர்கள் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். தெய்வத் தமிழாகிய திருமுறைகளின் பெருமையினை இம்மாநாட்டின் ஊடாகப் பலரும் உணர்ந்து கொண்டார்கள்.

இம்மாநாட்டின் ஆரம்பத்தில் பன்னிரு திருமுறைத் தொகுப்பு ஒன்றினை வெளியிட விழாக் குழுவினர் தீர்மானித்திருந்தார்கள். நான் நேரடியாகத் திரு. சரவணபவனிடம் சென்று இந்தத் திருமுறைத் தொகுப்பினை நீங்களே வெளியிட்டு உங்கள் பாடசாலைக்கு உதவவேண்டுமென்று அன்பாக வேண்டியிருந்தேன். எனது வேண்டுகோளை ஏற்று ஆயிரம் பிரதிகளை அடித்து தனது வாகனத்திலே வந்து விழாவிற்கு முதல் நாள் பாடசாலையில் ஒப்படைத்தார்.

இந்துக் கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்று பலாலி ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்த காலத்தில் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவராக இருந்த திரு.அ.பஞ்சலிங்கம் பாடசாலை மாணவர்களின் கையெழுத்துப் பிரதி வெளியிடும் நிகழ்வு ஒன்றுக்கு என்னையும் அழைத்திருந்தார். 9,10,11 ஆம் வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களின்

படைப்பாற்றல், எழுத்துத்திறன் என்பவற்றை வளர்ப்பதற்காகக் கையெழுத்து பிரதி வெளியிடுவதை வகுப்பு ரீதியாகச் செயற்படுத்தினார். அதிபர் வருடத்தின் மூன்று தவணைக்கும் மூன்று பிரதிகளை ஒவ்வொரு வகுப்பும் வெளியிட வேண்டுமென்றார். ஒவ்வொரு பிரிவிலும் தலா ஐந்து வகுப்புகள் இருந்தன. மொத்தமாக இருந்த பதினைந்து வகுப்புகளும் வெளியிட்ட நாற்பத்தைந்து பிரதிகளில் முதல் மூன்றினை அறிஞர்கள் குழு மூலம் தெரிவுசெய்து பரிசில்கள் வழங்க விரும்பினர். பாடசாலை நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக நான் சென்றிருந்த பொழுது சரவணபவனும் அதிபரைச் சந்திக்க வந்திருந்தார். அவரிடம் கையெழுத்துப் பிரதி வெளியிடுவதைப் பற்றிக் கூறிய அதிபர், வருட முடிவில் சிறந்த பிரதிகளுக்கு பரிசில் வழங்க இருப்பதையும் எடுத்துக் கூறினார். இந்தப் பரிசுத் தொகையைப் நீரே வழங்கவேண்டும் என்று அவரை வேண்டினார். எதுவித மறுப்புமின்றி ஏற்றுக்கொண்டு உரிய பரிசுத்தொகையை அதிபரிடம் உடனே வழங்கி உதவினார்.

இந்துக் கல்லூரியின் வளாகத்தின் உள்ளே கூடைப்பந்தாட்டம் ஆடுவதற்கான திடலை சகல வசதிகளுடனும் அமைத்துக்கொடுத்தார். தன்னை வளர்த்துவிட்ட அறிவாலயத்தின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டு இன்றும் செயற்பட்டு வருகின்றார். யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து முதன் முதலில் வெளிவந்த தினசரிப் பத்திகையாகிய 'ஈழநாடு' ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் தவத்திரு யோகர் சுவாமிகள் அங்கே வருகை தந்திருந்தார். 'ஏசுவார்கள், எரிப்பார்கள், எதற்கும் அஞ்ச வேண்டாம், உண்மையை எழுது, உண்மையாய் எழுது' என்று கூறிவிட்டுச் சென்றார்.

1981ஆம் அண்டு யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டபோது ஈழநாடு பத்திரிகை நிறுவனமும் எரிக்கப்பட்டது. எரிக்கப்பட்டு ஒரு வாரத்திற்குப் பின்பு ஈழநாடு பத்திரிகை மீண்டும் வெளிவந்தபோது யோகர் சுவாமிகள் கூறிய வார்த்தைகளே பத்திரிகையின் தலைப்புச் செய்தியாகப் போடப்பட்டிருந்தது.

'தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை' என்பது கம்பன் வாக்கு. சமுதாய நலன் கருதிப் பணிகள் செய்கின்ற பொழுது பல சோதனைகளும் வேதனைகளும் ஏற்படலாம். தளர்வறியா மனத்துடன் சோதனைகளையும் வேதனைகளையும் போதனைகளாக (படிப்பினைகளாக) மாற்றிக்கொண்டு சாதனை செய்பவனே சிறந்த கர்மயோகியாக மாறுவான். மக்கள் கருத்தைப் பிரதிபலிப்பதோடு மக்களைச் சரியாக வழிநடத்தும் பத்திரிகையாகவும் 'உதயன்' பத்திரிகை மிளிர்வதற்கு இயக்குனர் சரவணபவனின் வழிகாட்டுதல் சிறப்பாக அமைதல்வேண்டும் என இறையருளைப் பிரார்த்திக்கின்றேன். பத்திரிகை இயக்குனராக, நாடாளுமன்ற உறுப்பினராக பலவகைகளில் சமூகப் பணியாற்றி மணிவிழாக் காணும் அன்பர் சரவணபவன் உடல் ஆரோக்கியமாகவும் உறுதியான ஆயுள் பலத்தோடும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு பெற்று நிறைவாக வாழ எல்லாம்வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருள் துணைகிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்

சிவத்தமிழ் வித்தகர்

**சிவ.மகாலிங்கம்**



# இனவிடுதலைக்கான பயணத்தின் பங்காளி

உதயன் குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. ஈ. சரவணபவன் அவர்களின் மணிவிழா மலர் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச் சியடைகிறோம். உதயன் பத்திரிகைக்குழுமத்தின் பணிப்பாளர் திரு. ஈ. சரவணபவன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ப துடன் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொருளாதார மேம்பாட்டுச் செயலாளருமாவார்.

திரு. சரவணபவன் தாம் ஈடுபடுகின்ற துறையின் கடின உழைப்பை நல்கி, தன்னை அர்ப்பணித்து நிற்கின்ற ஒருவராவார். உதயன் நிறுவனத்தையும், உதயன் நாளேட்டையும் ஆட்சியாளர்களினதும் இராணுவ ஆதிக்கத்தினதும் அடக்குமுறை, அழிப்பு நடவடிக்கைகள், கொலை அச்சுறுத்தல்கள் என்பவற்றில் இருந்து பாதுகாத்து வளர்த்தெடுத்து மக்களின் கருத்துச் சுதந்திரத்தை மேம்படுத்தி நிற்பதில் அர்ப்பணிப்பையும் துணிச்சலையும் வெளிப்படுத்தி நிற்கின்ற ஒருவராவார். அதற்கும் மேலாக "தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலை" என்ற உன்னத இலட்சியத்துக்காக அயராது இலக்குத் தவறாது மக்களைக் கட்டியெழுப்புவதில் உதயன் குழுமம் பெரும் பங்காற்றுகிறது.

ஊடக சுதந்திரம் இலங்கையில் அடக்குமுறைக்கு உள்ளான போதும் அந்தச் சுதந்திரத்தை நிலைநாட்ட உதயன் குழுமம் பெரும் அர்ப்பணத்தைச் செய்திருக்கிறது. அதுபோல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டதிலிருந்தும் மக்கள் மத்தியில் திரு. சரவணபவன் பெரும் சேவையாற்றி வருகிறார்.

பாதிக்கப்பட்ட, துன்பப்பட்ட மக்கள் மத்தியில் உதவும் நிறுவனங்களிடம் தொடர்புகொண்டு பல நலத்திட்டங்களை நிறைவுசெய்து வருகிறார். திரு. சரவணபவன் உதயன் குழுமத்தையும், செய்தியாளர்களையும் கூட மக்கள் சேவைக்காகவே செயற்பட வைக்கிறார். உதயன் குழுமத்துக்கு நெருக்கடிகள் ஏற்பட்ட போது அவற்றை துணிச்சலுடன் எதிர்கொண்டு தீர்வுகண்டு வெற்றிபெற்ற ஒரு உழைப்பாளர் என்று குறிப்பிடலாம்.

அத்தகைய பல சம்பவங்களை நான் நேரடியாகவே அவதானித்திருக்கிறேன். சிலவேளைகளில் அவற்றை உடனிருந்தும் தெரிந்து கொண்டிருக்கிறேன். அவர் பணிகளுக்கு பூரண ஒத்துழைப்பையும் தன் கடப்பாட்டையும் வழங்கிவரும் அவர் மனையாளுக்கும் எம் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். திரு. சரவணபவனின் அர்ப்பணத்தால் ஜனநாயகம் தழைத்தோங்கவும், மக்கள் பயனுறவும் அவர் பணிகள் மேலும் மாண்புறவும் இந்த மணிவிழா வலுவூட்டும் என நம்புகின்றேன். வாழும்போதே வாழ்த்தி மேம்படுத்தும் பண்பு வாழ்க என வாழ்த்துகிறேன். அவர் பணிகளும் அர்ப்பணமும் மேலும் உயரவும், வாழவும், வளம்பெறவும் என் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

**மாவை சேனாதிராசா.**
நாடாளுமன்ற உறுப்பினர்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.



# நவீன கால அரிச்சந்திரன்

மணிவிழா என்பது ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் வசந்தத்தை ஏற்படுத்துகின்ற அகவை அறுபதுகளில் அவரது வாழ்வியல் சாதனைகளை உலகறியச் செய்கின்ற உன்னதமான விழாவாகும். எங்கள் சாதனை நாயகன் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களை இம் மணிவிழா நேரத்தில் வாழ்த்துவதில் பெருமையடை கின்றேன்.

கௌரவ ஈ.சரவணபவன் அவர்கள் தமிழ்த் தேச வளர்ச்சிக்காகத் தமிழ் பேசும் மக்களுக்காகப் பல சேவைகளைச் செய்து சாதனை படைத்துள்ளார். ஊடகத்துறையிலே சிறப்பாகத் தனக்கென ஒரு தனியிடம் பிடித்துள்ளார்.

1985இல் உதயன் பத்திரிகையை உலகறியச் செய்து இன்றுவரை பயன் உறுதிமிக்க சேவையை வழங்கி வருகின்ற பெருமை இவருக்கே உரித்தானது. யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக் கென உருவாகிய உதயன் நாளிதழ் இன்று தமிழ் பேசும் மக்கள் யாவருக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற இவரது தன்னலமற்ற அர்ப்பணிப்பே காரணமாகும்.

உதயன் பத்திரிகையானது காலத்துக்குக் காலம் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்த போதிலும் தன் நிலை கலங்காது தொடர்ந்தும் உயிரோட்டத்துடன் தன் பணி செய்து வருகிறது. பத்திரிகை இப்படி மிளிர்வதற்கான முழுக் காரணமும் சரவணபவன் மட்டுமே ஆவார்.

தமிழ் மக்களின் பல பிரச்சினைகளை உலகளாவிய ரீதியில் பல நாடுகளுக்குச் சென்று அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் துணிவாக எடுத்துக்காட்டி விளக்கிக்காட்டிய தனிநபர் அவர்.

இன்றைய இளம் சமுதாயத்தினரை உயிர்த் துடிப்புடன் செயற்படவைக்க விளையாட்டுத்துறை ஊடாக உபகரணங்களை வழங்கியும் ஊக்குவிப்புச் செய்துள்ளார். றோட்டரிக் கழகத்தின் முன்னாள் தலைவராக இருந்த காலங்களில் மக்களுக்குப் பல சேவைகளை மேற்கொண்டு மக்கள் மனதில் தனியிடம் பிடித்தவர் அவர்.

பாரதகால அரிச்சந்திரன் போல நவீன கால சரவணபவனாக வாய்மை தவறாத நேர்மையாளன். அவரது மனித நேயம் சிறந்து விளங்கவும் சேவை தொடரவும் இவர் குடும்பத்துடன் நீடூழி காலம் வாழவும் இறைவனை வேண்டி உவப்புடன் வாழ்த்துகின்றேன்.

**த.குருகுலராசா,**

அமைச்சர்,

கல்வி பண்டாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை

மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,

வடக்கு மாகாண சபை.



# ஆசியுரை

மணிவிழாக் காணும் உதயன் குழுமத்தின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ ஈ. சரவணபவன் அவர்களுக்கு சிவப்பரம் பொருளின் திருவருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

"யாம் இச்சரீரம் பெற்றது இறைவனை வழிபட்டு முக்தியின்பம் பெறும் பொருட்டேயாம்: எனும் நாவலர் வாக்கிற்கு இணங்கவும் தமிழ் மக்களின் சிறப்பாக இலங்கையின் யாழ்ப்பாணத்தவரின் தன்மையும் தேவை அறிந்த தளராத மனம் கொண்ட பத்திரிகை உதயன் மக்களின் சிறப்பாக இலங்கையின் யாழ்ப்பாணத்தவரின் தன்மையும் இப்பத்திரிகையினூடாகழ், தனிப்பட்ட வாழ்விலும் சைவராகவும், ஆன்மீக வைபவங்கள் சேவைகளில் நாட்டமும், சைவப்பற்றும் கொண்ட இவர் மக்களுள் மக்களாக மக்கள் சேவகனாக ஆற்றிவரும் பணி மகத்தானது.

அடக்கமும், பணிவும், பண்பும் இளகிய மனமும் கொண்ட இவர் அன்பே உருவான சைவசமயப்பற்றாளன். இறைவழிபாட்டில் மிகுந்த ஈடுபாடும் நாட்டமும் கொண்டவர்.

மாண்புமிகு சைவப்பற்றுடன் மணிவிழாக் காணும் சரவணபவன் யசோதை தம்பதியர் நீடுழிகாலம் வாழ வேண்டும் என வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர பெருமானை வணங்கி ஆசீர்வதிக்கின்றேன்.

**பிரம்மஸ்ரீ ம. முருகானந்தசர்மா**
ஆலய குரு
உதயன் வளாகம்.



# May the Great Srchitect Keep you well

**D**ear Sara,

Let me extend my heartiest felicitations on this very auspicious event of your 60th birthday.

This is a time for rejoicing and celebrating life at three score years after your birth!

You have made your life meaningful with so much activity, challenging yourself time and again. Many of us simply exist and live, but you are a very good example of living with focus and setting goals reaching to great heights.

I have always admired your tenacity and perseverance in the face of difficulties, never wavering from the direction you have set yourself. Without doubt you will be remembered for being steadfast to your newspaper and it's ideals. Let me congratulate you on your achievements and wish you peace and happiness in the many years to come. May your wishes be fulfilled and the great architect keep you well.

Sincerely
**Kumar Nadesan**
Managing Director
Express Newspapers (Ceylon) Ltd.



# மக்கள் பணி மேலோங்க தீர்க்க ஆயுள் கிட்டட்டும்

நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களின் மணி விழாவையொட்டி மலரொன்று வெளியிடுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளை நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் குரல் எழுப்பி அதனைச் சர்வதேசம் எங்கும் ஒலிக்கச் செய்யும் மகத்தான பணியில் திரு. ஈ.சரவணபவன் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருவது நாடறிந்த விடயம்.

'தெரிதலும், தேர்ந்து செயலும் ஒரு தலையாச்
சொல்லும் வல்லது அமைச்சு'

என்ற வள்ளுவனின் வாக்குக்கமைய செய்யத் தகுந்த செயலை ஆராய்ந்து அதற்குரிய வழிகளை தேர்ந்து பின் தன் கருத்தை ஐயம் இன்றித் துணிந்து சொல்லும் திறன் திரு. சரவணபவன் அவர்களையே சாரும் என்றால் அதில் சந்தேகமில்லை.

பல்வேறு வகையில் சவால்கள், நெருக்கடிகள், மிரட்டல்கள் வந்த பொழுதிலும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைக்காக அவர் சளைக்காமல், துணிவுடன் குரல் எழுப்பி வருவது மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அவருக்கே உரிய மிடுக்குடனும், ஆளுமையுடனும் திரு. சரவணபவன் அவர்கள் இதனை மேற்கொண்டு வருகிறார். வடபகுதியில் மக்கள் இன்னல்களை எதிர்நோக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்த இடத்துக்கு விரைந்து சென்று அவர்களின் துயரைத் துடைக்கும் பணியில் மனமுவந்து பணியாற்றுவது அவருக்கே உரிய

சிறப்பம்சமாகும். மக்கள் பிரதிநிதி ஒருவர் எவ்வாறு சமூகத்துக்கு சேவையாற்ற வேண்டும், அவர்களின் எதிர்பார்ப்புக்களை எவ்வாறு பூர்த்தி செய்ய வேண்டும் என்று மனமறிந்து சேவை செய்வதிலும் அவருக்கு நிகர் அவரே என்று கூறவேண்டும்.

இன்றைய நெருக்கடிமிக்க காலகட்டத்தில், எந்தவிதமான பிரதி உபகாரமும் பாராது சேவையாற்றுவோர், சமூகத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரேயாவர்.

அந்த வகையில் திரு. சரவணபவன் அவர்கள் தன்னலமற்ற தனது சேவைகளால் மக்கள் மனதில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுள்ளார் என்றால் அதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது.

திரு. சரவணபவன் அவர்களின் மணிவிழா வெற்றி பெறவும் அவர் தனது பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கும் வகையிலும் அவருக்கு திடகாத்திரமான ஆயுள் கிட்ட வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

நன்றி.

**ஆர். பிரபாகன்**
பிரதம ஆசிரியர்
வீரகேசரி வாரவெளியீடு.



# ஊடகத்துறைக்கு பெருமைக்குரிய பங்களிப்பைச் செய்த ஒரு ஆளுமை

உதயன், சுடர் ஒளி பத்திரிகைகளை வெளியிடும் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதற்கு எனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பெருமையாகக் கருதுகின்றேன்.

தலைநகர் கொழும்பில் இருந்து வெளி வருகின்ற செய்திப் பத்திரிகைகளுக்கு அப்பால், பிராந்திய ரீதியில் பத்திரிகைகளை வெளியிடுவதில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வரலாற்றுப் பாரம்பரியமொன்று இருக்கிறது. அந்தப் பாரம்பரியத்தின் நீட்சிக்கு அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்புகளைச் செய்து வந்திருக்கக்கூடிய ஆளுமைகளின் வரிசையில் இன்று மிகவும் முக்கியமான ஒருவராக சரவணபவன் அவர்களை நான் காண்கிறேன்.

அவர் பத்திரிகை நிறுவனத்தை ஆரம்பித்து நடத்திய காலகட்டம் இலங்கைத் தமிழ் மக்களின் வரலாற்றில் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத இடர்பாடுகள் நிறைந்ததாகும். உள்நாட்டுப் போரின் வரலாற்றுடன் சமாந்தரமான வரலாற்றைக் கொண்ட சரவணபவன் அவர்களின் பத்திரிகைத் துறைப் பணி வேறு எந்தவொரு பத்திரிகைப் பிரசுரகர்த்தாவும் முகங்கொடுத்திராத வகையிலான நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறது. இலங்கையில்

இருக்கக்கூடிய எந்தவொரு பத்திரிகை நிறுவனமுமே சரவணபவன் அவர்களின் நிறுவனத்தைப் போன்று அரசாங்க இயந்திரத்தின் அட்டூழியங்களுக்கு அடிக்கடி இலக்கானதுமில்லை.

உள்நாட்டுப் போர்க் காலகட்டத்திலும் சரி. அதன் முடிவுக்குப் பின்னர் வடக்கில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற அதீத இராணுவமயச் சூழலிலும் சரி நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பத்திரிகை வெளியீட்டுப் பணியில் சரவணபவன் அவர்களும் அவரைச் சார்ந்தவர்களும் வெளிக்காட்டிய அசாதாரண துணிவாற்றல் இலங்கையின் ஊடகத்துறை வரலாற்றில் என்றென்றைக்கும் நினைவுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இராணுவ நடவடிக்கைகளின்போது மக்கள் இடம்பெயர்ந்த வேளைகளில் கூட, முக்கியமான தகவல்கள் அவர்களைச் சென்றடைய வேண்டுமென்பதில் அக்கறைகாட்டி, நினைத்துப்பார்க்க முடியாத இடர்பாடுகளுக்கு மத்தியிலும், கிடைக்கக்கூடியதாக இருந்த காகிதாதிகள் எந்த வகையானவையாக இருந்தாலும் அவற்றைப் பயன்படுத்தி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் உதயன் பத்திரிகையை வெளியிட்டு அவரது நிறுவனம் ஒரு ஊடகப் போராட்ட அமைப்புப் போன்று செயற்பட்டது. அந்த வகையில் சரவணபவன் அவர்களையும் அவரது நிறுவனத்தின் பணியாளர்களையும் ஊடகப் போராளிகள் என்று அழைத்தால் அது மிகையில்லை.

ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படுகின்ற வேளைகளில் எல்லாம் ஏனைய ஊடகத்துறை நிறுவனங்களின் முகாமைத்துவங்களுடனும் ஊடகத்துறை அமைப்புகளுடனும் கலந்தாலோசனைகளை நடத்தி அந்த அச்சுறுத்தல்களைப் போக்குவதற்கான நடவடிக்கைகளைக் கூட்டாக முன்னெடுப்பதில் சரவணபவன் அவர்கள் வெளிக்காட்டுகின்ற ஒருமைப்பாட்டு உணர்வு என்னை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது.

இத்தகைய பண்பியல்புகளைக் கொண்ட ஒரு ஊடகத்துறை ஆளுமையின் மணிவிழா ஊடகத்துறை சேர்ந்த எம்மெல்லோருக்கும் உவகை தருவதாகும். காலத்தின் கட்டாயத்தால் அரசியல்வாதியாகவும் மாறிவிட்ட சரவணபவன் அவர்களின் பணிகள் இப்போது பன்முகப்பட்டவையாகிவிட்டன என்றாலும் அவரின் ஊன்றிய கவனம் ஊடகத்துறையின் மேம்பாட்டிலேயே தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது எனது மானசீகமான எதிர்பார்ப்பு.

மணிவிழா நாயகனுக்கு எனது வாழ்த்துக்கள்!

**வீரகத்தி தனபாலசிங்கம்**
பிரதம ஆசிரியர்
தினக்குரல்
68 எலிஹவுஸ் ரோட்
கொழும்பு 15
இலங்கை.




# கொள்கையில் பின்வாங்காத ஊடகக்குரலோன்

உதயன் குழுமத்தின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களின் மணிவிழாவை ஒட்டி மலர் ஒன்று வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். அந்த மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்புவதையிட்டு பெருமையடைகின்றேன்.

தமிழ்த்தேசியத்துக்காக மக்களின் குரலாக தினமும் ஒலித்துக்கொண்டிருக்கும் 'உதயன்' பத்திரிகையை ஆரம்பித்து இன்றுவரை தனது கொள்கையில் இருந்து மாறாது அதைவெளியிட்டு கொண்டிருக்கும் சரவணபவன் அவர்களின் சேவையை மதிப்பீடு செய்வதற்கு அவரது மணிவிழா உதவவேண்டும். கொண்ட கொள்கையில் இருந்து சற்றும் பின்வாங்காமல் உதயன் பத்திரிகையை வெளியிட்டுக்கொண்டிருப்பதை பாராட்டவேண்டும். அவர் கௌரவிக்கப்படவேண்டும்.

போர்க்காலத்திலும் சரி, போர் முடிவடைந்த பின்னரும் சரி எதிர்கொண்ட நெருக்கடிகளை தவிடுபொடியாக்கி தமிழ்த்தேசியத்துக்கான தனது பயணத்தை தொடர்ந்துகொண்டிருக்கிறார் சரவணபவன் அவர்கள். தமிழ் மக்கள் எல்லோரும் இணைந்து முன்னெடுக்கும் மணிவிழா வெற்றி பெறவும் அவர் தொடர்ந்து தனது பணிகளை முன்னெடுக்கவும் மாவைக்கந்தனின் அருள்கிட்ட பிரார்த்தித்து அமர்கின்றேன்.

**ஞா.குகநாதன்**
முன்னாள் செய்தி ஆசிரியர், உதயன்.



# மக்களது உள்ளங்களில் இடம்பிடித்தவர்

அகவை அறுபதை அடைந்து மணிவிழாக் காணும் மணிவிழா நாயகராகிய மதிப்பார்ந்த திரு ஈ.சரவணபவன் அவர்களுக்கு எமது மனமுவந்த நல்லாசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக. அவரது மணிவிழாவினைப் போற்றும் வகையில் வெளிவரவுள்ள சிறப்பு மலருக்கு இந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம். ஒருவர் தமது வாழ்வில் மணிவிழா காண்பது இறைவன் திருவருளாலன்றி வேறில்லை. அறுபது ஆண்டுகளைக் கடந்து மற்றுமொரு வாழ்வியல் கட்டத்திற்குக் காலடி எடுத்துவைக்கும்போது குருமார், உற்றார், உறவினர், சுற்றத்தார், அன்பர்கள் மற்றும் நண்பர்கள் ஆகியோரது நல்லாசிகள் அவர்தம் வாழ்வில் சீரும் சிறப்பும் பெற்று வாழ மூலாதாரமாக அமைகின்றன. கௌரவ சரவணபவன் அவர்களுக்கு அந்த அரியவாய்ப்பு கிட்டியுள்ளமை அவர் செய்த தவப்பயனே.

யாழ். இந்துவின் மைந்தனாகத் திகழ்ந்து பெருமை பெற்ற விழாநாயகன் சமூகமேம்பாட்டிலும், சமூக சேவையிலும் அக்கறை கொண்டு செயற்பட்டு வருபவர். ஊடகத்துறையில் அவர் உதயன் குழுமத் தலைவராக விளங்கி மக்கள் வாழ்வு சிறக்கத் தம்மாலான சேவைகளை நல்கி வருபவர். யாழ்ப்பாண மாவட்டத்தின் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கி மக்களது நல்வாழ்வு மேம்படுவதற்கான பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டவராவர். இவற்றுக்கு அப்பால் ஆன்மீக நாட்டங்கொண்டவராக சமயப்

பணிகளிலும் ஆலயங்களின் வளர்ச்சியிலும் அக்கறையுடன் ஈடுபட்டுவருபவர். ஆலய வழிபாட்டிலும் வளர்ச்சியிலும் அக்கறையுடன் ஈடுபட்டுவருபவர்.

ஆலய வழிபாட்டிலும் சைவசமயஞ் சார்ந்த விழாக்களிலும் பங்குகொண்டு ஆன்மீக நலம் பெற்று வருபவர். இவரது ஆன்மீகஞ் சார்ந்த பணிகளுக்கும் ஏனைய பணிகளுக்கும் இவரது பாசமிகு துணைவியார் ஸ்ரீமதி யசோதை அவர்களும் உறுதுணையாக விளங்கி வருபவர். பிறந்த நாட்டிற்கும் சமயத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டு செய்து வாழ்பவர்கள்தான் மக்களது உள்ளங்களில் இடம் பிடித்திருப்பார் என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

மணிவிழாக் காணும் மணிவிழாத் தம்பதியர் எதிர்காலத்திலும் மக்களது நல்வாழ்வு ஒளிபெறத் தொடர்ந்து பணியாற்றவும் சைவத்தமிழ் பணிபுரியவும் அவர்களுக்கு நற்சுகமும் சகல நற்பேறுகளும் கிடைத்து நீடூழி வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரனின் திருவருள் பொலிவதாகுக என மன மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

பேராசிரியர் இலக்கிய கலாநிதி<br>
**ப.கோபாலகிருஷ்ண ஐயர்,** வாழ்நாள் பேராசிரியர்<br>
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம்.



# சவால்களைச் சாதனையாக்கும் பெருந்தகை

திரு.ஈ.சரவணபவன் அவர்கள் சாதாரண குடும்பத்தில் இருந்து முன்னேறி இன்றைய நிலைக்கு உயர்ந்துள்ளார் என்றால், அவருக்கு இன்று மணிவிழா எடுக்கும் வேளையில் நாம் அவரின் திறமைகள், ஆற்றல்கள், குணாதிசயங்கள் பற்றிச் சிந்தித்தல் பொருத்தமானதாகும்.

நிர்வாகத்துறையில் இளமையிலேயே பொறுப்புகளைத் துணிவுடன் ஏற்றுப் படிப் படியாக முன்னேறி ' உதயன்' நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குநரானதுடன் அதன் உரிமையாளராகவும் முன்னேறியுள்ளார். திரு.ஈ.சரவணபவன் அவர்கள் கிடைக்கும் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கி முன்னேறும் ஆற்றல் உடையவர். இச்செயற் பாடானது எல்லோராலும் சாதிக்க முடியாதது. எமக்கெல்லாம்தான் சாதகமான நிலைகள் உருவா கின்றன. நாம் அதனைப் பயன்படுத்துகின்றோமா? உருவாகும் நிலைகளைச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கு ஒருவருக்கு அதி உயர் விவேகமும் நிகழ்காலத்தை மனதிலிருந்து வருங்காலம் எப்படி அமையுமென்று தனது அபிலாசைகளைத் திட்டமிட்டு அக்குறிக்கோளை அடையும் திறன்வேண்டும். இத்தகைய திறனும் விவேகமும் உள்ளவர்தான் எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய திரு.சரவணபவன் அவர்கள்.

முகாமைத்துவக் கூறுகள் அத்தனையையும் நன்கு கையாண்டு ஒரு திட்டத்தைச் செயற்படுத்தும் ஆற்றல்மிக்கவர். அதன்பேறாக இன்று ஒரு நாடாளு

மன்ற உறுப்பினராகும் சந்தர்ப்பமும் கிடைத்தது. பலரும் எதிர்ப்பினைக் கண்டு தங்கள் செயற்பாட்டிலிருந்து விலகும் தன்மையுள்ளவர்கள். ஆனால் திரு.ஈ.சரவணபவன் அவர்கள் எதிர்ப்பினையோ அல்லது பகைமையையோ தனக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் துணிவும் ஆற்றலும் உடையவர். அவரின் வளர்ச்சிப் பாதையில் இப்படியான சந்தர்ப்பங்கள் கைகொடுத்துள்ளன.

ஒரு தலைசிறந்த முகாமையாளராக முதல்நிலைப் பத்திரிகையின் உரிமையாளராக நாடாளுமன்ற உறுப்பினராக பல துறைகளில் சிறப்பாக விளங்கும் திரு.ஈ.சரவணபவன் அவர்களும் அவர் தம் குடும்பத்தினரும் நீடூழி வாழ்ந்து சமூகத்திற்கு தொடர்ந்து சேவையாற்ற ஆண்டவன் அருளவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**அ.பஞ்சலிங்கம்**<br>
முன்னாள் அதிபர்,<br>
யாழ்.இந்துக் கல்லூரி.



# இந்து அன்னைக்கு அள்ளிவழங்கும் வள்ளல்

யாழ்.இந்துவின் மைந்தனும் கௌரவ நாடாளு மன்ற உறுப்பினருமாகிய திரு.ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்கள் மணிவிழாக்காண்பது மட்டற்ற மகிழ்வினைத் தருகிறது.

தான் கற்ற கல்லூரி அன்னைக்கு நன்றிமறவாது நற்பணி புரிபவர் அவர். கல்லூரியில் அருளாட்சி புரியும் சிவஞான வைரவப்பெருமான் மீதும் கல்லூரி அன்னைமீதும் அளவுகடந்த பற்றுக் கொண்டவர். இதன்காரணமாக கல்லூரிக்கான சமயப் பணிகளுக்கும், விளையாட்டுத்துறைக்கும் இன்னபிற துறைகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெருநிதி வழங்குபவர். பழைய மாணவர் சங்க நீண்டகால உறுப்பினராகவும், செயற்குழு உறுப்பினராகவும் செயலாற்றியதோடு அல்லாமல் தற்பொழுது சங்க உபதலைவர்களில் ஒருவராகவும் விளங்குகின்றார். மணிவிழா நாயகனும் அவர் குடும்பத்தினரும் எல்லா நலன்களும் பெற்று சிறப்புற வாழ அவர்தம் பொதுப்பணி சிறக்க சிவஞான வைரவப் பெருமான் இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**V.கணேசராசா**
அதிபர்,
யா/இந்துக் கல்லூரி.



# Achieving Results by Facing Obstacles has been His Goal

I have great pleasure in subscribing this message to the souvenir to be released by the Organizing Committee to mark the 60th Birthday Celebrations of Hon E.Saravanapavan.

I have known him for more than 30 years and became closely associated with him during the difficult period I served in Jaffna as the Manager of Jaffna Branch of Commercial Bank in the eighties. It was during this period their Uthayan Newspapers (Pvt) Limitted was also functioning in Jaffna as one of the leading newspapers.

I have found him as a person who will not hesitate to venture into any project once decided in his mind and he worked hard to achieve results in them facing many obstacles in life. Now he has also entered into politics as well and had succeeded in that arena too by becoming the Member of Parliament in the first attempt itself. That shows his determination and commitment in all what he does.

He too had helped me in many ways when I approached him for publishing news items or for any sponsorship while

serving as the Manager of the bank, President of the OBA of Jaffna Hindu College where both had the secondary education and as the District Governor of the Lions Clubs International in the year 2007/2008 when we celebrated the Golden Jubilee in SriLanka. He was good enough to give the widest publicity in the newspapers to the unprecedented Golden Jubilee Celebrations we had in Jaffna at a very difficult time when the war was going on and to the worthwhile major project of the donation of an Emergency Care Unit to the Teaching Hospital, Jaffna we did to mark the occasion.

I take this opportunity to wish him all the best on this important occasion of celebrating his 60th Birthday and pray God Almighty to grant him long and healthy life.

**Selvaretnam Raghavan**
Executive Director, Bartleet Group
Patron, Jaffna Hindu College OBA (Colombo)
District Governor 2007/2008 of Lions Clubs International
Secretary, Thiruketheeswarm Temple Restoration Society.



# ஈழத் தமிழர்களின் மகத்தான சொத்து சரா!

சிறப்பான அரசியல் பணி, துணிச்சலான ஊடகப் பணி, சலிக்காத மக்கள் பணி என்று பல்வேறு பணிகளிலும் பரந்துபட்டு பணியாற்றிக் கொண்டிருக்கும் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஈ. சரவணபவன் அவர்கள், ஈழத் தமிழர் மக்களுக்குக் கிடைத்த மகத்தான சொத்தாகும். எங்கு என்ன பிரச்சினையோ அங்கு அவர் ஓடோடி வருவார். யாருக்கு என்ன தேவையோ அதனை அவர் வாரிவழங்குவார். அவர் காலடி படாத பிரதேசமே இல்லை. கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்கள் அவருடையவை. கொள்கையிலே குணக் குன்றுதான் எங்கள் மாண்புமிகு திரு.ஈ.சரவணபவன் அவர்கள்

விரல்விட்டு எண்ணக்கூடிய ஊடகவியலாளர்களே துணிச்சலுடன் உண்மையை வெளிக்கொண்டு வரும் நிலையில், இந்தத் துறையில் சரவணபவன் அவர்களின் பங்களிப்பு முதன்மையானது. அவர் சந்தித்த சோதனைகள் அதனால் அவருக்கு ஏற்பட்ட வேதனைகள், இழப்புகள் எல்லாவற்றையும் ஒரு பொருட்டாக மதியாமல் அவர் படைத்துவரும் சாதனைகளால் வரலாற்றில் அவர் ஒரு நாயகனாக உயர்ந்து நிற்கின்றார்.பொது மக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் அவர் ஆற்றிவரும் பணி அளப்பரியது. பிரதேச வேறுபாடின்றி எல்லோருக்கும் என்றும் தாராளமாக உதவி வருகின்றார். யாரையும் அவர் குறைவாக மதிப்பிடுவதில்லை. என்றுமே சேவை செய்வதில் சிரித்த முகத்துடன் முன்வருவார். திரு. ஈ.சரவணபவன் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் நலமே வாழ்ந்து நற்பணியாற்றிட வேண்டுமென எல்லாம்வல்ல இறைசக்தியை வேண்டுகின்றேன்.

**தேசமானிய சபா ரவீந்திரன் ஜே.பி.யூ.எம்.**

"Deshamanya" Saba Raveeindiran J.P.U.M
Attorney - At -Law, Notary Public
Chairman, Urban Council, Point Pedro.



# மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்

தமிழ் மக்களின் குரலாக கடந்த 25 வருடங்களுக்கு மேலாக ஒலித்துக் கொண்டிருக்கும் "உதயன்" நாளிதழின் நிர்வாக இயக்குனராகத் தமிழ் மக்களுக்கு அறிமுகமாகிய பின்னர் அரசியலிலும் தடம்பதித்து உலகளாவிய ரீதியில் பேசப்பட்டுவரும் திரு. ஈ.சரவணபவன் அவர்கள் தனது மணிவிழா ஆண்டில் காலடி வைக்கின்றார்.

திரு. ஈ.சரவணபவன் அவர்களின் அரசியல் பிரவேசம் அவருக்குள் ஒரு புதிய பரிமாணத்தையும், சிந்தனையையும் தோற்றுவித்துள்ளது என்பதை அவரது செயற்பாடுகள் காட்டிக்கொண்டிருக்கின்றன. கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் ஒரு வேட்பாளராக நியமிக்கப்பட்டபொழுது, அவரது வெற்றிக்காக உழைத்த வல்வெட்டித்துறை மக்களின் சார்பில் அவர்களது பிரதிநிதியாக நின்று வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகக்கொண்ட இருவர் வேட்பாளர்களாகப் போட்டியிட்ட நிலையிலும், திரு. ஈ.சரவணபவன் அவர்களின் வெற்றிக்காகவே உழைத்த எனது மக்களின் எதிர்பார்க்கைகளை எதிர்காலத்தில் நிறைவுசெய்யும் மனவலிமையையும், உடல் ஆரோக்கியத்தையும் எல்லாம்வல்ல முருகன் வழங்கவேண்டும் என்று ஆசிக்கின்றேன். எதிர்வரும் ஆண்டுகளிலும் ஊடகத்துறையினூடாகவும், அரசியல் துறையினூடாகவும் எமது மக்களுக்கான சேவைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு, அவரது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியான வாழ்வு வாழ எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ந.அனந்தராஜ்**
நகரபிதா, வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்



# தாயகத்தின் பெருமைகளைத் தலைநிமிர வைத்தவர்

இன்று மணி விழாக்காணும் தமிழ் மக்களின் மனங்கவர்ந்த, உணர்வுகாத்து உரிமைக்குரல் கொடுத்துவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மணிவிழா நாயகனின் பெருமைகளை வெறுமனே ஓரிரு பக்கங்களில் எழுத்தில் குறிப்பிட்டுவிட முடியாது. எமது தாயகத்தின் பெருமைகளைத் தலை நிமிரச் செய்த செம்மல் அவர். மிகக் கூரிய ஆயுதமாகிய ஊடகத்துறையை தமிழ்ப் பரப்பில் மிளிரச்செய்த மேதை.

தமிழ் இனத்தின் பாதுகாப்பை ஊடகத்தால் உறுதிப் படுத்தி, பற்றி எரிந்த இன உணர்வை உலகெங்கும் காட்டிட வழியமைத்து தமிழர் தம் தழும்புகளையும் சோதனைகளையும் சாதனைகளாக்கி உறுதிகொண்ட நெஞ்சுடன் ஓயாது உழைத்த உத்தமர் திரு.ஈ.சரவணபவன்.

தாயகத்தின் சாதனைகளையும் வேதனைகளையும் பலரும் அறியவைத்த வரலாற்றுப் பெருமைகொண்ட மகானை வாழ்த்த வயதில்லை. வணங்குகிறேன்.

திட்டமிட்ட பல சவால்கள் மூலம் உதயனை அழிக்க முற்பட்டவேளையும் எதிர்த்து நின்று நிலை தளராது துரோகிகளினதும் இன விரோதிகளினதும் செயல்களுக்கு அடிபணியாது என்றும் மங்காப் புகழுடன் உதயன் வாழ வழிசமைத்த தலைமகனை இந்த நன்நாளில் எமது பிரதேசத்தின் தமிழ் உணர்வுமிக்க மக்கள் சார்பில் வாழ்த்துவதோடு பல செல்வங்களையும் பெற்று இன்றுபோல் என்றும் மக்கள் பணிபுரிந்து நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி நா.ஐங்கரன்** (R.I.M.P)
தவிசாளர்.வலி.மேற்கு பிரதேச சபை
சுழிபுரம்.



# பெருமைக்குரிய பேச்சாற்றலும், பண்பும் பொதிந்த பெரியார்

மதிப்புக்குரிய திரு. ஈ.சரவணபவன் அவர்களுக்கு மணிவிழா எடுக்கின்றோம் என்பது அறிந்தவர்கள் எல்லோருக்கும் மனமகிழ்ச்சி தருகின்ற விடயமாகும். நான் மணிவிழா நாயகனோடு நெருங்கிப் பழகிய காலம் குறைவாயினும் அவரின் அரிய ஆற்றலை அறிய எவருக்கும் நிறைய நேரம் தேவையில்லை. ஒரு தரம் அவரின் பேச்சைக் கேட்டவர்கள் எப்போது அவரின் பேச்சை மீண்டும் கேட்போம் என்று ஆவலோடு காத்திருப்பர். இதற்கு முக்கிய காரணம் அவர் ஒருபோதும் தன்னிடம் சரியான ஆதாரங்கள் இல்லாமல் எந்தப் பேச்சையும் பேசுவதில்லை. அதனால் அவர் பேச்சில் கேள்வி கேட்க விரும்புபவர்கள் வெட்கித் தலைகுனிவர்.

இதுமட்டுமல்லாது இவர் தனது பேச்சில் வேறு யாரும் எப்போதாவது பேசிய கருத்துக்களை முழுமையாகத் தவிர்த்து புதிய கருத்துக்களையே சுவையாகப் பேசுவார். இது கேட்பவர்களுக்கு ஒருபோதும் சலிப்பினை ஏற்படுத்துவதில்லை. இது மட்டுமல்லாது கேட்பவர் எவரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியவாறு விளக்கமாகவும் சொற் தெளிவோடும் பேசுவார். இன்னும் அவரின் பேச்சுத் தொனி கம்பீரமாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் பேசும் தலைப்புப் பற்றிய விடய ஞானம் அவரிடம் பொதிந்து காணப்படுவதை வியந்து பாராட்டாமல் யாரும் இருக்கமுடியாது. எனவே இப்பெரியார் தன் பேச்சுத் திறனால் தனக்கென ஒரு மங்காத மறையாத முத்திரை வைத்திருக்கின்றார் என்றால் அதுமிகையாகாது.

அன்பான திரு. ஈ.சரவணபவன் அவர்கள் அரசியல் துறையிலும், பத்திரிகைத் துறையிலும், இலக்கியத் துறையிலும் இன்னும் பல்வேறு துறைகளிலும் ஆற்றியுள்ள அருஞ்சேவை போற்றிப் பாராட்ட வேண்டியது.

அவர் பதற்றம் அடைவது குறைவாயினும் உணர்வுமிக்க உயிர்த்துடிப்பு நிறைந்த நிதான சிந்தனையாளராக, சமூக சீர்திருத்தவாதியாக, அரசியல் போர்வீரனாக விளங்கிக்கொண்டிருக்கின்றார் என்பது அவரின் கௌரவமாகிறது.

கொடுங்கோண்மை எந்த உரு எடுத்தாலும் அதை எதிர்த்துச் சலிக்காது போராடும் எண்ணக்கருவைக் கொண்டதோடல்லாது தேவை எழும்போதெல்லாம் தொண்டாற்றும் துடிப்பு மிக்கவர். இதுமட்டுமல்லாது அவர் தலைமைக்குணம், ஆழ்ந்த அன்பு, அனுதாபம், பொறுமை, விடாமுயற்சி, ஆற்றல், அயரா உழைப்பு, ஊக்கம், துணிவு, தீவிரமாகச் செயலாற்றும் வல்லமை ஆகிய அவரது குணங்கள் பற்றி எவ்வளவு எடுத்துரைத்தாலும் ஏற்கும்.

இதற்கு மேலாக இவரின் உயரிய பண்பில் இன்னுமொன்றையும் இறுதியாகக் கூறவேண்டும். அதாவது மற்றவர்களின் நடத்தையைத் தவறானது என நாம் குறைகூறும்போது நாமும் பலவீனமானவர்கள் தவறு செய்யக்கூடியவர்கள் என்பதை உணர்ந்து கருத்திலே நிதானம் காட்டவேண்டும் என்ற கொள்கை உடையவர் திரு.ஈ.சரவணபவன்.

அவர்களுக்கு மங்காத புகழும் திடகாத்திரமான தேக ஆரோக்கியமும், நீண்ட ஆயுளும், சகல செல்வமும் கிடைக்க எல்லாம்வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**திரு. சிற்றம்பலம் துரைராசா**
தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.



# தன்னம்பிக்கையின் மறு உருவம் திரு. ஈ. சரவணபவன்

"விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்ற முதுமொழி திரு. ஈ. சரவணபவன் அவர்களுக்கு நன்கு பொருந்தும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குருளைச்சாரணர் குழுத்தலைவர். அவர்களது குழு பழையபூங்காவில் நடைபெற்ற குருளைச்சாரணர் போட்டிகளில் எல்லாவற்றிலும் முதலிடம்! "ரோரெம் போல்" (Totem Pole) இவர்கள் வசமாகியது. எனது மூத்த சகோதரர் சிவனேசராசா அவர்கள்தான் இவர்களது குருளைச் சாரண ஆசிரியர். தலைமைத்துவம் திரு.ஈ.சரவணபவன் அவர்களின் இயற்கைப் பலமாகியது.

1999ஆம் ஆண்டு துணுக்காயிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சிவகுருநாதர் வீதியில் வித்தியாதரன் அவர்களோடு தங்கியிருந்தேன். கொழும்பிலிருந்து தொலைபேசிமூலம் என்னைத் தொடர்புகொண்டார். "நீங்கள் எதற்குமே கவலைப்பட வேண்டாம். எங்கள் உதவி எப்போதும் உண்டு" என்றபோது அவரது பெருந்தன்மை பளிச்சிட்டது.

நான் கல்விச் சேவையிலிருந்து இளைப்பாறிய காலத்தில் என்னை உதயன் நிறுவனத்தில் இணைத்தார். முதலில் "அர்ச்சுனா" சிறுவர் பத்திரிகையின் ஆசிரியர் ஆக்கினார். சிறிது காலத்தின் பின் விளம்பர முகாமையாளர் ஆக்கினார். அவரோடு வேலைசெய்த காலத்தில் அவரது தன்னம்பிக்கையையும் உறுதியான முடிவெடுக்கும் தனித்தன்மையையும் கண்டு வியப்புற்றேன். றோட்டரிக்கழகத்தின் ஊடாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அவர் நடத்திய இளைஞர் முகாமைத்துவப் பயிற்சி மிகவும்

அற்புதமானது. இத்தகைய சிறப்பான பயிற்சி இதற்குமுன் வழங்கப்பட்டதே கிடையாது என்றே கூறவேண்டும். சுதந்திரமான துணிவான ஊடகம் என்ற மேன்மையை "உதயன்" பெற்றது. அதனைக் கொண்டாட உதயனில் பெரும்விழா நடத்தப்பட்டது. அந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக ஆஸ்திரேலியா நாட்டின் தூதுவர் வருகைதந்தார். அந்த விழாவின் தொகுப்பாளராக என்னையே அவர் நியமித்தார். இது அவர் என்மீது கொண்டிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தியது. அந்த விழாவில் ஆசிரியர் குழுவினருக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கிக் கௌரவித்தார். இது அவரது சிறப்பியல்பாகும்.

விற்பனைப்பகுதி முகாமையாளர் சுரேஸ் அவர்களும் ஊழியர் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் வரலாற்றில் கொடுமையான சம்பவம் எனலாம். திரு.ஈ.சரவணபவன் அவர்கள் அன்று மனம் கலங்கி பயந்து ஓடி ஒழியவில்லை. திடமான தெளிவான சிந்தனையுடன் இயங்கினார். உடல்களைப் பொறுப்பெடுத்து உரிய மரியாதையுடன் நடத்தும்படி கேட்டுக்கொண்டார். சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு எவ்வித சிரமமும் இல்லாமல் சகல விடயங்களையும் முன்னின்று நடத்தும்படி சொன்னார். கைதடியிலுள்ள காலஞ்சென்ற ஊழியரின் வீட்டிற்குச் சென்று சகல ஏற்பாடுகளையும் செய்யும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார். இறுதி நிகழ்வுகளுக்குத் தேவையான பணத்தைக் கொடுக்கும்படி சொன்னபோது நான் மனம் கலங்கிவிட்டேன். இருவரது உடல்களையும் உதயன் பணிமனைக்கு எடுத்து வந்து சகல மரியாதைகளையும் செய்யும்படி பணித்தார். இது அவரது பரந்த மனப்பான்மையை வெளிக்காட்டியது. இறுதி மரியாதை மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டது. விற்பனை முகாமையாளர் சுரேஸ் கொழும்பைச் சேர்ந்தவர், இளைஞர். அவரது குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கிய திட்டம் திரு.ஈ.சரவணபவனின் உயர்ந்த குணத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். இதேமாதிரி இன்னொரு சம்பவம். விளம்பரப் பகுதியில் பணியாற்றிய ஊழியர் ஒருவரின் மகள் திடீரென காலமானபோது அவரது இல்லத்திற்கு சென்று ஆறுதல் கூறி செலவுக்கு பணமும் கொடுக்கும்படி கூறினார். இறுதி செலவுக்கான பணத்தொகையை என்னையே தீர்மானித்து கொடுக்கும்படி கூறினார். இது அவரது பெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டாகும்

அவர் நிறுவன அதிகாரிகளுக்கு நடத்தும் கூட்டம் திட்டமிட்டு சிறப்பாக நடத்தப்படும். அவரது நிர்வாக அறிவை அது புலப்படுத்தியது. ஒருமுறை "நீங்கள் அரசியலில் எப்போது இறங்க உத்தேசம்?" என்று கேட்டேன். அரசியலில் எப்படி எப்போது இறங்கவேண்டும் என்பதை முடிவுசெய்து வைத்துள்ளேன். காலம் அதனைக்காட்டும் என்று அவர் 2001ஆம் ஆண்டு சொன்னார். அதன்படி வெற்றிகரமாக இன்று அரசியலில் அவர் சேவை செய்கின்றார். யாழ்ப்பாணத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதி என்பது எவ்வளவு பெருமைக்குரியதாகும்.

திரு.ஈ.சரவணபவனின் சேவை தமிழினத்திற்கு மிகவும் தேவை. தமிழர்களின் குரல் உதயன். உதயனின் உயிர் திரு.ஈ.சரவணபவன். அவரும் அவரது துணைவி யாரும் அன்பு மகளும் சகல சிறப்புகளும் பெற்று மேலும்மேலும் உயர ஆண்டவன் அருள்புரிவாராக.

**சுடர் மகேந்திரன்.**



# தான் கற்ற கல்லூரியின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் அக்கறை கொண்ட தலைவன்

பள்ளிச் சிறுவனாக, துடிப்புள்ள ஒரு இளைஞனாக, ஆளுமைமிக்க ஒரு நிர்வாக இயக்குநராக, பார் புகழும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகத் திகழும் என் அன்புக்குரிய மாணவனுக்கு இன்று மணி விழா. இந்த விழாவை ஒட்டி வெளியிடப்படுகின்ற "உதய நாயகனுக்கு" வாழ்த்துச் செய்தி வரைவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

திரு. ஈ.சரவணபவன் அவர்கள் கௌரவ நடாளுமன்ற உறுப்பினராக, உதயன் குழுமத்தின் தலைவராக மட்டுமல்லாது பல பரிமாணங்களைக் கொண்ட ஒருவராகச் சமூகத்தில் திகழ்ந்தாலும் - மற்றவர்களுக்கு வெவ்வேறு பரிமாணங்கள் தெரிந்தாலும், என்றும் என் அபிமானத்துக்குரிய ஒரு மாணவனாகவே அவரை நான் பார்க்கின்றேன். "வளரும் பயிரை முளையிலேயே தெரியும்" என்ற பழமொழிக்கமைய நான் அடையாளம் கண்டு கொண்ட மாணவர்களுள் திரு. ஈ.சரவணபவனும் ஒருவர்.

இளமைத்துடிப்புடன் அவர் துள்ளித்திரிந்த பள்ளிப் பருவம் இன்றும் என் கண்முன்னே நிழலாடுகின்றது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பயில்கின்ற மாணவர்களுக்கு பொதுவாக ஒரு குணம் உண்டு, "நாம் யார்க்கும் குடி அல்லோம்" என்பது எங்கள் தாரக மந்திரம். அந்த வகையில் அடங்காத் தமிழனாக "யாருக்கும் அடி பணியாத, எவருக்கும் அஞ்சாத" ஒரு தமிழ்த் தேசிய வாதியாக அவரைக் காண்பது என்னையும் என் சமூகத்தையும் பெருமைகொள்ள வைக்கின்றது.

துடிப்புமிக்க மிகச்சிறிய வயதிலேயே ஒரு குருளைச் சாரணனாகத் தன்னைச் சமூகசேவையில் இணைத்துச் சேவையாற்றிய அவர், பள்ளிப் பருவத்தோடு தனது சமூக சேவையை நிறுத்திக் கொள்ளாமல் இன்றும் தொடர்வது என்னைப் பெருமைகொள்ள வைக்கிறது. பாடசாலையில் பயின்ற காலத்திலும் சரி, தொழில் முயற்சியாளராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு, வெற்றிகரமானதொரு நிர்வாக இயக்குநராகத் திகழ்ந்த காலத்திலும் சரி, தான் கற்ற கல்லூரியின் மீது அளவில்லாத அக்கறை கொண்டிருந்ததோடு, தனக்குப் பாடம் புகட்டிய எவரையும் மறந்துவிடாமல் அன்பு பாராட்டுகின்ற ஒருவராக நான் அவரைக் கண்டு கொண்டேன்.


தான் கற்ற கல்லூரியின் வளர்ச்சியிலும், விருத்தியிலும் அக்கறைகொண்டு தனிப்பட்ட முறையில் பல அபிவிருத்திப் பணிகளைச் செய்தவர். அதற்கெல்லாம் சிகரம் வைத்தால் போல கல்லூரியில் கூடைப்பந்தாட்டத் திடல் இல்லாத குறையைப் போக்கும்வகையில் தனது குடும்பத்தினரின் அன்பளிப்பாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு நிரந்தரமானதொரு கூடைப்பந்தாட்டத் திடலை அமைத்துக் கொடுத்தவர்.

அத்துடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக நான் விளங்கிய காலத்தில் சர்வதேச ரீதியாக இருக்கின்ற யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களை தனது வெளிநாட்டு விஜயங்களின் போதெல்லாம் நேரடியாகச் சந்தித்து கல்லூரியின் வளர்ச்சியில் பங்கெடுக்கச் செய்ததை என்னால் மறக்கமுடியாது.

அகவை அறுபதை நிறைவு செய்தாலும் - அவர் என்றும் இளைஞனாக, நோய் நொடியின்றிச் சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு காலம் வாழ்ந்து, மக்கள் பணி செய்து மகிழ என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**கப்டன் நா.சோமசுந்தரம்**

முன்னாள் பிரதி அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
முன்னாள் தலைவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.



# விளையாட்டுத்துறைக்கு வளம் சேர்த்தவர்

உதயன் நாளிதழின் நிர்வாக முகாமையாளர் திரு.ஈ.சரவணபவன் அவர்களின் மணிவிழா சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

விளையாட்டுத்துறையோடு நெருங்கிய உறவினைக் கொண்டுள்ள திரு.ஈ.சரவணபவன் அவர்கள் பல கழகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் நிதியுதவியை அளித்து விளையாட்டுத் துறையை மேம்படுத்திவருவது பாராட்டுக்குரியது. ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் மிகப் பெரிய சேவையை ஆற்றியுள்ளார். எமது ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கழகங்களுக் கிடையே கிரிக்கெட் சுற்றுப் போட்டியை கடந்த 30 வருடங்களாக நடத்தி வருகின்றது. இப்போட்டி களை ஆரம்பிப்பதற்கும் சிலகாலம் தொடர்ந்து நடத்துவதற்கும் நிதி உதவியை வழங்கிய பெருமைக்குரியவர் திரு.ஈ.சரவணபவன் அவர்கள். உதயன் பணிமனையில் கூடைப்பந்தாட்ட அணி, கிரிக்கெட் அணி என்பவற்றை உருவாக்கி சிறப்பாகச் செயற்பட முன்னின்று உழைத்தவர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே திரு.ஈ.சரவணபவனும் அவரது குடும்ப உறுப்பினர் களும் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக கூடைப்பந்தாட்ட மைதானத்தை நிர்மாணித்து அதனைப் பராமரித்தும் வருகின்றனர். தற்போது மைதானம் ஒளியூட்டப்பட்டு மாணவர்கள் அவர்களது வசதிக்கேற்றாற்போல் விளையாடுவதற்கு வசதிசெய்து கொடுத்துள்ளமை பாராட்டுக்குரியது.

இவ்வாறு விளையாட்டுத்துறைக்கு அளப்பரிய சேவையை ஆற்றிவரும் திரு.ஈ.சரவணபவனும் அவரது குடும்பத்தாரும் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**சண். தயாளன்**

உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.



# நான் கண்ட திரு. ஈ. சரவணபவன்

எந்நேரமும் புன்சிரிப்புத் தவழும் முகம், எவரையும் தன்பால் ஈர்க்கவைக்கும் காந்தக் கண்கள், அமைதியும் சாந்தமும் நிறைந்த சுபாவம். இனிமை கலந்த அடக்கமான குரல். இத்தனைக்கும் சொந்தக்காரர் யார் என்றுகேட்டால் அவர்தான் திரு.ஈ.சரவணபவன். 1985 ஆம் ஆண்டு முதலாக என்னுடன் பழகியவர் அவர். இப்போது அந்தநாள் ஞாபகம் வந்தது.

'உதயன்'நாளிதழ் வெளிவர இருப்பதை தினமும் வருவான் புதுமை தருவான் அவன் யார்? எனும் சுவரொட்டி யாழ்.நகரிலுள்ள முக்கிய இடங்களிலெல்லாம் ஒட்டப்பட்டிருப்பதைக் கண்டு வேலை தேடி அலைந்த நான் ஒரு முடிவுக்கு வந்தேன். எப்படியும் உதயனில் சேரவேண்டுமென்று உடனே ஓர் இடம் கேட்டு விண்ணப்பித்தேன்.

அவன் யார்? என்ற கேள்விக்கு 'உதயன் பத்திரிகை' என்று விடை தெரிந்துகொண்ட நான் எனக்கு ஒரு வேலை தரும் வண்ணம் கேட்டபோது நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு அழைப்பு வந்தது. நான் ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகத்தில் ஒப்புநோக்குநராகக் கடமைபுரிந்ததனால் அதையே தருமாறு கேட்டேன்.

அன்று முதலில் உள்ளே நுழைந்ததும் முதன் முதலாக நான் கண்டது சரவணபவனைத்தான். பண்பின் சிகரமாய் நற்குணம் நிறைந்த அவர் கேட்ட கேள்விகளுக்கு நான் ஆறுதலாகப் பதிலளித்தேன். அவருடைய சாந்தமான அமைதியான போக்கு

எனக்கு மிகவும் பிடித்திருந்தது. உதயன் பிரதம ஆசிரியரும் அப்போது அங்கிருந்தார். ஒப்புநோக்கும் அனுபவம் இருக்கிறதென்று தெரிந்ததுமே எனக்கு வேலை தருவதாக இருவருமே சம்மதம் தெரிவித்தனர்.

எனது நேர்முகப் பரீட்சையின்போது அறிமுகமான திரு.ஈ.சரவணபவன் என்னுடன் அன்பாகப் பழகினார். எனக்கும் அவர் மீது நம்பிக்கை பிறந்தது. 'உதயன்' பத்திரிகை வெளிவரத் தொடங்கியது 27.11.1985 முதல் நாள் உதயன் நாளிதழ் எனது ஒப்புநோக்குதலுடன் பிரசுரமாகியது என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அன்று அதன் விலை ஒரு ரூபா மட்டுமே!

உதயனில் சேர்ந்த நாள் முதலாக நான் தொடர்ந்து அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. ஸ்ரீதரன் இங்கே வாரும் இந்த மெஷின்புறூவைப் பாரும் என்று அவர் அன்று அழைத்த குரல் இப்போதும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றது. அவருக்குக் கோபிக்கவே தெரியாது. அத்தனை அடக்கமானவர் அவர்.

இவ்வாறு இருக்கும் நாளில் உதயன் நாளிதழ் யாழ்ப்பாணத்தில் வாழ் மக்களிடையே இடம்பிடிக்கத் தொடங்கிற்று. என்னாலான முழு ஒத்துழைப்பையும் வழங்கி அதன் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்து கடமையாற்றினேன் என்பதை எண்ணும்போது இப்போது பெருமிதமுறுகின்றேன்.

1985 பிள்ளையார் பெருங்கதை விரதக் கட்டுரை முதலாக எழுதத் தொடங்கிய நான் இன்று ஓர் ஆன்மீக எழுத்தாளனாக மிளிர்வதற்கு உதயன் தான் கைகொடுத்தான் எனில் அதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

மக்கள் மனம் கவரும் நாளிதழாக இன்று வலம்வரும் உதயன் நாளிதழின் நிர்வாக இயக்குனர் ஈ.சரவணபவன் அவர்களது தளரா முயற்சியினாலும் இடைவிடாத முழுநேரப் பங்களிப்பாலும் தான் அவன் இருபத்தெட்டு வயது இளைஞனாக இன்று வெற்றி நடைபோடுகின்றான் எனில் அது மிகையாகாது. இப்போதும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. திரு.சரவணபவன் அவர்களுக்கும் யசோதை அவர்களுக்கும் திருமணம் நிகழ்ந்தவேளை அடியேனுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் பல்லாண்டு நீடூழி வாழ்க என்று வாழ்த்துப்பா பாடுமாறு என்னைப் பணித்தார்கள். மிக்க சந்தோசத்துடன் சிறியேன் ஒரு வாழ்த்துப்பாவை இயற்றி அன்று அவர்களை வாழ்த்திப் பாடியது இன்றும் காதுகளில் ரீங்காரமிடுகிறது. அது இனிக்கும் நினைவுகள். முன்பு 1987 இல் நிகழ்ந்த இராணுவ நடவடிக்கைகளின்போது நான்பட்ட கஷ்டங்களைப் பார்த்த திரு.ஈ. சரவணபவன் தன்னுடைய வீட்டிலேயே ஓர் இடம் தந்து நானும் மனைவியும் மகனும் இருக்க உதவிய பெருந்தன்மை யாருக்குமே வராது. வானில் ' சகடை' வந்து குண்டுபொழியும் நேரத்தில் என் குடும்பத்துக்கு அவர் அளித்த ஆதரவு மறக்கமுடியாதது. கைலாசபிள்ளையார் வீதியிலுள்ள எமது நிர்வாக இயக்குநரான திரு.ஈ. சரவணபவன் அவர்களது இல்லத்தில் நான் வாழ்ந்த காலத்தில் அவரது இல்லத்தரசி யசோதை என்னிடமும் என் மனைவி மகனிடமும்

காட்டிய பரிவு இப்போதும் எனக்கு நினைவில் நிழலாடுகிறது. அவை என்வாழ்வில் பொன்னான நாள்கள்.

நிர்வாக இயக்குநர் ஒரு நவராத்திரி விழாவின்போது நிறைய பொம்மைகள் எல்லாம் வைத்துக் கொலு அமைத்துப் பூசை நடத்தினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் எனது மகன் தேவாரம் இசைத்ததைக் கண்டு அருகில் வந்து அணைத்து முத்தமிட்டு தேவாரம் நன்றாக இருந்தது. இன்னும் நன்றாகப் பாடவேண்டும் என்று ஆசிகூறி வாழ்த்தியவர் திரு. ஈ. சரவணபவன் அவர்களே! அவரது ஆசியினால் இன்று அவன் நன்கு வாழ்கின்றான்.

அவருடைய நல்ல இதயத்தின் வாழ்த்து என் மகனுக்குக் கிடைத்ததையிட்டு எனக்கு மிகவும் சந்தோசம். முன்னர் அப்போது நான் கண்ட திரு.ஈ. சரவணபவனைத்தான் இப்போதும் காண்கின்றேன். அவரில் எந்தவித மாற்றமும் இல்லை. அதே அடக்கம், அமைதி, சாந்தம் இப்போதும் இருக்கிறது. தான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமைகிடையாது. முன்பிருந்த கனிவான பேச்சும் காந்தக் கண்களும் இப்போதும் அப்படியே இருக்கின்றதென நான் பெருமையோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

இன்று அகவை அறுபது காணும் திரு.ஈ. சரவணபவன் அவர்கள் இன்னும் நீண்டநாள் வாழ்ந்து பல்லாண்டு சேவையாற்ற நலமுடன் வாழவேண்டும் என எல்லாம்வல்ல நல்லைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றேன். அவரும் அவர் மனையாள் யசோவும் மகள் லக்சுமியும் இன்பமாய் வாழ ஆசி நல்கி வாழ்த்துகின்றேன்.

திரு.ஈ.சரவணபவன் அவர்களது அயராத சேவையும் உண்மையான உழைப்பும் யாழ். மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று கூறின் அது சாலப்பொருந்தும். அவருடைய அன்பான அரவணைப்பில் எத்தனையோ குடும்பங்கள் இப்போதும் நன்றாக வாழ்கின்றன என்பது நாடறிந்ததே.

மேலும் சங்கானை கூடத்து மனோன்மணி அம்மன் மீது இடையறாத பக்திகொண்ட திரு.ஈ. சரவணபவன் அந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கும் நன்கு உதவியிருக்கின்றார். அத்துடன் யாழ். வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானின் தேர்த் திருவிழாவையும் தன்னுடைய பொறுப்பிலேயே இப்போதும் செய்துவருவது அவருடைய ஆன்மீக நாட்டத்துக்குச் சான்று பகர்கின்றது.

அவருடைய அன்பான உரையாடலும் கனிவான பணிவு கலந்த பண்பான நடத்தையும் முன்பு எவ்வாறிருந்ததோ அவ்வாறே இப்பொழுதும் இருப்பது அவரது உண்மையான நேர்மை தவறாத நற்குணத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அதுமட்டுமின்றி உதயனில் தன்னிடம் வேலை பார்க்கின்ற அனைத்து ஊழியர்களும் நன்றாக இருக்கவேண்டும் என்ற பரந்த நோக்குடைய நிர்வாக இயக்குநர் அவர்கள். எவ்வளவு தூரம் உதவமுடியுமோ அவ்வளவுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்யத் தயங்கவே மாட்டார். அத்தனை கருணை உள்ளம். எத்தனையோ இக்கட்டுகள், தடங்கல்கள், இடையூறுகள், உயிரிழப்புகள்,

சேதங்கள் வந்தபோதும் சற்றும் மனந்தளராது உறுதியுடன் செயற்பட்டு வெற்றியோடு வீறுநடைபோட்டவர் திரு.ஈ. சரவணபவன் என்று சொன்னால் அதற்கு ஈடிணை கிடையாது. அத்தனைக்கும் அவரிடமிருந்த கடவுள் பக்தியே காரணம் எனில் மிகையில்லை.

தளராத உறுதிகொண்ட நெஞ்சும் நேர்மையும் நீதி தவறாத நடுநிலைமையும் தான் அவரது உயர்வுக்கு வழிசமைத்தன. அஃது ஒருபுறம் இருக்க அவரிடம் காணப்பட்ட தன்னம்பிக்கையும் விதியை மதியால் வெல்லலாம் என்பதில் காட்டிய அக்கறையுந்தான் அவரை நல்ல நிலைக்குக் கொண்டுவந்தன. 'என்னதான் நடக்கும் நடக்கட்டுமே... இருட்டினில் நீதி மறையட்டுமே.. தன்னாலே வெளிவரும் தயங்காதே... ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே..' என்ற பாடலை முற்று முழுதாக நம்பி ஓர் இலட்சிய பாதையில் நடந்து முன்னுக்கு வந்தவர் சரவணபவன். அரசியலிலும் அலுவலகத்திலும் சரி உண்மை வழிநின்று உயர்ந்த ஒரே இலட்சிய புருஷர் திரு. ஈ.சரவணபவன் அவர்களேயாவர்.

சிந்தனையில் எந்நாளும் சிறப்பான எண்ணங்களுடன்
சீர்திருத்தப் பணிசெய்த எங்கள் சரவணபவன் அவர்களே
உந்தனை வாழ்த்துவதில் உவகையே கொள்கின்றேன்.
ஊர் போற்றப் பார் போற்ற உத்தமராய் வாழியவே
கந்தனைக் கரங்குவித்தே காலமெல்லாம் மிகக் களிப்புடனே
கற்றவர் காமுறவே கந்தனின் பெயர் கொண்டீர்
வந்தனை செய்கின்றேன் என்றும் வளமுடனே வாழ்க என
உளமார வாழ்த்துகின்றேன் பல்லாண்டு வாழ்க! வாழ்க!!
கண்ணியமும் ஜீவ காருண்யமும் மிக்க சரவணபவனே
காசினியோர் வாழ்த்தி நிற்கப் பல்லாண்டு வாழியவே
புண்ணியமே செய்திட்டேன் புளகாங்கிதம் அடைகின்றேன்
பூமகளும் நாமகளும் அருட் கடாட்சம் வழங்கிடவே
எண்ணிய பல கருமங்களை ஏற்றமுடனே செய்திட்டீர்
ஏழைகள் வாழ்வு மலர உம்மையே அர்ப்பணித்தீர்
மண்ணிலே என்றும் நல்ல மாண்புடனே திகழ்க என
மனதார வாழ்த்துகின்றேன் பல்லாண்டு வாழ்க! வாழ்க!

உதயவேளையில் உதித்து மக்களின் இதயதாகம் தீர்க்கும் 'உதயன்' நாளிதழ் உத்வேகத்துடன் மலர ஆவனசெய்து நிற்கும் அன்புள்ளங்கொண்ட நிர்வாக இயக்குநர் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து மக்கள் சேவையே மகேசன் சேவை என மங்களமாயிருக்க மனங்கனிந்து வாழ்த்தி மகிழ்கின்றேன்.

வாழ்க வளமுடன்

**முன்னாள் ஊழியர்**

'தெய்வத் தமிழ்ச் சுடர்'

- கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்



# வர்க்கபேதம் பார்க்காத பண்பாளர்

நான் ஒரு மோட்டார் வாகனச் சாரதியாக உதயன் நிறுவனத்தில் திருவாளர் ஈ.சரவணபவன் ஐயா அவர்களின் கீழ் பணியில் இணைந்தேன். தொழிலாளி, முதலாளி என்ற பேதமற்ற அவரின் நடத்தை என்னை மிகவும் கவர்ந்தது. அவரது அன்பும் பண்பும் அவர் மீதான ஓர் உயரிய மதிப்பை என்னிடத்தில் விளைவித்தது.

அவர் மீதான உறவு, நான் அவரை மைந்தனாகக் கணிக்கும் வகையில் பல சந்தர்ப்பங்களில் எனக்கு உணர்த்தியது. அவர் சார்ந்த ஊடகத்துறையும் அவரின் முகாமைத்துவத்தில் வெளிவந்த உதயன் பத்திரிகையும் பல்வேறு வழிகளில் அவருக்கு சோதனைகளையும் வேதனைகளையும் விளைவித்தன. எனினும் எந்தநிலையிலும் அவற்றை எதிர்கொள்ளும் துணிவு அவரிடத்தில் இருப்பதைக்கண்டு நான் பெருமிதம் அடைந்துள்ளேன். 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பெரும் இடப்பெயர்வின் போது சரசாலையில் எந்த வசதிகளும் அற்று ஒரு வீட்டில் நாம் தூக்கிச்சுமந்த பத்திரிகை அச்சியந்திரங்களை வைத்துக்கொண்டு உதயன் பத்திரிகையை வெளிவரச்செய்த பெருமையில் நாம் அவரது உள உறுதியின் வலிமையைக் கண்டுகொண்டோம்.

தொழில் உறவுக்கு அப்பால் எமது தனிப்பட்ட உறவின்மீது அவர் கொண்டிருந்த அக்கறை எமது பல தேவைகளையும் நிறைவுசெய்ய உதவியது. எமது கருத்துக்களுக்கும் மதிப்பளித்து அவற்றை ஏற்றுச் சரியானதைச் செய்ய அவர் துணிவதைப்

பார்த்து நாம் மகிழ்ந்திருக்கின்றோம். அவரின் மாறாத அன்பினால் இன்றும் பலர் அவர் மீது மதிப்பு வைத்துச் செயலாற்றுவதை நான் நன்கு அறிவேன். தவறுகள் காணுமிடத்தில் அவற்றை நகைச்சுவையோடு சுட்டிக்காட்டும் போது தவறைத் திருத்தவேண்டும் என்ற ஆவல் என்னிடத்தில் மேலெழுவதை நான் உணர்ந்திருக்கிறேன்.

அரசியலில் வேட்பாளராக முன்னின்று அவர் வெற்றி கண்டபோது என்றும்போல் யாவர் மீதும் அன்பைப் பேணும் பண்புமிக்கவராகவே அவர் செயற்பட்டார், செயற்படுகின்றார். யாவரையும் ஒரு மனத்தோடு உபசரித்தலும் இறைபக்தியில் நீடித்த ஈடுபாடும் அவரது உயர்வுக்கான காரணங்கள் எனலாம். அவருக்கு உறுதுணையான அவரது மனைவியும் பாசமிக்க மகளும் அவரது வாழ்விற்கேற்ற வனப்பமைந்தவர்களாக வாய்த்தமை இறைவனின் குறையாத ஆசிகள் எனலாம். என்றும்போல் சிறப்புறு வாழ்வோடு மணிவிழாக் காணும் நாயகனுக்குத் தொடரும் நாள்கள் மேலும் பலமும் வாழ்வும் தர வாழ்த்துகின்றேன்.

**சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்**
8 ஆம் வட்டாரம், சாம்பல் தீவு,
திருகோணமலை.

# வளர்மதிக்கு வளம் தந்தவர்

என்றும் எம்பெருமைக்குரிய திருவாளர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களின் 60 ஆவது வயது நிறைவையொட்டி மணிவிழா நாயகனைக் கௌரவிக்கும் வகையில் வெளியிடப் படும் இம்மலருக்கு வாழ்த்துரை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும் பேறாகக் கருதி வாழ்த்துரையைப் பணிவுடன் வழங்குகின்றோம்.

வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் சனசமூக நிலையம் ஆரம்பித்த காலம் முதல் பல்வேறு வகையில் வளர்மதிக்கு வளம்தந்தவர் திரு.ஈ.சரவணபவன் அவர்கள். அவற்றில் தன் தந்தையின் ஞாபகார்த்தமாக நூற்றுக்கு மேற்பட்ட கதிரைகளை அன்பளிப்புச் செய்தமை, உதயன் பத்திரிகை ஆரம்பித்த காலம் முதல் இன்றுவரை எமது சனசமூக நிலையத்துக்கு இலவசமாக பத்திரிகை தந்துதவிவருபவர். நிதிவேண்டிச் செல்கின்றபோதெல்லாம் தந்துதவியதோடு அல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினருக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வருடாவருடம் உதவிகள் புரிந்து வளர்மதியின் வளர்ச்சிக்கு வழிசமைத்தவர். நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பே தனது பத்திரிகை நிறுவனத்தினூடாக யாழ். மாவட்டத்தில் உள்ள பல சமய, சமூக, கல்வி வளர்ச்சி நிறுவனங்களுக்குப் பயன்தரு பணிகள் ஆற்றிய பண்பாளராவார்.

எமது கழக மகளிர் குழு முன்னாள் தலைவியும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும், சமூக சேவகியுமாகிய அமரர் சுகிர்தலக்சுமி சுப்பிரமணியம் அவர்களின்

ஞாபகார்த்தமாக எம்மால் ஆரம்பிக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி நிதிக்கு தானாகவே முன்வந்து பெறுமதிமிக்க நிதி உதவி வழங்கி ஊக்கம் தந்தவர்.

துணிச்சலும், செயற்றிறனும், துடிப்பும், சமூகப் பற்றும் கொண்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் எமது கழகத்தின் ஆலோசகராகவும் இருந்து பயன்மிகு ஆலோசனைகள் வழங்கி கழகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்தவர். திரு. ஈ. சரவணபவனென்னும் இறைநாமம் பெற்ற அவர்கள் இறைபக்தி கொண்டவராவார்.

மணிவிழாக்காணும் எம் நாயகனை மகத்தான முருகன் அருள் ஆசிபெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**தலைவர்**

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும்,

சனசமூக நிலையமும்.

தலைவர், வளர்மதி நிறைவாழ்வகம்.



# எதையும் தாங்கும் இதயம்

உதயன், சுடர் ஒளி ஆகிய இரு செய்தி ஏடுகளின் நிறுவுநராகிய திரு. ஈஸ்வரபாதம் சரவணபவன் பொதுவாழ்வுக்கென தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட ஒரு செந்தமிழ் ஏந்தல். ஒரு பைந்தமிழ்க் கொண்டல். ஏனைய செய்தி ஏடுகளைப்போலன்றி தமிழ் மக்களுடைய விடியலை இலட்சியமாக வரித்துக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட செய்தி ஏடுகளே 'உதயன்', 'சுடர் ஒளி' என்பன. இவை வெறும் செய்தி ஏடுகளாக மட்டும் மிளிராமல் ஈழத்தைச் சேர்ந்த படைப்பாளிகளின் கட்டுரைகள், கவிதைகள், இலக்கியத் திறனாய்வுகள், அரசியல் சிந்தனைகள் ஆகியவற்றைச் சுமந்துவரும் ஒரு பல்துறை சார்ந்த ஏடுகளாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழ் நெஞ்சங்களைக் கவரும் ஊடகமாக இயங்கிவருகின்றன.

இந்த இலட்சியப் பயணத்தில் திரு. ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்கள் சந்தித்த, முகம்கொடுத்த பல துன்பியல் நிகழ்வுகள் யாவரும் அறிந்ததே. 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்ற அறிஞர் அண்ணாவின் வாக்குக்கு ஒப்ப எதையும் தாங்கும் இதயத்தோடு சற்றேனும் தாளாது, தளராது தான் எடுத்த பணியினை

'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு'

என்ற குறள்நெறிக்கு இலக்கியமாகத் திகழ்ந்துவரும் திரு.ஈ.சரவணபவன் அவர்கள் சிறந்த உடல் நலத்தோடும் என்றும் தளர்வறியா நெஞ்சுரத்தோடும் பல்லாண்டு வாழவேண்டும் என சிவனருளை வேண்டுகின்றேன்.

**க.சி. சிவசுப்பிரமணியம்**
ஆங்கில ஆசிரியர்

# இளகிய இதயம் படைத்தவர்

**நா**டாளுமன்ற உறுப்பினர் திரு. ஈ.சரவணபவன் தமிழ்மொழி மீது மிகுந்த பற்றுள்ளவர். தமிழர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர்.

தாம் வாழ்ந்தால் போதும் என்று நினைக்காமல் எல்லோரும் இன்புற்று இருக்கவேண்டும் என்று இறைவனை வேண்டும் இளகிய இதயம் படைத்தவர்.

அவர் தொழில் நிறுவனங்களை ஆரம்பித்து பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருகிறார். இந்தவகையில் யாழ்ப்பாணத்தில் உதயன், கொழும்பில் சுடர்ஒளி பத்திரிகை நிறுவனங் களைக் குறிப்பிடலாம்.

வர்த்தகத் துறையில் மிகுந்த அனுபவமுடைய அவர் தேர்ந்தெடுக்கும் பணியாளர்களில் எவரும் சோடை போவதில்லை. பணியாளர்களுடன் அவர் எப்போதும் அன்பாகவே பழகுவார். அதனால் எந்தப் பணியாளரும் வேலையை விட்டுப்போக விரும்புவதில்லை.

**கே.கே.இரத்தினசிங்கம்ற்று**
முன்னாள் ஆசிரியர்,
சுடர்ஒளி.

# தடைகளை வென்று வாழ்க!

எம்மொழி பேசும் எல்லா இனத்தும்
உள்ள தமிழர் இஸ்லா மியரும்
இந்திய வழியில் வந்திடு தமிழர்
பல்வகை இயக்கம் சார்ந்திடு வோரும்
இயக்கங்களின் தகன் றிருப்போரும்
தமிழர் கட்சிகள் முன்னணி யினரும்
ஒன்றா யிணைந்தே ஓர்குடை நிழற்கீழ்
நன்றே ஆய்ந்து நல்லதோர் முடிவினை
இதயசுத்தியுடன் இயம்புவ ராயின்
அன்றே சிங்களர் இணைய வருவர்
சிங்களர் தாமே முன்வந் தெமக்கு
உரிமை தருவர் என்பதும் இந்த
யுகத்தில் நடவாக் காரிய மாகும் எனவே
அகவை அறுபதிலும் அயராது நின்று
இகமதில் இனிவரும் தடைகளை வென்று
பகரரிய மனைவி மக்கள் தம்மோ டின்னும்
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றேன்

**கலாபூஷணம் மு.தணிகாசலம்**
கற்கோவளம்.

# மக்களுக்காய் துணிவுடன் குரல் கொடுப்பவர்

தங்களுடைய 60ஆவது பிறந்த நாள் விடயம் 15.02.2013 இல் பிரசுரமான புதினப் பத்திரிகையில் பார்த்தேன். பார்த்ததும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்துள்ளேன். அத்துடன் தங்கள் நாடாளுமன்றம் கூடும் நாள்களில் மக்களுக்காகப் பல சந்தர்ப்பங்களில் துணிவுடன் குரல்கொடுத்துப் பேசுவதைப் பிரசுரமான பல பத்திரிகைகளில் பார்த்துள்ளேன்.

எனவே இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து மக்களுக்குப் பல சேவைகள் செய்யவேண்டுமென ஆண்டவன் அருள்பாலிக்க வேண்டுமென குடும்பத்தின் சார்பிலும் மக்களின் சார்பிலும் எனது சார்பிலும் நீடூழி காலம் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**பொன்.தெண்டாயுதபாணி**
ஓய்வுபெற்ற வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
கோண்டாவில் சாலை,
திடீர் பரிசோதகர்.

# அகமகிழ்ந்து வாழ்த்துக்கள்

எதிர்நீச்சலில் எதிராளிகளும் மடங்குவர் என நிரூபித்தீர். உள்ளத்தில் நேர்மையும் உண்மையும் இருந்தால் எதனையும் சாதிக்கலாம் என நிரூபித்தீர். ஊடக நேர்மையும் துணிச்சலும் உலகால் மெச்சப்படும் எனவும் நிரூபித்தீர்.

அகவை அறுபதில் இன்று வாழ்த்துவது போல் பல்லாண்டு காலம் பலரும் வாழ்த்த இறைவனை வேண்டுகின்றேன்.

வாழ்க நீடூழி வளமுடனும்
மற்றோர் நலனுக்காகவும்
ஊடக சுதந்திரத்துக்காகவும்.

என்றும் அன்புடன்
**க.பாலசுப்பிரமணியம்.**




# நீடூழி வாழ வாழ்த்து

உதயன் நிறுவன விருட்சத்தின் ஆணிவேரா கவும் மக்களின் நலனுக்காக நாடாளுமன்றில் அச்சமின்றிக் குரல் கொடுப்பவரும் 60 ஆவது வயதில் கால்பதித்து நிற்கும் உயர் திரு. ஈ.சரவணபவன் ஐயா அவர்களே விருட்சத்தின் பக்கபலமாக பக்கவேர்களாக உறுதியாக நிற்கச் செய்யும் உதயன் முல்லை மாவட்ட செய்தியாளராகிய நானும் வாயார வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

உங்கள் பணி மேன்மேலும் எமது மக்களுக்கு கிடைக்கவும். சீரும் சிறப்புடன் பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும் எனவும், என்றும் உங்களது ஆலோசனை எங்களை மேன்மேலும் வளர்த்துக்கொள்ள உதவும் எனவும் தெரிவித்து நீடூழி வாழ வேண்டுமென எல்லாம்வல்ல ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுவரனின் அருள் கிட்டவேண்டுமெனவும் பிரார்த்தித்து வாழ்த்தி விடைபெறுகி றேன்.

இவ்வண்ணம் உங்கள் பணிவான
செய்தியாளர்
**இ.தனபாலசிங்கம்**



# வாரி வழங்குவதில் அவர் வள்ளல்

மணிவிழாக் காணும் நாயகன் திரு. ஈ.சரவணபவன் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கக் கிடைத்த சந்தர்ப்பம் குறித்துப் பெருமிதம் கொள்கின்றேன்.

உதயன் - சஞ்சீவி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதலே, பிராந்திய செய்தியாளனாக இணைந்த சந்தர்ப்பம் முதல் திரு. ஈ.சரவணபவன் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன.

அவரை நேரில் சந்தித்த பல சந்தர்ப்பங்களில் என் ஊடகத்துறை வளர்ச்சிக்காக நல்ல பல ஆலோசனைகளையும், ஊக்குவிப்புக்களையும் வழங்கத் தவறியதில்லை.

இன்று ஊடகத்துறையில் 40 வருடங்களைக் கடந்து நிற்கும் எனக்கு ஆக்கமும், ஊக்கமுமளித்தவர்களில் திரு.ஈ.சரவணபவன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர். கடற்கோள் இடர்களால் (சுனாமி) எனது குடும்பம் முழுமையாகப் பாதிக்கப்பட்டு நிர்க்கதிநிலையில் நானிருந்த காலகட்டத்தில் கொழும்பு செல்லக்கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தில் சுடரொளி அலுவலகத்துக்கு நான் சென்றிருந்தேன்.

அப்பொழுது நண்பர் ந.வித்தியாதரன் என்னை திரு. ஈ.சரவணபவன் அவர்களது அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றார். அவர், அப்பொழுது எனது சுனாமி பாதிப்பு நிலைமைகளைப் பரிவோடு விசாரித்து ஆறுதல் கூறியதோடு, பிள்ளைகளின் படிப்பு நிலைமைகளையும் கேட்டார்.

மறுகணம் பிள்ளைகளுக்காக புதிய கணினி ஒன்றை என்னிடம் வழங்குமாறு பணித்த அவர், அப்போதுதான் வெளிநாட்டிலிருந்து கொண்டு

வந்த டிஜிட்டல் கமரா ஒன்றை எடுத்து என்னிடம் தந்தார். தன் அலுவலக அலுமாரிகளிலிருந்து எதையெல்லாமோ எடுத்தெடுத்து எனக்குத் தந்தார். இருந்த புதிய பைல்கவர்களைக் கூட என்னிடம் தந்தார். அன்று அவர் காட்டிய அவரது வள்ளல் தன்மை என் நினைவைவிட்டு இன்னும் மறையவே இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் மிகுந்த நன்றியுடன் குறித்த சம்பவத்தை மீட்டுப்பார்த்துப் பகிர்ந்துகொள்வதில் உளப்பூரிப்படைகின்றேன்.

இத்தகைய அவரது நல்ல செயற்பாடுகளே இன்று அவரை மக்கள் பிரதிநிதியாகவும் மிளிரச் செய்துள்ளது.

வடக்கு மக்களின் உயிர்மூச்சோடு ஒன்றித்து நிற்கும் உதயன் நிறுவனம் மீது தொடர் தோ்ச்சியான அடாவடித்தனங்கள் அட்டூழியங்கள் புல்லுருவிகளால் பிரயோகிக்கப்பட்டபோதும், சலியாது, சோர்ந்து போகாது என்றும் தலைநிமிர்ந்து இந்த நிறுவனம் தன் மக்கள் சேவையைத் தொடர திரு. ஈ.சரவணபவன் அவர்களின் தன்நம்பிக்கையும், அதீத திடசங்கற்ப செயற்பாடுகளும் காரணமாகும்.

மணி விழாக்காணும் அவரது சேவைகள் மேலும் பல்லாண்டுகள் சிறக்க எம் நல்வாழ்த்துக்கள்!

**கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம்**
தலைவர்,
தென் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்.



# சேவையின் நாயகன்

'உன் நண்பனைப் பற்றிச் சொல். உன்னைப் பற்றிச் சொல்கிறேன்' என்பது ஒரு வாக்கியம். அது கூறும் அர்த்தங்கள் ஆயிரம். அது மிக மிக உண்மை பொதிந்தது.

ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்கள் கூஷிறோட்டரி; கழக நீண்ட கால உறுப்பினர். றோட்டரி கழக உறுப்பினர்கள் அவரது நண்பர்கள்.

'றோட்டரி'யின் மகுட வாக்கியம்' தன்னை விட மேலானது சேவை;

Motto; Service above Self

றோட்டரி என்பது ஒரு சேவைக் கழகம். அதன் தலைமையகம் Evanston, Illinois, ஐக்கிய அமெரிக்காவில் அமைந்துள்ளபோதும், அது உலகம் தழுவியது. 1.22 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்டது. இவ்வமைப்பானது ஆங்கிலம், சுவிடிஷ், போர்த்துக்கேசிய, இத்தாலி, பிரென்ஜ், ஸ்பானிஷ், ஜேர்மன், கொரியன், தமிழ் மற்றும் ஜப்பானிய மொழியை தனது உத்தியோக பூர்வ மொழியாகக் கொண்ட சிறப்புப் பெற்றது.

சர்வதேச றோட்டரி கழக தலைவராக (2013 /2014) Ron D. Burton அவர்கள் உள்ளார். பிரதானமான ஒருவராக போல் பி.ஹாரிஷ் Paul P.Harris (Founder) அவர்கள் இன்றும் கருதப்படுகிறார்.

உலகில் நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பு வதுடன், சமாதானத்தை நிலைபெறச் செய்யவும், அனைத்துவிதமான தொழில்களிலும், உயர் ஒழுக்கவியல் தரத்தை ஊக்குவிப்பதனையும் நோக்காகக் கொண்டு வர்த்தகப் பிரமுகர்களையும், உயர் தொழில் தலைவர்களையும் ஒன்றிணைக்கும்

செயற்பாட்டில் ஊன்றிய றோட்டரி கழகத்தில் ஓர் உறுப்பினராக திரு.ஈ.சரவணபவன் அவர்கள் செயற்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

1905 இல் ஸ்தாபிக்கப்பட்ட றோட்டரி தனது 109 ஆவது ஆண்டில் கால்பதித்து நிற்கின்றது. அதேவேளை, திரு.ஈ.சரவணபவன் அவர்கள், 1985 ஆம் ஆண்டிலிருந்து தனது வாழ் நாளின் 50 வீத காலப் பகுதியை றோட்டரி கழக அங்கத்தவராகவே சேவையாற்றி வருபவர். அல்லாமலும் அதிகரித்த வேலைப்பளு மத்தியிலும் 1993/1994 ஆம் ஆண்டு மற்றும் 2003/2004 ஆம் ஆண்டுகளில் யாழ். மாவட்ட றோட்டரிக் கழகத் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார்.

அந்தவகையில் உதயநாயகன் ஈ.சரவணபவன் அவர்கள் சேவையின் நாயகன் என்றும் கூறுவது சாலப்பொருந்தும் அல்லவா.

Rtn.சு. நிமல்ஷன்

# தமிழ்ச் சொந்தங்கள் சீராட்டுமையா!

எத்தனையோ மானிடரைக் கண்டேன்
எள்ளளவு பெருமையற்ற உனது நேசம்
பெயருக்கோ புகழுக்கோ வடிவம் மாறா
போற்றுதற்குரிய உமது கொள்கை
மொழி மதத்தோடு இன பேதமேதுமின்றி
முதற் கடனாய் மக்கட் பணி நல்கி
அழிவில்லா அகிம்சை வழியே நின்று
அற்பரையும் நல் அன்பராய் மாற்றும் உம்
அன்பு யாரிடமும் கண்டிலோம்.

உணர்வினிலே மனித நேயங்கொண்டு
உயர்வு தாழ்வென்ற எண்ணமேதுமின்றி
மாந்தர் பிணியறிந்து மருந்திட்டு சுகமளித்து
ஈழத்தமிழர் நெஞ்சில் என்றும் நிழலாயானீர்!
மனிதர்கள் வீழ்ந்து புன்னகை பறிபோனதால்
ஏதிலியாய் ஆன எம்மவர் கதியை
ஊரறிய உலகறிய உண்மையாய் உரைத்து
உலகோர் எம்மை நோக்கிட வைத்தீர்!

நாசப் புற்றிலுள்ள வேஷச் சர்ப்பங்களின்
வெற்றுக் கீறல்களை வேரறுத்து வெற்றி கண்டு
அரசியல் காழ்ப்புணர்வுகளை அலட்சியமே செய்து
ஆளுமையறிவினால் அகலக்கால் பதித்தீர்!
தமிழனெதிர்காலம் கருவொழிந்து போகாது
திடசித்த நெஞ்சங்கொண்டு திறம்பட சேவையாற்றி

ஈழப்பூங்காவனப்பை புல்லர் தீண்டிய போதெல்லாம்
தேசம் தாண்டி உங்கள் குரல் துணிந்தொலித்தது!

மீட்பாரையிழந்து முள்ளிவாய்க்காலில் எம்மினம்
உயிர் வலி சுமந்து உதிரம் சிந்துகையில்
பாராளுமன்றிலும் உலகத்தோர் முன்னிலும்
வடகிழக்கு மாந்தரின் கொள்கைக்குரலாயானீர்!
கடந்து செல்ல முடியா கடினப் பாலைவனங்கள்
கண்முன்னே வெளிப்பட்டும்
மணற் குறுணியாய் பறந்து சென்று
மக்கள் பணி தொடர்ந்த மதுசூதனன் நீர்!

இழந்துவரும் ஈழநாட்டு தமிழர் இருப்பை
ஐ.நா. வரை அதிரச் செய்து
மாம்பழம் போலுள்ள மரகதத் தீவில் தமிழர்
மாண்புடன் வாழ பாடுபடும் அண்ணல் நீவீர்!
அவசர சட்டங்களில் அடகு வைக்கப்பட்ட
அரசியல் கைதிகள் கடுந்துயர் கண்டு
ஆதரவுக்கரம் நீட்டி ஆற்றுப்படுத்தி
அவர் தம் விடிவிற்கு உரத்துக் குரல் கொடுத்தீர்!

தமிழர் மனமெல்லாம் நிரந்தரமாய் கொலுவிருந்து
எம்மவர் நிம்மதிக்காய் எங்கும் குரலுயர்த்தி
பொய்கையில் பிறந்த முருகப் பெயரோனே
முக்காலம் போற்றுமையா உமது நாமம்!
நீவிர் மண்ணுலகில் வாழுகின்ற காலமதில்
மானிட வாழ்வின் உயர் மனித நேயத்தை
மாந்தர் மேன்மைக்கு உவந்தளித்து என்றும்
சமூக ஆர்வலராய் தேசமெங்கும் விருதுழைத்தீர்!

காற்றடித்த பொழுதுகளில் சருகாய் அலைந்து
அடைமழை பொழிகையில் நிலமாய் விரிந்து
மலையென எதிர்ப்போரை பனியென விலத்தி
பக்குவமாய் பணி முடிக்கும் வித்தகப் பெரியார் நீவிர்

கடமையில் என்றும் நேர்மை கற்பனைக் கெட்டாத் திறமை
சேவையில் என்றும் சோர்வே கண்டதில்லை
சோகங்கள் உமைத் தாக்கினாலும் சேவைகள் போற்றுமையா
தமிழ்ச் சொந்தங்கள் சீராட்டுமையா!

எங்கள் சேவை தழைத்தோங்க எங்கள் ஊக்கநீர்
உங்கள் வேர்களை ஈரப்படுத்திடும்
அண்ணல் உங்கள் பணி எங்கும் பரவிப்படர
தரவையில் நாம் துணையாய் இருப்போம்!

மணி விழா நாயகரே மக்கள் சேவகரே
கொள்ளும் அறிவாலே குறையில்லாப் பேறு பெற்று
வள்ளல் இறையருளால் வளமான வாழ்வு பெற
வெள்ளம் பெருக்கெடுத்து விழி நிறைந்து வாழ்த்துகிறேன் !

**விவேகானந்தனூர் சதீஸ்**
கிளிநொச்சி.

# நித்தம் நின்புகழ் ஓங்குக


மாவும் பலாவும் தென்னையும் பனையும்
காவுயர் சோலையாய்க் காட்சி கொடுத்திடும்
தென்மராட்சியின் தவத்திரு மகனாய்
உதித்தநற் புதல்வ! சரவண பவனே
கல்வி கேள்வியில் கலங்கரை விளக்கமாய்
பல்வகைத் திறனும் பெற்றே தரணியில்
நாட்டுப் பற்றுடன் நாளது பொழுதினில்
நாட்டம் கொண்டிடு நாயக பவனே
மன்றம் தன்னில் உறுப்பினனாகி
என்றும் தமிழருக்கு உரிமை காணும்
துடிப்பினில் நாடராளுமன்றம் தன்னில்
கர்ச்சனை புரியும் செம்மலே பவனே
வாழ்க நின்நாமம் வனப்புடன் வாழ்க
ஏழ்கடல் உலகினில் என்றும் வாழ்க
வாழ்க பல்லாண்டு வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்கவே வானுயர் புகழுடன்
நித்தம் நித்தம் நின்புகழ் ஓங்குக
சித்திரச் செம்மலே சீரும் சிறப்புடன்
இத்தரை மீதினில் என்றும் வாழ்கவே
வாழ்க நீடூழி வாழ்க வாழ்கவே

**சி.ச.வைரமுத்து**
மீசாலையூர்.

# மணிவிழா காணும் மறவனே மாண்புடன் வாழ்க, வாழ்க பல்லாண்டு

**கா**சினி உவக்கும் கருணையின் வரவே
கந்தன் நாமம் சூடிய கனியே
மாசிலா உளமதில் நிறைந்திட்ட அருள் ஒளி
மன்னவ நினதரும் சிறப்பினை உணர்த்த
வீசிடும் தென்றல் நின்புகழ் பரப்ப
விண்ணகம் நிந்தன் பெருமையில் பொலிவுற
மன்பதை பிபுரக்கும் நின்பணி தொடர
நின் வளமிகு வாழ்வு உடல் நலம் நிறைந்து
மணிவிழா காணும் மறவனே
நின்சீர் பூதலத்துள்ளோர் போற்றிப் பரவ
அணி அணியாக நின் ஆர்வலர் திரள
அவனியில் வாழ்க வாழ்க பல்லாண்டே.

**கா.சே. சிவசுப்ரமணியம்**
தென்புலோலி



# வாழ்த்தும் தமிழ் நெஞ்சம்

உதயன் விரித்த ஒளிக்கீற்றில்
உலகம் விழிக்க வழிசெய்தீர்
இதயன் ஈஸ்வர பாதமைந்தன்
இனியன் சரவணபவன் வெல்க!

ஆண்டுகள் அறுபது இளைஞர்நீர்
அகச்சீர் மிளிர்ந்த செம்மல்சேர்
தாண்டுக பல்நேர் வெற்றிப்படி
தளரா உழைப்பே உமதாகும்

ஊடகம் துணிந்த உண்மைகளும்
உரிமைக் குரலும் உயர்கையிலே
தேடற் கரிதாம் மகிமைஉயிர்
தெரியார் செயலுக்கு அஞ்சியதில்

கல்விப் பொருளும் பெருநிதியும்
கருத்தின் செறிவும் தமிழர்தம்
நல்வாழ் வுதயம் அதுநீள்க
நாளும் செழிக்கும் நலம்வெல்க

நன்மனத் தொளிர்ந்த காருண்யம்
நாட்டுக் குழைக்கும் பேரின்பம்
சொன்மழை பொழியும் அரசியற்சீர்
சோரா உறுதித் திருவாழ்வு

இறைதாள் பணியும் அருளுறவும்
இலங்கித் துலங்கும் பெருவாழ்வும்
குறையாக் கொடையும் குன்றாதே
குவியும் புகழும் நீடுயர்க.

அன்பு மனைச்சீர் யசோதைசேர்
அழகு அறிவு அகஞ்சிறந்த
பொன்னே லக்ஷ்மி புனிதமகள்
பொலியும் புகழில் மகிழ்வுறுக.

வளமே பெருக வாகைதரும்
வசந்த காலம் நிலைத்தொளிர்க
உளமே சிறந்தோய் ஓங்குபுகழ்
உன்னதம் நாளும் உமைத்தொடர்க.

வாழ்க வாழ்க வண்ணமுற்றே
வாழ்க்கை செழிக்கும் வகைநீளும்
வாழ்வே என்றும் உமக்காகும்
வண்ணம் வாழ்த்தும் தமிழ்நெஞ்சம்

**நெடுந்தீவு செ.மகேகஷ்**

# மண்ணில் பயனுற வாழும் மணிவிழா நாயகனே வாழ்க!

இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ். நகரின் சிறப்புமிக்க வளம் பொருந்திய சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கொக்குவில் பதியில் புகழ்பூத்த குடும்பத்தில் 15-12-1953ஆம் ஆண்டு பிறந்து இன்று மணி விழா கொண்டாடும் நாயகன் சரவணபவன் அவர்களிற்கு இம்மலரினூ டாக எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மிக எளிமையான நடை, உடை, பாவனை, சுபாவம் உள்ள இவர் எல்லோரிடமும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் இயல்பு கொண்டவர். தன்னம்பிக்கை, விடாமுயற்சி, திட்டமிட்ட செயற்பாடு, துணிபு இவைகளே இவரின் உயர்விற்கு உரம் தந்தவை.

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

இது வள்ளுவர் வாய் மொழி. அதற்கமைய தன்னைத் தனது செயற்பாட்டினூடாக வளர்த்து வளம் பல பெற்று, தான் தனது குடும்பம் என்று மட்டும் வாழ்ந்துவிடாமல் சமூக, சமய, கல்விக் கூடங்கள் எனப் பல தொண்டு நிறுவனங்களுக்கு வாரி வழங்கி அவற்றின் வளர்ச்சியில் திருப்தி கண்டதுடன் அதற்காகப் பலராலும் பாராட்டுப் பெற்றவர் எங்கள் மணிவிழா நாயகன்.

தான் பிறந்த மண்ணை மறவாது அதன் விடிவிற்குத் தன்னாலான பணிகளைப் பல தடைகள் இடர்கள் மத்தியிலும் தளராது ஆற்றிவருபவர். தான் பிறந்த கிராமத்தின் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் வளம் தந்து அதன் வளர்ச்சியில்

உயர்வு கண்டு மகிழ்வடைபவர் எம் நாயகன். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற நெறிமுறையைப் பின்பற்றி ஆற்றிய, ஆற்றிவரும் சேவைக்கு மக்கள் வழங்கிய பிரதி உபகாரமே அவர் பெற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற பதவி என்றால் அது மிகையாகாது.

மக்கள் சேவையில் பணி தொடர மணி விழா நாயகனை வாழ்த்துவதுடன் எல்லாம்வல்ல கற்புலத்து மனோன்மணி அம்பாள் அருட்கடாட்சம் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றேன்.


**செ.செல்வராசா (நாதன்)**
நந்தாவில்,
கொக்குவில்



# கலகல சிரிப்போடு காணுக என்றும் நலமே

அறுபது விழாவினையே
ஆசையாய் கொண்டாடும்
இனிய நாயகனுக்கு
ஈசன் அருள் என்றும் கிட்ட
உளமார வாழ்த்துகின்றோம்
ஊரனைத்தும் உலகனைத்தும்
எத்திக்கும் தித்திக்கும்
கவிகொஞ்சும் இசையோடு "கலகல" சிரிப்போடு
காணுக என்றும் நலமே!

**திரு. க.சுவாமிநாதன் குடும்பம்**
பட்டயக் கணக்காளர், மிருதங்க வித்துவான்
மூளாய்வீதி, வட்டுக்கோட்டை
ஏ.ஜி.சர்மா அன்ட் கோ
ஏ.ஜி.எஸ்.சர்மா அன்ட் கோ



# நன்கு திட்டமிட்டுச் செயற்படும் மனிதர்

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஈ.சரவணபவன் அவர்களின் பவளவிழா மலருக்கு வாழ்த்து வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் குறிப்பாக வெளிநாடுகளிலும் எம் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு வாழ்வாதார உதவிகளைப் புலம் பெயர் எம் உறவுகளிடம் பெற்று இங்கு எம் உறவுகளுக்கு வழங்கிவருவது பெரிதும் வரவேற்கக் கூடியதொன்றாகும்.

நான் இவரிடம் கண்டதும், அவரிடமிருந்து கற்க முயற்சிப்பதும் அவரது செயற்பாடுகள் நன்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுவதேயாகும். அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து செயற்படுவதுடன் நின்று விடாது இலங்கையில் மிகவும் பாதுகாப்பற்ற ஊடகத்துறையை பல்வேறு இழப்புக்களிடையேயும் நகர்த்தி வருகின்றார்.

சர்வதேசத்தின் பார்வை ஊடகத்துறையின் பக்கம் திரும்புகின்ற வேளையில் உதயனை ஆச்சரியத்துடன் பார்க்கின்றது. இவ்விதம் பல்துறைகளிலும் தன் ஆளுமையைப் பரப்பும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஈ.சரவணபவன் அவர்களின் சேவை எம்மினத்திற்கு என்றென்றும் கிடைக்க இறையருள் வேண்டுகின்றேன்.

**இ.தேவசகாயம்பிள்ளை**
தவிசாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

# தமிழ்த் தேசிய சிந்தனையை அரவணைத்துக் கொண்டவர்


மணி விழா நாயகன் ஈஸ்வரபாதம் சரவணபவன் பன்முக ஆளுமை நிரம்பப் பெற்றவர். பத்திரிகை ஸ்தாபன உரிமையாளராக, நாடாளுமன்ற உறுப்பினராக சமூக மேம்பாட்டுக்காக அவர் ஆற்றிவரும் பணிகள் பெறுமதி மிக்கவை.

தலைமைத்துவப் பண்பு, கலாசாரம், சிரமேற்கொண்ட பணியை நிறைவேற்றி முடிக்கும் ஆற்றல், நுண்ணிய புத்திக் கூர்மை என்பன அவரிடம் அதிகளவுக்கு காணப்படுவதை அவதானிக்க முடிந்தது.

தமிழ்த் தேசிய சிந்தனைகளை அரவணைத்துக் கொண்டிருக்கும் சரவணபவன், தமிழ் மக்களின் சுதந்திரம், கௌரவம், அடிப்படை உரிமைகள் தொடர்பாக எந்தவொரு விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை என்பதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார். அதேசமயம் இலங்கையின் பன்முகத் தன்மையை அங்கீகரிக்கும் பண்பாட்டையும் அவர் உள்வாங்கிக் கொண்டிருப்பதை காணமுடிகிறது.

தனது முகாமைத்துவத்தின் கீழுள்ள ஊடகங்களுடாக அவர் ஆற்றி வரும் சேவை அளப்பரியது. மிக நெருக்கடியான காலகட்டங்களில் கூட தகவல்கள் யாழ். குடாநாட்டு மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக அவர் எதிர்கொண்ட நெருக்கடிகள், சவால்கள் பற்பல. ஆயினும் அயராத முயற்சியுடன் தமிழ் மக்கள் நலனை முதன்மைப்படுத்தி அவர் ஆற்றி வரும் பணிகள் மென்மேலும் தொடர்வதற்கு மணி விழாக் காணும் சரவணபவன் அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பி.எஸ்.கேசவராஜா**
முகாமைத்துவப் பணிப்பாளர்
ஏசியன் மீடியா பப்ளிகேசன் (பிரைவேட்) லிமிட்டெட்



# மக்கள் சேவை தொடர வேண்டும்

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, நலன்களுக்காக தளராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் தலைவர்களில் ஒருவராக விளங்கும் ஈஸ்வரபாதம் சரவணபவனுக்கு மணிவிழா கொண்டாட மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் காலத்தின் தேவையாகவும் தான்சார்ந்த சமூகத்திற்கு அளப்பரிய சேவைகளை ஆற்றி வரும் அவருக்கு சிறியதொரு நன்றிக் கடனை நிறைவேற்றுவதாகவும் அமையும்.

பொதுச் சேவைகளில் என்றுமே பின்நிற்காது துடிப்பாகச் செயற்பட்டுவரும் அந்த மனிதர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பெரும் பணிகளை முன்னெடுத்து வருகின்ற அதேசமயம், அதற்குச் சமாந்தரமாக குடாநாட்டிலும் தலைநகரிலும் ஜனரஞ்சகமானதும் அதேசமயம் தகவல்களை வழங்குவதும் அறிவூட்டுவதுமான பத்திரிகைகளை வெளியிட்டு சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அளப்பரிய பங்களிப்பைச் செலுத்தி வருபவர்.

குறிப்பாக குடாநாட்டிலும் வன்னியிலும் மிக நெருக்கடியான காலகட்டத்தில் மக்கள் அல்லலுற்றபோது அவர்களின் அவலங்களை, தேவைகளை தனது பத்திரிகைகளூடாக வெளிக்கொணர்ந்து உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கவனத்தைத் திருப்புவதற்கு உதவியவர். எந்தத் தரப்பில் அநீதி இழைக்கப்பட்டாலும் தயங்காது தட்டிக்கேட்டு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு எப்போதுமே துணிச்சலுடன் முன்நிற்பவர். துடிப்பான தலைவராக விளங்கும்சரவணபவன் அவர்களின் சேவை தமிழ் மக்களுக்கு மென்மேலும் தொடர வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் அவரின் எண்ணக் கனவுகள் நிறைவேற வேண்டும் எனவும் மக்கள் சேவை தொடர வேண்டுமெனவும் இதய பூர்வமாக வாழ்த்துகின்ன்.

**எஸ்.பி.சாமி**
தினக்குரல் நிறுவுனர்

# பத்திரிகையாளர்களை நெருக்கடியில் இருந்து காப்பாற்றுவதில் முன்நிற்பவர்

உதயன், சுடர்ஒளி பத்திரிகை நிறுவனங்களின் நிர்வாக இயக்குநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற மலருக்கு இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் சார்பில் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகின்றேன்.

ஊடகப் போராளியாகவே திரு சரவணபவன் அவர்களை நான் பார்க்கின்றேன். கால்நூற்றாண்டுக்கு அதிகமான காலம் நீடித்த உள்நாட்டுப் போரின்போது யாழ்ப்பாணத்திலிருந்து பத்திரிகையை வெளியிடுவதில் அவர் காட்டிய அசாதாரண துணிச்சல் எம்மை வியக்க வைத்தது. அந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய சொல்லொணா நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அவசியமான செய்திகள் அவர்களைச் சென்றடையவேண்டும் என்பதில் அவருக்கு இருந்த அக்கறையை அவரது பத்திரிகை வெளியீட்டுப் பணி முழு உலகுக்கும் பிரகாசமாக வெளிக்காட்டியது.


கடந்த இரண்டு, மூன்று தசாப்தங்களாக யாழ்ப்பாணத்தில் இளம் ஊடகவியலாளர்களை பயிற்றுவிக்கும் களமாகவும் அவரது ஊடக நிறுவனம் விளங்கியது. இதனால் பல ஊடகவியலாளர்களை வடக்கில் உருவாக்கிய பெருமை அவரைச் சாரும்.

ஊடகவியலாளர்கள், பிரச்சினைகளை எதிர் நோக்கும்போது அவர்களை நெருக்கடிகளில் இருந்து காப்பாற்றுவதில் முன்நின்று செயற்பட்டவர் திரு. சரவணபவன் அவர்கள். இது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். அத்துடன் அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகின்ற சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகையைத் தொடங்கிய திரு சரவணபவன் அவர்கள் கொழும்பிலும் தனது முயற்சிகளை விஸ்தரித்து சுடர் ஒளி பத்திரிகையை கடந்த பல வருடங்களாக நடாத்தி வருகின்றார். அவருடைய செயற்பாடுகள் நாடாளுமன்ற உறுப்பினராக வந்த பின்னர் அவருக்கான பணிகள் அதிகரித்த போதிலும் ஊடகத்துறை மீதான சிரத்தையை அவர் என்றும் தளர்த்தியது கிடையாது.

ஊடகத்துறைக்கான அவரது பணி தொடர்ந்தும் சிறப்புடன் முன்னெடுக்கப்படவும் எல்லா வகையிலும் அவரது எதிர்காலம் பிரகாசமாக அமையவும் சமூக. அரசியல் பணிகள் தொடரவும் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கு.ஜெயேந்திரன்**
செயலாளர்
தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்



# தமிழ் இனத்தின் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்

உதயன் - சுடர் ஒளி பத்திரிகைகளின் நிர்வாக ஆசிரியரும் நிர்வாக இயக்குநரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய பெரு மதிப்புக்குரிய ஈ.சரவணபவன் அவர்கள் மணிவிழாக் காணுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

தமிழ்த் தேசியத்தின் - தமிழ் மக்களின் - எமது இனத்தின் விடுதலைக்காகக் குரல்கொடுத்த பத்திரிகைகளில் தனித்துவம் வாய்ந்த பத்திரிகை உதயன் என்றால் அது மிகையாகாது. நேர்மை - துணிச்சல் - உண்மை - என்பவற்றுடன் அஞ்சாநெஞ்சுடன் உதயன் வெளிவந்தமைக்கு நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் அவர்களின் தற்றுணிவே காரணம். எமது போராட்டத் தியாகங்களைச் சர்வதேசத்துக்குப் பறைசாற்றிய பெருமையும் உதயனையே சாரும். இதனால் உதயன் பத்திரிகை எத்தனையோ ஊழியர்களைத் தியாகம் செய்தது. உதயனின் எத்தனையோ சொத்துக்கள் அழிந்துள்ளன.

உதயன் பத்திரிகைக்கு உள்ள தனிச் சிறப்பு என்னவென்றால், நிர்வாக இயக்குநர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராக விருந் தாலும் ஆசிரியபீடத்தினரின் பக்கச்சார்பற்ற செய்தி பிரசுரத்தில் நிர்வாக இயக்குநர் தலையிடுவது கிடையாது என்பதுதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுகின்ற தவறுகளையும் உதயன் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. இதனாற்றான் உதயன் பல விருதுகளைப் பெற்றுள்ளான். நடுநிலை தவறாத நன்னெறி காக்கும் நாளிதழ் என்ற சிறப்பையும் பெற்றுள்ளான்.

பத்திரிகைத் துறையோடு மட்டும் தனது தேசியப் பயணத்தை மேற்கொள்ளாது, அடக்கி ஒடுக்கப்பட்ட

தமிழ் இனத்தின் உரிமைக்காக நாடாளுமன்றத்திலும் உரத்துக் குரல்கொடுக்கவேண்டும் என்பதற்காக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றிபெற்று எமது இனவிடுதலைக்காக நாடாளுமன்றத்திலும் இவரது குரல் ஓங்கி ஒலித்த வண்ணம் உள்ளது. இவர் நாடாளுமன்றில் மிகவும் துணிச்சலுடன் கூறுகின்ற கருத்தை, ஆழமாகவும் ஆணித்தரமாகவும் இடித்துரைக்கும் வல்லமை படைத்தவர்.

இன்று மணிவிழாக் காணும் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வாழ்வில் இன்னும் சகல செல்வங்களையும் நிறைவாய் பெற்று, என்றும் நீடுநலத்துடன் பல நூறாண்டுகள் தமிழ்த் தேசியத்துக்காக உழைத்து பேரும் அழியாப் புகழும் பெற்று வாழவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் மக்கள் சேவையில்

**தி.பிரகாகஷ்**

தவிசாளர்

வலி.தெற்கு பிரதேச சபை.



# கணிதம் இனிமையானது

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

வள்ளுவன் மனித வாழ்விற்கு எண்ணும் எழுத்தும் இன்றியமையாதவை எனத் தனது குறளிலே அழகாகக் குறிப்பிட்டுள்ளார். மனிதன் உயிர் வாழ்வதற்கு கண் எப்படி முக்கியமோ அதேபோன்று எண்ணும் எழுத்தும் முக்கியமானவை. இந்த இரண்டு பொக்கிஷங்களையும் உரியகாலத்தில் தெளிவாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இழந்து சமூகத்திலே தலைநிமிர முடியாது ஒதுங்கி நிற்கின்ற ஒரு தொகுதியினர் எம்மிடையே வாழ்ந்துகொண்டிருப்பது வேதனை தருகின்றது. எண்ணையும் எழுத்தையும் கண் எனக் குறிப்பிட்ட வள்ளுவப் பெருந்தகை எண்ணை முன்வைத்து முதன்மைப்படுத்தியுள்ளார். மனித வாழ்வுக்கு அத்தியாவசியமான கணிதத்தை இனிமையாக, இலகுவாக பிள்ளைகள் கற்பதற்கான வழிகளைத் தேடிக் கண்டறிந்து நடைமுறைப்படுத்துவது அவசியம்.

### மொழித்திறன்

ஒரு குழந்தை மொழித்திறனில் பல்வேறு அனுபவங்களுடன் முன்பள்ளிக்குச் செல்கிறது. அங்கு கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்துகளுடன் விருத்திகளுக்கான பல்வேறு அனுபவங்களை விளையாட்டாகப் பெற்றுக்கொள்கிறது. எழுத்துக் களுடன் நன்கு பரிச்சயமாகி உறுப்பமைய எழுத்துக்களைப் பார்த்தெழுதும் திறமைபெற்று ஆரம்பக்கல்வியில் அடியெடுத்து வைக்கிறது. பாடசாலைகளில் ஐந்து வருடங்கள் படிமுறை

ஒழுங்கில் மொழித்திறன்களில் தேர்ச்சியடைந்து இடைநிலைக்கல்வியில் அடியெடுத்து வைக்கிறது. ஆனால் ஒரு தொகுதியானவர்கள் வாசிக்க முடியாதவர்களாகவும் வேறு ஒரு தொகுதியினர் வாசிக்க முடிந்தாலும் கிரகித்து விளங்கிக்கொள்ள முடியாதவர்களாகவும் இனங்காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் கணிதபாடத்தில் கணக்குகளை வாசிக்கவோ, வாசித்துக் கிரகித்து விளங்கிக்கொள்ளவோ முடியாதவர்களாக கணிதம் கற்பதில் இருந்து ஒதுங்குகின்றனர். இது ஒரு பாரதூரமான பின்னடைவாகும். பிள்ளைகளைப் பொறுப்பெடுக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் அவர்கள் அடையவேண்டிய மொழித் தேர்ச்சியை அக்காலத்திலேயே அடையும் வகையில் பொறுப்புடன் செயற்படவேண்டியது கட்டாயமானதாயிருந்தது.

**முன்னறிவை மீட்டல்**

பாடசாலைகளில் பிள்ளைகளை அணுகி அவர்களது கணிதம் ஆற்றலின் பின்னடைவுக்கான காரணங்கள் பற்றி வினாவும்போது ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். எங்களைக் கவனிப்பதில்லை என நாகரிகமாகப் பதிலளிக்கிறார்கள். கணிதத்தில் பல்வேறு அடிப்படை எண்ணக் கருத்துக்கள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து ஒரு புதிய விடயம் உண்டாகின்றது. ஆகவே அவ்விடயத்திற்கான அடிப்படை எண்ணக்கருக்களில் தெளிவுடைய மாணவர்களாலேயே புதிய விடயத்தை விளங்கிக்கொள்ள முடியும். எனவே கணிதபாட ஆசிரியர்கள் தாம் கற்பிக்கப்போகும் பாட விடயத்தில் பின்னிப் பிணைந்திருக்கும் அடிப்படை எண்ணக்கருக்களைத் தெரிந்தெடுத்து தமது மாணவர்கள் அனைவரும் அவற்றில் பூரணதெளிவுடையவர்களாக இருப்பதை உறுதிசெய்து புதிய விடயத்தைக் கற்பிக்கத் தொடங்கவேண்டும். அப்போது எல்லா மாணவரும் கணிதம் கற்றலில் ஈடுபட முயல்வர்.

**செயல்முறை ரீதியாகக் கற்பித்தல்**

சகல மாணவர்களும் தெளிவாக விருப்புடன் விளங்கிக் கொள்ளும் வகையில் கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானதாகும். மாணவர்கள் தாமாகவே உபகரணங்களைக் கையாண்டு விளக்கம் பெற்ற பின்பு தர்க்க ரீதியாகக் கற்பதற்கு வழிப்படுத்துவது மாணவர்கள் விரும்பிக் கற்பதற்கு வழிசமைக்கும். கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தும்போது மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். ஆசிரியர் உபகரணங்களைத் தயாரித்து அதனைத் தான் பரீட்சித்துப் பார்த்து மாணவர்கள் எளிமையாகக் கையாண்டு தெளிவான விளக்கம் பெறக் கவனமாக வழிப்படுத்தல் வேண்டும். மாணவர்கள் உபகரணங்களைப் பயன்படுத்தி ஆய்வு ரீதியாக முடிவுகளைக் கண்டறிய வழிப்படுத்தும் வகையில் கவனமாகச் செயலட்டைகளைத் தயாரித்து மாணவர்களுக்கு வழங்கி அவர்கள் சரியான வழியில் செயற்படுவதை உறுதிசெய்தல் வேண்டும். உபகரணங்கள் தயாரிப்பதற்கும் செயலட்டைகளைத் தயாரிப்பதற்கும் பாடசாலைகளில் தர உள்ளீட்டு நிதியைப் பயன்படுத்த வாய்ப்பும் உள்ளது. மாணவர்கள் விடயத்தைத் தெளிவாக விளங்கிக் கொண்ட பின் மாணவர் தரத்துக்கேற்ப தர்க்க ரீதியாகக் கற்பதற்கு வழிப்படுத்தவேண்டும்.

**பயிற்சிகள்**

வகுப்பறைக் கற்றல் கற்பித்தலின் போது ஒவ்வொரு சிறிய உப பிரிவுகளைக் கற்றபின் அந்த விடயத்தில் ஒரு எளிய பயிற்சியாவது வழங்கி ஒவ்வொரு மாணவரும் அதனைச் சரியாக விளங்கிச் செய்வதை உறுதி செய்து கொள்வது ஆசிரியரின் தலையாய கடமையாகும். விளக்கமில்லாதவர்களுக்கு தனிப்பட்ட விளக்கமளித்து அதேபோல் மீண்டும் ஒரு கணக்கை வழங்கி பிள்ளை சரியாகச் செய்திருப்பதை உறுதிசெய்தல் வேண்டும். தொடர்ந்து கற்பித்து முதல் கற்ற விடயத்துடன் சேர்த்து, அடுத்த கணக்கை வழங்கித் திருத்தவேண்டும். நாற்பது நிமிட பாடவேளையையும் முழுமையாத் திட்டமிட்டுக் கற்பிப்பதன் மூலம் குறைந்தது மூன்று கணக்குகளையாவது சகல மாணவரும் தமது கொப்பியில் செய்து ஆசிரியரிடம் சிவப்புப் பேனாவால் சரிவாங்க முடியும். தங்கள் எல்லோரையும் ஆசிரியர் கவனிக்கின்றார் என்ற மகிழ்ச்சியும் மாணவர்கள் அடைந்திருப்பார்கள்.

**வீட்டுவேலை**

பாடசாலையிலே ஆசிரியரிடம் இருந்து ஒரு கணக்கைச் செய்து சரி வேண்ட முடியாத நான், எப்படிக் கணக்குகளை வீட்டில் தனியாகச் செய்யமுடியும் என மாணவர்கள் வேதனைப்படுவதைக் காணமுடிகிறது. வகுப்பறையில் பிள்ளை கற்று ஆசிரியரிடம் சரிவாங்கிய கணக்குகளைப்போல சில கணக்குகளை வீட்டு வேலையாக ஒவ்வொரு நாளும் மாணவர்களுக்கு வழங்கி மறுநாள் அவர்கள் சரியாகச் செய்திருப்பதை உறுதிசெய்தல் வேண்டும். பிள்ளை பெருஞ்சுமையாக உணரும்வகையில் அதிக கணக்குகளை வீட்டுவேலையாகக் கொடுப்பதைத் தவிர்த்தல் வேண்டும். அவர்கள் சுதந்திரமாகத் தாமாக விரும்பிப் பாடப்புத்தகம், நூலகப் புத்தகங்களில் கணக்குகளைச் செய்யத்தூண்டுவது ஆசிரியரின் திறமையாகும்.

**விடயங்களைப் பதியவைத்தல்**

'ஆசிரியர் கற்பிக்கும் போது விளங்குகின்றதே, பின் மறந்து விடுகிறதே;: அலகு ரீதியாகக் கணித விளையாட்டுக்களைத் திருத்தமாகத் தயாரித்து குழுமுறையில் போட்டியாக மாணவர்கள் விளையாட வழிப்படுத்துவதன்மூலம் அவர்கள் அந்த விடயத்தை மறந்துவிடமாட்டார்கள். வகுப்பறையில் அவற்றை வைத்தால் ஓய்வு நேரங்களில்கூட குழுத்தலைவர்களின் உதவியோடு கணித விளையாட்டுக்களை விளையாடி மகிழ்வர். இதன்பின்னர் ஆசிரியர்களால் ஒரு மதிப்பீடு செய்யப்படுமாயின் அது பெருவெற்றியைத் தரும் என்பதில் சந்தேகமில்லை. குழுவாகப் போட்டியாக விளையாடும்போது ஒருவருக்கு ஒருவர் பாடவிடயத்தில் உதவும் உயரிய பண்பை மாணவர்கள் பெற்றுவிடுவர். இதனால் தெரியாத விடயங்களைச் சக மாணவர்களுடன் சேர்ந்து கலந்துரையாடி விளங்கிக் கொள்ளும் பண்பை இயல்பாகப் பெற்றுவிடுவர். மனக் கணிதம் மிகவும்

பயனுடையதாகும். பாட ஆரம்பம், ஓய்வான பாட வேளைகளில் மனக் கணிதப் போட்டிகளை நடத்தலாம்.

**அலகு ரீதியாக மேலதிக பயிற்சிகள்**

அலகு ரீதியாக, படிமுறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட கணக்குகளைத் தயாரித்து பிரதி செய்து அந்த அலகு கற்பித்து முடிந்தவுடன் மாணவர்களுக்கு வழங்கவேண்டும். பிள்ளைகள் தனியாகவும் குழுவாகவும் அந்தக் கணக்குகளைச் செய்து பழக கால எல்லையொன்றையும் குறிப்பிடுதல் நன்று. மெல்லக்கற்போர் செய்யக்கூடிய, இலகுவாக ஒழுங்குபடுத்தப்பட்ட பயிற்சிகள் அதில் அடங்குவதுடன், மீத்திறன் மாணவர்களுக்குச் சவாலாக அமையும் கணக்குகள் சிலவும் அடங்கவேண்டும். மீத்திறன் மாணவர்களைச் சமூகத்தில் வளமாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு.

**நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தல்**

நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கற்றல், கற்பித்தலில் பயன்படுத்தும்போது மாணவர்கள் ஆர்வத்துடன் கற்க முற்படுவார்கள். இதனால் மாணவர்கள் சுயமாகக் கற்பதிலும் புதியனவற்றைத் தேடிக் கற்பதிலும் ஆர்வம் காட்டுவர். பிள்ளைகள் கற்றலுக்காக நவீன தொழில்நுட்பக்கருவிகளைப் பயன்படுத்தத் தெரியாதபோது தவறான வழிகாட்டலில் அவற்றைப் பயன்படுத்தி ஒழுக்கம் தவறுபவர்களாக மாறிவிடுகின்றனர். நவீன தொழில்நுட்பக் கருவிகளை கணிதம் கற்பதில் மகிழ்வோடு பயன்படுத்த வழிகாட்ட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**பிரச்சினைகளைக் குறிப்பாக இனங்காணலும் தீர்த்தலும்**

கற்றல் கற்பித்தலின்போது ஆசிரியர் ஆய்வுரீதியான சிந்தனையுடன் செயற்படவேண்டியது அவசியமாகும். ஒரு சில பிள்ளைகளிற்கோ அன்றி ஒருபிள்ளைக்கேனும் கற்பித்த விடயம் விளங்கவில்லையெனில் பரிகாரக் கற்பித்தல் மேற்கொண்டு வெற்றிகாண வேண்டும். அப்போதும் வெற்றிதரவில்லையென்றால் அந்த விடயத்தில் நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர் ஒருவரைத் தெரிந்த விடயத்தைத் தெரியப்படுத்தி அவர் முன்னாயத்தத்துடன் வந்து பரிகார நடவடிக்கையை மேற்கொண்டு பிரச்சினைக்கான தீர்வை உடனே காணவேண்டும். இத்தகைய செயற்பாடுகளுக்காகவே மாணவரை அடிப்படையாகக் கொண்ட உயர் மட்டச் செயற்பாடுகளுக்கான நிதி பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல கணிதம் கற்பிக்கும் ஒரு ஆசிரியர் கற்றல் கற்பித்தல் செயற்பாடு தொடர்பாகத் தான் எதிர்கொள்ளும் பிரச்சினை - தெளிவின்மை தொடர்பாகக் குறித்த விடயத்தில் நிபுணத்துவமிக்க வளவாளர்களைப் பயன்படுத்தி உடன் தீர்வு காணவேண்டும். பிரச்சினைகளைப் பிரச்சினைகளாக வளர்த்துச் செல்வது கணிதபாட அபிவிருத்தியில் பாரதூரமான பின் விளைவுகளை ஏற்படுத்திவிடும். இதற்குக்கூட ஆசிரியரை அடிப்படையாகக் கொண்ட உயர் மட்டச் செயற்பாடுகளுக்கான ஒதுக்கீட்டிலிருந்து நிதியைப் பயன்படுத்தமுடியும். இவ்வாறு மாணவர், ஆசிரியர் எதிர்நோக்கும்

பிரச்சினைகளை இனங்கண்டு உடனுக்குடன் தீர்வு காண்பதை வழக்கமாக்கிக் கொண்டால் கணித பாடத்தில் உன்னத நிலையை அடைய முடியும்.

**முதன்மை ஆசிரியர் சேவை**

கணித பாட முதன்மை ஆசிரியர்கள் பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்துக்குப் பாடசாலைக்குச் சென்று நேரசூசிப்படி கணித ஆசிரியர்களுடன் வகுப்புக்குச் சென்று ஆசிரியரின் கற்பித்தலை மேற்பார்வை செய்யும் மேற்பார்வையாளராகச் செயற்படாது ஆசிரியரின் கற்பித்தலை வளப்படுத்தும் முதன்மை ஆசிரியராகச் செயற்படவேண்டும். அன்று முழுநேரமும் உச்சமாக மாணவர் பயன்பெறும் வகையில் முதன்மை ஆசிரியரின் உன்னதமான சேவை அமைத்தல் வேண்டும். பாடவேளைகளை விரயமாக்காது ஓய்வுநேரத்தில் ஆசிரியர்களுடன் கலந்துரையாடி மேலதிக ஆலோசனைகளை வழங்கலாம். அலுவலக நாள்களில் கணித முதன்மை ஆசிரியர்கள் கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கூட்டாக இணைந்திருந்து பாடசாலைகளில் இனங்கண்ட பிரச்சினைகள் தாம் முன்னெடுத்து வெற்றி கண்ட தீர்வுகள் பற்றிப் பகிர்ந்துகொள்வதோடு தமக்குச் சவாலாக அமைந்த விடயங்களை முன்வைத்து மற்றவர்களிடம் அவற்றுக்கான நல்ல தீர்வுகளைக் கலந்துரையாடி பெற்று நடைமுறைப்படுத்தலாம். இது மிகவும் பயன்தரும் விடயமாகும்.

**கணிப்பீட்டுப் புள்ளிகள்**

வகுப்பறையில் கணித பாடத்தில் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டுப் புள்ளிகளை ஆசிரியர் பக்குவமாக அவதானித்து தனது கற்பித்தல் முறையின் வெற்றியை அல்லது பின்னடைவை அறிந்து கொள்ளமுடியும். கற்றல் கற்பித்தல் வகுப்பறையில் ஆரோக்கியமானதாக இருந்தால் பிள்ளைகள் கணிப்பீட்டில் நல்ல புள்ளிகளைப் பெறுவர் என்பதில் சந்தேகமில்லை.

**மதிப்பீடு**

மாணவர்களது கணித பாட விடைத்தாள்களை ஆசிரியர்கள் தாமே திருத்தி மாணவர்கள் விடும் பிழைகளை அவதானித்து குறித்த மாணவருக்கு அந்த விடயத்தில் தெளிவை ஏற்படுத்தவேண்டும். புள்ளிப்பகுப்பாய்வைச் செய்து ஆசிரியர் தனது சாதனையை மதிப்பிடல் வேண்டும்.

**கணித அறை**

ஒவ்வொரு பாடசாலையிலும் கணித அறை ஒன்றைச் சகல வளங்களுடனும் அமைப்பது பயனுடையது. அந்த அறை விசாலமானதாகவும் கற்றல் கற்பித்தல் முறைகளுக்கேற்ப ஆசன ஒழுங்குகள் மாற்றியமைக்கக்கூடியதாக இருப்பது பொருத்தமானது. கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் கணித விளையாட்டுப் பொதிகள் தேவைக்கேற்ப எடுத்துப் பயன்படுத்தக்கூடியதாகப் பேணப்படல் வேண்டும். கணித பாடத்தில் மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய நூல்களைக் கொண்ட நூலக அலுமாரியும் அந்த அறையில் இருப்பது பெறுமதியானது.

செயலட்டைகள், அலகு ரீதியான ஒழுங்குபடுத்தப்படுத்தப்பட்ட பயிற்சி கையெழுத்து நூல்கள் என ஆசிரியரின் ஆற்றலுக்கேற்ப பல்வேறு பயன்தரும் பொக்கிஷங்களும் கணித அறையில் பயன்பாட்டுக்காகப் பேணப்படுவது பயனுடையது. கணித அறை எப்பொழுதும் உயிரோட்டமானதாக இருத்தல் வேண்டும்.

### தரவட்டம்

அயலிலுள்ள பாடசாலைகளின் கணித ஆசிரியர்கள் தாமாகவே தடவைக்கு ஒரு பாடசாலையின் கணித அறையிலே இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை ஒன்றுகூடி கலந்துரையாடி செயற்பாடுகளில் ஈடுபட்டு தமது வாண்மையை விருத்தி செய்து கொள்ளமுடியும். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் தமது சாதனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் சவால்களுக்கான தீர்வு காண்பதற்குமான ஒரு களமாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். கணித அறையில் உள்ள வளங்களைப் பரிசீலனை செய்தல் புதியனவற்றை ஆக்குதல் போன்ற கணித அபிவிருத்திப் பணிகளில் ஆர்வத்துடனும் மகிழ்வுடனும் ஈடுபட்டு உன்னத பலன் பெறமுடியும்.

### பாடசாலை நிர்வாகம்

கணிதபாடம் எந்தச் சந்தர்ப்பத்திலும் குழம்பாதவாறு கற்றல் கற்பித்தல் நடைபெறுவதற்கு நிர்வாகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கணிதம் கற்பிப்பதற்குத் தேவையான தர உள்ளீடுகளைத் தடையின்றி வழங்க வேண்டும். ஆசிரியர், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மிகவும் பொருத்தமான வளவாளர்களை ஒழுங்கு செய்வதுடன் அதனால் உண்டான வெற்றியை உறுதி செய்தல் வேண்டும். கணிப்பீடு, மதிப்பீட்டுப் புள்ளிகளை ஆய்வு செய்து தரத்தை உறுதி செய்தல் வேண்டும்.

### கணிதபாட இணைப்புக் கலைத்திட்ட செயற்பாடுகள்

கணிதபாட கண்காட்சி, கணிதபாட விநாடி வினாப் போட்டி, புதிர்ப் போட்டிகள், கணித பாடத்தில் கலை நிகழ்வுகள், கணிதபாட சஞ்சிகை ஆக்கம், கணிதபாட ஓவியப் போட்டிகள், கணித புத்தாக்கப் போட்டிகள், கணித முகாம் என பாடசாலைக்கு மேலதிக நேரத்தில் பெற்றோரையும் பிள்ளைகளுடன் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதன் மூலம் கணித பாடத்தில் பிள்ளைகள் விருப்புடன் ஈடுபட ஊக்குவிக்கலாம். வீட்டில் கணிதம் கற்றலில் பெற்றோரின் உதவியும் கிடைக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக அறிவு மட்டும் உடைய ஆசிரியர்களால் எல்லாப் பிள்ளைகளும் விரும்பிக் கற்கும் வகையில் கணிதம் கற்பிக்க முடியாது. அன்பும் நல்ல மனப்பாங்கும் உள்ள ஆசிரியர்களாலேயே எல்லாப் பிள்ளைகளும் மகிழ்வோடு தெளிவாகக் கற்க வழிகாட்டமுடியும். எனவே கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்கள் பிள்ளைகளை நன்றாக விளங்கி அவர்களுக்கு ஏற்றவகையில் கற்றலுக்கு வழிகாட்டி அனைத்துப் பிள்ளைகளும் பயன்பெற உதவுதல் வேண்டும். தமது பாடத்தை விரும்பிக் கற்பிக்கும் ஆசிரியர்களை நிர்வாகம் ஊக்கப்படுத்துதல் வேண்டும். சாதனைகளைப் பாராட்டல் வேண்டும்.

சகல பிள்ளைகளும் மொழியைக் கிரகித்து விளங்கிக் கொள்ளவும் தெளிவாகப் பேசவும் உச்சரித்து வாசிக்கவும், உறுப்பமைய திசை முகத்தை அனுசரித்து எழுதவும் உரிய காலத்தில் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியமானதே!

ஆயினும் உயரிய ஆயத்த நிலையை அடையாத நிலையில் திட்டமிட்ட படிமுறை ஒழுங்கைப் பின்பற்றாது வாசிக்க, எழுத வேகமாகப் பயிற்றுவிக்க முயல்வது ஆபத்தானது. இதனைக் கருத்திற்கொண்டே பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் உதவும் வகையில் ஆய்வு ரீதியான சிந்தனையுடன் நீண்ட அனுபவம்மிக்க வளவாளர்களால் வீடு ஒரு பாடசாலையாக...., எழுதி மகிழ்வோம்; எனும் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பக்குவமாகப் பயன்படுத்தி பிள்ளைகள் நிறைவான பயனைப் பெறமுடியும் என்பதை உணர்ந்து இந்தப் புத்தகங்களைத் தேடிக் கொள்வனவு செய்து ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் வழங்கி உதவ கௌரவ சரவணபவன் அவர்கள் முன்வந்தமை இந்த இடத்தில் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

**திருமதி அ.வேதநாயகம்**
ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



# ஊடகம் பற்றிய பார்வைகள்

## வாசகர்களின் மனங்களைக் கவர்ந்து இழுத்த யாழ்ப்பாணத்தின் முதல் நாளேடு 'ஈழநாடு'

அந்தவகையில் ஈழநாடு இன்றைய ஏனைய பிரதேச தினசரிகளுக்கு ஒரு முன்னோடி. அது பற்றிய சில பதிவுகளின் பகிர்வு இங்கு.

முதன்முறையாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்பட்ட 'ஈழநாடு' நாளேடு பாடசாலைக்குப் புறப்படுவதற்கு முன்னரே பத்திரிகை விற்பனை நிலையங்களுக்குக் காலையிலேயேவந்து சேர்ந்துவிடும். அதனால் கொழும்புத் தமிழ் நாளேடு களுக்கு முன்னதாகவே 'ஈழநாடு' பிரதியைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

மொத்தத்தில் அன்றாடம் 'ஈழநாடு' வாசிக் காதுவிடில், சாப்பிடாத ஓர் உணர்வு. ஆனாலும் அந்தப் பத்திரிகையின் பணியகத்தில் ஆசிரியர்பீடத்தில் பணியாற்றுவேன் என்று நான் கனவுகூடக் கண்டதில்லை. அறிவுத் தேடலுக்காகவும், தகவல்களை அன்றாடம் தெரிந்து கொள்வதற்காகவும் ஆவலுடனும், எமது பாடசாலைக் காலத்தில் பாடநூல்களுக்கும் அப்பால் தமிழ், ஆங்கில சஞ்சிகைகளை மட்டுமன்றி பத்திரிகைகளையும் நாளேடுகளையும் வாசிக்கும் பழக்கம் ஆறாம், ஏழாம் வகுப்பு மாணவனாக இருந்தகாலத்திலேயே தொற்றிக்கொண்டது. பாடசாலை முடிந்து வீடு சென்றதும், சனசமூக நிலைய வாசிகசாலைக்கும், சில உறவினர்களின் வீட்டு நூல் நிலையங்களுக்கும் சென்று பல்வகைப்

புத்தகங்களையும், பத்திரிகை களையும் வாசிப்பது பிரதான பொழுதுபோக்கு என்ற தன்மை, எங்கள் மாணவர்கள் பலரின் வழக்கமாக இருந்தது. வயதில் குறைந்தவனாயினும், நானும் அந்தக் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டேன்.

அந்தவகையில் நாளாந்தம் மாலையில் தமிழ், ஆங்கில நாளேடுகளை வாசிக்கும் வழக்கமும், பழக்கமும் தவணை நடைமுறை (routine) ஆகியது. அப்போதெல்லாம் இரண்டு மொழிகளிலும் வெளிவரும் நாளேடுகளை வாசிப்பதற்கு நேரம் கிடையாவிடில், அடுத்தநாள் நீண்டவேளை பத்திரிகை வாசிப்பதிலேயே பறந்துவிடும். அதனால் அதற்கடுத்ததான, விளையாட்டைத் தவிர்த்துக் கொள்வதுமுண்டு. மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அப்போதைய உயர்தர வகுப்பில் கணிதப் பிரிவில் பயின்று தேறி, முந்தைய யாழ்.கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மாலை நேரப் பொறியியல் வகுப்பில் 1962 ஆம் ஆண்டில் பயின்று கொண்டிருந்தேன்.

யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், எங்களூரைப் புகுந்த இடமாகவும் கொண்ட முன்னாள் அரச உயர் அதிகாரியான (ஒரு திணைக்களத்தின் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய மூத்தவர்) பஞ்சாட்சரம் ஐயா அவர்களோடு நட்பு ஏற்பட்ட காலம் அது. அவரது வீட்டின் நீண்டு அகன்ற நூலகத்தில் அரிய பல தமிழ், ஆங்கில நூல்களை எனக்குக் கிடைக்கும் வேளைகளில் வாசிப்பதற்காக அவரது வீட்டுக்குச் செல்வதனை வழக்கமாக்கிக் கொண்டேன்.

அந்த நட்பே 'ஈழநாடு' நாளேட்டில் பணிபுரியும் வாய்ப்பை உருவாக்கித் தந்தது. 'ஈழநாடு' நாளேட்டின் நிர்வாக இயக்குநர் கே.சி.தங்கராஜாவும், பஞ்சாட்சரம் ஐயாவும், யாழ். இந்துக் கல்லூரியில் பள்ளித் தோழர்கள். அதனால் பின்னவர் தந்த அறிமுகக் கடிதம் ஈழநாடு ஆசிரியர் பீடத்தில் பணிபுரிவதற்கு 1962 இல் ஒரு சந்தர்ப்பத்தைத் தந்தது. ஈழநாடு நிறுவனத்தில் பயிற்சிக் காலம் ஆறு மாதங்கள் முடிவுற்றபின்னர், பொறியியல் கல்வி மாலையிலும், பத்திரிகைப் பணி இரவிலுமாக மூன்று வருடங்கள் கழிந்தன. பயிற்சிக் காலத்தில் செய்திகளை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல், செய்திகளை நயமுறத் திருத்தி எழுதுதல், கட்டுரைகளை மொழிபெயர்த்தல், மற்றும் அலுவலகத்துக்குத் தகவல்கள் வழங்குவதற்கு வருவோரைச் சந்தித்துச் செய்தியாக்குதல் ஆகிய நுட்பங்களைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. பகலில் பணிக்கு வரும் வேளைகளில், ஒப்புநோக்கும் நுட்பங்களைத் திருவாளர்கள் சபாரத்தினம் (சசிபாரதி), மாணிக்கம் ஆகியோரிடம் பயிலமுடிந்தது.

ஆசிரியர் பீடத்தில் எனக்குப் பின்னர் சேர்ந்துகொண்ட பாமா ராஜகோபாலும் ஆர்வத்துடன் பத்திரிகைத்துறை நுட்பங்களைப் பயின்று கொண்டார். (அவர் பின்னர் கொழும்பு தினகரன் பத்திரிகையில் பணியாற்றினார்). அவர் ஈழநாட்டில் சேர்ந்து ஒரு சிலவருடங்களின் பின்னர் சுழிபுரத்தைச் சேர்ந்த கந்தசாமியும் ஆசிரியர் பீடத்தில் இணைந்து கொண்டார். அவர் பின்னர் பத்திரிகையின் கொழும்புச் செய்தியாளராகவும் பணியாற்றினார்.

ஈழநாடு ஆசிரியர்பீடத்தில் பிரபல மூத்த பத்திரிகையாளர்கள் கே.பி.ஹரன் (பிரதம ஆசிரியர்), இராஜ அரியரத்தினம் (ஞாயிறு இதழ் ஆசிரியர்), எஸ்.எம். கோபாலரத்தினம் (செய்தி ஆசிரியர், பிற்காலத்தில் பிரதம ஆசிரியராகப் பதவி வகித்தவர்) ஆகியோரின் வழிகாட்டுதல்களில் பத்திரிகைப் பணியின் நெளிவு சுழிவுகளைக் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

பிரதம ஆசிரியர் கே.பி ஹரன், செய்தி ஆசிரியர் எஸ். எம். கோபாலரத்தினம், உதவி ஆசிரியர்கள் டி.எம். முருகையா, எஸ். பெருமாள், சபாரத்தினம் (சசிபாரதி) மற்றும் வேலைப்பகுதியில் பணிபுரிந்த முகாரி நாராயணசாமி, வேலுப்பிள்ளை மற்றும் எழுத்துக் கோர்ப்புப் பிரிவைச் சேர்ந்த பலரும் கொழும்பு வீரகேசரி பத்திரிகையில் பணிபுரிந்த அனுபவசாலிகள். அவர்களுடன் யாழ்ப்பாண அச்சகங்களில் பணியாற்றி அனுபவம்மிக்கவர்களும் அச்சகப் பகுதியில் பணியாற்றினர். அவர்களில் கிருஷ்ணமூர்த்தி, பாலசிங்கம், பாக்கியநாதன், துரைசாமி, ஆறுமுகசாமி ஆகியோர் நினைவில் நிற்பவர்கள்.

ஆசிரியர் பீடத்தில் க.கணேசலிங்கம் (பின்னாளில் பாடசாலை ஆசிரியர்) ஜி.மகாதேவா (மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர்) கணேசநாதன் (பின்னர் அரச உயர் பதவி வகித்தவர்), சி.க.திருச்சிற்றம்பலம் (முன்னர் அரச அதிகாரி, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்) செல்வி கோமதி (பட்டதாரி), புலவர் க.பூரணம், ம.மனோகரன் (பின்னாளில் ஆசிரியர்) என்.ஆர் திருச்செல்வம் (பின்னாளில் ஆசிரியர்), உதவி ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர்.

அனுபவம் வாய்ந்த செய்தியாளர்களாக கா.யோகநாதன், எஸ். சொலமன், க.அரசரத்தினம், எம். நடராஜா (முன்னாளில் ஆங்கில ஆசிரியர் அவர் டெயிலி மிரர் பத்திரிகைக்கும் செய்தியாளராகப் பணியாற்றியவர்) ஆகியோர் பணியாற்றினர்.

பிரபல எழுத்தாளரும், பத்திரிகையாளருமான அ.செ.முருகானந்தம் (அ.செ.மு) இலங்கை வானொலியின் தமிழ்ப் பிரிவின் அதிகாரியாகப் பணியாற்றிய வி.என். பி. எனப்படும் வி.என். பாலசுப்பிரமணியம் மற்றும் முன்னாள் அரச அதிகாரி சி.வி.சரவணமுத்து ஆகியோரும் ஆசிரிய பீடத்தை அலங்கரித்தவர்களில் முக்கியமானவர்கள். மறக்கமுடியாதவர்கள். திரு. இராஜ அரியரத்தினம் ஈழநாடு வாரமலர் ஆசிரியர் பதவியை விட்டு விலகியபின்னர், அ.செ.மு. அவர்கள் ஈழநாடு வாரமலரின் ஆசிரியராகப் பணியாற்றினார். எனது தொழில்நுட்பக் கல்வியின் பொருட்டு நான் தொடர்ந்து இரவுநேரப் பணியையே விரும்பிச் செய்தேன். க.கணேசலிங்கம், ஜி.மகாதேவா ஆகியோருடன் இரவுப் பணிசெய்து, பின்னர் தனித்துப் பணியாற்றும் வாய்ப்பும் கிடைத்தது. அந்தக் காலத்தில் எமது பத்திரிகையின் கொழும்புச் செய்தியாளராக, மூத்த ஊடகவியலாளராக பி.பாலசுந்தரம் பணியாற்றினார். இரவு பதினொரு மணிக்குப் பின்னரும் பிந்திய செய்திகளைத் தருவார். அதனால் கொழும்புத் தமிழ் நாளேடுகள் ரயிலில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து விற்பனைக்கு வருமுன், எங்கள் பத்திரிகையில் முக்கிய செய்திகள் பிரசுரமாகிவிடும்.

ஈழநாடு பத்திரிகை இரண்டு குட்டி வாகனங்களில் பிரதான வழித்தடங்களுக்குச் சென்று விற்பனையான பின்னரே, கொழும்பு நாளேடுகள் முகவர்களை வந்தடைந்த நாள்களே அதிகம் எனலாம். அதனால் எமது கொழும்புச் செய்தியாளர் தரும் செய்திகளை, ஆசிரியர் பீடத்தில் இரவில் பொறுப்புப் பணிசெய்த கணேசலிங்கம், மகாதேவா மற்றும் நான் காத்திருந்து பெற்றுப் பிரசுரிப்பது தவிர்க்க முடியாததொன்றாக அமைந்தது.

அந்தக்காலத்தில் யாழ்ப்பாணப் பிரதம தபாலகத்தில் பணிசெய்யும் மூத்த அலுவலர்கள் நட்புணர்வுடன் எங்களுக்கு உதவுவார்கள். பிரதம மேற்பார்வையாளர் எஸ்.விக்கினராசா, கல்வயல் குமாரசாமி ஆகியோர்களின் பெயர்களே ஞாபகத்துக்கு வருகின்றன. அவர்களைப் போன்று மற்றும் பலரது உதவியினால் நாம் பிந்திய செய்திகளை வெளியிட்டமையும், அதனால் முக்கியமான கொழும்புச் செய்திகளால் 'ஈழநாடு' பத்திரிகையின் விற்பனை அதிகரித்ததும் நேற்றுப் போன்று மனதில் நிழலாடுகின்றது.

கோகிலாம்பாள் கொலை வழக்குத் தொடர்பான செய்திகள் வாசகர்களிடையே பரபரப்பையும், பத்திரிகையை நாள் தவறாது வாங்கவேண்டும் என்ற தேவையை யும் உருவாக்கியமை மறக்கற்பாலதன்று. அந்த வழக்கு நிகழ்வுகளைத் தத்ரூபமாக வடித்தவர் எங்கள் செய்தியாளர் கொடிகாமம் கார்த்திகேசு யோகநாதன் என்பதனை ஈழநாடு பத்திரிகையில் பணிக்குச் சேர்ந்த பின்னர் தெரிந்துகொண்டேன். யாழ்ப்பாணத்தின் மிக முக்கிய செய்திகளை 'ஈழநாடு' கோட்டைவிடாது தவிர்ப்பதில் குடாநாட்டின் ஜாம்பவான் செய்தியாளராக விளங்கிய அமரர் அச்சுவேலி எஸ். செல்லத்துரை உதவியதை இரவில் பொறுப்பான உதவி ஆசிரியர்களாக இருந்த எம் மூவராலும் மறக்கமுடியாது. அவரைப் போன்ற ஒரு செய்தியாளர் யாழ். மாவட்டத்தில் உருவாகுவாரா என்பது சந்தேகமே.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்பட்ட முதலாவது தமிழ் நாளேடு என்ற வரலாற்றைப் பதிவு செய்துள்ள பெருமை 'ஈழநாடு' பத்திரிகைக்கே உரியது. அதற்கு மூலகாரணர்களாக இருந்த அமரர் கே.சி.தங்கராஜா, அமரர் டாக்டர் கே.சி. சண்முகரத்தினம் சகோதரர்கள் வரலாற்று நாயகர்கள் எனலாம். 'ஈழகேசரி'யின் பொன்னையாவுக்கு இணையாக இவர்கள் பத்திரிகை, ஊடகத்துறை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினர் என்பதும் புகழுரையல்ல எனலாம்.

யாழ்ப்பாணம் (பெரிய) சிவன்கோவில் மேற்கு வீதியில் கலாநிலையம் பதிப்பகமாக இருந்த அச்சகமே, ஈழநாடு தலைமை நிலையமாக மாறியது. அதன் அச்சக முகாமையாளர் சிவானந்தன், தங்கராஜா அவர்களின் சகோதரியின் மகன். அதற்கு முன்னர் கொழும்பின் பிரபல அச்சகம் ஒன்றில் பணிசெய்தவேளை இலண்டனுக்குச் சென்று அச்சுக் கலைத்துறை உயர்படிப்பை மேற்கொண்டவர்.

நான் தொழில்நுட்பக் கல்லூரியில் எந்திரவியல் படிப்பதாகக் கூறியபோது, சிவானந்தன் அவர்கள் இந்தத் தகவலைத் தெரிவித்த ஞாபகம். கால வர்த்த மானங்களால், ஊடகத்துறை நவீனமயமாக்கப்பட்டு பெருவளர்ச்சி கண்ட

போதிலும், அறுபதுகளில் முளைவிட்ட 'ஈழநாடு' நாளிதழ் நாமம் ஊன்றிப் பதிக்கப்பட வேண்டியதாகும். நான் பயின்ற பொறியியல்துறைக்கு அப்பால், என்னை ஊடகத்துறைக்கு இழுத்துச்சென்ற பெருமையும் 'ஈழநாடு' நாளிதழைச் சாரும். ஈழநாடு ஆசிரியர்பீடத்தில் பணிபுரிவதற்கு முன்னர், சொந்தப் பெயரிலும், "வட்டூர் கானம்" என்ற பெயரிலும் கவிதைகள், கட்டுரைகள் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு எழுதி வந்தேன். அதனால் ஞாயிறு பதிப்பில் விஞ்ஞானக் கட்டுரைகள், கவிதைகளை வெவ்வேறு புனைபெயர்களில் எழுதியதும் உண்டு.

விளம்பரப் பிரிவு மற்றும் விநியோகப் பிரிவுகளில் எஸ். முருகானந்தன், இ.சண்முகநாதன் (சங்கரத்தை), பிரதம கணக்காளராகப் பணிபுரிந்த கனகசபாபதி ஐயர், விதானையார் என அழைக்கப்படும் சிவசிதம்பரம் (அராலி) ஆகியோர் துடிப்புடன் பணிபுரிந்தவர்களில் சிலர் என்பது எனது ஞாபகம்.

1968 இல் வீசிய பெரும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு ஈழநாடு நிர்வாகம், கதம்ப நிகழ்ச்சி ஒன்றை வண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரியில் நடத்தியது. ஆசிரியபீட உறுப்பினர்கள் ஏதாவது நிகழ்வைத் தயாரித்து வழங்கவேண்டும் என்ற முடிவின் பிரகாரம் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்கள், 'கண்ணகி கோவலன்' கதையை வைத்து கதாப்பிரசங்கம் ஒன்றைத் தயாரித்து வழங்கினோம். பிரசங்கத்துக்கான பாடல்களை நானே இயற்றினேன். நண்பர் கணேசலிங்கம், மகாதேவா, பாமா இராஜகோபால் மற்றும் நான் கதைகூறி இயக்க, இசைக்க, வி.மாணிக்கம் மிருதங்கம் வாசித்தார்.

வண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் சி.அம்பிகைபாகன் 'ஈழநாடு' நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். நிர்வாகத்தினருக்கு மட்டுமன்றி ஆசிரியர் பீடத்தினருக்கும் அறிவுரைகள் கூறுவார். யாழ்.மத்திய கல்லூரியின் பிரபல அதிபராக விளங்கிய ஏ.ஈ. தம்பர், வைத்தீஸ்வரக் கல்லூரியின் பிரதி அதிபர் க. சீனிவாசகம், யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் அ.சரவணமுத்து ஆகியோரும் ஈழநாடு பத்திரிகையின் பெரும் அபிமானிகள். அவர்கள் அடிக்கடி அலுவலகத்துக்கு வந்துசென்றதும் நிழலாடுகின்றது.

பத்திரிகைத் துறையில் தொடர்ந்தும் பணியாற்றுவேன் என்று கனவுதானும் காணாத அடியேன், அதிலிருந்து விடுபட்டு வெளிச்செல்ல முடியாத விதியினால், அந்தத்துறையில் பொன் விழாக்காணும் நிலைக்கு ஆளாக்கிய அந்ததுறைசார் ஜாம்பவான்களின் (கே.பி.ஹரன், இராஜ அரியரத்தினம், அ.செ.முருகானந்தம், எஸ்.டி.சிவநாயகம், எஸ். எம். கோபாலரத்தினம், கே.கே.இரத்தினசிங்கம், ஆகியோரின்) நினைவுகள் இன்றும் மனதில் நிழலாடுகின்றன.

**ம.வ.கானமயில்நாதன்**
பிரதம ஆசிரியர், உதயன்.



# ஈழத்துச் சிறுகதைகள்

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இந்நாட்டுத் தமிழ் புலவர்கள், அறிஞர்கள், பலர் காத்திர மான பங்களிப்பைச் செய்துள்ளனர். மிகப் பழங் காலத்திலே தொடங்கிய இந்தப் பணி இடையூறின்றி இன்றும் தொடர்கின்றது. சங்கப் புலவர்களுள் ஒருவராயிருந்த ஈழத்துப் பூதன்தேவனார் இதற்குக் கால்கோளிட்டவராகக் கருதப்படுகின்றார். அவரைத் தொடர்ந்து பல புலவர்களும் கவிஞர்களும் தம் கவிதைகளாலும் காவியங்களாலும் தமிழ் மொழியை வளப்படுத்தியுள்ளனர். தமிழ்மொழி தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஒரு திருப்புமுனை ஏற்படுவதற்கு வழிவகுத்தவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர். கவிதையிலே நடனமிட்ட தமிழ் அணங்கை வசனத்திலே நடக்க வைத்தவர் அவர்.

அன்னநடை பிடியினடை யழகுநடை
யல்லவென வகற்றி யந்நாட்
பன்னமுது புலவரிடந் செங்ஞண்டை
பயின்ற தமிழ் பாவையாட்கு
வன்னடை வழங்குநடை வசன நடை
யெனப் பயிற்றி வைத்த வாசான்...

எனத் தங்கத் தாத்தா சோமசுந்தரப்புலவராலும் வசனநடை கைவந்த வல்லாளன் என வி. சோ. சூரியநாராயண சாஸ்திரியாராலும் பாராட்டப்பட்டவர் ஆறுமுகநாவலர்.

செய்யுளில் மட்டும் அமைவதே இலக்கியம் என்ற இறுக்கமான நிலை மெல்ல மெல்லத் தளரத் தொடங்கியது. உரைநடையிலும் இலக்கியம் உருவாக ஆரம்பித்தது. தமிழ்மொழியிலே

கதைகளுக்கு என்றுமே பஞ்சம் இருந்ததில்லை. பாலர்களுக்கும் சிறுவர்களுக்கும் கதை சொல்வது பாட்டிமாரின் எழுதாக் கடமையாக மரபாக இருந்துவந்துள்ளது. ஆனால் மேலைநாட்டினரின் குறிப்பாக ஆங்கிலேயரின் வரலாறும் தொடர்பாடலுமே கதைகள், சிறுகதை, புதினம் (நாவல்) என்ற இன்றைய வடிவங்களைப் பெற்றதாக விமர்சகர்களும் ஆராய்ச்சியாளர்களும் கூறுகின்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்ட ஆங்கிலக்கல்வி வளர்ச்சி காரணமாக ஆங்கிலக் கதைகளை இங்குள்ளோர் வாசிக்க ஆரம்பித்தனர். அரசியல்துறையில் ஏற்பட்டுக்கொண்டிருந்த மாற்றங்கள் சமூக விழிப்புணர்ச்சி, அச்சுப் பத்திரிகைகளின் தோற்றம், விஞ்ஞான வளர்ச்சி காரணமாக மக்களுக்குக் கிடைத்த அதிக ஓய்வுநேரம் போன்றவை மேனாட்டுச் சிறுகதைகளைப் போல் தமிழிலும் எழுதவேண்டும் என்ற உந்துதலை எழுத்தாளர்கட்கு ஏற்படுத்தின.

முதன்முதலில் அத்தகைய சிறுகதைகளைத் தமிழில் எழுதியவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆனல்ட் சதாசிவம்பிள்ளை என்பவராவர். இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையான உதயதாரகையின் ஆசிரியராக 1860 களிற் பணியாற்றத் தொடங்கிய அவர், அப்பத்திரிகையிற் பல சிறுகதைகளை எழுதியுள்ளார். சிறுகதைத் தொகுதி ஒன்றையும் வெளியிட்டிருக்கின்றார்.

தமிழ்ச் சிறுகதையின் மூலவர்களாக வ.வே.சு. ஐயர், பாரதியார், அ.மாதவையா ஆகியோரைக் குறிப்பிடுவதுண்டு. இலங்கையில் இலங்கையர்கோன், சம்பந்தன், சி.வைத்தியலிங்கம் ஆகியோர் சிறுகதை முன்னோடிகளாகக் கருதப்படுகின்றனர். ஈழத்துச் சிறுகதையாசிரியர்களுக்கு மட்டுமல்லாமல் பொதுவாகவே தமிழ்ச் சிறுகதையாசிரியர்கள் அனைவருக்கும் முன்னோடி ஜே.ஆர்.ஆனல்ட் சதாசிவம்பிள்ளை என சோ.சிவபாதசுந்தரம், சிட்டி ஆகியோர் இணைந்து வெளியிட்ட தமிழ்ச் சிறுகதைகள் என்ற நூல் ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளது. (சமீபகாலத்தில் இந்தத் தகவல் செங்கை ஆழியன் மூலமாக ஈழத்து எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் எட்டியுள்ளது.

ஆரம்பகாலச் சிறுகதைகளை வெளியிட்ட பெருமை உதயதாரகைக்கே உரியதெனினும் இலக்கிய - சமூகப் பிரக்ஞையுடன் உருவ உள்ளடக்க நேர்த்திமிக்க சிறுகதைகளைத் தொடர்ச்சியாக வெளியிட்ட பெருமை 1930 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1938ஆம் ஆண்டு தொடக்கம் சோ.சிவபாதசுந்தரம் அவர்களின் ஆசிரியப்பொறுப்பில் வெளிவந்த ஈழகேசரிக்கே உரியது. சோ. சிவபாதசுந்தரம் அவர்களுக்குப் பின்னர் ஈழகேசரியின் ஆசிரியராகப் பணியாற்றிய இராஜ. அரியரத்தினம் அவர்களும் நல்ல தரமான சிறுகதைகளை இந்நாட்டு எழுத்தாளர்களிடம் பெற்று வெளியிட்டார். நமது நாட்டில் அவ்வப்போது தோன்றி மறைந்த சில சஞ்சிகைகள், இப்போதும் வெளிவரும் நாளிதழ்களின் வாரமலர்களும் சிறுகதை வளர்ச்சிக்கு ஆற்றிய, ஆற்றிவருகின்ற பங்களிப்பு கணிசமானது.

பாடசாலை மாணவனாக நான் இருந்தபோதே வாசிக்கும் பழக்கம் என்னிடம் ஏற்பட்டுவிட்டது. கையிற் கிடைக்கும் நூல்களையும் சஞ்சிகைகளையும் நான் வாசித்தேன். ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள், ஈழகேசரி ஆகியவற்றைத்

தவறாது வாசித்தேன். நான் மிகவும் விரும்பி வாசித்தவை சிறுகதைகள்தாம். தமிழகம் பத்திரிகைகளில் அழகான படங்களுடன் சிறுகதைகள் வெளியிடப்பட்டன. படங்களின்றி வெளியான ஈழகேசரிக் கதைகளும் என்னைக் கவர்ந்தன. எழுதியவர்களின் எழுத்தாற்றலும் எங்கள் நாட்டுப் பின்னணியில் இங்குள்ள மக்களின் வாழ்க்கை சம்பந்தமானவையாகக் கதைகள் இருந்தமையுமே காரணம் எனச் சொல்லவேண்டும். தமிழக எழுத்தாளர்கள் பிரபலமடைந்த அளவுக்கு எங்கள் நாட்டு எழுத்தாளர்கள் பிரபலமடையாவிட்டாலும் இவர்களின் தரம் எவ்வகையிலும் குறைந்ததல்ல என்ற எண்ணம் என்னுள்ளே உருவாகத் தொடங்கியது. சில ஆண்டுகளின் பின்னர் கரவைக் கவி கந்தப்பனார் என்றபெயரில் கனக செந்திநாதன் ஈழகேசரியில் எழுதிய ஈழத்துப் பேனா மன்னர்கள் என்ற விமர்சனக் கட்டுரைத் தொடர் என்னுடைய கருத்தை உறுதிப்படுத்துவதைப் போன்றிருந்தமை எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. இலங்கையர்கோன், சம்பந்தன், சோ. சிவபாதசுந்தரம், சி.வைத்திலிங்கம், அ.செ.முருகானந்தன் முதலியவர்களின் சிறுகதைகள் சென்னை அல்லயன்ஸ் நிறுவனம் வெளியிட்ட கதைக்கோவைகளில் இடம்பெற்ற செய்தியையும் கனக செந்திநாதனின் கட்டுரைகள் தெரிவித்தன. கல்கி, கலைமகள், ஆனந்தவிகடன் போன்ற பிரபலமான தமிழ்ச் சஞ்சிகைகளில் ஆசை அருமையாகவே இலங்கை எழுத்தாளர்களின் சிறுகதைகள் வெளியிடப்பட்டன என்பதும் தெரியவந்தது.

இந்தநிலையில் தமிழகத்திலிருந்து 'சிறுகதை மஞ்சரி. என்ற நூல் வெளிவந்தது. தமிழக எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகளைத் தொகுத்து 'சோமு' என்ற மீ.ப.சோமசுந்தரம், இந்திய சாகித்ய அக்கடமியின் சார்பில் அந்த நூலை வெளியிட்டிருந்தார். இலங்கை எழுத்தாளர்களின் சிறுகதை எதுவுமே அந்தத் தொகுதியில் இடம்பெறாதது ஒரு குறையாகவே எனக்குப்பட்டது. இந்தக் குறையை நிவர்த்திசெய்யும் விதத்தில் ஏதாவது செய்யவேண்டும் என்ற துடிப்பு என்னுள்ளே ஏற்பட்டது. ஆனால் என்னத்தைச் செய்வது? அதை எப்படிச் செய்வது என்பதொன்றும் எனக்குத் தெரியவில்லை.

நான் சிறுவனாக இருந்தபோது எனக்குத் தமிழ் கற்பித்து இலக்கியத்தில் ஈடுபாடு ஏற்படும்படி செய்த ஆசிரியர் திரு.சி.பொன்னம்பலம் (ஆதவன்) அவர்களுக்கு இதைப்பற்றிச் சொன்னேன்.

எழுத்தாளர் திரு.அ.செ.முருகானந்தன் அவர்களுடன் இதைப் பற்றிப்பேசிப் பார்க்கலாம் என அவர் சொன்னார். அ.செ.மு. அவர்களை அவருக்கு நன்கு தெரியும். தன் தாயாருடம் அளவெட்டியில் அப்போது வசித்துவந்தார் அ.செ.மு.அவரைச் சந்தித்தபோது ஈழத்து எழுத்தாளர்கள், சிறுகதைகள், சஞ்சிகைகள் பற்றிய பல தகவல்களை அறியமுடிந்தது. வெவ்வேறு காலகட்டங்களில் நீண்ட இடைவெளிகளுடன் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் மட்டும் வெளிவந்த சிறுகதைகளை வைத்துக்கொண்டு இந்நாட்டு எழுத்தாளர்களின் திறமை புறக்கணிக்கப்படுவதாக குற்றஞ் சுமத்தக்கூடாது. இலக்கியத் தேடலுடைய வாசகர்கள், விமர்சகர்கள், பத்திரிகையாசிரியர்கள் போன்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறந்த சிறுகதைகள் சிலவற்றைத் தொகுத்து வெளியிடவேண்டும் என்றார் அ.செ.மு.

என்னுடைய மனதிலும் இப்படியான ஓர் எண்ணம் அரும்பியிருந்ததுதான். ஆனால் அதை யாரிடமும் சொல்லும் துணிவு எனக்கிருக்கவில்லை. இப்போது அ.செ.மு. அவர்களும் அப்படிச் சொன்னபடியால் நான் ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினேன்.

யாழ்ப்பாணத்தில் இத்தகைய நூலொன்றைப் பிரசுரிப்பதற்கு யாருமே முன்வரமாட்டார்கள். நாங்களாக வெளியிடுவதனால் அதிக பொருட்செலவு ஏற்படும். அந்த அளவு பொருளாதார பலம் எங்களிடம் இல்லை. நூலை அழகாகவும் கவர்ச்சியாகவும் வெளியிட முடியுமா என்பதும் சந்தேகமே. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவனாக இருந்த என் நண்பர் அழ.சிதம்பரம் அவர்களுக்கும் சென்னை வை.எம்.சி. ஏ. பட்டிமன்றத் தலைவர் திரு. அன்பு பழம் நீ அவர்களுக்கும் எழுதினேன். அவர்களுடைய பதில் எனக்கு உற்சாகமூட்டியது. சென்னை பாரி நிலைய உரிமையாளர் நூல் வெளியீட்டில் உதவ முன்வந்திருப்பதாக அவர்கள் அறிவித்தார்கள். இதைக் கேள்வியுற்ற திரு.முருகானந்தன் பெரிதாக ஒரு தொகுதியை வெளியிடாமல் சிறியவையாக நான்கு தொகுதிகள் வெளிவரவேண்டும் என்று சொல்லி ஒவ்வொன்றிலும் இடம்பெறவேண்டிய எழுத்தாளர்களின் பட்டியலையும் என்னிடம் கொடுத்தார்.

### முதலாவது தொகுதி

சி.வைத்தியலிங்கம் சம்பந்தன், வ.அ.இராசத்தினம், தாழையடி சபாரத்தினம், அ.செ.முருகானந்தன், இராச அரியரத்தினம், சி.சரவணபவன், தி.ச.வரதராசன், சு.வே.சகிதேவி

### இரண்டாவது தொகுதி

இலங்கையர்கோன், சோ.சிவபாதசுந்தரம், சோ.நடராசா, ராஜநாயகம், எஸ்.டி.சிவநாயகம், சொக்கன், கே.கணேஷ், கனக. செந்திநாதன், அ.ந.கந்தசாமி, புதுமைப்பிரியை

### மூன்றாவது தொகுதி

குல.சபாநாதன், செ.கணேசலிங்கம், டானியேஸ், இ.நாகராஜன், சுயா, ம.த.லோறன்ஸ், அருள் செல்வநாயகம், மகாகவி பண்டிதர், பொ.கிருஷ்ணபிள்ளை, இந்திரா மகாதேவன்

### நான்காவது தொகுதி

பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை, மாயாவி (எஸ்.வேலுப்பிள்ளை), தேவன், இளங்கீரன், கு.பெரியதம்பி, ச.ப.சர்மா, ரகுநாதன், புரட்சிக்கமால், ரீ.பாக்கியநாயகம், செ.நடராசா (அகலவத்தை)

பட்டியல் எனக்குத் திருப்தியளிக்கவில்லை. கசின், தெல்லியூர் நடராசா புதுமை கோவலன், நாவேந்தன், எஸ்.பொன்னுத்துரை, சில்லையூர் செல்வராசன், அன்புமணி, ஜீவா உதயணன் போன்ற பலர் அதில் இடம்பெறவில்லை.

முதலாவது தொகுதியில் இலங்கையர்கோன், சம்பந்தன், சி.வைத்தியலிங்கம், இராஜ அரியரத்தினம் ஆகியோரின் கதைகள் கட்டாயம் இடம்பெறவேண்டும் என்ற என் நிலைப்பாட்டை அவரிடம் விளக்கினேன். முடியுமா? என்றார். வெறும் ஞாபகத்தைக் கொண்டு அவசரத்திலே தயாரிக்கப்பட்ட பட்டியல் இது. தேவையான மாற்றங்களை அவ்வப்போது செய்துகொள்ளலாம் என்றார் அ.செ.மு.

திரு. கனக. செந்திநாதன் அவர்களுடனும் நான் கலந்துரையாடினேன்.

வெள்ளிப்பாதசரம் (இலங்கையர் கோன்), வெள்ளம் (இராஜ - அரியரத்தினம்), மனிதன் (சம்பந்தன்), குருவின் சதி (தாளையடி சபாரத்தினம்), அவன் (ராஜநாயகன்), ஒருபிடி சோறு (கனக. செந்திநாதன்), பிள்ளையார் கொடுத்தார் (வரதர்), தோணி (வ.வ. இராசத்தினம்), வாழ்வு உயர்ந்தது (சகிதேவி), கங்கா கீதம் (சி.வைத்தியலிங்கம்) உப்பிட்டவரை (கே.டானியேல்) ஆகியவற்றுடன் செ.கணேசலிங்கனின் ஒரு கதையும் சேர்த்துப் பன்னிரண்டு சிறுகதைகளை ஒரு தொகுதியாக வெளியிட முடிவுசெய்தோம்.

இலங்கையர்கோன் அவர்களின் 'வெள்ளிப் பாதசரம்' இத்தொகுதியின் முதற் கதையாக இருக்கவேண்டும் என்பது என் விருப்பம். ஆனால் அவரோ தன் கடற்கரைக் கிளிஞ்சல் என்ற சிறுகதையையே வெளியிடவேண்டும் என்பதிற் பிடிவாதமாக இருந்தார். பழம்பெரும் எழுத்தாளர் ஒருவரின் விருப்பத்துக்கு மாறாகச் செயற்படும் துணிவு என்னிடம் இருக்கவில்லை. செ.கணேசலிங்கன் அவர்களிடம் சிறுகதைப் பிரதியைப் பெற்றுக்கொள்ளச் சென்றபோது தான் விரைவில் சென்னைக்குச் செல்ல இருப்பதைக் குறிப்பிட்டு தன் சிறுகதையைப் பாரி நிலையத்திற்கு கொடுப்பதாகச் சொன்னார். நான் வாசித்துப் பார்க்காமல் அவருடைய கதையைத் தொகுதியிற் சேர்த்துக்கொள்வதிற் தயக்கம் ஏற்பட்டபோதிலும் என்னுடைய இந்த முதல் முயற்சி குழம்பிவிடக்கூடாது என்பதற்காக நான் அதற்கு உடன்பட்டேன்.

பதிப்புரை, அணிந்துரை, எழுத்தாளர் பற்றிய குறிப்புக்கள் ஆகியவற்றையும் சேர்த்து 168 பக்கங்களில் சுன்னாகம் தமிழருவிப் பதிப்பக வெளியீடாக 1958ஆம் ஆண்டு மே மாதம் ஈழத்துச் சிறுகதைகள் முதலாவது தொகுதி வெளிவந்தது. சென்னை, பாரி நிலையம் விற்பனை உரிமையைப் பெற்றிருந்தது.

ஏற்கனவே 'ஆனந்தவிகடன்' நடத்திய இலக்கிய விமர்சனப் போட்டி ஒன்றில் முதற் பரிசு தங்கப் பதக்கம் ஒன்றைப் பெற்றிருந்தவரும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியருமான பண்டிதர் பொன்.கிருஷ்ணபிள்ளை தன் முன்னுரையில் இப்பன்னிரு கதைகளில் உயரிடம் வகிக்கத்தக்க உலகத்துக் கதை வரிசைகளில் மிளிரக்கூடியனவும் சில உள எனத் துணிந்து கூறலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இந்திய எழுத்தாளர்கள் பலரின் பாராட்டுகளை இந்நூல் பெற்றது. சுதேச மந்திரனில் வல்லிக் கண்ணும் கலைச் செல்வியில் யாழ்ப்பாணம் தேவனும், 'உதயதாரகை'யில் நாவேந்தனும் விரிவான விமர்சனங்களை எழுதியிருந்தனர். ஈழத்து எழுத்தாளர்களின் திறமையைப் பாராட்டிய 'மஞ்சரி'

வ.அ.இராசத்தினம் அவர்களின் 'தோணி' சிறுகதையை மறுபிரசுரஞ் செய்தது. ஈழநாட்டுச் சூழ்நிலையிற் சிறுகதைகளைப் புனைந்து அவற்றை 'ஆனந்த விகடனுக்கு, அனுப்பிவைக்குமாறு இத்தொகுதியில் இடம்பெற்றிருந்த பன்னிரு எழுத்தாளர்களுக்கும் தனித்தனியே கடிதங்களை அனுப்பினார். ஆனந்தவிகடன் உதவி ஆசிரியரான மணியன். தினகரன் ஞாயிறு இதழொன்றிலே சில்லையூர் செல்வராகவன் எழுதிய விமர்சனம் மட்டும் சிறிதும் உற்சாகமளிப்பதாக அமையவில்லை. பல்லாண்டுகளாக எழுத்துத் துறையில் ஈடுபட்டுத் தமக்கெனத் தனி இடத்தை ஏற்படுத்திக்கொண்ட பழம்பெரும் எழுத்தாளர்களும் அவர்களைப் பின்பற்றி எழுதத் தொடங்கி நல்ல பல படைப்புக்களாற் புகழடைந்துள்ள இளைஞர்களும் இம்முதற் தொகுதியில் இடம்பெறுகின்றனர். இதைப்போன்றே அடுத்துவரும் தொகுதிகளிலும் பழைய புதிய எழுத்தாளர்கள் இடம்பெறுவார்கள் என நூலின் பதிப்புரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இருந்தும் தரமான எழுத்தாளர்கள் பலர் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் எனக் கண்டித்தார் அவர். கடற்கரைக் கிளிஞ்சல் கதையை வெளியிட்டதன் மூலம் இலங்கையர்கோன் என்ற புகழ்பெற்ற எழுத்தாளரை பப்பாசி மரத்தில் ஏற்றிவிட்டதாகவும் குறைப்பட்டுக்கொண்டார். இலங்கை எழுத்தாளர்களில் சிலரின் சிறுகதைத் தொகுதிகள் சில ஏற்கனவே வெளிவந்துவிட்டன. ஆனால் பல்வேறு எழுத்தாளர்களின் தரமான சிறுகதைகளுடன் வெளியான முதலாவது தொகுதி ஈழத்துச் சிறுகதைகள்தான். திறமான புலமையெனில் வாசகர்கள் அதை வணக்கம் செய்தல்வேண்டும் என்பதை மனதிலிருத்தி வெளியிடப்பட்ட இத்தொகுதி அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் வெற்றிபெற்றது என்றே சொல்லவேண்டும்.

நூலின் விற்பனை உற்சாகமளித்தது. அதிக எண்ணிக்கையான பிரதிகள் தமிழகத்திலேயே விற்பனையாயின. நீண்ட இலக்கிய அனுபவமோ பல எழுத்தாளர்களுடைய பரிச்சயமோ இல்லாதிருந்த எனக்கு இவ்வெளியீடு பெருமகிழ்ச்சியையும் திருப்தியையும் அளித்தது.

திட்டமிட்டபடி இரண்டாவது தொகுதிக்கான வேலைகளை ஆரம்பித்தேன். சொக்கன், சு.வே.புதுமைலோலன், எஸ்.பொன்னுத்துரை ஆகியோரின் சிறுகதைகள் கிடைத்தும் விட்டன. ஆனால் திடீரென்று எடுத்த முடிவின்படி கலைச்செல்வியை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். நாட்டின் அரசியல்நிலை காரணமாக இந்தியாவுடனான கடிதப்போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. நூல்வேலையைப் பின்போட்டேன். அதைவெளியிடும் சந்தர்ப்பம் பின்னர் எனக்குக் கிடைக்கவேயில்லை.

திட்டமிட்டபடி நான்கு தொகுதிகளையும் வெளியிட்டிருந்தால்....

**'சிற்பி' சிவசரவணபவன்**



# தமிழ் நாட்டார் வழக்காற்று வகைமைகளின் இருப்பில் எதிர்கொள்ளப்படும் சவால்கள்

தமிழ் மக்களிடையே பன்னெடுங்காலமாகத் தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டு வந்த நாட்டார் வழக்காறுகள் பலவும் இன்று வேகமாக வழக்கிழந்து வருவதனைப் பார்க்க முடிகிறது. இவ்வழக்காற்று வகைமைகள் பலவும் பல்வேறு வகையான மாற்றங்கள் மற்றும் அழிவுகளை எதிர்கொண்டு வருகின்றன.

உலகளாவிய நிலையில் நின்று பார்க்கும்போது இவ்வாறான சவால்கள் வெறுமனே தமிழ் நாட்டார் வழக்காறுகளுக்கு மட்டும் பொருந்துவதாக அமையாது உலகின் பல்வேறு இனங்களின் சுதேசியப் பண்பாடு சார்ந்த வழக்காற்று வகைமைகளுக்கும் பொருந்துவதாகவே உள்ளமை கருதத்தக்கதாகும்.

தமிழர் பண்பாட்டில் நாட்டார் பண்பாட்டு வகைமைகள் பெறும் முக்கியத்துவமான வகிபாகமானது (Role) இந்த வழக்காற்று வகைமைகளைச் செழுமையுடன் தக்கவைத்துக் கொள்வது தொடர்பான புலமைச் சிரத்தையினை இதுதொடர்பான ஆய்வாளர்களிடையே அண்மைக் காலமாக ஏற்படுத்தி வருகிறது. பண்பாடு, சமூகவியல், இலக்கியம் மற்றும் மானுடவியல் முதலான ஆய்வுப் புலங்களில் அடிப்படைத் தரவுகளாக அமையக்கூடிய இந்த வழக்காற்று வகைமைகள் ஒரு இனத்தின் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதிலும் கணிசமான பங்கை அளிக்கக்கூடியவையாகும்.

விவரண ஆய்வு முறையியல் சார்ந்து வருகின்ற இந்தக் கட்டுரையானது யாழ்ப்பாணக் குடாநாட்டின்

பல்வேறு பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட களஆய்வுத் தரவுகளின் வழியே இந்த வழக்காற்று வகைமைகள் எதிர்கொள்ளும் சவால்களை முறைப்படுத்தி அவற்றை உயிர்த்துடிப்புடன் தக்க வைப்பது தொடர்பான தீர்வுகள் சிலவற்றையும் முன்வைப்பதாக அமைகின்றது.

நாட்டார் வழக்காற்று வகைமைகள் என்னும்போது அவற்றுள் வாய்மொழி சார் நாட்டார் வழக்காறுகள் (Verbal Folklore), வழக்கங்கள் சார்ந்த நாட்டார் வழக்காறுகள் (Customary Folklore), பொருள்சார் நாட்டார் வழக்காறுகள் (Material Folklore) என்பன உள்ளடங்குகின்றன. மேலே குறிப்பிட்ட வகைப்பாடுகளைச் சார்ந்து வருகின்ற நாட்டார் பேச்சு முறைமைகள், மரபுவழித்தொடர்கள், வாக்கிய அமைப்புக்கள், பழமொழிகள், விடுகதைகள், பாடல்கள், இசைமரபுகள், நாட்டுப்புற நம்பிக்கைகள், நாட்டுப்புற வழக்கங்கள், விழாக்கள், நாட்டார் நடனங்கள், நாடகங்கள், சைகைகள், நாட்டுப்புற விளையாட்டுக்கள், நாட்டார் கட்டடக்கலை, கைவினைப்பொருட்கள், கலைகள், ஆடைகள், உணவு நடைமுறைகள் முதலான கேள்விப்புல மற்றும் பார்வைப்புல வழக்காற்று வகைமைகள் பலவும் இன்று வேகமாக வழக்கிழந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

நாட்டார் வழக்காற்று வகைமைக்குச் சவால்விடுகின்ற காரணிகளாகப் பலவற்றைச் சுட்ட முடியும். பொதுநிலையில் பார்க்கும்போது சமகால அரசியல், சமூகம், பொருளாதாரம், அறிவியல், விஞ்ஞானம் மற்றும் சமயம் முதலானவற்றில் ஏற்பட்டு வருகின்ற பல்வேறு விதமான வளர்ச்சிகள், மாற்றங்கள் முதலானவற்றை இதற்கான காரணிகளாகக் குறிப்பிடலாம். மேற்படி புலங்களில் ஏற்பட்டு வருகின்ற வளர்ச்சிகள், மாற்றங்கள் குறித்த இனத்தின் பண்பாட்டு வேர்களை, அந்த இனத்தின் தனித்துவங்களை மிகவும் பாதிப்பனவாக அமைந்து காணப்படுகின்றன. இவற்றை வருமாறு வகைப்படுத்தி நோக்கமுடியும்.

நாட்டார் வழக்காற்று வகைமைகளின் அழிவுக்கான காரணிகளைப் பிரதானமாக இரண்டு வகையாகப் பகுத்து நோக்கலாம். அவையாவன:

1. இயற்கை அழிவு
2. செயற்கை அழிவு

மேலே சுட்டி இரண்டு விதமான வகைப்பாடுகளுள்ளும் பல்வேறு காரணி களைச் சுட்ட முடிகிறது.

### 1.1 இயற்கை அனர்த்தங்கள்

வழக்காறுகள் இயற்கையாக அழிந்துபோதல் என்பன குறித்த விடயப்பரப்பில் நிலநடுக்கம், சூறாவளி, வெள்ளப்பெருக்கு, எரிமலை வெடிப்பு முதலானவை முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றுள் எரிமலை வெடிப்புப் போன்ற சிலவகையான இயற்கை அழிவுகள் எமது பௌதீக மற்றும் புவியியல் அமைப்புக் காரணமாக எமக்குத் தொடர்பில்லாதனவாக இருக்கலாம். ஆயினும் இவை தவிர்ந்த பிற அழிவுகளுக்கான சாத்தியப்பாடுகள் நிறையவே

உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். "சுனாமி" "Tsunami" என்ற கடல்கோள் தொடர்பான அனுபவத்தை நாம் நேரடியாக அனுபவித்த போது அது எமது சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் ஏற்படுத்திய தாக்கங்களையும் நாம் உணர்ந்துகொண்டோம். கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களிலே கடல்கோளைப் பார்த்திருந்தவர்களுக்கு சுனாமியால் வடக்குக் கிழக்கின் பாரம்பரியமான பூர்வீகக் கிராமங்கள் பலவும் அவற்றின் வழக்காறுகளுடன் கழுவப்பட்டுப் போனதைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது. செம்மலை, நாயாறு, முல்லைத்தீவு, பொக்கணை, மாத்தளன், தாளையடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நாகர்கோவில், செம்பியன்பற்று முதலான மீனவக் கிராமங்கள் பலவும் சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்டன. இப்பாதிப்பு அவர்களின் சுதேசியப் பண்பாட்டு அடையாளங்களையும் விட்டுவைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே இவ்வகையான எதிர்பாராத இயற்கை சார்ந்த அனர்த்தங்களினால் வழக்காறுகள் பலவும் அவற்றைப் படைப்போருடன் சேர்ந்து அழிந்துபோவது சாத்தியமாகிறது.

## 1.2 கையளிப்புக் குறைபாடு

நாட்டார் வழக்காற்று வகைமைகளின் இயற்கையான அழிவுக்கு எமது பாரம்பரியத்தின் கையளிப்புக் குறைபாடும் ஒரு காரணமாகும். வழக்காற்று வகைமைகள் தொடர்பான கையளிப்பை அல்லது பரிமாறலைத் தொடர்ந்துவரும் தலைமுறையினரிடம் கையளிக்க எம் முன்னோரில் பலரும் தவறிவிட்டனர். சோதிடம், மருத்துவம், கைவினைக்கலைகள் மற்றும் பல்வகைக் கலைப் பயில்வுகள் முதலானவை தொடர்பான தெளிவான தகவல்களை தமது சொந்தப் பிள்ளைகளுக்கே முழுமையாகக் கையளிப்பதை எம்முன்னோரில் பலரும் திட்டமிட்டுத் தவிர்த்திருந்தனர். முழுமையாகக் கற்றுக்கொடுத்தால் தமது தனித்துவம் இழக்கப்பட்டுவிடும் என்ற ஒரே காரணத்துக்காகப் பாரம்பரியமாகப் பேணிவந்த பல்வேறு விடயங்களை இவர்களில் பலர் தம்முடனேயே கொண்டு சென்றுவிட்டனர். முறையான பயிற்சியின்றி சோதிடம், மருத்துவம் தொடர்பான குறியீட்டு வாசகங்களை (Code word) விளங்கிக்கொள்ள முடியாது என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக தீப்புண்பட்ட ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய சிகிச்சைமுறை குறித்த குறியீட்டு வாசகத்தை இவ்விடத்தில் வகைமாதிரியாகத் தருதல் பொருத்தமாகும். வாசகம் வருமாறு-

"தாயைக் கொன்றான் சாறெடுத்து
தடவிக் கொண்டால் தீர்ந்திடுமே"

இவ் வரிகளில் வரும் 'தாயைக் கொன்றான்' என்ற சொற்றொடர் குறித்து நிற்கும் தாவரத்தின் வெளிப்படையான பெயர் என்ன என்பது சிக்கலான விடயமாக உள்ளது. மேற்படி சொற்றொடர் வாழைமரத்தையே சுட்டிநிற்கிறது. குலையீன்ற வாழை, ஈற்றில் தன்னையே இழந்து கொள்வது வழமையாகும். இப்படிப் பல்வேறு குறியீட்டு வாசகங்கள் பாரம்பரிய மருத்துவம் மற்றும் சோதிடம் முதலான வழக்காறுகளில் பயில்நிலையில் இன்றும் இருந்து வருகின்றன.

## 1.3 கையளிப்பு ஊடகக் குறைபாடு

வழக்காற்று வகைமைகளின் இயற்கையான அழிவுக்கு எமது பண்பாட்டில் முன்னர் பயில்நிலையில் இருந்த கையளிப்பு ஊடகங்களின் பலவீனமான தன்மைகளும் ஒரு வகைக் காரணம் எனலாம். குறிப்பாக எழுத்து நிலைப்பட்ட பதிவுகள் பலவற்றுக்கும் நாம் பனை ஓலையையே நெடுங்காலமாகப் பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பனையோலையிலேயே சோதிடம், மருத்துவம், வானியல், பிற அறிவியல் மற்றும் இலக்கியங்கள் தொடர்பான பல்வேறு விடயங்களும் பதிவுசெய்யப்பட்டன. குறைந்தது ஐம்பது வருடங்களே தாக்குப்பிடிக்கக்கூடிய இப் பனையோலைச் சுவடிகளைத் தொடர்ந்துவரும் சந்ததிகளுக்குக் கையளிப்பதில் பல்வேறு சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டன. நாம் பனையோலையைப் பயன்படுத்திய காலகட்டங்களில் உலகின் பிற பண்பாடுகள் பலவும் மரப்பட்டை, மிருகத்தோல், சுடுமண் கட்டிகள், கல் முதலான ஊடகங்களைப் பயன்படுத்தி வந்தமையை இவ்விடத்தில் சுட்டுதல் வேண்டும்.

## 1.4 வழக்காற்றைப் படைப்போரின் தாழ்வுணர்ச்சி

வழக்காற்றைப் படைப்போரிடத்துக் காணப்படுகின்ற தாழ்வுணர்ச்சி, ஈடுபாடின்மை, மறதி, குழப்பம், தொடர்ச்சியான பயில்வின்மை, பொருளாதாரச்சிக்கல்கள் முதலானவையும் இவ்விடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. நாட்டுப்புற மக்கள் பலரும் தம்மிடையேயுள்ள தனித்துவத்தை, வினைத்திறனை உணர்ந்தவர்களாகப் பலபோது இருப்பதில்லை. இன்றைய இளந்தலைமுறையினரிடத்தும் பல்வேறு வழக்காறுகளைப் படைப்பது குறித்த பயிற்சியின்மை பரவலாகக் காணப்படுகிறது. வகைமாதிரியாக,

1. பாய் பின்னுதல் (பல்வகைப்பாய்கள், தடுக்கு, பந்திப்பாய், களப்பாய், புற்பாய்)
2. சுளகு, பெட்டி முடைதல் (பல்வகைச்சுளகு, மூடல்பெட்டி, அடுக்குப்பெட்டி, நீற்றுப்பெட்டி, பனங்கட்டிக்குட்டான்...)
3. பனைமட்டை வரிச்சு
4. பனைஓலைப் பதப்படுத்துகை (ஓலைத்தெரிவு நுட்பம், பதப்படுத்துகை, வார்தல் நுட்பம், சாயமூட்டுதல், பனைஓலை வேய்தல்...)
5. பட்டை இழைத்தல் (துலாப்பட்டை, கைப்பட்டை, பீலிப்பட்டை) முதலான பொருள்சார் வழக்காறுகளைப் படைக்கும் திறன் அருகி வருகிறது. பன்னாட்டுக் கலாசாரப் பின்புலத்தில் நாட்டார் பண்ணை சார்ந்த உற்பத்திகளுக்கான தேவை (Demand) மற்றும் சந்தை வாய்ப்புக்கள் (Marketing Facilities) பெருகியுள்ள சூழலில் இவற்றைப் படைக்கக்கூடிய வினையாளர்களைத் தேடிப்பிடிப்பது கடினமாக உள்ளது. தமிழர்கள் செறிந்து வாழும் கொழும்பு முதலான பெருநகரங்களில் தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகள் தொடர்பான விளம்பரங்கள் வெகுகவர்ச்சியாகக் காட்சிப்படுத்தப்பட்டு வருவதை இவ்விடத்தில் குறிப்பிடலாம். குறிப்பாக கூழ் அதனுள் உள்ளடங்கியுள்ள பல்வேறு கடல்சார் உணவுகளின் பங்குகளுடனும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வழக்காற்று வகைமைகளைப் பாரம்பரியமாகப் பேணுவதை சிலர் தாழ்வுணர்வாகக் கருதுகின்றனர். தமது அடிமைச் சின்னமாக இவ்வழக்காற்று வகைமைகள் சிலவற்றை இவர்கள் பார்க்கின்றனர். ஆற்றுகைக் கலைகளை இவ்வாறான தாழ்வுணர்ச்சிக்கான பொருத்தமான எடுத்துக்காட்டுகளாகச் சுட்டமுடியும். பறைமேளம் அடித்தல், உடுக்கடித்தல், கூத்தாடுதல், கூத்துப் பழகுதல் முதலானவற்றைத் தொடர்ந்து செய்வதால் சமூக அதிகார அடுக்கமைவில் தமக்கான இடம் மேலும் பின்தள்ளப்படும் என்றே இவர்கள் பலரும் நம்புகின்றனர். கூத்தாடிகள், சின்னமேளம், ஆட்டக்காரிகள், நாடகக்காரர் முதலான பட்டப்பெயர்கள் (Nick Names) தாங்கிநிற்கும் சமூகப் பொருண்மைகளையும் இவ்விடத்தில் நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட வழக்காறுகளைப் பேணுதல், பின்பற்றுதல் என்பது தமது அடையாளத்தைத் தாமே மீண்டும் புதுப்பித்துக் கொள்வதாக இவர்களில் பலரும் கருதுவதால் பல்வேறு கலைகளும் தொடர்ச்சியான பயில்வு இன்றி இயற்கையாக அழிந்துபோகக் காரணமாகிறது. மிருதங்கத்தைப் பயில்வதில் காணப்படும் ஆர்வத்தை மத்தளத்தைப் பயில்வதிலோ அல்லது பறைமேளம் அல்லது தவிலைப் பழகுவதிலோ காணமுடியாது. சாஸ்திரிய நிலைப்பட்ட கருவிகளைப் பயில்வதில் சமூக அந்தஸ்தும் செல்வாக்குச் செலுத்துவதாகக் காணப்படுகிறது.

## 1.5 வழக்காற்றுப் பயில்வின் குறுகிய வட்டம்

தமிழர் பண்பாட்டிலுள்ள நாட்டுப்புறக்கலைகள் பலவும் துரதிஸ்டவசமாக சிலவகையான சாதிக்குழுக்களிடம் தலைமுறை தலைமுறையாக அடைக்கலம் கொண்டுள்ளமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகைப் பயில்வுக்கான வகைமாதிரியான எடுத்துக்காட்டாகக் காத்தான் கூத்தைக் குறிப்பிடமுடியும். கலைப்பயில்வையும் சமூக விடுதலையையும் சேர்த்து ஒன்றாக முடிச்சுப்போடும் முயற்சி இவ்வகைக் கலைகளின் அருந்தலுக்கு மேலும் உரமூட்டி வருகிறது.

## 1.6 நவீன உற்பத்திகளுடன் போட்டிபோட முடியாமை

பொருள்சார் நாட்டார் வழக்காற்று வகைமைகளைப் படைக்கும் பலரும் இன்று அவற்றைப் படைக்கும் முயற்சியை வேகமாகக் கைவிட்டு வருகின்றார்கள். நவீன தொழில்நுட்ப உத்திகளை உள்வாங்கி கவர்ச்சிகரமாகச் சந்தைகளில் உலாவிவரும் நவீன உற்பத்திகளுடன் பாரம்பரியமான தொழில்நுட்பங்களைத் தாங்கிவரும் நாட்டுப்புறப் பொருள்சார் உற்பத்தி வகைமைகளால் போட்டிபோட முடியாதிருக்கிறது. பிளாஸ்ரிக், இரும்பு, அலுமினியம் முதலான பலவகையான உலோகங்களிலான புழங்குபொருட்கள் பலவும் மரபுசார் புழங்கு பொருட்கள் பலவற்றுக்கும் சவாலாக உள்ளன. பிளாஸ்ரிக் கதிரை, பிளாஸ்ரிக் பாய், பிளாஸ்ரிக் வாளி, பிளாஸ்ரிக் சட்டிகள், பிளாஸ்ரிக் சுளகு, நவீன வர்ணக்குழம்புகள், நவீன உணவு வகைகள் கொக்கோகோலா, 'பெப்ஷி', கூஷபன்ரா: முதலான நவீன குளிர்பானங்கள் முதலானவற்றுடன் ஓலைப்பாயும், ஈர்க்குச் சுளகும் கோழிச் சாயமும், புழுக்கொடியல்மாவும் ஒடியல் மாவும், பனாட்டும், பழங்கஞ்சியும் போட்டி போடுவதென்பது சிக்கலான விடயமாகவேயுள்ளது.

## 2.0. செயற்கையான அழிவுகள்

செயற்கையாக நாட்டார் வழக்காற்று வகைமைகள் அழிந்துபோவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. அவற்றை வருமாறு பகுத்து நோக்கலாம்.

## 2.1. உற்பத்திச் செயற்பாடுகளில் நவீன கருவிகளின் வருகை.

நாட்டார் வழக்காற்று வகைமைகள் பலவும் நவீன கருவிகளின் வரவால் பெரிதும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றன. குறிப்பாக விவசாயம், மீன்பிடி, கைவினைத்தொழில் முதலான செயற்பாடுகளில் ஆரம்பகாலங்களில் நவீன கருவிகளைப் பயன்படுத்துவதென்பது அருந்தலாகவே காணப்பட்டது. ஆண்களும் பெண்களுமாகப் பலருங்கூடி இவ்வேலைகளைச் செய்து வந்தார்கள். இவ்வகையான உற்பத்தி முயற்சிகளின் போது பாரம்பரியத் தொழில் நுட்பத்துடனான கருவிகளின் பயன்பாடும் மற்றும் அக்கருவிகளின் உற்பத்தியும் அதிகரித்திருந்தது. அத்துடன் வாய்மொழி சார்ந்த கலை வடிவங்களுக்கான பயில்நிலைச் சாத்தியமும் பாரம்பரியத் தொழில்முயற்சிகளில் அதிகமாகவே இருந்தது.

வயற்களங்களில் வேலை செய்யும் போது ஆண்கள் பாடும் பாட்டுக்குப் பெண்கள் எதிர்ப்பாட்டுப் பாடுதலும் பழமொழி சொல்லுதலும் விடுகதை போடுவதும் என வயற்களமே கலகலத்திருந்தது. பலர்சேர்ந்து தோணியைக் கடலினுள் பாய்ச்சும் போதும் அதனை மீண்டும் கரையேற்றும் போதும், வலையிழுக்கும் போதும் ஏலேலோப் பாட்டுக்களைப் பாடினர். இத்தகைய தொழில் சார்ந்த சூழ்நிலைகள் வாய்மொழிக் கலைகளின் செழிப்பான இருப்புக்கு வாய்ப்பாக அமைந்திருந்தன.

புராண இதிகாசக் கதைகளையும் நாட்டுப்புறக் கதைகளையும் கேட்டுக் கொண்டு சுருட்டுச் சுற்றவும் பிற கைவினைக் கலைகளை இயற்றவும் முடிந்த சூழலை இன்றைய 'F.M' வானொலி முற்றாகத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளது.

வயல் வேலைகளில் நீர்ப்பம்பிகளும் (Water Pump), உழவு இயந்திரங்களும் (Tractor) முழுமையாக ஈடுபடுத்தப்படுகின்றன. இவற்றின் பல்முனைப் பயன்பாடு (Multiple Use) மனித வளத்தின் பயன்பாட்டினைக் கணிசமாகக் குறைத்துள்ளது. நீரிறைத்தல், அருவி வெட்டுதல், சூடடித்தல், விளைபொருட்களை வீட்டுக்குக் கொண்டு வருதல் என அனைத்து வேலைகளையும் மேற்படி இயந்திரங்களே செய்துவிடுகின்றன. பலர் சேர்ந்து வலையை இழுக்கின்ற முயற்சியை விசைப்படகின் இயந்திரம் ஒன்றே சாதித்து விடுகிறது. இத்தகு நவீன முயற்சிகள் இத் தொழில்களுடன் சேர்ந்து வளர்த்தெடுக்கப்பட்ட கலைகள் பலவற்றையும் இல்லாது ஒழித்துவிடுகின்றன. பொருளாதார அடிக்கட்டுமாணங்களில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான நவீனமயப்படுத்தல்கள் சுதேசியப் பொருளாதாரக் கட்டமைப்புக்களோடு சேர்த்து வளர்த்தெடுக்கப்பட்ட கலைகளை மிகவும் நலிவடையச் செய்கின்றன எனலாம்.

## 2.2. புலம்பெயர்வு

நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் பாரம்பரியத் தொழில்களைப் புரிவதில் உள்ள அச்சுறுத்தல் மற்றும் பொருளாதார நலக்குறைவு முதலியன காரணமாகப் பண்பாட்டு மற்றும் தொழில்வினையாளர் பலரும் வேகமாகத் தமது பூர்வீகக் கிராமங்களை விட்டுப் புலம்பெயர்ந்து வருகிறார்கள். வழக்காறுகளை அடுத்த தலைமுறையினர்க்குக் கொண்டுசெல்ல வேண்டிய இளம் தலைமுறையினர் பலரும் பெருவாரியாகப் பிறநாடுகளில் நிரந்தரமாக தங்கிவிடுவதும் இவ்வகையிலான வழக்காறுகளின் வழக்கிழப்புக்கு காரணமாகி விடுகிறது.

கொழும்பு, மத்திய கிழக்கு நாடுகள், மேற்கு ஐரோப்பிய நாடுகள் முதலாக இவர்களின் புலப்பெயர்வு அமைந்து காணப்படுகிறது. உயிர்ப் பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு முதலானவற்றை மட்டும் முன்னிறுத்தாது சமூக அந்தஸ்தையும் முன்னிறுத்தி இத்தகைய புலப்பெயர்வுகள் நடைபெற்று வருகின்றன. இதனால் பன்னாட்டு கலாசாரங்களும் தமிழர் பண்பாட்டில் ஊடுருவ வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளமையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

## 2.3. சமயம்

வழக்காற்று வகைமைகள் பலவற்றின் வழக்கிழப்புக்குச் சமயமும் ஒருவகைக் காரணம் எனலாம். சமயம் என்னும்போது பிறமத ஊடாட்டம், சமஸ்கிருத மயப்பாடு, வழிபாட்டு மரபுகள் மீதான மாறுதல்கள் முதலானவற்றைக் குவிமையப்படுத்த முடியும்.

சைவசமயத்தை மையப்படுத்திய தமிழ் நாட்டார் வழக்காற்று வகைமைகளில் அதிகம் பாதிப்பை உண்டுபண்ணிய மதம் கிறிஸ்தவ மதம் எனலாம். கல்வி, தொழில் வாய்ப்பு, பொருளாதார நலன்கள், சமூக அந்தஸ்து முதலான காரணிகளை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் கிறிஸ்தவ மதமாற்ற முயற்சிகள் சுதேசிய பண்பாட்டு வழக்காற்று வகைமைகளில் பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. "கவர்ச்சிகரமான இழுப்புகளுக்கு" ஆட்பட்டுச் செல்லும் மக்களில் பலரும் புதிய மத அனுட்டான நடைமுறைகளுக்குப் பழக்கப்படுத்தப்படும்போது தலைமுறை தலைமுறையாகப் பேணிவந்த மதநம்பிக்கைகள், அது தொடர்பான வழக்கங்கள், வழிபாட்டு மரபுகள், கலைகள் மற்றும் சடங்குகள் முதலானவற்றை மறுதலித்தே செல்கிறார்கள். இதனால் மேற்படி மரபுகளுடன் இயைந்து வளர்த்தெடுக்கப்பட்ட வழக்காறுகள் கைவிடப்படுகின்றன அல்லது மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன எனலாம். காத்தான்கூத்து, கோவலன் கூத்து, உடுக்கடிப் பாடல், கரகம், காவடி முதலான ஆற்றுகைக் கலைகள் பலவும் சைவசமயச் சூழலைச் சார்ந்தே பயிலப்பட்டு வருகின்றன. சுதேசிய மக்கள் கிறிஸ்தவத்துக்கு மாறியதன் பின்னர் இவ்வழக்காறுகள் பலவும் கைவிடப்பட்டுள்ளன. தவிர பாரம்பரியக் கலைவடிவங்களின் உள்ளீடுகளில் கிறிஸ்தவ மதம் தொடர்பான விடயங்கள் புகுத்தப்பட்டும் பயிலப்பட்டும் வருவதனையும் பார்க்கமுடிகிறது. தவிர மதம் மாறுகின்றபோது ஏலவே கைக்கொண்டிருந்த மதம் தொடர்பான

நம்பிக்கைகள், ஆசாரங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், வழிபாட்டு மரபுகள் முதலானவை கேள்விக் குறியாகின்றன. சமஸ்கிருத மயப்பாடும் நாட்டார் வழக்காற்று வகைமைகளின் வழக்கிழப்புக்கு ஒருவகைக் காரணமாக இருந்து வருகிறது. நாட்டுப்புற வழிபாட்டில் இருந்த சிறு தெய்வக் கோவில்களில் பலவும் இன்று வேகமாக சமஸ்கிருத மயப்படுத்தப்பட்டு வருவதனைப் பார்க்க முடிகிறது. 'விளக்கு வைத்து' வழிபாட்டிலிருந்த சிறு தெய்வக் கோவில்கள் ஆகம நிலைப்படுத்தப்பட்டபோது அதுவரையும் அத்தெய்வங்கள் தொடர்பாக நடைபெற்றுவந்த வழிபாட்டு மரபுகள், நம்பிக்கைகள், சடங்குகள் முதலானவை உள்ளிட்ட பல்வேறு மரபுகளும் மாற்றம் பெறுகின்றன அல்லது வழக்கிழக்கின்றன எனலாம். உயர் மரபுக்குள் நாட்டுப்புறத் தெய்வங்கள் கொண்டுவரப்படும் போது அடியவனுக்கும் ஆண்டவனுக்குமான இடைவெளி அதிகரிக்கின்றது. நாட்டுப்புற நிலையில் பல்வேறு விதமான சடங்குகள் மற்றும் வழிபாட்டு மரபுகளூடாகத் தெய்வங்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டிருந்த பூசாரியும் நாட்டுப்புற மக்களும் அவ்வகையான தொடர்புகளுக்கு 'பிராமணன்' என்ற ஊடகத் தொடர்பாளரை (Mediator) தொடர்புகொள்ள வேண்டிய தேவை வருகிறது.

அண்ணமார், பிடாரி, காளி, முனி, வைரவர், விறுமன், ஐயன், கண்ணகி முதலான கிராமியத் தெய்வங்கள் சமஸ்கிருத மயப்பாட்டில் பிள்ளையார், முத்துமாரி, முனீஸ்வரன், ஞானவைரவர், இராஜராஜேஸ்வரி முதலான புதிய பெயர்களைப் பெறுவதுடன் நாட்டுப்புற மரபில் வந்த குளிர்த்தி, பொங்கல், கூத்துப்போடுதல், மடைபரவல் (மாமிசம் உட்பட) விளக்கு வைத்தல், பலியிடல் முதலியனவும் மாற்றம் பெறலாயின. இவ்வாறான மாறுதல்கள் அனைத்தும் இவ் வழிபாட்டு மரபுகளைச் சார்ந்து வளர்த்தெடுக்கப்பட்ட கலை மரபுகளைப் பெரிதும் பாதிப்பனவாகக் காணப்படுகின்றன. ஆகம நிலைப்பட்ட வழிபாட்டு மரபில் நாட்டுப்புற வழக்காற்று வகைமைகள் பலவும் கைவிடப்பட்டுள்ளதனையும் பார்க்க முடிகிறது.

## 2.4. சாஸ்திரிய நிலைப்பட்ட கலைகளின் செல்வாக்கு

தமிழ் மக்களிடையே செந்நெறி மரபு அல்லது பெரும்பாரம்பரிய மரபு சார்ந்த கலைப்பயில்வு தொடர்பான ஈடுபாடு அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்வதனைப் பார்க்க முடிகிறது. தங்கள் பிள்ளைகளுக்குப் பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், வீணை, மிருதங்கம் முதலானவற்றுள் ஒன்றையாவது பயிற்றுவிக்க இம்மக்களில் பலரும் விரும்புகின்றார்கள். உயர்கல்வித் தகைமை யுடன் சாஸ்திரிய நிலைப்பட்ட இக்கலைகளுள் ஒன்றிலாவது தம்பிள்ளைகள் ஆட்சி பெற்றிருப்பதை சமூக அந்தஸ்தின் (Social Status) குறியீடாகவும் இம் மக்களில் பலரும் பார்க்கிறார்கள். மேற்படி நிலைப்பாடானது நாட்டார் மரபு சார்ந்த கலைப் பயில்வுகளுக்கான சாத்தியப்பாட்டை நிராகரிப்பதாக உள்ளது. குறிப்பாக நாட்டுப்புற நடனங்களான கும்மி, கோலாட்டம், கரகம், காவடி முதலான ஆற்றுகைக் கலைகளை பயிலப் பலரும் முன்வருவதில்லை. இக்கலை வடிவங்களைப் பயிற்றுவிக்கக்கூடிய வளவாளர்களும் போதியளவில்

எம்மிடம் இல்லை. கல்வித் திணைக்களத்தினர் 'தமிழ்த்தின விழா' முதலான நிகழ்வுகளில் இவ்வாறான நாட்டுப்புற நிகழ்வுகளைக் கட்டாயமாக இடம்பெறச் செய்கிறார்கள். தவிர, தைப்பொங்கல், வருடப்பிறப்பு முதலான பண்டிகை நாட்களில் ஆர்வலர்களில் சிலர் இவற்றை நிகழ்த்துகிறார்கள். இவ்வாறான முயற்சிகள் நாட்டார் வழக்காற்று வகைமைகளின் அழிவைத் தடுத்து நிறுத்தப் போதுமானவை அல்ல என்பதனையும் குறிப்பிடல் வேண்டும்.

நாட்டார் வழக்காற்று வகைமைகளை அவை ஆற்றுகை செய்யப்படுகின்ற இயல்பான சூழலிலிருந்து விடுவித்து நவீன படச்சட்ட மேடைகளிலும், பிற இடங்களிலும் அளிக்கை செய்யப்படும்போது அவற்றின் உயிர்த்துடிப்பு மற்றும் தனித்துவம் முதலியன பெரும்பாலும் இழக்கப்படுகின்றன என்றே சொல்லலாம்.

இயல்பாகத் தோன்றுகின்ற சூழலில் படைக்கப்படுகின்ற இவ்வழக்காறுகளை ஆய்வுக்காகவும் பிறரை மகிழ்விக்கவும் இன்னும் பலவற்றுக்காகவும் மேடையேற்றுகின்றபோது இவ்வழக்காற்று வடிவங்களினூடே புலப்படுகின்ற பண்பாட்டு அடையாளங்களைத் தரிசிக்க முடியாது போய்விடுகின்றது.

## 2.5. பாடவிதானம்

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் நடைமுறையிலிருக்கும் கல்விக்கொள்கை மற்றும் பாடவிதானங்களில் குறித்த பிரதேசத்து மக்களின் சுதேசியப் பண்பாடு சார்ந்த வழக்காற்று வகைமைகளுக்கு முக்கியத்துவம் தரப்படாமை இவ்விடத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்றாகும். தன்னாட்சி அதிகாரம் கொண்ட இப்பிரதேசங்களின் பல்கலைக்கழகங்கள் கூட தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களைப் பேணித் தக்க வைத்துக் கொள்ளக்கூடிய இவ்வழக்காறுகள் தொடர்பான பயில்வைப் பெரிதும் முனைப்புறுத்தவில்லை என்றே சொல்லலாம்.

நாட்டார் வழக்காறுகள் (Folklore) தொடர்பான கற்கைகளுக்கென தனித்துறை எதுவும் இப்பிரதேசத்து பல்கலைக்கழகங்களில் இல்லை என்பதனையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்கள் சார்ந்த கல்விக் கொள்கைகளில் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் குறிப்பாக உலகவங்கி முதலானவை பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. சந்தைக்கேற்ற கல்வி: என்ற கொள்கையில் பெரும்பாலும் பொருளாதார நலன்களே முன்னிறுத்தப்படுகின்றன. குறிப்பாகச் சொல்வதானால் முதலாளித்துவத்தின் பொருளாதார இலக்கைத் திருப்திப்படுத்துவதாகவே இக்கல்விக் கொள்கைகள் அமைந்துள்ளன. நடைமுறையில் இருக்கும் கல்விக்கொள்கைகள் உயர், சமூக கலாசார விழுமியங்களை உயர்வாகச் சித்திரிப்பனவாக அமைந்துள்ளதனால் இவ்வாறான ஒரு சூழலில் கல்வி பயிலுகின்ற மாணவன் ஒருவன் தன்னுடைய சுய அடையாளங் களை இழப்பதற்கான வாய்ப்புக்களே அதிகமாக உள்ளன எனலாம்.

## 2.6. புலமைச் சிரத்தை ஈடுபாடு

நாட்டுப்புறவியல் அறிஞர்களது புலமைச் சிரத்தையானது பெரும்பாலும் வாய்மொழி வழக்காற்று வடிவங்கள் மீது குவிந்துள்ளதனை அவதானிக்க முடிகிறது. நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், விடுகதைகள், பழமொழிகள் முதலான வழக்காறுகள் மீதான ஆய்வுகள் மற்றும் தொகுப்பு முயற்சிகளே அதிகமாக நடைபெற்றுள்ளதனை அவதானிக்க முடிகிறது. அத்துடன் இத்துறை சார்ந்த ஆய்வுகளில் கூட ஆய்வு முறையியலைப் பெருமளவில் பார்க்கமுடியவில்லை. நாட்டார் வழக்காற்று வகைமைகளை அவற்றின் சூழமைவுகளுடன் பொருத்திப் பார்த்து முடிவுக்கு வருவதான ஆய்வுகள் இன்னும் முனைப்புப் பெறவில்லை என்றே சொல்லலாம். இத்துறை சார்ந்த நவீன அணுகுமுறைகள் மற்றும் ஆய்வியல் நுட்பங்களைப் பயின்று இது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்படும்போது இவ் வழக்காற்று வகைமைகளின் புலமை முக்கியத்துவம் தெரியவரும். பொருள்சார் மற்றும் வழக்கங்கள் சார்ந்த வழக்காறுகள் மீதான ஆய்வுகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

## 2.7. திறந்த பொருளாதாரக் கொள்கை மற்றும் உலகமயமாதல்

திறந்த பொருளாதாரக் கொள்கை மற்றும் உலகமயமாதல் என்பன காரணமாக சுதேசிய இனங்கள் பலவும் தமது தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களை இழந்து வருகின்றன. அனைவருக்குமான ஒரே வகையான பண்பாடு, பன்னாட்டுப்பண்பாடு ஆகியனவற்றை நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்படி காரணிகள் செயற்படுத்தி வருகின்றன.

ஒற்றைப் பண்பாடு குறித்த திணிப்புக்கு நாட்டார் வழக்காற்று வகைமைகள் குறிப்பாக நாட்டார் கலை இலக்கிய மரபுகள் பெரிதும் பயன்பட்டு வந்தாலும் அவை வெறும் விற்பனை உத்திகளாக மட்டுமே நிலைநிறுத்தப்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக எமது பொருளாதாரம் பெரிதும் இறக்குமதிகளிலேயே தங்கியுள்ளதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதனால் சுதேசியப் பண்பாடு சார்ந்து வருகின்ற தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்திகளுக்கான வாய்ப்புக்கள் பெரிதும் பாதிப்படைகின்றன. இத்தன்மை காரணமாக இத்துறை சார்ந்து வளர்த்தெடுக்கப்படும் வழக்காற்று வகைமைகள் பலவும் வழக்கிழந்து வருகின்றன. விவசாயம், கடல்வேளாண்மை, சிறுகைத்தொழில் மற்றும் கைவினைசார்ந்த தொழில்கள் பலவற்றிலும் இத்தகைய பாதிப்புக்களை இனங்காண முடிகிறது. வகைமாதிரியாக மாடுகளின் உதவிகொண்டு நீர் இறைக்கும் சூத்திரக் கிணறுகளையோ, மரப்பலகைகளைக் கொண்டு கட்டப்படும் வத்தைகள், கட்டுமரங்கள், தோணிகள் முதலானவற்றையோ அவற்றைப் பராமரிக்கும் மரபுசார்ந்த தொழில்நுட்பங்களையோ இன்று பெருமளவில் பார்க்க முடியாதிருக்கிறது. இடியப்ப உரல், பல்வகை அச்சு உரல்கள், உரல்கள், திருகுவலை, புட்டுக்குழல் முதலான பல்வகைப் புழங்கு பொருட்களும்

திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக இன்று அலுமினியம், சில்வர், இரும்பு முதலான உலோகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு சந்தைக்கு வந்துள்ளன. இந்நிலைமையானது இதுதொடர்பான வினையாளர்களைப் பெரிதும் பாதிப்பதாக அமைந்துள்ளது.

## 2.8. பழைமை போற்றாத பண்பு

பழைமை போற்றாத பண்பு இன்று அதிகமாகி விட்டது. நவநாகரிகத்தின் மீதான நாட்டம் இன்று அனைத்துத் துறைகளையும் பாதித்துள்ளது. இதற்கு நாட்டார் வழக்காற்றியலும் விதிவிலக்கல்ல. இருந்தாலும் இத்தகைய போக்கினால் பிற துறைகளைவிட நாட்டார் வழக்காற்றியலே அதிகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது எனலாம்.

## முடிவுரை

தமிழர்களுடைய பண்பாட்டு அடையாளங்களை மீட்டுருவாக்கம் செய்யக்கூடிய வழக்காற்று வகைமைகள் பலவும் இன்று வேகமாக வழக்கிழந்து வருகின்றன. இவற்றை உயிர்த்துடிப்புடன் அவற்றின் தனித்துவமான அடையாளங்களோடு பேணிப் பாதுகாப்பது நம் கடமையாகும்.

இயற்கை சார்ந்த அழிவுகளைக் கட்டுப்படுத்துவதில் மனித முயற்சியின் பங்கு குறிப்பிட்டுச் சொல்லும்படியாக அமையப் போவதில்லை. ஆயினும் செயற்கையான காரணங்களினால் இவ்வழக்காறுகள் அழிந்து போகாமல் பாதுகாக்கப் பலவற்றை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

தமிழர்களுக்கான கல்விக் கொள்கையில் நாட்டார் வழக்காற்றியல் முக்கியத்துவம் பெறவேண்டும். பல்கலைக்கழக புத்திஜீவிகளும் பாடசாலைச் சமூகத்தினரும் தமிழ் அரசியல்வாதிகளும் எனப் பலரும் இணைந்து இதனைச் சாதிக்க முனையவேண்டும். இத்துறை சார்ந்த உலகளாவிய நிலையில் ஏற்பட்டுவரும் நவீன கோட்பாடுகள் மற்றும் ஆய்வு முறைமைகளை எமது புலமையாளருக்கும் எட்டும்படி செய்யவேண்டும்.

அழிந்துவரும் நாட்டார் வழக்காற்று வகைமைகள் தொடர்பான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதற்காக இது தொடர்பான அரும்பொருளகம் உடனடியாக நிறுவப்பட வேண்டும். பொருள்சார் வழக்காற்று வகைமைகள் பலவும் இந்த அரும்பொருளகத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். தமிழர்களது அரும்பொருட்களைப் பேணிப்பாதுகாப்பதற்கான சட்டவலு அல்லது அரசியல் ஆதரவு இத்துறைசார்ந்து ஈர்க்கப்படவேண்டும்.

வழக்காற்று வகைமைகளைப் படைப்போர்களது சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களை கண்டறிய வேண்டும். கூடவே இவ்வாறான பண்பாட்டு வினையாளர்களது ஒழுக்கங்களையும் சீர்ப்படுத்துவதற்கும் ஆவன செய்யவேண்டும். நாட்டார் கலைமரபுகளை குறித்த ஒரு வட்டத்தினருக்கு மட்டும் ஆற்றுகை செய்யாமல் பிற மக்களும், பிற இனத்தவரும்,

பிற நாட்டினரும் இக்கலை மரபுகளில் தனித்துவங்களோடு அவற்றைத் தரிசிப்பதற்கான வாய்ப்புக்களைக் கண்டறிய வேண்டும். இத்துறை சார்ந்த கலைஞர்களது வரலாறுகள் மற்றும் மேதைமைகள் குறித்த பதிவுகள் மற்றும் ஆய்வுகள் இத்துறை சார்ந்த ஆய்வாளர்களால் முன்னெடுக்கப்படவேண்டும்.

**பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்**
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## துணைநின்ற நூல்கள்

1. விசாகரூபன்.கி, 2003, நாட்டார் வழக்காற்றியல் - ஓர் அறிமுகம், மலர் பதிப்பகம், கந்தர்மடம்.
2. சிவத்தம்பி.கா.(ப.ஆ) 1980, இலங்கைத்தமிழ் நாட்டார் வழக்காற்றியல், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
3. சிவசுப்பிரமணியம்.ஆ, 1999, மந்திரமும் சடங்குகளும், மக்கள் வெளியீடு, சென்னை.
4. சுந்தரம்பிள்ளை.சே, 1990, ஈழத்து இசை நாடக வரலாறு, யாழ் இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.
5. சுப்பிரமணியன்.ச.வே, 1971, தமிழில் விடுகதைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
6. பக்தவச்சலபாரதி.சி, 1999, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
7. பக்தவச்சலபாரதி.சி, 2002, தமிழர் மானிடவியல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.
8. பாலசுந்தரம்.இ, 1979, ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வும் மதிப்பீடும், தமிழ்ப்பதிப்பகம், சென்னை.
9. பெருமாள்.ஏ.என், 2003, தமிழக நாட்டுப்புறக் கலைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
10. லூர்து.தே, 1997, நாட்டார் வழக்காற்றியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
11. லூர்து.தே, 1997, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.
12. Dundes Alan, 1980, Interpreting Folklore, Bloomington, Indiana University Press.
13. Don Yoder, 1972, Folklore and Folklife – An Introdution. The University of Chicago, U.S.A.
14. Bhagwat Durga, An Outline of Indian Folklore, Popular Prakashan, Bombay 1958.
15. Laksmanan Chettiar S.M.L, Folklore of Tamilnadu, National Book Trust New Delhi, 1973.
16. Van Gennep Arnold, The Rites of Passage, Routledge and Keganpall Limited, London, 1960,
17. Shanmgampillai and Erica A.E, Folk Beliefs of the Tamils, Mathuclaus Pathippakam, Madurai, 1987.



ஊடகங்களிலும்

ஹன்சார்ட்டிலும் பிரசுரமான

# உதயநாயகனின்

நாடாளுமன்ற உரைகளும் பேட்டிகளும்

# போரின் முடிவே பிரச்சினைகளுக்கான தீர்வென நினையாதீர்கள் தமிழரின் இறைமையும் சுதந்திரமும் பாதுகாக்கப்பட்டால் மட்டுமே தீர்வு

**நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் நாடாளுமன்ற கன்னி உரை**

எதிர்பாராத விதமாக இந்நாட்டின் ஏழு மாவட்டங்களிலும் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக உயிரிழப்புகள், சொத்திழப்புகள், இடம்பெயர்வுகள் உட்பட பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கும் ஏறக்குறைய இரண்டு லட்சம் மக்களுக்கு எனது மனப்பூர்வமான அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்கள் இயல்புவாழ்வுக்கு வெகுவிரைவில் திரும்பவேண்டும் எனப் பிரார்த்தித்துக்கொண்டு எனது கன்னி உரையை ஆரம்பிக்கின்றேன்.

தென்னிலிங்கை மக்கள் முகங்கொடுக்கும் அவலங்களுக்காக மனம் நெகிழும் நான் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு எமது மக்கள் அனுபவித்த அவலங்களையும் இன்றுவரை அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் இங்கு நினைவு கூறாமல் இருக்கமுடியாது. கடந்த வருடம் இதே காலப்பகுதியில் நாற்பதி னாயிரத்துக்கும் மேற்பட்ட எமது மக்கள் கொல்லப் பட்டனர். ஆயிரக்கணக்கானோர் ஊனமுற்றவர் களாக்கப்பட்டனர். ஏராளமானோர் காணாமற் போயினர். பலகோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இறுதியில் சுமார் 4 லட்சம் மக்கள் ஏதிலிகளாக்கப்பட்டனர்.

அதேவேளையில் பல ஆயிரம் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இப்போரில் தங்கள் உயிர்களை அர்ப்பணித்த படை வீரர்களுக்காக வெற்றி வாரம் கொண்டாடி அவர்களை நினைவு

கொள்கின்றீர்கள். 18ஆம் திகதியன்று விளக்கேற்றி அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறீர்கள். நாட்டுக்காக உயிரிழந்தவர்களைப் போற்றுவது ஒரு முக்கியமான தேசிய கடமையாகும். அதே அஞ்சலியில் நாமும் எம்மை மனப்பூர்வமாக இணைத்துக் கொள்கிறோம்.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் நாம் எமது மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமையை இழந்துள்ளோம். எமது மக்கள் உயிரிழந்து புதைக்கப்பட்டும் புதைக்கப்படாமலும் சடலங்களாகக் கைவிடப்பட்ட முள்ளிவாய்க்கால் இன்றும் தடை செய்யப்பட்ட பிரதேசம். நாம் அங்கு சென்று அஞ்சலி செலுத்தமுடியாது. அது மட்டுமன்றி எமது மக்களின் உரிமைகளுக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்த எமது இளைஞர்களின் கல்லறைகள் இடித்து நொருக்கப்பட்டுவிட்டன. அவை இருந்த பிரதேசங்கள் முள்வேலியிடப்பட்டு தடுக்கப்பட்டுவிட்டன. அதாவது எமது மக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மலர் தூவி விளக்கேற்றி அஞ்சலிக்கும் உரிமை மறுக்கப்பட்டுவிட்டது.

இத்தகைய எமது உணர்வுகளை மதிக்காத கொடூரமான பாரபட்ச நடவடிக்கைகள் இந்நாட்டில் நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவர உதவுமா? தமிழ் மக்கள் தாங்கள் அடக்கி ஒடுக்கப்படவில்லை என்ற உணர்வை ஏற்படுத்த உதவுமா? இந்நாட்டின் சுபீட்சத்தை நோக்கிய பயணத்தில் எம் இரு தேசிய இனங்களும் கரம் கோர்த்து நடைபயில துணைநிற்குமா?

கௌரவ உறுப்பினர்களே!

இக்கேள்விகளைத் தங்களின் மேலான சிந்தனைக்கு விட்டு விடுகின்றேன். நாங்களும் உங்களைப் போன்று சகல உரிமைகளும் பெற்ற மக்களாக, இந்தத் தேசத்தைக் கட்டி எழுப்பும் பணியில் இணைந்து கொள்ளும் எங்கள் அபிலாசையை நியாயபூர்வமாகவும் திறந்த மனதுடனும் பரிசீலிப்பீர்கள் என நம்புகிறேன்.

நியாயபூர்வமான நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டும் என்று விரும்பினார் பண்டாரநாயக்க.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இலங்கைச் சட்டசபையில் சிங்களம் மட்டுமே அரச கருமமொழியாக இருக்கவேண்டும் எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது தமிழும் சிங்களமும் ஆட்சிமொழிகளாக இருக்கவேண்டும் எனத் திருத்தம் கொண்டுவந்தவர் மறைந்த முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க. அதுமட்டுமன்றி இலங்கைக்குச் சமஷ்டி ஆட்சி வேண்டும் என அங்கு வாதிட்டவரும் அவரே. சந்தர்ப்பவசத்தால் அவர் 1956இல் தனிச்சிங்களச் சட்டத்தைப் நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றியபோதும் தமிழ் மக்களின் எதிர்ப்புக் குரலுக்கு மதிப்பளித்து பண்டா - செல்வா ஒப்பந்தத்தை உருவாக்கினார். துரதிர்ஷ்டவசமாக இனவாதிகள் கொடுத்த நெருக்கடிகள் காரணமாக அவரே அதைக் கிழித்தெறிய நிர்ப்பந்திக்கப்பட்டார். பண்டா - செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் இந்த நாடு சந்தித்து விட்ட பேரவலங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் நிகழாமல் போயிருக்கும். இந்தச் சின்னஞ்சிறு தீவு இப்படியான ஒரு கொடிய பெரும் போரைச் சந்திக்கவேண்டிய தேவை எழுந்திருக்காது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பண்டாரநாயக்கவால் தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் போனாலும், தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான, நிரந்தரமான ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்பதை அவர் மனப்பூர்வமாக விரும்பினார் என்பது வரலாற்றில் மறுக்க முடியாத ஓர் உண்மையாகும்.

நியாயமான தீர்வு இன்றைய தேவை

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தது உட்பட அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தோளோடு தோள் நின்று செயற்பட்டவர் ஜனாதிபதியின் தந்தையார் அமரர் டி.ஏ.ராஜபக்ஷ என்பதை இங்கு தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அமரர்களான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, ராஜபக்ஷ ஆகியோரின் அரசியல் பாரம்பரியத்தின் வழிவந்த நீங்களும் உங்கள் சகோதரர்களும் ஜனாதிபதியாகவும், பொருளாதார அமைச்சராகவும், பாதுகாப்புச் செயலராகவும், சபாநாயகராகவும் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய அதிகார பீடங்களில் வீற்றிருக்கிறீர்கள். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களின் பாரம்பரிய நிலப்பிரதேசம் அங்கீகரிக்கப்பட்டு, நியாயமான உரிமைகள் வழங்கப்பட்டு, ஒரு நிரந்தரமான ஐக்கியப்பட்ட ஒரு சமாதானத்தை உருவாக்கி தேசத்தை வளங்கொழிக்கும் பூமியாக மாற்றும் உரிமையும், கடமையும் வேறு எவரையும் விடத் தங்களுக்கு அதிகமாகவே உள்ளது. அத்தகைய ஓர் அரிய வாய்ப்பைச் சரியான முறையில் தாங்கள் பயன்படுத்தவேண்டும் என்பதே எமது பெருவிருப்பமாகும்.

இதுவே கௌரவ ஜனாதிபதி அவர்களும் இச்சபையின் உறுப்பினர்களும் அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்களுக்கும் தங்கள் தந்தையாருக்கும் ஆற்றும் மிகப் பெரும் கடமையாகும். மீண்டும் மீண்டும் பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்படும் இனவாத ஒடுக்குமுறைகளும், பாரபட்ச நடவடிக்கைகளும் தமிழ் மக்களை இரண்டாம்தரப் பிரஜைகளாகக் கருதும் மனப்பாங்கும் இந்தப் புனிதமான கடமையைப் பாழடித்துவிடும் என்பதைத் தாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

தமிழர்களின் ஒப்புதல் இன்றி நிறைவேற்றப்பட்ட அரசமைப்புகள்

இன்றைய அரசமைப்பு எமது நாட்டுக்குப் பொருத்தமான முறையில் மாற்றப்படவேண்டும் என்ற கருத்து இன்று மேலோங்கியுள்ளது. நாமும் இக்கருத்துடன் உடன்படுகிறோம். 1972ஆம் ஆண்டிலும் 1978ஆம் ஆண்டிலும் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புகள் தமிழ் மக்களின் ஒப்புதல் இன்றியே நிறைவேற்றப்பட்டவையாகும். உலகமயமாக்கல் என்ற வலைப்பின்னலுக்குள் வல்லரசுகளுக்கு இடையே நிலவும் ஆதிக்கப்போட்டியின் மத்தியிலும் பிராந்திய வல்லரசின் மேலாதிக்க நோக்கங்களுக்கு இடையிலும் நாம் எமது இறைமையையும் தனித்துவத்தையும் பேணி நிமிர்ந்து நிற்கும் வகையில் எமது அரசமைப்பு இருக்க வேண்டியது அவசியமாகும். சிங்கள மக்கள் தமது தனித்துவத்தையும் இறைமையையும் பேணும் வகையிலும் தமிழ்

மக்களும் இறைமையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் வகையிலும் ஒரு அரசமைப்பு அமையும் போதே நாம் ஐக்கியப்பட்ட மக்களாக எமது தேசத்தின் தனித்துவத்தையும் இறைமையையும் நிலைநிறுத்துவது சாத்தியமாகும். மீண்டும் மீண்டும் தேசிய இனப்பிரச்சினையைக் காரணம் காட்டி அந்நிய தேசங்கள் எமது நாட்டிற்குள் தலையிடுவதைத் தவிர்க்க முடியும். எனவே புதிய அரசமைப்பு இவ் விளக்கங்களைக் கருத்தில் எடுத்து வரையப்படும்போது தமிழ் மக்களின் சார்பில் எமது ஒத்துழைப்பு நிச்சயம் வழங்கப்படும் என்பதை இங்கு உறுதியாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

தமிழர்களுக்குப் போரில் ஏற்பட்ட தோல்வி சில இனவாத சக்திகள் மத்தியில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான ஓர் அலட்சியப் போக்கை ஏற்படுத்தலாம். போரின் தோல்வியானது எமது போராட்டத்தின் தோல்வியல்ல. இது போராட்ட வழிமுறை ஒன்றுக்குக் கிடைத்த தோல்வி மட்டுமே என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன். அமைச்சர் டி.யூ. குணசேகர அவர்கள் ஒரு பத்திரிகைப் பேட்டியின்போது கூறியவற்றை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். "பிரபாகரன்தான் பிரச்சினை என்றால் பிரபாகரனின் இறப்புடன் பிரச்சினை முடிந்திருக்கவேண்டும்" ஆனால் முடியவில்லை. பிரபாகரனுக்கு முன்பும், பிரச்சினை இருந்தது. பின்பும் இருக்கிறது. பிரபாகரன்கள் பிரச்சினையை உருவாக்குவதில்லை. பிரச்சினைகள்தான் பிரபாகரன்களை உருவாக்குகின்றன. எவ்வாறு அவர் பிரபாகரனின் முடிவு பிரச்சினையின் தீர்வாகிவிடாது எனத் தெளிவுபடுத்துகிறாரோ அவ்வாறே நானும் போரின் முடிவு என்பதும் பிரச்சினைகளின் தீர்வாகிவிட முடியாது என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

சட்டவிரோத ஆயுதங்கள் அனைத்தும் களையப்படவேண்டும்

போரின் முடிவு ஏற்கனவே இங்கு நிலவிய இறுக்கமான ஒரு சூழ்நிலையைத் தளர்த்தியது என்பதையும் சில கெடுபிடிகளை நீக்கியது என்பதனையும் நாம் ஒப்புக்கொள்கிறோம். அண்மைக் காலமாக இங்கு நடைபெறும் சம்பவங்கள் ஒரு பயங்கரச்சூழலையும் நிம்மதியின்மையையும் ஏற்படுத்தியுள்ளமையைச் சுட்டிக்காட்ட வேண்டியவனாகவுள்ளேன். இன்று வடக்கில் கடத்தல், கொலை, கப்பம் என்பன தொடரும் அபாயங்களாக உருவாகியுள்ளன. இவை மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையீனத்தையும் சில அரசியல் சக்திகள் பின்னணியில் இருக்கக்கூடும் என்ற ஐயத்தையும் ஏற்படுத்தியுள்ளன. எப்படியிருப்பினும் சில தீயசக்திகள் கையில் இன்னமும் ஆயுதங்கள் இருப்பதே இதற்கான வாய்ப்புக்கள் உருவாகக் காரணம் என்பதை மறுக்க முடியாது. எனவே சட்டவிரோதமான ஆயுதங்கள் அனைத்தும் களையப்படவேண்டும் என்பதை இந்நேரத்தில் எமது மக்களின் சார்பில் வலியுறுத்த விரும்புகிறேன்.

நாம் இறைமையும் சுதந்திரமும் உள்ள மக்களாக எங்கள் நியாயமான உரிமைகள் அங்கீகரிக்கப்படும் நிலையில் எமது தேசத்தின் இறைமையையும், சுதந்திரத்தையும் பாதுகாத்து சுபீட்சம் நோக்கிய பாதையில் பயணிக்க உங்களுடன் ஒன்றிணைவோம் எனக் கூறி நிறைவு செய்கின்றேன்.

# இலட்சியப் பற்றுடன் ஜனநாயக வழிப்போராட்டங்கள் மூலமாக தமிழ் மக்களின் உரிமைகளை நடைமுறைச் சாத்தியமாக்குவோம்

இருபத்தைந்து வருடங்களுக்கு இந்த நாட்டை அவசரகாலச் சட்டம் தொடர்ந்து தன் பிடிக்குள் வைத்திருப்பது மட்டுமின்றி மாறி மாறி நாடாளுமன்றத்தில் அங்கீகாரத்தையும் பெற்று வருகின்றது. நான் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பல விதங்களிலும் இடையூறாக இருக்கும் இச்சட்டம் நீக்கப்படவேண்டிய அவசியத்தை இச்சபையில் வலியுறுத்த விரும்புகின்றேன். ஜனநாயக தேசிய முன்னணி கொண்டுவந்த பிரேரணையை ஆதரிக்கின்றேன்.

இந்நாட்டில் முப்பது வருடங்களாக நிலவிவந்த போர்ச்சூழல் நீக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் முடிவடைந்துவிட்ட நிலையிலும் பாதுகாப்புக் காரணங்கள் கூறப்பட்டு இச்சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. இந்தநாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனின் பாதுகாப்பும் இயல்பு வாழ்வும் பேணப்பட வேண்டும் என்பதில் எவ்வித முரண்பாட்டுக்கும் இடமில்லை. ஆனால், இச்சட்டம் எமது நாட்டு மக்களின் சுதந்திரத்தையும் இயல்பு வாழ்க்கையையும் பாதுகாக்கின்றதா அல்லது இடையூறு விளைவிக்கின்றதா என்பதுதான் இங்கு எழும் கேள்வி. இங்கு தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு தங்களுடைய இலாபம் அரசுடன் இணைந்து கொண்டுள்ள ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் பாதுகாப்புக்கு இச்சட்டம் அவசியம் எனக் கூறித் தெரிவித்து வருவதை

இச்சபை நன்கறியும். நான் இச்சபையில் கேட்டுக்கொள்வது. இச்சட்டம் எவ்வாறு தமிழ் மக்களைப் பாதுகாக்கின்றது? எவ்வாறு தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கு துணை நிற்கின்றது? என்பதுதான். நான் இங்கு கேட்டுக்கொள்ள விரும்புவது இச்சட்டம் தமிழ் மக்களை யாரிடம் இருந்து பாதுகாக்கின்றது? எவ்விதம் பாதுகாக்கின்றது?

இனந்தெரியாதவர்கள் என்ற பெயரில் யாழ்.குடாநாட்டில் ஒருசிலரால் கொலைகள், கொள்ளைகள், ஆட்கடத்தல்கள், கப்பம் கோரல்கள் முன்பும் இடம்பெற்றன. இச்சட்டத்தால் இவர்கள் யார் எனக் கண்டுபிடிக்கமுடியாதா? இவர்களின் கைதுகளுக்கு ஆயுதங்கள் எங்கிருந்து வருகின்றன என்பதைக் கண்டுபிடிக்கமுடியாதா? இவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பவர்கள் யார் என்று கண்டுபிடிக்கமுடியாதா? இவர்களில் ஒரு சிலர் கைது செய்யப்பட்டதாக செய்திகள் வெளிவருகின்றன. இவர்கள் யார் என்பதோ இவர்களுக்குப் பின்னணியில் நின்ற கட்சிகள் எவை என்பதோ இவர்களுக்கு மேற்கொண்டு என்ன நடந்தது என்பதோ இதுவரை வெளிவரவில்லை.

இவ்விடயங்களில் இந்த அவசரகாலச் சட்டம் ஏன் பலவீனமடைந்து போயுள்ளதென்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இச்சட்டத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் அனைவரும் சந்தேகத்துக்குரியவர்களாக்கப்படுகின்றனர். அடிக்கடி மேற்கொள்ளப்படும் வீதிச் சோதனைகள் எமது மக்களின் இயல்பான நடமாட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கின்றன. குடும்பப் படங்கள் எடுக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. இவை இச்சட்டத்தால் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பும் இயல்பு வாழ்வும் தானே என நான் கேட்டு வைக்க விரும்புகின்றேன்.

அண்மையில் கிளிநொச்சி அம்பாள் குளத்தில் வெள்ளை வானில் வந்த ஒரு சிலரால் ஒரு வர்த்தகர் கடத்தப்பட்டார். அது தொடர்பாக அவரின் குடும்பத்தினர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யச் சென்றபோது அவர் புலன்விசாரணைகளுக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட்டு விட்டதாக கூறப்பட்டது. ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவதென்றால் அந்தப் பகுதி பொலிஸாருடனோ அல்லது கிராம சேவையாளருடனோ சென்று கைது செய்யப்படவேண்டும். ஆனால் அவசரகாலச் சட்டமோ இப்படியான மர்மமான கைதுகளுக்கு இடம்கொடுக்கின்றது.

இப்படி வெள்ளை வான்களில் கடத்தப்பட்ட பலர் காணாமல்போயினர். இன்னும் சிலர் வீதியில் கொன்று வீசப்பட்டனர். இவை இனந்தெரியாத நபர்களால் அல்லது பாதாளக் கோஷ்டியினால் மேற்கொள்ளப்பட்டவை எனக் கூறப்பட்டது. அண்மையில் உரும்பிராயில் கடத்தப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் பிணமாக பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டார். இதுவா தமிழ் மக்களுக்கு அவசரகாலச் சட்டம் வழங்கும் பாதுகாப்பு என இச்சபையில் நான் கேட்டு வைக்க விரும்புகிறேன். இதுவா தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட இயல்பு வாழ்வு?



கடந்த 08.02.2011 அன்று இச்சபையில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாட்டின் சகல மக்களையும் இச்சட்டம் பாதுகாப்பதாகவும் ஒரு சிலர் சிறு சிறு விடயங்களை ஊதிப் பெருப்பித்து அரசியல் இலாபம் தேடுவதாகவும் குறிப்பிட்டிருந்தார். தமிழ் மக்கள் கொல்லப்படுவதும் கடத்தப்பட்டுச் சடலங்களாக மீட்கப்படுவதும் அல்லது புலனாய்வுப் பிரிவினரால் மர்மமான முறையில் கைதுசெய்யப்படுவதும் சிறு சிறு விடயங்களா? பொதுமக்களைப் பொறுத்தவரை இவை உயிர் தொடர்பான பிரச்சினை. உறவுகளை இழப்பது தொடர்பான பிரச்சினை. நிம்மதியற்ற அச்சமும் பீதியும் கலந்த நாள்கள் தொடர்பான பிரச்சினை. இவற்றை நான் ஊதிப் பெருப்பிக்க வேண்டியதில்லை. ஏனெனில் இவை ஏற்கனவே ஊதிப் பெருத்து வெடித்து உதிரம் கசிபவை. உரிமை உரிமை என்று கூச்சலிடும் நாம் என்ன உரிமைகளைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தோம் என்ற கேள்வியை அமைச்சர் இங்கே எழுப்பினார்? நியாயமான கேள்விதான். சும்மா கிடைப்பதற்கு சுதந்திரம் என்ன சுக்கா, மிளகா? என்ற பாரதியார் பாடல்தான் எனக்கு இங்கே நினைவுக்கு வருகின்றது.

உரிமைகள் என்பது ஒரு நாளில் கிடைத்து விடுவதில்லை. உரிமைகளுக்கான போராட்டம் என்பது தொடர்ச்சியானதும் நீண்டதும் இது வேகமாக முன்செல்லும் இடைவெளியில் எதிர்பாராத பின்னடைவுகளையும் சந்திக்கும். இது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் மட்டுமல்ல. உலக விடுதலைப் போராட்டங்களே பெற்றுக்கொண்ட அனுபவம். எனவே எமது ஒவ்வொரு அடிவைப்பும் ஆணித்தரமானவை. அசைந்து அடிகொடுக்காத இலட்சிய உறுதி கொண்டவை. விலைபோய் விடாத விசுவாசம் கொண்டவை. இதன் காரணமாகவே நாம் இன்றும் அரசுடன் பேசுகின்றோம். சில கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுதியான நிலைப்பாடு காரணமாகவும் எமது மக்கள் எமக்கு வழங்கும் பேராதரவு காரணமாகவும் எம்மை அரசு பேச்சுகளுக்கு அழைத்திருக்கிறது. அதற்காக நாம் ஒரு நாளில் உரிமைகளைப் பெற்றுவிடுவோம் என்று சத்தியம் செய்யவில்லை. ஜனநாயக தந்திரோபாய போராட்டங்கள் மூலம் எமது உரிமைகளைப் பெற முன்செல்வோம். ஆனால் நாம் ஏற்கனவே 13 ஆவது

திருத்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட உரிமைகள் பறிக்கப்படுவதற்கு நாம் கையுயர்த்தி ஆதரவு வழங்கவில்லை. 18 ஆவது திருத்தச் சட்டமூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரம், பொது நிர்வாக அதிகாரம் பறிக்கப்பட்ட. உள்ளூராட்சி திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளின் அதிகாரம் மேலும் பறிக்கப்பட்டது. இதை நாம் கடுமையாக இச்சபையில் எதிர்த்துக் குரல்கொடுத்தோம் . ஆனால் அமைச்சரும் அவரது கட்சியினரும் தமிழ் மக்களுக்கென வழங்கப்பட்ட சில உரிமைகள் கூட பறிக்கப்பட ஆதரவு தெரிவித்தனர். இப்படியான ஒரு நிலையில் கௌரவ அமைச்சர் எம்மையும் இந்த அரசியலுக்கு வரும்படி அழைக்கின்றார். நாம் எப்போதுமே தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களில் இறங்கிப் போகவும் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படும்போது எதிர்ப்பதும் என்ற வகையில் எங்கள் அரசியலை முன்னெடுத்து வருகின்றோம். அரசாங்கம் செய்யும் அனைத்தையும் ஆதரிப்பதன் மூலம் இணக்க அரசியல் என்ற பெயரில் ஓர் அப்பட்டமான சரணடைவு அரசியல் செய்ய நாம் என்றுமே தயாரில்லை என்பதை இச்சபையில் உறுதியாகத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

எமது மக்களின் உரிமைகளுக்காக விட்டுக்கொடுக்காது போராடுவது தவிர்த்து இணக்க அரசியல் என்ற பெயரில் முற்று முழுதாக சரணாகதி அடைந்து தாங்கள் சொந்த இலாபங்களையும் பதவிகளையும் காப்பாற்றும் பாதையில் செல்வது என்பதற்கு பெயர் இணக்க அரசியல் என்றால் அதையே நாம் தொடர்ந்தும் செய்யவேண்டுமா? நாம் புலிகளுக்கு ஒரு முகமும் அரசாங்கத்துக்கு ஒருமுகமும் மக்களுக்கு ஒரு முகமும் காட்டுவதாக அமைச்சரால் குற்றஞ்சாட்டப்பட்டது. இங்கு நான் அவரின் நகைப்புக்கிடமான சிறுபிள்ளைத்தனத்தை எம்மால் புரிய முடிகின்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஒரே ஒரு முகம்தான் உள்ளது. அது தமிழ் மக்களின் தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படையில் எமது உரிமைகளை வென்றெடுப்பது. ஆனால் அரசியலின் ஒவ்வொரு நகர்வையும் தந்திரோபாய அடிப்படையில் பிரதான இலக்கிலிருந்து விலகாமல் கையாள்வது எந்தவொரு ஒடுக்கப்பட்ட மக்களினதும் வழிமுறையாகும். ஒவ்வொரு சட்டத்திலும் நாம் மேற்கொள்ளும் நகர்வுகள் அமைச்சரின் சரணடைவு நகர்வுகளுக்கு வெவ்வேறு முகங்களாகத் தெரிவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. அதனடிப்படையிலேயே நடைமுறைக்குச் சாத்தியமற்றவற்றைப் பேசி நாம் மக்களை ஏமாற்றுகின்றோம் என அவர் குற்றஞ்சுமத்துகிறார். எமது நடைமுறைக்குச் சாத்தியம் என்பதைத் தீர்மானிப்பது சொந்த நலன்களின் அடிப்படையில் நிபந்தனையற்ற முறையில் சரணடைவதன் மூலம் அல்ல. மாறாக இலட்சியப்பற்றுடன் மக்களின் நலன் என்ற அடிப்படையில் உறுதியாக முன்செல்வதே நடைமுறைச் சாத்தியங்களை உருவாக்கும். கொடுப்பதை வாங்கிக்கொண்டு திருப்தியடைவதுதான் நடைமுறைச் சாத்தியமானால் அது பிச்சைக்காரர்களுக்கு மட்டும்தான் பொருத்தமானது. ஆனால் நாம் பிச்சைக்காரரல்ல.

பெருமைக்குரிய தமிழ் மக்கள் விட்டுக்கொடுக்காத ஜனநாயக வழிப்போராட்டங்கள் மூலம் எமது உரிமைகளை நடைமுறைச் சாத்தியமாக்குவோம்.

# போரின் வெற்றியை இன்னமும் கொண்டாடும் அரச தரப்பு போருக்குக் காரணமான விடயத்துக்கு தீர்வுகாண முயலவில்லை

**நாடாளுமன்றத்தில்**
**சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு**

ஏறக்குறைய 18 மாதங்களுக்கு முன்னர் முடிந்து போன போரின் வெற்றியை இன்னமும் கொண்டாடி வருகின்ற அரச தரப்பு, போர் தொடங்குவதற்குக் காரணமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தாராளப் போக்குடன் செயற்பட இன்னமும் முன்வருவதாகத் தெரியவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பான மூன்றாவது நாள் விவாதத்தில் பேசுகையில் இப்படி கூறினார்.

அவரின் உரையின் விவரம் வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக் காலத்தைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்பு பெருமையுடன் சமர்ப்பிக்கும் இந்த முதலாவது வரவு- செலவுத் திட்டத்தின் மீது எனக்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு எனது பெரு மகிழ்ச்சியை முதலில் இச்சபைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த வரவு - செலவுத் திட்டமானது எதிர்வரும் ஆண்டில் இந்த நாட்டை வழி நடத்தப்போகும் வலிமை கொண்ட ஒரு முன்வைப்பு என்பதை நான் அறிவேன். எமது இலங்கைத் திருநாட்டை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றும் ஜனாதிபதியின் தூர நோக்கின் பலா பலன்களை இந்த நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என சகல இனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் கிட்டும்

வகையில் இந்த நாட்டு வழிநடத்தப்படுமனால் நான் மட்டுமல்ல என்னைத் தங்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்த தமிழர் மக்களும் பெரும் மகிழ்ச்சியடைவோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். அப்படியொரு சமாந்தரமான வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் போரின் கொடூரத்தால் முழுமையாகச் சிதைக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வு நியாயமான முறையில் வழமைக்கு கொண்டு வர முயற்சிகள் நேர்மையாக முறையில் எடுக்கப்படுமானால் நாங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னிலங்கையில் 22 பெரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டதாகவும் 'கமநெகும்' கிராமிய எழுச்சித்திட்டம் மூலம் 27,888 மில்லியன் ரூபா செலவில் 72,1005 கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இந்த அறிக்கையில் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டது. ஒரு நாட்டின் உறுதியான அபிவிருத்திக்குக் கிராமங்களில் முன்னேற்றமும் விவசாய உற்பத்தி அதிகரிப்பும் அவசியமானது என்பதை எவருமே மறந்துவிடமுடியாது.

ஆனால் இப்பெரும் திட்டத்தில் வடக்கு, கிழக்கு உதாசீனப்படுத்தப்பட்டு விட்டது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. கடந்த காலங்களில் போரைக் காரணம் காட்டி வடக்கின் அபிவிருத்தி மறுக்கப்பட்டது. இன்றோ போர் முடிந்து 18 மாதங்கள் முடிந்துவிட்டன. எனினும் வடக்கின் குறிப்பாக வன்னியின் விவசாய அபிவிருத்தி தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஒரு சிலருக்கு விவசாய உள்ளீடுகளும் விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டன என்பதை நான் இங்கு மறுக்கவில்லை. ஆனால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய ஏறக்குறைய 3 லட்சம் மக்கள் எவ்விதநிதி ஆதாரமும் அற்றவர்கள்! எல்லாவற்றையும் இழந்து வெறுங்கையுடன் நிற்பவர்கள்! இவர்களுக்கு உதவிகள் உரிய முறையில் வழங்கப்பாடாவிட்டால் இவர்கள் வாழ்வை எப்படிக் கட்டியமைக்க முடியும்? இந்தியா உட்பட வெளிநாடுகளும் தொண்டர் நிறுவனங்களும் வழங்கும் உதவிகள் கூடச் சரியான முறையில் மக்களைச் சென்றடைவதில்லை.

### வன்னி நீர்ப்பாசனம் பாதிப்படைந்துள்ளது

போராலும் ஏனைய புறமொதுக்கல் காரணங்களாலும் வன்னியில் பல நீர்ப்பாசனக் குளங்கள் பராமரிப்பற்றுப் பழுதடைந்துள்ளன. இவற்றைத் திருத்தி மீண்டும் விவசாயத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அப்படி ஒன்றிரண்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவை பல்வேறு நெருக்கடிகள் காரணமாக ஆமைவேகத்திலேயே இடம்பெறுகின்றன. இவை மூலம் நாட்டின் விசாய உற்பத்திக்கு எமது மக்கள் பங்களிக்க முடியுமா? எமது மக்களின் வாழ்வாதாரங்கள் மேம்படுமா?

கிளிநொச்சி வடக்கின் பொற்களஞ்சியம் என்பதை நீங்கள் அறிவீர்கள். கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும் பகுதி விவசாய உற்பத்திகள் இரணைமடுக்குளத்தையே

நம்பியுள்ளது. ஏறக்குறைய 20,000 ஏக்கர் நெற்செய்கைக் காணிகளுக்கு இந்தக் குளத்தின் மூலம் நீர்பாசனம் செய்யப்படுகிறது. இந்தக் குளத்தின் கழிவுநீரிலும் மானாவாரியாகவும் ஏறக்குறைய பத்தாயிரம் ஏக்கரில் நெற்செய்கை பண்ணப்படுகிறது. அதுமட்டுமன்றி இரணைமடு நீர்ப்பாயும் பகுதிகளில் கிணறுகளின் நீர்மட்டம் குளத்தின் நீர் மட்டத்தைப் பொறுத்தே அமையும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் இரணைமடு நீர் வற்றினால் கிளிநொச்சியின் பல கிராமங்களில் நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு விடும். அதுமட்டுமன்றி சிறுபோக வேளாண்மை காலங்களில் குளத்தின் நீர்மட்டத்தைப் பொறுத்து அரைபகுதிக்கோ அல்லது மூன்றில் ஒரு பகுதிக்கோ மட்டும் நீர் வழங்கப்படும். அதாவது இரணைமடு நீர் கிளிநொச்சியின் விவசாய, குடிதண்ணீர் தேவைகளுக்கே போதாது என்பது நடைமுறைக்கு யதார்த்தம்.

இப்படியான நிலையில்தான் இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர் கொண்டு செல்லும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

**சட்டவிரோத மண் அகழ்வு**

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுகிறது. இதற்குச் சில அரசுக்கு சார்பான அரசியல்வாதிகளும் துணைபோகின்றனர். அதேபோல் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள வலிகாமத்தில் சட்டவிரோதமாக சுண்ணக்கல் அகழ்ந்து எடுக்கப்படுகிறது. இவற்றின் காரணமாக கடல்நீர் உட்புகும் அபாயமும், கிணறுகள் உவர் நீராக மாறும் ஆபத்தும் ஏற்படுகிறது. எனவே முதலில் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். அதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் கோயில்கள் அருகிலும் வயல்கள் நடுவிலும் மழை நீரைத் தேக்கும் குளங்கள் உண்டு. இவை நிலக்கீழ் நீரோட்டத்துக்கு அவசியமானவை. அவை இன்று குப்பை கொட்டும் இடங்களாகவும் வீடு கட்டும் இடங்களாகவும் மாறிவிட்டன. உடனடியாகவே இந்தச் சிறுகுளங்கள் சுத்தப்படுத்தப்பட்டு நீர்தேக்கப்பட வேண்டும்.

இவற்றைச் செய்யாமல் இரணைமடு நீரை யாழ்ப்பாணம் கொண்டு சென்று கிளிநொச்சியின் விவசாயத்தை அழிக்க முயல்வதை ஏற்க முடியாது. அதற்காக நாம் யாழ்ப்பாணத்துக்கு இரணைமடு நீர் கொண்டு செல்வதற்கு எதிரானவர்கள் என்று அர்த்தமல்ல! இரணைமடுக் குளக்கட்டு உயர்த்தப்பட்டு கூடுதலான நீர் கொள்ளளவு செய்யப்படும் போது இது ஏற்றுக்கொள்ளப்படமுடியும்.

இல்லையே இந்தியாவில் காவிரி நீர்ப்பிரச்சினையில் கர்நாடகத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் முரண்பாடு ஏற்படுவதைப் போல் கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் முரண்பாடு தோன்றுவது தவிர்க்க முடியாததாகிவிடும். எனவே முதலில் குளக்கட்டை உயர்த்தும் நடவடிக்கையை மேற்கொள்ளும்படி இங்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன். நாட்டில் வறுமை நிலை 15.2 வீதத்திலிருந்து 7.6 வீதமாகக் குறைந்து விட்டதாக இந்த வரவு - செலவுத்திட்டம் பெருமைப்படுகிறது. ஆனால் வன்னியில் 15.2 வீதம் 90 வீதமாகவுள்ளது. என்பதை நீங்கள் அறிய வேண்டும். ஏனைய இடங்களைப் போன்று அங்கு 7.6

வீதத்துக்கு குறைய வேண்டுமானால் உடனடியாகவே அவர்களின் விவசாய மேம்பாடு தொடர்பான திட்டங்களை துரிதமாக ஆரம்பிக்க வேண்டும். பாடசாலை செல்லும் சிறுவர்களின் தொகை 95 வீதத்திலிருந்து 100 வீதமாகிவிட்டது என இங்கு கூறப்பட்டது. வன்னியில் பல இடங்களில் இன்னும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் பல பாடசாலைகள் கட்டடங்களின்றி தளபாட வசதியின்றி போக்குவரத்து வசதியின்றி நடைபெறும் இந்த நாள்களில் 100 வீதம் மாணவர்கள் பாடசாலை செல்ல முடியுமா?

எனவே வன்னியில் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யவும் ஏனைய கல்வித் தேவைகளை ஈடுசெய்யவும் வன்னிக்கு பிரத்தியேக நிதி ஒதுக்க வேண்டும் என நான் இந்தச்சபையில் கேரிக்கை வைக்க விரும்புகிறேன்.

**வன்னி மீள்குடியமர்வு**

இவற்றைப் பற்றியெல்லாம் நான் இங்கு குறிப்பிடும்போது மீள்குடியேற்றம் பற்றிக் குறிப்பிடாமல் இருந்து விடமுடியாது. இந்தப் பகுதியில் இரண்டு லட்சத்து அறுபத்து மூவாயிரம் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுவிட்டதாகவும் அவர்களின் வாழ்க்கை வழமைக்குத் திரும்பிவிட்டதாகவும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். அதுமட்டுமன்றி மீள்குடியேற்றப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய 200 மில்லியன் ஒதுக்கப்பட்டதாகவும் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டது.

இன்னும் எமது மக்கள் கூடார வாழ்க்கையே வாழ்கின்றனர். போக்குவரத்து வசதிகள் போதியளவு இல்லை. மருத்துவ வசதிகளுக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலைமை, வீடுகள் படு மோசமான நிலையில், மின்சார வசதியில்லை, இடிந்த கட்டடங்களோ, கூரையற்ற வீடுகளோ, இன்னும் சீர் செய்யப்படவில்லை.

இப்படியான ஒரு நிலையில் இந்த மக்கள் வழமையான வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா?

ஒதுக்கப்பட்ட 200 மில்லியன் ரூபா இந்தப் பகுதியின் தேவையின் ஒரு பகுதியைக் கூடப் பூர்த்தி செய்யக்கூடப் போதாது என்பதை நீங்கள் அறிவீர்கள்? ஆனால் அந்த நிதிகூடப் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது தான் ஜீரணிக்க முடியாத விடயம்.

ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு பகுதி இங்கு ஆடம்பர விழாக்களுக்கும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வுகளுக்குமே செலவிடப்படுகின்றன. கூரையற்ற கட்டடங்களையும் இடிபாடுகளையும் திறப்பு விழா நடத்தி திறந்து வைத்தமைக்காக வடமாகாண ஆளுநரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஜனாதிபதியால் கண்டிக்கப்பட்டதை நாம் மறந்துவிடமுடயாது. இதன் மூலமே இந்த மக்களின் வாழ்க்கை வழமைக்குத் திரும்பிவிட்டதாக ஜனாதிபதிக்குப் பிழையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. இந்தியாவின் ஐம்பதினாயிரம் வீட்டுத்திட்டம் எமது மக்களில் ஒரு பகுதி தேவையையே பூர்த்திசெய்ய முடியும். எனவே அரசும்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளையும் நிவாரணங்களையும் வழங்க நிதி ஒதுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தநாட்டின் பிரசைகள் என்ற முறையில் அதற்கான உரிமை எமக்கு உண்டு என்றே நம்புகிறோம்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த வலிகாமம் மக்கள் கடந்த 20 வருடங்களாக அகதிமுகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் சொல்லொணாக் கஷ்டங்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். போர் முடிந்து 18 மாதங்களாகிவிட்டன. அவர்கள் மீள்குடியேற்றப்படுவதற்கு நீதிமன்றமும் அனுமதித்துவிட்டது.

எனவே, அவர்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற உடன் நடவடிக்கை எடுக்கப்படவேணடும், அவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும். அப்படி மீள்குடியேற்றப்பட முடியாதவர்களுக்கு வேறு இடங்களில் காணிகள் வாங்கி வீடு கட்டிக்கொடுக்க வேண்டும்.

வன்னியில் போரால் பாதிப்புற்று தம் துணைவர்களை இழந்து, வாழவழியற்று நிற்கும் இளம் தாய்மாரின் கண்ணீரைத் துடைக்க அரசு கரம் தரவில்லை. அவர்களுக்கு ஒரு சிறுதுளி உதவியைக் கூடச் செய்வதற்கு அரசுக்கு மனம்இல்லை. இதனால் இன்னமும் இவர்கள் வாழ வழி தெரியாமல் பிறரிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், இவர்களுக்கு இத்தகைய பாதிப்பை நிகழ்த்திய போரில் பங்கெடுத்த படையினருக்கு அவர்களின் குழந்தைகளுக்கு ஊக்குவிப்பை வழங்க முன்வந்திருக்கும் அரசு, இந்த ஏழைத் தாய்மாருக்கு என்ன செய்யப்போகிறது? தமது அவயவங்களை இழந்து தவிக்கும் சிறுவர்களுக்கும் ஏனையோருக்கும் என்ன மருந்து அரசு தரப்போகிறது? சிறுகச் சிறுகச் சேர்த்த பணத்தில் வசதியாக வாழ்ந்துவிட்டு இன்று தங்க இடமில்லாமல் அகதிகளாகவே அலைந்துகொண்டிருக்கும் மக்களுக்கு அரசு செய்யப் போகும் பிராயச்சித்தம் தான் என்ன? என்ற கேள்வி இங்கு எழுகிறது.

ஏறக்குறைய 18 மாதங்களுக்கு முன்னர் முடிந்துபோன போரின் வெற்றியை இன்னமும் கொண்டாடிவருகின்ற அரசு தரப்பு, போர் தொடங்குவதற்குக் காரணமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தாராளப் போக்குடன் செயற்பட இன்னமும் முன்வருவதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களின் மனதை வெல்லும் எந்த நடவடிக்கையிலும் அரசு இறங்கவே இல்லை. மாறாக இன்னமும் கசப்புணர்வுகளை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கைகளை அது மேற்கொண்டு வருகிறது. குறிப்பாகத் தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிகழ்த்துவதில் அரசு குறியாக உள்ளது. இது எதிர்காலத்தில் ஏதோ ஒரு ரூபத்தில் தமிழர் தரப்பு தனது எதிர்ப்புணர்வை வெளிக்காட்டுவதற்கு, ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தை வலியுறுத்துவதற்குமே உதவக்கூடும்.

* அரசோடு சில தமிழ்த் தரப்புகள் தொடர்ந்தும் ஒன்றித்துச் செயற்பட்டு வருகிறது. அத்தகைய தமிழ்த் தரப்புகள் அரசுக்குச் சரியான பாதையைக் காட்டவேண்டிய கடப்பாட்டை மறந்துவிட்டார்கள். சரியான வழியில் அதை நெறிப்படுத்த அவர்கள்

தவறியதால் பாரதூரமான விளைவுகளே பரிசாகக் கிடைக்கக்கூடும். இத்தகைய தமிழ்த் தரப்புகளின் சுயநல முகம் விரைவிலேயே கலைந்து விடும். அப்போதுதான் அரசு தரப்பு தன் தவறை உணர்ந்து நாணக் கூடும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை நினைவு கூர வேண்டும். முன்னாள் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் ஐ.தே.க.அரசினாலும் சரி எதிர்க்கட்சியாக இருக்கும் போது சரி தமிழனுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ அநீதி ஏற்படும் போதெல்லாம் நிமிர்ந்து நின்று குரல் கொடுத்தவர் எந்தப் பயமும் இல்லாமல்.

*என்னதான் ஜனநாயகம் பேசினாலும், எல்லோரும் இலங்கையரே என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்லிக்கொண்டாலும் உண்மையில் வடக்கு, கிழக்கு மக்கள் வஞ்சிக்கப்பட்டே வருகிறார்கள். நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களைச் சர்வதேச தரப்புக்கு உயர்த்த போவதாகப் பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டது. அந்தப் பட்டியலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மாத்திரம் இடமில்லை. என் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மை? தமிழ் மாணவர்களின் கல்வி மீது காலங்காலமாக வைக்கப்படும் கத்திஇப்போது பல்கலைக்கழக சர்வதேச தரமாக்கலிலும் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை தமிழர் பிரச்சினையை இன்னமும் சிக்கலான நிலைக்கே இட்டுச் செல்லக் கூடியது. உலகில் நிகழ்ந்த எல்லாப் புரட்சிகளுக்கும், எல்லா மாற்றங்களுக்கும் மாணவர் சக்தியே பின்புலமாக இருந்த தென்பதை இந்தத் தருணத்தில் சுட்டக்காட்ட விரும்புகிறேன். எனவே, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மீது இனவாதம் பிரயோகிக்கப்படும்போது அது எதிர்மறையான விளைவையே ஏற்படுத்திவிடும். எனவே சர்வதேசத் தரத்துக்குப் பல்கலைக்கழகங்களைத் தரமுயர்த்தும் பட்டியலில் யாழ். பல்கலைக்கழகத்தையும் அரசு உடன் இணைக்க வேண்டும். இல்லாவிட்டால் அவ்வாறு இணக்க முடியாமைக்குரிய காரணத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும்.

*போர் முடிந்து இயல்பு வாழ்வுக்கு மக்கள் திரும்பி எங்கும் வசந்தம் வீசுவதாகவே கூறப்படுகிறது. ஆனால் யதார்த்தமோ வேறுவிதமாகவே உள்ளது. நிவாரணங்களும் உரிய முறையில் கிடைப்பதில்லை. இழந்துபோன தம்சொத்துக்களை மீள்பதிலீடு செய்ய உரிய தொழில்வசதிகள் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

அபிவிருத்தித் திட்டங்கள் பலவும் நடைபெறுவதாகச் சொல்லப்படுகின்றபோதும் இதுவரையும் எந்தவொரு தொழிற்சாலையும் வடக்குப் பகுதியில் புதிதாக நிறுவப்படவில்லை. கைத்தொழில் அமைச்சரோ அல்லது பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரோ இவ்வாறு பெரிய தொழிற்சாலை எதனையும் நிறுவமுடியாமைக்கான காரணத்தை விளக்குவார்களா? புதிய தொழிற்சாலை நிறுவாவிட்டாலும் கூட ஏற்கனவே இயங்கிய தொழிற்சாலைகளைக் கூட புத்துயிரூட்டி பழைய நிலைக்குக் கொண்டுவர இவர்களால் ஏன் முடியாமற்போனது? இதன் மூலம் ஏராளமான மக்களுக்கு வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் தொழில்வாய்ப்புக்களை வழங்கலாம்

என்ற நோக்கு ஏன் அரசுக்கோ அல்லது குறித்த அமைச்சர்களுக்கோ இன்றளவும் ஏற்படவில்லை? இந்தக்கேள்விகளுக்கெல்லாம் இருக்கின்ற ஒரே பதில் வடக்கின் வசந்தம் என்பது காகிதத்தில் மட்டுமே வாழ்கிறது. அதுவே யதார்த்தம் கூறி நிற்கின்ற உண்மையும்கூட வடக்கின் வசந்தம் தொடங்கிய நாள்களில் இருந்து அச்சுவேலி தொழிற்பேட்டை பற்றி பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அதாவது எமது இனப்பிரச்சினைத் தீர்வு மாதிரியே இதுவும் பேசப்பட்டுக் கொண்டே போகிறது. இராணுவ நடவடிக்கையில் அழிக்கப்பட்ட (சொத்துக்கள்) வீடு வாசல்களைக் கட்டிக்கொடுத்து மக்களது சாதாரண வாழ்வை உறுதிப்படுத்தவேண்டிய கடமை இந்த அரசைச்சாரும். கடமைசெய்வதை அரசியலுக்காகக் கூறுவது எவ்வகையிலும் பொருத்தமல்ல. உதவி செய்துவிட்டு அதை அபிவிருத்தியாகக் காட்டமுயல்வது மக்களை ஏமாற்றும் செயல்.

# வடக்கின் நிர்வாகப் பணிகள் யாவும் இராணுவ மயப்படுத்தப்பட்டே உள்ளன

**சுட்டிக்காட்டுகிறார் சரவணபவன் எம்.பி.**

வடக்கில் சகலவிதமான நிர்வாகப் பணிகளும் இராணுவமயமான பாணியிலேயே இடம்பெறுகின்றன. எந்த ஒரு விடயமானாலும் இராணுவத்தினரோ, ஆளுநரோ தலையிடும் நிலைமை உருவாகியுள்ளது.

அவசர காலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதம் நாடாளுமன்றில் இடம்பெற்றபோது உறுப்பினர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

கடந்து சென்றுவிட்ட முப்பது வருடங்களின் பின்பு அபிவிருத்திக் காற்று மெல்ல மெல்ல வடக்கை நோக்கி வீச ஆரம்பித்திருக்கின்றது. அடிக்கடி இடம்பெறும் அடிக்கல் நாட்டு விழாக்களும் எப்போதாவது ஒருமுறை இடம்பெறும் திறப்பு விழாக்களும் எமது மக்கள் மத்தியில் சில எதிர்பார்ப்புக்களை உருவாக்கி வருகின்றன.

30 வருடங்கள் அபிவிருத்தியில் பின்னடைந்து போயிருந்த வடக்கு, கிழக்குப் பகுதிகள் முறையானதும் மக்களுக்குப் பயன்தரும் வகையிலும் அபிவிருத்தித் திட்டங்களை வேண்டி நிற்பதை எவரும் தவறென்று கூறிவிட முடியாது. ஆனால் இவ்வாறான திட்டங்கள் நிறைவேறவும் அவற்றின் பலாபலன்கள் மக்களுக்குச் சென்றடையவும் ஓர் அமைதியான, சுமுகமான சூழல் நிலவ வேண்டியது அவசியமாகும். அதுமட்டுமன்றி

அரசுக்கும் மக்களுக்குமிடையே ஓர் அன்னியோன்னியமான உறவு நிலவ வேண்டும். மக்கள் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அச்சமின்றியும் திறந்த மனதுடனும் தெரிவிக்கக் கூடிய ஒரு சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படி ஒரு சூழல் உருவாகாதவாறு தடைக்கற்களாக இடையில் சில சக்திகள் செயற்பட்டு வருகின்றன. அரசுக்கும் மக்களுக்குமிடையே உறவுப் பாலமாக விளங்கி வருபவர்கள் அரச அதிகாரிகளே. மக்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் திட்டங்களை வகுத்து நிர்வாகத்தை மேற்கொள்வது அவர்களின் பொறுப்பாகும்.

ஆனால் யதார்த்தமோ, அவர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாத வகையில் வெளித் தலையீடுகள் மூலம் அவர்கள் மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக இன்று வடக்கில் சிவில் நிர்வாகம் இடம்பெறுகின்றதா அல்லது இராணுவ ஆட்சி இடம்பெறுகின்றதா என்று சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபையின் ஆளுநரோ முழு அதிகாரங்களையும் தனது கையில் எடுத்துக் கொண்டு சகலவற்றையும் தனது காட்டுப்பாட்டின் கீழ் இயங்க வைக்கிறார். இவர் ஓர் இராணுவ அதிகாரி என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இராணுவ நிர்வாகம் வேறு. சிவில் நிர்வாகம் வேறு.

ஓர் இராணுவ அதிகாரி தனக்கு இடப்படும் கட்டளைக்கு கேள்விக்கு இடமற்ற வகையில் கீழ்ப்படிய வேண்டும். அதேபோல் அவர் இடும் கட்டளைகளையும் கீழ் உள்ளவர்கள் அப்படியே நிறைவேற்ற வேண்டும். ஆனால் சிவில் நிர்வாகம் என்பது அப்படியல்ல. எல்லா விவரங்களும் ஆழமான பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். திறந்த விவரங்கள் மூலம் சரியான தீர்வுகள் எட்டப்படும். நிறைவேற்றப்படும் திட்டங்களும் சிவில் சமூகத்தால் கண்காணிக்கப்படும்.

கிளிநொச்சியில் மக்களுக்கு வழங்குவதற்காக இந்தியா கொடுத்த கூரைத் தகடுகள் மக்களுக்கு வழங்கப்படாமலே அங்கு வைக்கப்பட்டிருந்தன. அது பற்றிக் கேட்ட போது இராணுவம் அனுமதி தரவில்லை எனக் கூறப்பட்டது. ஆனால் அவற்றில் ஒரு பகுதி இராணுவம் தமது தேவைகளுக்கு எடுத்துச் செல்வதாக மக்களால் புகார் கூறப்பட்டது.

காணிகள் தொடர்பான பிரச்சினைகளை நிர்வகிக்கக் காணி அதிகாரிகள் உள்ளனர். அவர்கள் சமூகமளிக்காத சந்தர்ப்பங்களில் பிரதேச செயலர், அரச அதிபர் என உயர் அதிகாரிகள் உள்ளனர்.

ஆனால் கிளிநொச்சியிலோ காணிப் பிரச்சினைகளில் இராணுவ அதிகாரிகள் நேரடியாகவே தலையிடுகின்றனர். முன்பு காணி உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்ட உரிமையாளர்கள் பழைய அனுமதிப் பத்திரங்களைக் காட்டி இராணுவத்தின் உதவியுடன் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை அபகரிக்கின்றனர். அதுமட்டுமன்றி தங்கள் காணிகளை லட்சக் கணக்கான ரூபாவுக்கு விற்றவர்கள் கூட தங்கள் பழைய அனுமதிப்பத்திரங்களைக் காட்டி இராணுவ உதவியுடன் உரிமை கொண்டாடுகின்றார்கள்.

வடக்கில் எந்தவொரு பொது நிகழ்வு இடம்பெற்றாலும் அதில் இராணுவ அதிகாரிகள் அழைக்கப்பட வேண்டும் என்பது எழுதப்படாத விதிப்பாகிவிட்டது. அப்படி ஒரு விழாவுக்கு அவர்கள் அழைக்கப்படாவிட்டாலும் அவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படும் நிலைமை உருவாகிவிட்டது. பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அமைச்சுச் சாராத பிரச்சினைகளிலும் தலையிடுவார். அவர் தனக்கு அதிகாரமில்லாத விடயங்களிலும் தலையிட்டு வாக்குறுதிகளை வழங்குவது, தானே தீர்த்து வைக்கப் போவதாகப் பாசாங்கு செய்து பிரச்சினைகளைத் திசை திருப்புவது, சில மக்கள் விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்துவது, சிவில் நிர்வாகத்தில் தலையீடு செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

குறிப்பாக நாவற்குழியில் சிங்கள மக்கள் சட்டவிரோதமாகக் குடியேறியது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக வெளிக்காட்டி வடபகுதி மக்களின் கோபாவேசத்தைத் திசை திருப்பினார்.

அதைத் தீர்க்கும் அதிகாரத்தை ஜனாதிபதி தனக்கே வழங்கிவிட்டதாகவும் கூறினார். அது இன்றுவரை தீர்க்கப்படவில்லை. இப்போதும் சிங்கள மக்கள் அங்கேயே குடியிருக்கின்றனர்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி வந்து வலைகளை அறுத்தெறிந்த 136 இந்திய மீனவர்களை இலங்கை மீனவர்கள் பிடித்துப் பொலிஸில் ஒப்படைத்த போது கனிமொழிக்கு, தமிழக முதல்வருக்குக் கடிதங்கள் எழுதி ஆரவாரம் செய்தார். அதன் பின்பும் இந்திய மீனவர்கள் அத்துமீறலில் ஈடுபடுகின்றனர். அமைச்சரோ எந்தவிதமான உருப்படியான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஒருமுறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கின் அரசனாக இருக்கலாம், ஆனால் அபிவிருத்தி வேலைகளுக்கு அரசே பொறுப்பு எனக் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, இந்த இடைத் தரகர்கள் எவ்வித பயனுள்ள பணிகளையும் செய்யப் போவதில்லை என்பதனை எமது அனுபவங்கள் தெளிவாகவே புலப்படுத்துகின்றன. மாறாக இவர்களால் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்தி மக்களை ஏமாற்றும் பணியை மட்டுமே செய்ய முடியும்.

எமது மக்கள் சுதந்திரமான, சுமுகமான, அமைதியான ஒரு சூழலில் வாழ விரும்புகின்றனர். இராணுவக் கெடுபிடிகள், தலையீடுகள் அற்ற ஒரு சிவில் நிர்வாகக் கட்டமைப்பையே வேண்டி நிற்கின்றனர். இங்கு இனி மேற்கொள்ளப்படப் போகும் அபிவிருத்திப் பணிகள், மக்களைச் சென்றடையவும், மக்கள் அவற்றுக்கு தங்கள் பங்கை வழங்கவும் ஒரு சுமுகமான தலையீடுகள் அற்ற நிலைமையை எதிர்பார்க்கிறோம்- என்றார்.

# அ.புரம் கைதிகள் மீது கொடூரமான தாக்குதல் ஜனாதிபதி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்

**நாடாளுமன்றில் சரவணபவன் எம்.பி. காட்டம்**
**'இரும்புக் கூட்டுக்குள் அராஜகம்' என வர்ணிப்பு**

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானதெனக் குற்றஞ் சாட்டியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தமிழர்கள் மீது அக்கறை இருக்குமாயின், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாக இது விடயத்தில் தலையிட்டு நீதியான விசாரணைகளுக்கு உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் அநுராதபுரம் தாக்குதலை 'இரும்புக் கூட்டுக்குள் இடம்பெற்ற அராஜகம்' என்றும் வர்ணித்தார்.

35 சிறைக்காவலர்கள் ஒன்று சேர்ந்து கைதிகளைத் தாக்கி, அவர்களது உடமைகளை மழையில் வீசி, ஊனமுற்ற கைதிகளின் ஊன்றுகோல்களையும் பறித்து, சிறை வளாகத்தில் இருந்த கோயிலை துவம்சம் செய்து, பிள்ளையார் சிலையையும் தூக்கி வீசி மேற்கொள்ளப்பட்ட அராஜகத்துக்குப் பொறுப்பு கூறுவது யார்? என்றும் சரவணபவன் கேள்வி எழுப்பினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியவை வருமாறு:

அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் உள்ள தமிழ்க் கைதிகள் சொல்லொணாத் துயரங்களையும் துன்பங்களையும் தொடர்ந்து அனுபவித்த

வண்ணமே உள்ளனர். இந்த நிலையில் பிற்பகல் 2 மணியளவில் சிறைக்குள் புகுந்த 2 ஜெயிலர்கள், 25 சிறைக் காவலர்கள் உட்பட 35 பேர் தமிழ்க் கைதிகளை சொல்லொணாத் துன்பங்களுக்கு உட்படுத்தினர். சோதனை என்ற பெயரில் அவர்களின் ஆடைகளைக் களைந்து கொட்டும் மழையில் நிற்க வைத்தனர். அதுமட்டுமன்றி கைதிகள் வைத்திருந்த பொருள்கள், உடுபுடைவைகள் உட்பட அனைத்தையும் நாசம் செய்து மழையில் அள்ளி வீசினர்.

ஈவிரக்கமின்றி கைதிகள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலின்போது 20 பேருக்கு மேல் படுகாயங்களுக்கு உள்ளாகினர். இவர்களில் அரிகரன் (யாழ்ப்பாணம்), சசி (வவுனியா), நிக்ஷன் (திருகோணமலை), தயா (வட்டக்கச்சி) ஆகியோர் மிகவும் மோசமான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**ஊன்று கோல்களையும் பறித்து அட்டகாசம்**

அதுமட்டுமன்றி, இங்கிருந்த ஊனமுற்ற கைதிகளின் ஊன்றுகோல்களையும் அட்டகாசம் செய்தோர் பறித்துச் சென்றுள்ளனர். விடுதியினுள் இருந்த சிறிய கோயில் ஒன்றும் உடைக்கப்பட்டதுடன் அங்கிருந்த விநாயகர் சிலையும் தூக்கி வீசப்பட்டது.

எவ்வளவோ துன்பங்கள் துயரங்களுக்கு மத்தியில் உறவுகளை விட்டுப் பிரிந்து உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட நிலையில் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் மீது இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது குறித்து எவரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

இரும்புக் கூட்டுக்குள்ளும் எமக்கு ஏன் இந்தநிலை என்று அவலப்படும் தமிழ் அரசியல் கைதிகளுக்காகப் பரிந்துரை கூறுவோர் எவருமே இல்லை. அநுராதபுரத்தில் இவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளதால் இவர்களுக்கு என்ன நேர்ந்தாலும் உடனடியாகத் தகவல்கள் வெளிவரவாய்ப்பில்லை.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட கைதிகள் ஜெயிலரிடம் முறையிடுவதற்காகச் சென்றபோது அவர் அலுவலகத்தைப் பூட்டி விட்டு உள்ளே இருந்துவிட்டார். எவரையும் தன்னுடன் தொடர்பு கொள்ள அனுமதிக்க வேண்டாம் என்றும் அவர் கூறியுள்ளார். பொறுப்பான பதவியிலிருக்கும் ஜெயிலரே இவ்வாறு நடந்து கொண்டால் தாம் எங்கு போய் முறையிடுவது என்று வேதனை தெரிவிக்கின்றனர் கைதிகள்.

**அலட்டிக் கொள்ளாத சிறை அத்தியட்சகர்**

அதுமட்டுமன்றி, அன்று இரவு 7 மணியளவில் அங்கு வந்த சிறைச்சாலை அத்தியட்சகரிடம் இது தொடர்பாகக் கைதிகள் முறையிட்டனர். ஆனால் அவர் அந்த விடயம் தொடர்பாக பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை என்றும் இந்த விடயத்தைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து கைதிகள் 65 பேரும் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது பாதுகாப்பை நூறு வீதம் உறுதிப்படுத்தக் கோரியும் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க சிறைச்சாலைகள் தலைமைப் பொறுப்பதிகாரி நேரடியாக வந்து உறுதி தரவேண்டும் என்றும் கோரி இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அநுராதபுரத்தில் உள்ள கைதிகளைச் சென்று பார்வையிட்டு வருவதற்கான வசதி வாய்ப்புகள் இல்லை. இதனால் அவர்களுக்கு என்ன நடக்கிறது என்பதைக்கூட அறியமுடியாத நிலைமைதான் உள்ளது.

சிறைகளில் பெண் அரசியல் கைதிகள் உள்ள போதும் அவர்கள் தொடர்பாகத் தகவல் எதுவும் தெரியவில்லை.

ஜனாதிபதி இந்த விடயங்களைக் கவனத்திலெடுத்து இவர்களுக்கான ஒரு விசாரணைக் குழுவை அமைத்துக் கைதிகளின் பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்ட முன்வரவேண்டும்.

# வடக்கு- கிழக்கு மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளுக்கும் அரசு செவி சாய்க்க வேண்டும்

**வரவு- செலவுத் திட்ட விவாதத்தில்**
**சரவணபவன் எம்.பி.**

எமது மக்களின் பிரச்சினைகள் யாவும் இந்த அரசின் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகவே இருந்து வருகின்றன.

இந்த மனப்போக்கு மாற்றமடைய வேண்டும். அரசு தனது சம்பளம் வாங்கும் அடி வருடிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் தகவல்களின்படியே செயற்படுகின்றது. அவர்கள் ஆயுதம் தரித்த படைத்தரப்பினர்களாக இருந்தாலும் சிவில் சேவைகளைச் சேர்ந்தவர்களானாலும் தங்கள் எஜமானர்களின் கீழ் கடுமையான கட்டுப்பாடுகளை அவர்கள் முகம் கொடுத்து செயற்படுபவர்களாக உள்ளனர்.

எனது கோரிக்கை என்னவென்றால் அரசு மக்கள் பிரதிநிதிகளின் குரல்களுக்குச் செவிசாய்க்க வேண்டும் என்பதே. வடக்கு கிழக்கில் மக்கள் பிரதிநிதிகள் அரசின் தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளில் உண்மையான முறையில் பங்களிப்பு வழங்குவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கின்றது. எல்லா மட்டங்களிலும் உள்ளூர் ஆட்சி மட்டங்களிலும்கூட இதே நிலைதான் நிலவுகின்றது. இந்த நிலைமை இது போல் தொடருமானால் அது முழு நாட்டினதும் எதிர்காலத்துக்கு ஆபத்தாக முடிந்து விடும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் போது உரை நிகழ்த்துகையில் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் சபையில் தொடர்ந்து நிகழ்த்திய தமது உரையில் மேலும் தெரிவித்த முக்கிய கருத்துக்கள் வருமாறு:

ஜனாதிபதி சபையில் தமது வரவு -செலவுத்திட்ட உரையை நிகழ்த்திய போது அதனை செவிமடுத்துக் கொண்டிருந்த நான் வடக்கு, கிழக்கு மக்களின் துன்பங்களை இந்த சபையில் எடுத்து வைக்க வேண்டும். எவ்வாறு அரசு அவர்களை மீண்டும் ஏமாற்றி விட்டது என்பதை சுட்டிக் காட்ட வேண்டும் என்று நினைத்தேன்.

பயங்கரவாதத்தை ஒழித்து அமைதியை நிலைநாட்ட மாற்றுப் பொறி முறையொன்றை கொண்டுவரப் போவதாக ஜனாதிபதி அறிவித்தபோது அதனை ஆவலுடன் நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம். மாநாட்டின் முதல் முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு ஏதாகிலும் திட்டம் வெளியிடப்படும் என்று நம்பினோம். ஆனால் அவரது பிரகடனங்களும் முன்மொழிவுகளும் இடையில் எதுவித சம்பந்தமும் காணப்படவில்லை என்பது கவலை தருவதாகும்.

உறுப்பினர்களின் கருத்துக்களையும் கவனத்தில் கொண்டே வரவு -செலவுத் திட்டத்தை தாம் தயாரித்ததாக ஜனாதிபதி கூறியிருந்தார். ஆனால் நாம் பிரதிநிதித்துவம் செய்யும் வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் மற்றும் அபிலாசைகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பது கவலையளிப்பதாகும்.

வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் யாவும் தேசியப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி ஒதுக்கித் தள்ளப்பட்டு விட்டன. கடந்த வரவு -செலவுத் திட்டத்தின் போதும் அதற்குப் பிறகும் கூட நாம் தெரிவித்த கருத்துக்கள் யாவும் வரவு- செலவுத் திட்டத்தைத் தயாரித்தவர்களால் ஓரங்கட்டப்பட்டு விட்டன.

**பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி**

பாதுகாப்பு அமைச்சுக்கு அரசு பெருந்தொகைப் பணத்தை ஒதுக்குவதில் விடாப்பிடியாக இருந்துள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் முக்கிய தேவைகளில் ஒன்று வீட்டு வசதியாகும்.

பெரிய அளவில் பரப்புரை செய்யப்பட்ட இந்திய வீடமைப்புத் திட்டம் இன்னமும் வந்துகொண்டிருக்கின்றது. ஆனால் பாதுகாப்பு அமைச்சுக்கு நிரந்தர வசிப்பிடங்கள் மற்றும் பாதுகாப்பு கட்டடங்களுக்கென 3000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடி அற்ற நாடு ஒன்றை உருவாக்கப்போவதாக அறிவித்திருக்கும் நீங்கள், இடம்பெயர்ந்த மக்களை இனிமேலும் தடைசெய்யாமல் தங்கள் சொந்த இடங்களில் சென்று குடியமர்வதற்கு அனுமதியுங்கள்.

**முக்கிய பிரச்சினை**

எமது இன்றைய முக்கிய பிரச்சினைகள் மீள் நல்லிணக்கமும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுமே. இந்த விடயத்துக்கு வரவு- செலவுத் திட்டத்தில் எந்தவித முக்கிய கவனமும் செலுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

மாகாண சபைகளிலும் நாடாளுமன்றத்திலும் சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகள் இடம்பெற்றிருப்பதானது பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு உறுதியான வழியை ஏற்படுத்தியிருப்பதாக ஜனாதிபதி கூறினார். ஆனால் இந்தவித அர்த்தமற்ற வார்த்தைகளை எம்மால் புரிந்து கொள்ளமுடியாமல் இருக்கின்றது.

வடமாகாண சபையானது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆளுநரின் அமைச்சரின் பொம்மையாக இருந்து வருகின்றார். தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் எதுவித தீர்மானமும் எடுக்கும் செயற்பாடுகளிலும் இந்த இராணுவ ஆளுநரின் கீழ் ஈடுபடமுடியாமல் இருக்கிறது. ஆளுநருக்கு எமது சிவில் கலாசார நிர்வாகம் தெரியாது. மக்கள் பிரதிநிதிக்கு எதுவித மதிப்பும் கூட அவரிடம் கிடையாது - இவ்வாறு சரவணபவன் எம்.பி. தமது உரையில் குறிப்பிட்டார்.

# தமிழர் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய இந்தப் பட்ஜெட்டில் எதுவுமே இல்லை

**சபையில் விளக்கினார் சரவணபவன் எம்.பி**

அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2011 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எமது மக்களின் அபிலாசைகளையோ அடிப்படைத் தேவைகளையோ ஒரு பகுதியேனும் நிறைவு செய்யும் வகையில் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பான மூன்றாவது நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இங்கு நான் எமது மக்களின் சார்பில் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பாதுகாப்புக்கு அதிக நிதி**

இந்த வரவு செலவுத் திட்டத்தில் தேசியப் பாதுகாப்புக்கான நிதி வழமைபோல அதிகமாகவே ஒதுக்கப்பட்டுள்ளது. போர் காலத்தில் ஏற்படும் அதிகரித்த செலவினங்களுக்கான அதிக நிதி ஒதுக்கப்படுவது ஏற்புடையது. போர் முடிவடைந்த பின்னர் மீண்டும் தேசிய பாதுகாப்புக்காக எதற்காக இந்த பெருந்தொகை என யாரும் கேள்விகளை எழுப்பலாம்.

யுத்தம் முடிந்துள்ள சூழலில் மீண்டும் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவது யுத்தத்தைத் தடுப்பதற்காகவே என்பதை இலங்கைச் சூழலை மிகச் சரியாக புரிந்து கொண்டவர்களால் உணர்ந்து

கொள்ளமுடியும். அது உண்மையில் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காகவே என்றே அர்த்தப்படும்.

எதிர்காலத்தைப் பாதுகாக்க என்று கூறுவது வடக்கு, கிழக்கில் நிரந்தரமாக இராணுவத்தை நிலைநிறுத்துவதற்கு நீங்கள் அடியெடுத்துக் கொடுக்கிறீர்கள். நிரந்தரமாக அவர்கள் நின்றால் எம்மால் சுதந்திரமாக செயற்படமுடியுமா? சற்றேனும் இதைப்பற்றி சிந்தித்தீர்களா? தமிழரிடம் வாக்குப் பெற்று தமிழனுக்குச் செய்யும் அநீதியல்லவா தமிழ் பேசும் மக்களுக்கே இது அநீதி.

இலங்கைத் தீவை முற்றுமுழுதாக இராணுவ மயமாக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் படையினரின் மூன்றாவது பிள்ளைக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது போர் மீது விருப்புக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு அது சார்ந்த தொடர் பெருக்கத்தையும் நிகழ்த்தவல்லது. இதனால் எதிர்வரும் காலங்களில் படையினரின் குடும்ப உறுப்பினரின் எண்ணிக்கை மாத்திரமல்லாது படையில் இணைவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கக் கூடும். இதுவே அரசின் கணிப்பு. தமது குடும்பத்தில் பிறக்கும் மூன்றாவது பிள்ளைக்கு அரசு வழங்கும் ஊக்குவிப்புத் தொகையைப் பெறுவதற்காகவே பல ஏழைச் சிங்களத் தந்தையர்கள் இராணுவத்தில் இணையக்கூடும். தனது கட்டமைப்பைக் குலைய விடாது பேணுவதோடு முற்றுமுழுதான இராணுவ மயமாதலுக்குள் கொண்டு வருவதற்கும் அரசு இதன் மூலம் திட்டமிடுவதாகவே கருதமுடிகிறது -என்றார்.

# படை அதிகாரிகளை மீண்டும் அரச சேவையில் நியமிப்பதால் அநாகரிகமான நிகழ்வுகள்

**யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதாக நாடாளுமன்றத்தில் கவலை தெரிவிப்பு**

பாதுகாப்புத்துறையில் பணிபுரிந்த உயர் அதிகாரிகள் மீண்டும் அரச (சிவில்) சேவையில் உயர்பதவிகளில் நியமிக்கப்படுவதால் அரச அலுவல்களில் குளறுபடிகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டாகின்றன.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வில் எடுத்துக் கூறப்பட்டது. தமிழ் மக்களின் தன்மானத்துக்கு சவால் விடப்பட்டதும் உயரிய அரச பதவிக்கு மாசு உண்டாக்குவதுமான சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அது ஒரு அருவருப்பான செயற்பாட்டுக்கு முன்னுதாரணமாக விளங்கியதாகவும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சபையில் கவலையும் கண்டனமும் தெரிவித்தார்.

அவர் அங்கு கூறியதாவது:-

தற்போது பதவியில் இருக்கும் யாழ். அரச அதிபர் கே.கணேகூஷ் அவர்கள் 69 வயதானவர். ஒரு பொது வைபவத்தின் போது தற்போதைய வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் முன்னிலையில் ஓர் அற்பமான சலுகையை எதிர்பார்த்து அவரது காலில் வீழ்ந்தமை அவர் இதுவரை காலமும் வகித்து வந்த உயரிய பதவிக்கு மாசு ஏற்படுத்தியுள்ளது. இது தமிழ் மக்களின் தன்மானத்துக்கு விடப்பட்ட பெரும் சவாலாகவும் பார்க்கப்படுகின்றது.

ஓர் அருவருப்பான செயற்பாட்டிற்கு இது ஒரு முன்னுதாரணமாக அமைவதோடு இது போன்ற செயலை ஏனையோரும் செய்வதற்கு தூண்டுதலாகவும் அமையலாம் என்று கருதப்படுகிறது.

திருமதி இமெல்டா சுகுமார் யாழ். மாவட்ட அரச அதிபராக ஜுலை முதலாம் திகதி பதவி ஏற்பதாக இருந்தது. ஆனால் அவருக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் நிறுத்தப்பட்டுள்ளது. 69 வயதான கே.கணேகூஷ் அந்தப் பதவியை தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் தலைகுனிவை ஏற்படுத்தும் இந்தச் செயலைக் கண்டு வாளாதிருக்க முடியவில்லை. இதனை வன்மையாக நான் கண்டிக்கின்றேன். பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த உயரதிகாரிகள் மீண்டும் சிவில் சேவையில் உயர் பதவிகளில் நியமிக்கப்படுவதால் இது போன்ற அநாகரிகமான நிகழ்வுகள் மேலும் தொடர வாய்ப்பு இருப்பதாகவே நாம் கருதவேண்டி உள்ளது- என்றார்.

# வடக்கு கிழக்கில் 57 ஆயிரம் பேர் இதுவரை குடியமர்த்தப்படவில்லை

**சபையில் ஆதாரங்களுடன் முன்வைத்தார் சரவணபவன் எம்.பி.**

வடக்கு கிழக்கில் 57 ஆயிரம் தமிழர்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்தப் புள்ளி விபரங்கள் அனைத்தும் அரசாங்க அலுவலகங்களால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டவையே. இது தொடர்பில் ஐ.நா. போன்ற சுயாதீன அமைப்புக்களின் அறிக்கை எதுவும் கடந்த சில மாதங்களில் வெளியாக வில்லை என்பதால் உண்மையான புள்ளி விவரங்கள் இதைவிட அதிகமாக இருக்குமா என்ற நியாயமான சந்தேகம் இருக்கின்றது.

இவ்வாறு நாடாளுமன்றில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

மன்றில் அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

போர் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் போரால் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் அனைவரும் மீளக்குடியமர்த்தப்படவில்லை. வடக்கில் செட்டிக்குளம் முகாம்கள் இரண்டில் 1,081 குடும்பங்களைச் சேர்ந்த 6,031 தமிழர்கள் (கதிர்காமர் முகாமில் 769 குடும்பங்களைச் சேர்ந்த 2,562 பேரும், ஆனந்தக் குமாரசாமி முகாமில் 2,827 குடும்பங்களைச் சேர்ந்த 9,235 பேரும்) இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். அதேபோன்று கிழக்கிலும் சம்பூரைச் சேர்ந்த 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். சம்பூர்

அனல் மின் நிலையத்துக்கு எனச் சுவீகரிக்கப்பட்ட நிலப்பகுதியில் 4 ஆயிரம் தமிழர்கள் வசித்த 1,262 வீடுகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வலி.வடக்கில் மட்டும் 26 ஆயிரம் தமிழர்கள் தமது சொந்த இடங்களை விட்டுக் கடந்த 22 வருடங்களாக இடம்பெயர்ந்துள்ளார்கள். அவர்களும் இதுவரை மீளக்குடியமர்த்தப்படவில்லை.

இவர்கள் தவிர யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் மேலும் 22 ஆயிரம் தமிழர்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மொத்தத்தில் 57 ஆயிரம் தமிழர்கள் வடக்கு கிழக்கில் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்தப் புள்ளி விவரங்கள் அனைத்தும் அரசாங்க அலுவலகங்களால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டவையே. இது தொடர்பில் ஐ.நா. போன்ற சுயாதீன அமைப்புக்களின் அறிக்கை எதுவும் கடந்த சில மாதங்களில் வெளியாகவில்லை என்பதால் உண்மையான புள்ளிவிவரங்கள் இதைவிட அதிகமாக இருக்குமா என்ற நியாயமான சந்தேகம் இருக்கிறது.

ஏனெனில் கிழக்கு மாகாணம் சம்பூரைச் சேர்ந்த 7 ஆயிரம் மக்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கையில் அரசின் மீளக்குடியமர்த்துகை அமைச்சு 08.05.2012 திகதியின் அடிப்படையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கிழக்கில் மீளக்குடியமர்த்தப்படுவதற்கான மக்கள் எவரும் இல்லை என்பதாகத் தெரிவித்துள்ளது.

அப்பட்டமாகத் தெரியும் உண்மைகளையே அமைச்சுகளும் அரச அலுவல கங்களும் இவ்வாறு அறிக்கையிடும்போது அவற்றின் நம்பகத் தன்மை குறித்து கேள்வி எழுவது நியாயமானதே.

எனவே வடக்கிலும் கிழக்கிலும் 57 ஆயிரம் தமிழர்களுக்கும் அதிகமானவர்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்றே நம்பகமாக எதிர்பார்க்கலாம்.

ஏனெனில் இடம்பெயர்ந்தோருக்கான அனைத்துலக கண்காணிப்பு நிலையம் இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் விடுத்த அறிக்கையில் இலங்கையில் 95ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளது. இவர்களில் 54 ஆயிரம் பேர் பழைய இடம்பெயரிகள் என்றும் (யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் இதற்குள் அடங்குவர்) 41 ஆயிரம் பேர் புதிய இடம்பெயரிகள் (இறுதிப் போரில் இடம்பெயர்ந்தவர்கள்) என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி மெனிக்பாம் முகாமில் 6,700 பேர் தங்கியிருந்தனர். அதன் பின்னர் 6 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இந்த எண்ணிக்கையில் 669 பேர் மட்டுமே மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று அரச புள்ளிவிபரங்களே தெரிவிக்கின்றன. இறுதிப் போர் உச்சமாக நடந்த இடங்களில் மீளக்குடியமர்வு எவ்வளவு வேகத்தில் நடக்கிறது என்று இதனைக் கொண்டே புரிந்துகொள்ள முடியும்.

2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதிக்குள் முகாம்களில் உள்ள மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என்று இலங்கை அரசு சர்வதேச நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் உறுதியளித்திருந்தது. ஆனால் இன்றுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

90 ஆயிரம் மக்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாமல் இருப்பதற்குக் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பதே காரணம் என்று அரசு கூறுகின்றது. ஆனால் கடந்த 17 வருடங்களாக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்படாமல் இருக்கும் மக்களில் அரைவாசிக்கும் மேலானவர்கள் இராணுவத்தினரால் தமது காணிகள் அபகரிக்கப்பட்டதன் காரணமாக மீளக்குடியமர முடியாமல் உள்ளார்கள் என்பதே உண்மை.

வலி.வடக்கிலும், வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம், உடுவில், கோப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை போன்ற பிரதேச செயலர் பிரிவுகளிலும் இராணுவத் தினரும் பொலிஸாரும் கடற்படையினரும் விமானப் படையினரும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அபகரித்து வைத்திருப்பதாலேயே அவர்களை மீளக்குடியமர்த்த முடியாமல் இருக்கிறது.

இந்த மக்கள் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து வாழ்கிறார்கள். அவர்களின் பிரச்சினையை மனிதாபிமான நோக்கத்துடன் அணுக வேண்டிய அரசு இராணுவ நோக்கத்துடன் மக்களின் இந்த மனிதாபிமானப் பிரச்சினையை அணுகி வருவதே இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றுக்குமான காரணம்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலுள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு முற்றாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வடக்கில் போர்க் காலங்களில் இருந்ததைப் போலல்லாது இப்போது படையினர் குறைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி அண்மையில் கூட கூறியிருந்தார். 10,000 படையினரே யாழ்ப்பாணத்தில் இருக்கின்றனர் என்றும் அவர்கள் கூறியிருந்தார். (இது யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்த 15,600 படையினர் என்ற எண்ணிக்கையுடன் வேறுபடுகிறது என்பது வேறு கதை)

வடக்கில் படையினர் குறைக்கப்படுகின்றனர் என்றால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் படையினர் ஏன் தம்வசப்படுத்துகிறார்கள் என்பதை இந்த நாடாளுமன்றமோ பொறுப்பான அமைச்சர்களோ விளக்குவார்களா?

யாழ்ப்பாணத்தில் வலி.வடக்கில் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் 8,000 ஏக்கர் நிலத்தை தமக்கே சொந்தமாக்கித் தரும்படி இராணுவத்தின் மேஜர் ஒருவர் அண்மையில் தெல்லிப்பழை மற்றும் கோப்பாய் பிரதேச செயலர்களிடம் கடிதங்களைக் கையளித்துள்ளார்.

இந்தப் பகுதி வளம்மிக்க விவசாய நிலப்பகுதி. அங்கிருந்த மக்கள் இடம்பெயர்வதற்கு முன்னர் தமது நிலத்திலிருந்து கிடைத்த வருமானத்தின் மூலம் வளமாக வாழ்ந்தவர்கள். 22 வருடங்களாகத் தமது சொந்த மண்ணுக்குத் திரும்பும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்பை இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நொறுக்கித் தள்ளுகின்றன.

இந்தப் பகுதியில் இப்போது நிரந்தரமான முள்வேலி போடப்பட்டுள்ளது. அதற்குள் அடங்கும் பகுதிகள் ஒருபோதும் விடுவிக்கப்படப் போவதில்லை என்ற அச்சம் மக்கள் மனங்களில் எழுந்துள்ளது.

ஆனால் வலி. வடக்கில் 17 கிராம அலுவலர் பிரிவுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அண்மையில் ஆங்கில ஊடகம் ஒன்று வழங்கிய செவ்வியில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அவரது கருத்து வெளியாகி ஓரிரு நாள்களில் இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர் ஆணையரைச் சந்தித்துப் பேசிய யாழ்ப்பாணக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஹத்துரு சிங்க, பலாலி விமானப் படைத்தளத்தின் விரிவாகத்துக்காகவும் காங்கேசன்துறைமுக மேம்பாட்டுக்காகவும் அதனைச் சுற்றியுள்ள காணிகள் யாழ்ப்பாணக் கட்டளைப் பணிமனையால் சுவீகரிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். அவர்களின் இணையத்தளத்தில் அந்தச் செய்தியை இப்போதும் பார்வையிட முடியும். காணிகளைச் சுவீகரிக்கும் அதிகாரம் இராணுவத்தின் ஒரு பிராந்தியக் கட்டளைத் தலைமையகத்துக்கு எப்போது வழங்கப்பட்டது என்று தெரியவில்லை. எனது சட்ட அறிவுக்கு எட்டியவரையில் காணி சுவீகரிப்பு என்பது அரசினால் மட்டுமே மேற்கொள்ளப்பட முடியும். ஒருவேளை அரசும் இராணுவமும் வேறு வேறல்ல என்ற ரீதியில் கட்டளைத் தளபதி கருத்துத் தெரிவித்திருக்கவும் கூடும். அது அவரின் தவறல்லவே.

அதேபோன்று திருமுறிகண்டியிலும் படையினர் 4 ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்துள்ளனர். இந்த நிலப் பகுதியில் ஊனமுற்ற படையினருக்கான வீட்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் அந்தப் பகுதிப் பிரதேச செயலருக்குப் படையினர் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர். அதனால் அந்தப் பகுதியைத் தமக்குரியதாக்க நடவடிக்கை எடுக்கும்படியும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இறுதிப் போரில் இடம்பெயர்ந்த மக்கள், மந்தைகளாக அடைக்கப்பட்டுக் கிடந்த மெனிக்பாம் முகாமிலிருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்கையில் ஒரேயொரு வீட்டைக் கூட அமைத்துத் தர மறுத்த இந்த அரசுதான், திருமுறிகண்டியில் ஊனமுற்ற படையினருக்கு ஆயிரம் வீடுகளை 4 ஆயிரம் ஏக்கரில் அமைத்துக் கொடுக்கிறது.

வேடிக்கை என்னவென்றால் இந்த நாட்டில் எல்லா இனங்களும் சமமானவையே என்று சொல்லிக் கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் அரசுதான் சிறுபான்மைத் தமிழ் மக்களை ஒரு மாதிரியாகவும் சிங்களப் படையினரை வேறொரு மாதிரியாகவும் நடத்துகிறது. ஒரு கண்ணுக்கு மையும் மற்றொரு கண்ணுக்குச் சுண்ணாம்பும் இட்டுக் கொண்டு சமத்துவம் பேசும்

கேவலம் இந்த நாட்டில் மட்டுமே நடக்கக் கூடியது. மன்னார் மாவட்டத்திலும் இதுவரை படையினராலும் அரசின் திட்டங்களுக்காகவும் 5 ஆயிரம் ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அரசு ஒரு திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்னர் அது குறித்த சாத்திய அறிக்கைகள் மற்றும் மக்கள் விருப்பம் என்பன கேட்கப்படுதல் அவசியம். அது கடப்பாடும் கூட. ஆனால் அப்படி எதுவும் செய்யாமலேயே மன்னார் மாவட்டத்தில் பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கு காற்றாலைக்கு எனவும் 500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கிலும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இப்படி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறியாமல் சுற்றுலாத்துறைக்கு எனவும் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் விவசாயத்துக்கு எனவும் அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலே 3,500 ஏக்கர் நிலம் இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர். நில அளவைத் திணைக்களத்தினரால் இந்த நிலப் பகுதி அண்மையில் இராணுவத்தினருக்காக எனக் கூறி எல்லையிடப்பட்டுள்ளது. தள்ளாடி வடக்கில் திருக்கேதீஸ்வரம் வரையில் 272 ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது.

இப்படி ஆயிரக்கணக்கான ஏக்கர்களை அபிவிருத்தி என்ற பெயரில் அரசு கையகப்படுத்துவதும் பெரும் சந்தேகங்களை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்துகிறது. அதிலும் குறிப்பாக தமிழ் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமரவிடாது ஆயிரம் ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசு கையகப்படுத்துவது, எதிர்காலத்தில் தீர்வு என்ற ஒன்று வழங்கப்பட்டால் அதற்கு முன்னதாக வடக்கு கிழக்கில் முடிந்த வரையில் காணிகளை மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் உள்நோக்கம் கொண்டதா? என்பதே அந்த நியாயமான சந்தேகம்.

அரசு அவசர அவசரமாக தமிழ் மக்களைக் கலந்தாலோசிக்காமல் அபிவிருத்தியின் பேரில் தமிழர் நிலங்களைக் கையகப்படுத்துவதால் இந்தச் சந்தேகங்களைத் தவிர்க்க முடியவில்லை.

இராணுவப் பாவனைக்கு என ஆயிரக்கணக்கில் நிலங்களை அபகரிக்கும் இந்த அரசு, மன்னார் முள்ளிக்குளத்தில் 350 குடும்பங்களை மீளக்குடியமர அனுமதி வழங்காது இருக்கிறது.

வடக்கு கிழக்கில் படையினரின் பயன்பாட்டுக்காகவும் அபிவிருத்தி என்ற போர்வையிலும் மட்டும் நிலங்கள் பறிக்கப்படவில்லை. பௌத்த விகாரைகளை அமைப்பதற்காகவும் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணம், மாதகலில், சங்கமித்தை வந்திறங்கிய இடம் என்று கூறி முதலில் அங்கு ஒரு தனியாரின் காணி ஆக்கிரமிக்கப்பட்டு விகாரை அமைக்கப்பட்டது. இப்போது அதன் அருகிலிருந்த தமிழர்களின் காணிகளும் ஆக்கிரமிக்கப்பட்டு யாத்திரிகர் விடுதி அமைக்கப்படுகிறது. இவற்றின் பாதுகாப்புக்கு என தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு கடற்படை முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகள் அனைத்தும் உறுதிகள் உள்ளவை.

தமிழர்களுக்குச் சொந்தமானவை. ஆனாலும் கேட்டுக் கேள்வியில்லாமல் அவை ஆக்கிரமிக்கப்படுகின்றன. கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டிருந்த விகாரையில் அதன் விரிவாக்கத்துக்காகத் தனியார் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. முல்லைத்தீவிலும் அதேபோன்று தனியார் காணியில் புத்தர்சிலையை வைத்துக் கொண்டு பிக்கு ஒருவர் ஆக்கிரமிப்பு நடத்துகிறார். திருக்கேதீச்சரத்தில் தமிழரின் காணியில் ஆக்கிரமித்து வைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றும்படி பௌத்த சாசன அமைச்சு செயலர் கூறிய பின்னரும் அது அகற்றப்படாமலே உள்ளது.

இப்படித் தமிழர்களின் காணிகளை படை முகாம்களுக்காகவும் விகாரைகளுக் காகவும் அபகரித்துக் கொண்டு எஞ்சியிருக்கும் காணிகளை அபிவிருத்தித் திட்டங்களுக்கு எனக் கூறிச் சுவீகரித்துக் கொண்டிருந்தால் எப்படி தமிழர்களை அவர்களது இடங்களில் மீளக்குடியமர்த்த முடியும்.

தமிழர்களும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களும் இந்த நாட்டில் சமகுடிமக்களே என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டே இந்த அரசு, தமிழர்களையும் ஏனைய சிறுபான்மை மக்களையும் இரண்டாம் தரக் குடிமக்களாகவே பார்க்கிறது, நடத்துகிறது.

இந்த அரசுக்கு தமிழர்களைப் பற்றி அக்கறையில்லை. அவர்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும் என்று அக்கறையில்லை. மீளக்குடியமர்ந்த தமிழ் மக்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்புவதற்கு உதவ வேண்டும் என்பதில் அக்கறையில்லை. அப்படி அக்கறையிருந்திருந்தால் அவர்களுக்குத் தேவையான உதவிகளை இந்த அரசு செய்திருக்கும். அப்படி உதவி செய்வதற்கு நிதி இல்லை, வசதியில்லை என்று கூறும் இந்த அரசுதான் உரிய காலத்துக்கு முன்னரே 66 மில்லியன் ரூபாவைச் செலவிலிட்டு 3 மாகாண சபைகளுக்குத் தேர்தல்களை நடத்துகிறது.

இந்த அளவுக்கு அதன் அரசியல் தேவைகள் தான் முக்கியமானவையே தவிர, தமிழர்களின் நலன்கள் அல்ல. அவர்களைச் சமத்துவத்துடன் நடத்துவதற்கும் இந்த அரசு தயாராக இல்லை. தமிழர்கள் மீதான தனது அடக்குமுறைகளுக்கு நியாயம் கற்பிப்பதற்காக ஒவ்வொரு காரணத்தை சர்வதேசத்திடம் முன்வைக்கத்தான் இந்த அரசு முயல்கிறதே தவிர தமிழர்களையும் தம்முடன் சேர்த்துக் கொண்டு நாட்டில் நல்லாட்சி நடத்த அது முயலவில்லை.

இடம்பெயர்ந்துள்ள எஞ்சிய தமிழ் மக்களையும் உடனடியாக அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி தமிழர்களை இயல்பு வாழ்வுக்குத் திரும்ப அனுமதித்து இந்த நாட்டில் அவர்களும் சம மதிப்புக் கொண்ட குடிமக்கள் தான் என்பதை அரசு நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் சாத்வீகமான அரசியல் போராட்டங்களுக்கு மீண்டும் திரும்புவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை என்பதை இங்கு ஆணித்தரமாகக் கூறி வைக்க விரும்புகிறேன்.

சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இல்லையேல் ஆயுதச் சண்டை இல்லாமல் போனதால் கிடைத்த அமைதி தொடர்வதற்கு வழியில்லாமல் போய்விடும் என்றார்.

# மகேஸ்வரி நிதியத்தை சட்டபூர்வமாக்க வேண்டாம் குடாநாட்டுக் கொலைகளின் பின்னணியில் மறைக்க முடியாத அரசியல் காரணங்கள்

**சபையில் சரவணபவன் எம்.பி.திட்டவட்டம்**

யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் கொலைகள் மறைக்க முடியாத அனைத்துக்கும் பின்னணியில் அரசியல் காரணங்கள் உள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ளன என்ற அறிவிப்பு வெளியான பின்னரே இந்தச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

உங்கள் அனைவருக்கும் முன்பாகவும் மற்றொரு தடவை தமிழ் மக்களின் படுகொலைகள், ஆள் கடத்தல்கள், களவு, கொள்ளைகள் குறித்துப் பேசுவதற்காக நான் இங்கு எழுந்து நிற்பதையொட்டி மிக வேதனை அடைகின்றேன். இந்த நாட்டில் போர் முடிவடைந்துவிட்டது இனி ஒரு துப்பாக்கிக் குண்டுகூட வெடிக்காது என்று மேன்மைதகு ஜனாதிபதி 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி அறிவித்தார். வழக்கம்போலவே அந்த அறிவிப்பு இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கானதாகவும் தென்பகுதிக்கு ஆனதாகவும் மட்டுமே இருக்கிறது. போர் முடிவுக்கு வந்ததன் பயனைத் தெற்கு மக்கள் அனுபவித்து வருகின்ற அதேவேளை, ஏனோ இந்த நாட்டின் தமிழர் பகுதிகளில் மட்டும் அறிவிக்கப்படாத ஒரு சண்டை நடந்து கொண்டிருக்கிறது. அங்கு இன்றும் துப்பாக்கிகள் வெடிக்கின்றன. மக்கள்

கொல்லப்படுகிறார்கள், கொள்ளைகளும், களவுகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. போர் முடிவுக்கு வந்துவிட்டதான உணர்வு இன்னும் வடக்கில் உள்ள மக்களுக்கு ஏற்படவே இல்லை. இந்த நிலைமைகள் தொடர்வதைப் பார்க்கும்போது இந்த நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் மேன்மை தங்கிய ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் இல்லாமல் வேறொரு ஆட்சியின் கீழ் இருக்கின்றதா என்கிற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. உண்மை அப்படியாக இருந்தால் பல ஆயிரம் சிங்கள இளைஞர்களையும் தமிழ் இளைஞர்களையும் பலி கொடுத்துப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததில் பயனேதும் இல்லை.

சக உறுப்பினர்களே நீங்கள் தெற்கில் பொருளாதாரப் போர் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்ற அதே சமயத்தில் வடக்கில் அறிவிக்கப்படாத ஒரு போர் நடந்து கொண்டிருக்கிறது. கடந்த ஒரு மாத காலத்துக்குள் அங்கே நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். மேலும், இருவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். மூவர் கடத்தப்பட்டுள்ளார்கள். பத்துக்கும் மேற்பட்ட பெரும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. களவுகள் நாளாந்தத் தொடர் கதை ஆகியுள்ளன.

11.12.2010 அன்று சங்கானை இலுப்பைத்தாழ்வு முருகமூர்த்தி ஆலயப் பிரதம குருவின் வீட்டினுள் ஆயுதத்துடன் நுழைந்த குறைந்தது நால்வர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்துடன் இந்த அறிவிக்கப்படாத போர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த ஆயுததாரிகளில் இருவர் இராணுவச் சிப்பாய்கள் என்பதை வடக்கின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவே ஏற்றுக் கொண்டுள்ளார். சிப்பாய்களிடம் இருந்து வேறு இருவர் (இவர்கள் முன்னாள் போராளிகள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அரசின் எந்தப் புனர்வாழ்வு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்றதற்கான உத்தியோகபூர்வ ஆதாரங்கள் ஏதும் இல்லை அதே சமயம் போர் உக்கிரமாக நடந்த வருடங்களில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் அரசுடன் சேர்ந்தியங்கிய முன்னாள் ஆயுதக் குழுவின் உறுப்பினர்கள் என்று அப்பகுதி மக்கள் என்னிடம் தெரிவித்தார்கள். இது பற்றிய உண்மை நிலை விசாரிக்கப்பட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படவேண்டும்) ஆயுதங்களை வாங்கிச் சென்றார்கள் என்று இராணுவத் தரப்பில் காரணம் சொல்லப்பட்டது. ஆனால் கொள்ளையில் தமது வீட்டுக்குக் குறைந்தது நால்வர் ஆயுதங்களுடன் வந்தார்கள் என்று கூறியுள்ள குருக்கள் வீட்டினர் அவர்கள் நால்வரையும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் வைத்து அடையாளமும் காட்டி உள்ளனர். அன்றைய சம்பவத்தில் காயமடைந்த ஆலய பிரதம குரு நித்தியானந்தக் குருக்கள் 15.12.2010 அன்று சிகிச்சை பயனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில் அவரது மகன்மார் இருவர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

கல்விப் பணிப்பாளரின் மரணத்தில் பின்னணி என்ன?

26.12.2010 அன்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் மா.சிவலிங்கம் உரும்பிராயில் உள்ள தனது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். தனியே

வந்த ஆயுததாரி ஒருவன் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளான். பிரதிக் கல்விப் பணிப்பாளரின் கொலைக்குப் பின்னால் அரசியல் காரணங்கள் இருக்கின்றன என்று மக்கள் சந்தேகிப்பதற்கு ஏதுவான காரணங்களாக இருக்கின்றன.

தேசிய கீதத்தை சிங்களத்தில் பாடபாடசாலை மாணவர்களை அவர் அனுமதிக்கவில்லை என்ற காரணத்துக்காகவும், தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் யாழ்.பாடசாலை மாணவர்களை சிங்கள தேசிய கீதம் பாடச் சொல்லி வற்புறுத்தியதை அவர் வன்மையாகக் கண்டித்தார் என்ற காரணத்துக்காவுமே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் இருக்கிறது. கௌரவ சபாநாயகர் அவர்களே! மக்களின் இந்தச் சந்தேகம் தவறானதாகக் கூட இருக்கலாம். அதனைத் தெளிவுப்படுத்த வேண்டியதும் உண்மையை மக்கள் முன்கொண்டு வர வேண்டியதும் அரசினுடைய மிக முக்கிய கடமை. அதைச் செய்யும்போது மட்டுமே இது தங்களுடையதுமான அரசு என்று வடக்கில் உள்ள மக்கள் எண்ணத் தலைப்படுவர். அதை விடுத்து சம்பவங்களுக்குச் சப்பைக்கட்டுக் கட்டி, பூசி மெழுவதால் எந்தப் பயனும் இல்லை. இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால்- அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த வாரம் தமிழ் வாரப் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சித்த சுவாதீனமற்றவர் என்றும்- அதனால் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாகவே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார். சித்த சுவாதீனமற்றவர் அதற்கான மனநல வைத்தியசாலைக்கு அனுப்பப்பட வேண்டுமே தவிர இந்த உலகை விட்டே அனுப்பப்பட வேண்டியவர் அல்லர் என்பதை இந்தச் சபையிலுள்ள பெருமைக்குரிய உறுப்பினர்களாகிய நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள் என்றே நினைக்கிறேன். அதிகபட்சமாக மூன்று சம்பவங்கள் ஒரே நாளில் நடந்துள்ளன. தீவுப் பகுதியான காரைநகரில் எஸ்.சிவனேஸ்வரராஜா என்பவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். இவரது மரணமும் இயற்கையானது அல்ல என்று மருத்துவர் பரிசோதனை அறிக்கை கூறுகின்றது. அதேதினம் மாலை 5.30 மணியளவில் வடமராட்சி அல்வாயில் ஆறு பிள்ளைகளின் தாயாரான திருமதி புஸ்பாதேவி யோகநாதன் கடத்தப்பட்டார். இன்னும் அவர் வீடு திரும்பவில்லை. இந்தச் சம்பவம் நடைபெற்ற சில மணி நேரங்களில் வடமராட்சி கிழக்கு குடத்தனையில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். தவராசா கேதீஸ்வரன் (வயது-28) என்ற அந்த இளைஞரின் வீட்டுக்குக் ஹெல்மேட் அணிந்து சென்ற இருவர் அவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். கொலையாளிகளை அடையாளம் கண்டுவிட்டுத் தப்பி ஓட அவர் முயற்சித்த போதே தலையில் சுடப்பட்டார் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. தனது பகுதியின் முன்னேற்றத்திலும் இயற்கைச் சூழலிலும் அக்கறை கொண்ட ஓர் இளைஞர் அவர். குடத்தனைப் பகுதியில் (மண் அகழப்படுவதால் ஏற்படும் பாதிப்புக்களை அவர் வெளிச்சம் போட்டுக் காட்டி வந்தார். இந்தப் பகுதியில்) மணல் அகழ்வில் ஈடுபடும், சட்டபூர்வமற்ற முறையில் இயங்கும் மகேஸ்வரி நிதியம் மக்களிடம் இருந்து பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுள்ளார்கள். மக்கள் இப்போது அதற்கெதிராகக் கொதித்தெழுந்துள்ளார்கள்.

**மகேஸ்வரி நிதியத்தை சட்ட பூர்வமாக்காதீர்**

அமைச்சர் டக்ளஸ் தலைமையில் இயங்கும் மகேஸ்வரி நிதியத்தை மணல் அள்ளவிடாமல் எதிர்க்கிறார்கள். ஏனெனில் மணல் அகழ்வதன் மூலம் கோடிக்கணக்கான பணத்தை இந்த நிதியம் மக்களிடமிருந்து சுருட்டிக் கொண்டுள்ளது. இந்தச் சட்டபூர்வமற்ற நிதியத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனையடுத்து நிதியத்தை சட்டபூர்வமாக்குவதற்காக அதனை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்துள்ளார்கள். இந்த உயர் சபை அதனை அனுமதிக்கக் கூடாது, அங்கீகரிக்கக் கூடாது என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். குடத்தனையில் கொல்லப்பட்ட இளைஞரான கேதீஸ்வரனை ஈ.பி.டி.பி. கட்சியினர் நன்கறிந்திருந்தனர். அவரது மரணச் சடங்கிலும் ஈ.பி.டி.பி. யினர் பலர் கலந்துகொண்டனர்.

புதிய வருடத்தின் முதல் நாளில் உரும்பிராயைச் சேர்ந்த ஓட்டோச் சாரதியான எஸ்.கோபிநாத் (வயது- 27) கடத்தப்பட்டார். ஆணும் பெண்ணுமாக இருவர் இவரது ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திச் சென்றுள்ளனர். (அதன் பின்னர் ஓட்டோவும் மீட்கப்படவில்லை. அவரும் திரும்பி வரவில்லை. கௌரவ சபாநாயகர் அவர்களே! நேற்றுமுன்தினம் கூட ஒருவர் காணாமற் போயுள்ளார். உரும்பிராய் யோகபுரத்தைச் சேர்ந்த மகாலிங்கம் அமுதராசா (வயது-35) என்கிற இளம் குடும்பஸ்தரே காணாமற் போனவர் என அவரது குடும்பத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர்) இந்தச் சம்பவங்கள் அனைத்தையும் பார்க்கும் போது அவற்றில் ஒரு தொடர்ச்சியையும் திட்டமிடப்பட்ட செயற்பாட்டையும் அனைவராலும் அவதானிக்க முடியும். ஆனால் இந்தச் சம்பவங்களுக்கு அரசியல் நலன்புரி நிலையங்களில் புனர்வாழ்வு பெற்றுத் திரும்பியவர்களைக் காரணம் காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், இராணுவத் தரப்பினரும் இப்போது நடப்பவை தனிப்பட்ட காரணங்களுக்கானவை என்றும்-கொழும்பு போன்றே யாழ்ப்பாணத்தில் ஒரு பாதாள உலகக் கோஷ்டி இயங்குவதாகவும் மக்களை நம்பவைக்க முயற்சிக்கின்றனர். ஆனால் இங்கே நேற்று அவசரமாக உரையாற்றிய அமைச்சர்-மக்கள் முன் தான் வழமையாகத் தெரிவிக்கும் காரணங்களை விட்டுவிட்டு அச்சம்தரும் சூழலை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை எழுப்பியது முதலைக் கண்ணீர் வடிப்பது போலிருந்தது.

இந்தச் சபையின் முன்னால் நான் திட்டவட்டமாகக் கூறிக்கொள்வது, இந்தக் கொலைகள் அனைத்துக்கும் பின்னால் அரசியல் காரணங்கள் உள்ளன என்பதைத்தான். உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறப்போகின்றன என்ற அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னரே இத்தகைய சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன என்பதை நோக்கும்போது யாழ்ப்பாண மக்களைத் தொடர்ந்தும் அச்சத்தின் பிடியில் வைத்திருக்க விரும்பும் சக்திகளே இதனைச் செய்கின்றன. என்பது வெளிப்படையானது. மக்கள் வெளியே வந்து சுயமாக வாக்களித்தால் தாங்கள் வெற்றிபெற முடியாது என்று நம்பும் சக்திகளே இதனைச் செய்கின்றன. ஜனநாயகம் என்ற போர்வையில் ஆயுத அரசியலை நடத்தி வந்த இந்தச் சக்திகளால், அது இன்றி மக்களைச் சந்திக்க முடியாதுள்ளது. இதனாலேயே தேர்தல் நெருங்கும்போது

அவை மீண்டும் ஆயுதங்களைத் தங்கள் கைகளில் எடுத்துள்ளன. கடந்த முப்பது வருடங்களாக மக்கள் பல்வேறு தரப்பினரின் கைகளில் ஆயுதங்களைப் பார்த்துப் பழக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களிடம் அரசியல் தெளிவு இருக்கின்றது. எனவே, இந்த ஆயுத அரசியல் குழுக்கள் தமது கற்பனை உலகில் இருந்து வெளியே வரவேண்டும். கொலை கலாசாரத்திலிருந்து வெளியே வரவேண்டும்.

கடந்த 15 ஆண்டுகளாக யாழ்ப்பாணம் இறுக்கமான இராணுவக் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்து வருகிறது. ஆனால் இங்கு நடைபெற்ற கொலைகள், கடத்தல்கள், காணாமற் போனவைகள் குறித்து இதுவரை ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதில்லை. அதற்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு தண்டிக்கப்படவில்லை.

மற்றொரு விடயத்தையும் இங்கு உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் குற்றச் செயல்கள் குறித்த தகவல்களை நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பெறுவதற்கான உரிமை எமக்கு மறுக்கப்படுகிறது. அது பற்றிப் பொலிஸாரிடம் கேட்டால், அவர்கள் தகவல்களை தர மறுப்புத் தெரிவிக்கிறார்கள். எங்கு குற்றச் செயல்கள் நடந்தன? யார் அதில் பாதிக்கப்பட்டனர் என்ற விவரங்கள் தெரிந்தால் அந்த மக்களைச் சென்று பார்த்து அவர்களிடம் பேசுவதன் மூலம் கிடைக்கும் தகவல்களை பொலிஸாருடன் நாம் பகிர்ந்துகொள்ள முடியும். அது அவர்களின் விசாரணைகளுக்கும் உதவியாக அமையும். இதனை ஏதோ புரிந்துகொள்ள அவர்கள் மறுக்கிறார்கள். எல்லாவற்றையும் அரசியல் நோக்கத்துடனும் இனரீதியாக கண்ணோட்டத்துடனும் நோக்கும் பாதுகாப்பு அதிகாரிகளால் இன நல்லிணக்கத்தை இந்த நாட்டில் ஏற்படுத்த முடியாது. யாழ்ப்பாணத்தில் போதியளவு தமிழ்ப் பொலிஸார் கடமையில் இல்லாமை, நிலைமை மேலும் சிக்கலாக்குகிறது. குற்றச் செயல்கள் குறித்து தகவல் தெரிவிக்க பொலிஸ் நிலைய தொடர்பு இலக்கங்களுக்கு மக்கள் அழைத்தால் மொழிப்பிரச்சினை காரணமாகத் தகவல் பரிமாற்றம் சரிவர நடைபெறுவதில்லை. சம்பவம் நடைபெற்ற உடனேயே பொலிஸாருக்குத் தகவல் கொடுத்து அவர்களை வரவழைக்கத் தங்களால் ஒருபோதும் முடிந்தது இல்லை என்று மக்கள் குறைப்படுகிறார்கள். இவற்றையும் நிவர்த்திக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இந்த நாட்டில் தெற்கில் உள்ள மக்கள் அனுபவிக்கும் அனைத்துச் சுதந்திரத்தையும் அமைதியையும் பாதுகாப்பையும் வடக்கில் உள்ள மக்களும் அனுபவிப்பதை இந்தச் சபையும் ஜனாதிபதியும் உறுதிப்படுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள் கிறேன். இன்றும் கொல்லப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாக இருக்கின்ற நிலையில் தமிழ் இளைஞர்கள் தமக்கான சுய பாதுகாப்பைத் தேடவேண்டிய நிலைக்கு மீண்டும் அவர்களைத் தள்ளி விடாதீர்கள் என்றும் இந்த நாடு இன்று சென்றுகொண்டிருக்கும் அபிவிருத்தி நோக்கிய பாதையில் தொடர்ந்தும் இடையூறின்றிப் பயணிப்பதை உறுதிப்படுத்துங்கள் என்றும் உங்கள் அனைவரையும் இந்தத் தருணத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்-என்று தெரிவித்தார்.

# தற்போதைய கைது நடவடிக்கைகள் தமிழரை ஒடுக்கும் சதியின் அங்கம். அது பயங்கரவாதத் தடை நடவடிக்கையின் பகுதியே அல்ல

**என்கிறார் சரவணபவன் எம்.பி.**

"ஜெயகுமாரியும், அதன் பின்னர் இந்தச் சம்பவங்களின் உண்மைத் தன்மையை அறிய முயன்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான றூகி பெர்னாண்டோ மற்றும் வண பிதா பிரவீன் ஆகியோரும் கைது செய்யப்பட்டமை உண்மையில் பயங்கரவாத தடை நடவடிக்கையின் ஒரு பகுதியே அல்ல. அது, தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க விரும்பும் இந்த அரசின் சதித்திட்டத்தின் ஓர் அங்கம்" என்று குற்றஞ்சாட்டி இருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையின் முழுமையான வடிவம் இங்கு பிரசுரமாகிறது:

இந்த உரையின் ஆரம்பத்திலேயே எனக்கொரு சந்தேகம். முடிந்தால் நீங்கள் பதில் சொல்லுங்கள். இலங்கையின் பொலிஸ் படை சிங்கள மக்களுக்கு மட்டுமானதா அல்லது சகல இன மக்களுக்குமானதா?

இந்தக் கேள்வி ஏன் எழுந்தது என்றால், ஆயுத மோதல் முடிந்துவிட்ட கடந்த ஐந்து ஆண்டுகளில் பொலிஸாரால் பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர்கள் மீது மட்டுமே பிரயோகிக்கப்பட்டுள்ளது. தெற்கிலோ சிங்கள மக்களுக்கு எதிராகவோ அந்தச் சட்டம் கடந்த 5 ஆண்டுகளில் பயன்படுத்தப் படவில்லை. ( றூகி பெர்னாண்டோ ஒரு புறநடை ) ஆனால் வடக்கு, கிழக்கில் என்றால் எதற்கெடுத்தாலும் பயங்கரவாதத் தடைச்

சட்டத்தைப் பயன்படுத்தி, குறைந்தது 3 மாதங்களுக்குத் தடையுத்தரவைப் பெற்றுவிடுகிறார்கள் இந்தப் பொலிஸார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மூவருக்கு எதிராகவும் இதுதான் நடந்தது. அதன் பின்னர் யாழ்ப்பாணம் உட்பட வடக்கிலே கைது செய்யப்பட்ட சுமார் 40இற்கும் மேற்பட்டவர்களுக்கும் இதுதான் நடந்தது. இப்போது ஜெயகுமாரிக்கு எதிராகவும் இதுதான் நடந்திருக்கிறது. இதே சட்டத்தைப் பயன்படுத்தித் தான் சில நாள்களுக்கு முன்னர் அருட்தந்தை பிரவீன் மகேசன் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர் றூகி பெர்னாண்டோ ஆகியோரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தமிழர்களைக் கைது செய்வதென்றால் மட்டும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாகக் கையில் எடுத்துக் கொள்ளும் இந்தப் பொலிஸார் தமிழ் மக்களுக்குமுரிய பொலிஸாரா இல்லை சிங்கள மக்களுக்கு மட்டும்தான் பொலிஸ ாரா என்று எனக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சந்தேகம் நியாயமானது என்பதை இப்போது நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

அண்மையில் கிளிநொச்சி தருமபுரத்தில் நடந்த சம்பவத்தை உங்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். ஏனெனில், தமிழர்கள் இந்தப் பொலிஸ் படையால் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுவது அப்போதுதான் உங்களுக்குப் புரியும்.

அண்மையில் திருநகரில் ஜெயகுமாரியும் அருட்தந்தை மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளரும் கைதுசெய்யப்பட்டனர். அந்தக் கைது நடவடிக்கையின்போது கிளிநொச்சி, தருமபுரத்திலே நடந்தது பற்றிப் பொலிஸார் இப்படிச் சொன்னார்கள். பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புடையவர் என்ற காரணத்துக்காகத் தேடப்படும் நபரைப் பிடிக்கச்சென்ற பொலிஸாரில் ஒருவரைச் சுட்டுவிட்டு அவர் தப்பிவிட்டார். தப்பி ஓடிய நபர் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர். புனர்வாழ்வுக்கு உட்படாமல் தப்பிவிட்டவர். பொலிஸ் பேச்சாளர் சகல ஊடகங்களுக்கும் இதனைச் சொல்லியிருந்தார். அத்துடன் பிரிவினையை ஊக்குவித்து, தேடப்படும் நபருக்கு ஆதரவாகச் செயற்பட முற்பட்டார்கள் என்ற காரணத்துக்காகவே அருட்தந்தையும் மனித உரிமைச் செயற்பாட்டாளரும் கைது செய்யப்பட்டார்கள் என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

ஜெயகுமாரி கதையில் பொலிஸார் சொன்னதற்கும் பூஸா சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெயகுமாரி கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் சொன்ன வாக்குமூலத்துக்கும் எவ்வளவு வித்தியாசம் என்பதை இங்கு கவனியுங்கள். ஜெயகுமாரியின் வாக்குமூலம் இப்படி இருக்கிறது.

எனது வீட்டின் முன்பக்க வேலிக்கு மேலாக திடீரென ஒருவர் பாய்ந்து வந்தார். நான் பயந்துபோய் எனது மகளையும் கூட்டிக்கொண்டு வெளியே ஓடிப்போனேன். வீதியில் வாகனத்துடன் பொலிஸார் நின்றிருந்தனர். அவர்கள் என்னிடம் எனது பெயரை ஒத்த ஒரு பெயரைக் கூறி அவர் எங்கிருக்கிறார் என்று கேட்டனர். அப்படி ஒருவர் இருக்கிறாரா என்று நான் யோசிக்கையில் எனது பெயரைக் கூறி அவரைத்

தெரியுமா என்று கேட்டனர். அது நான்தான் என்று அவர்களிடம் சொன்னேன். உடனே அவர்கள் என்னையும் எனது மகளையும் அவர்களது வாகனத்துக்கு அருகில் அமர வைத்துவிட்டு வீட்டுக்குள்ளே சென்றனர். சிறிது நேரத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. அதன் பின்னர் எங்களைக் கைது செய்து கொண்டு வந்துவிட்டனர். இப்படி ஜெயகுமாரி தனது வாக்குமூலத்தில் கூறியிருக்கிறார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தார் எனக்கூறப்படும் பொலிஸாருக்கு ஒரு தொடையின் பக்கவாட்டில் நுழைந்த துப்பாக்கிக் குண்டு, மறுபுறமாக வெளியேறி மற்றைய தொடையையும் உரசிச் சென்றுள்ளது என்று கிளிநொச்சி வைத்தியசாலைத் தகவல்கள் கூறுகின்றன. தான் வீட்டுக்குள் சென்று கட்டிலின் கீழே குனிந்து பார்த்தபோது அங்கு ஒளிந்திருந்த ஒருவர் தன்னைச் சுட்டார் என்று காயமடைந்த பொலிஸ்காரர் தனது நண்பர்களுக்கு கூறியிருக்கிறார் என்று நான் அறிந்தேன்.

இப்படி ஒன்றுக்கொன்று முரணான கதைகளும் காட்சிகளும் சோடிக்கப்பட்டவை யாகத் தெரிகையில், பொலிஸ் பேச்சாளர் என்ன சொல்கிறார்? தேடப்பட்ட நபர் அந்த வீட்டில் இருந்தார் என்பதை நன்கு அறிந்துதான் பொலிஸார் அந்த வீட்டுக்குச் சென்றார்கள் என்று சொல்கிறார். இது அனேகமாக சகல ஊடகங்களிலும் வெளியாகி இருக்கும் அவரது கருத்து.

பொலிஸ் பேச்சாளரின் இந்தக் கருத்தும் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்த்தவன் என்ற வகையில் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் எனக்குள் எழுப்பும் கேள்விகள் பல. அந்த வீட்டில் தாங்கள் தேடும் நபர் இருக்கிறார் என்று அறிந்தே அங்கு சென்றார்கள் என்று பொலிஸார் கூறுவராயின், பயங்கரவாதச் செயலுடன் தொடர்புடைய சந்தேகநபரைக் கைது செய்வதற்கு சென்ற பொலிஸார் அவர் இருந்த வீட்டைச் சுற்றிவளைக்காமல் ஏன் விட்டார்கள்? ஆபத்தான ஒருவர் வீட்டினுள் இருக்கிறார் என்று தெரிந்தும் பொலிஸாரில் ஒருவர் மட்டும் ஏன் வீட்டுக்குள் புகுந்து தேடினார்? அப்போது ஏனைய பொலிஸார் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

சம்பவம் நடந்த இடத்துக்கு வெகு அருகில் ஓர் இராணுவ காவல் நிலை இருக்கிறது. ஏனைய பக்கங்கள் வயல்வெளிகளால் சூழப்பட்டுள்ளன. வீட்டின் முன்புறத்திலே பொலிஸார் நிற்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அந்தச் சந்தேகநபர் தப்பியோடிவிட்டார் என்கிறார்கள் பொலிஸார். இது எப்படிச் சாத்தியமாகும்? துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்ட பின்னரும் ஒரு சந்தேகநபர் வயல்வெளிகளுக்குள்ளால் தப்பியோடும்போது மற்றைய பொலிஸார் அவரைத் துரத்திச் சென்றோ, அல்லது கால்களின் கீழ் சுட்டுத்தானுமோ பிடிக்காமல் என்ன செய்தார்கள்? இதையெல்லாம் செய்யாமல் அவர்கள் அங்கே என்ன திருடன் - பொலிஸ் விளையாட்டு விளையாடவா போனார்கள்?

அடுத்தது, கட்டிலின் கீழே ஒளிந்திருந்த ஒருவர் தன்னைக் குனிந்து தேடிய பொலிஸாரின் முகம் நெஞ்சு என்பவற்றை விட்டுவிட்டு தொடையில்தானா சுடுவார்? சரி! சுட்டவருக்குத்தான் சரியாகச் சுடத் தெரியவில்லை (இப்படிப்பட்டவர்

தலைமையில்தான் புலிகள் இயக்கம் மீண்டும் ஒருங்கிணைய முயற்சிக்கிறது என்று ஜெனிவாவில் அரசு கதை சொல்கிறது என்பது வேறு விடயம்) தொடையில் சுட்டார் என்று வைத்துக் கொண்டாலும், அவரைப் பிடிக்கச் சென்ற பொலிஸா ஏன் ஆயுதம் ஏதும் இல்லாமல் வெறும் கையை வீசிக் கொண்டு போனார்? பொதுமக்களின் ஆர்ப்பாட்டம் என்றாலே தடிகள், பொல்லுகள் கண்ணீர்புகைக் குண்டுகள், ஆயுதங்கள் எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டுவரும் பொலிஸார், தாமே பயங்கரவாதி எனக்கூறும் ஒருவரைப் பிடிப்பதற்கு மட்டும் ஏன் வெறுங்கையை வீசிக்கொண்டு சென்றார்கள்? அது என்ன அவர்களது மாமன் வீடா, மச்சான் வீடா? எந்த முன்னெச்சரிக்கையும் இன்றிச் சென்று வெடி வாங்கிக் கொண்டு திரும்ப!

ஜெயகுமாரியும், அதன் பின்னர் இந்தச் சம்பவங்களின் உண்மைத் தன்மையை அறிய முயன்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான றூகி பெர்னாண்டோ மற்றும் வணபிதா பிரவீன் ஆகியோரும் கைது செய்யப்பட்டமை உண்மையில் பயங்கரவாத தடை நடவடிக்கையின் ஒரு பகுதியே அல்ல. அது, தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க விரும்பும் இந்த அரசின் சதித்திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

வடக்கிலே பொலிஸார் நிலைநிறுத்தும் நீதி இதுதான். அவர்கள் ஒரு கண்ணில் வெண்ணெயும் மறுகண்ணில் சுண்ணாம்புமாகத் திரிகிறார்கள். தமிழர்கள் துரதிர்ஷ்டவசமாக பொலிஸார் சுண்ணாம்பு வைத்திருக்கும் கண்களின் கீழே சிக்கிக் கொண்டார்கள்.

பாருங்கள்! வண பிதா பிரவீன் மகேசனையும் மனித உரிமைச் செயற்பாட்டாளர் றூகி பெர்னாண்டோவையும் பிரிவினையை ஊக்குவித்தவர்கள், பயங்கரவாதச் செயலுக்காகத் தேடப்படும் நபருக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் என்பதற்காகவே கைது செய்தார்கள் என்று சொன்ன பொலிஸார் பின்னர் நடுச்சாமத்தில் அவர்கள் இருவரையும் விடுவித்து விட்டு விட்டார்கள். அவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டதன் அர்த்தம் என்னவென்றால், அவர்களுக்கும் பொலிஸார் சொன்ன குற்றச்சாட்டுக்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதுதான்.

நான் இங்கே சிங்கள மேலாதிக்கவாத பொலிஸ் சிந்தனை என்று ஏன் கூறுகின்றேன் என்றால், தமிழர்கள் பாதிக்கப்படும் போதெல்லாம் அது குறித்து பரிவுடன் அணுகாத பொலிஸார், இந்த நாட்டில் சிங்களவர்கள் தமிழர்களால் அல்லது ஏனைய இனத்தவர்களால் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் ஓடோடிச் சென்று உதவுகிறார்கள். அப்படியானால் அது சிங்கள மேலாதிக்கவாத பொலிஸ் சிந்தனைதானே!

அதற்கும் ஓர் உதாரணத்தை நான் உங்களுக்குத் தருகிறேன். இது சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடந்தது. திருமணமாகாத தமிழ் இளம் பெண் ஒருவர் கர்ப்பமடைந்தார். தற்கொலைக்கு முயன்று தோற்ற அவர், வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட போது அவர் கர்ப்பம்

தரித்திருப்பது தெரியவந்தது. வைத்தியசாலையில் மருத்துவ அதிகாரிகள் நடத்திய விசாரணையின்போது தன்னை விசாரணைக்கு என அழைத்துச் சென்ற இராணுவத்தினரே தனது கர்ப்பத்துக்குக் காரணம் என்று அந்த இளம் பெண் தெரிவித்துள்ளார். அது வைத்தியசாலை அறிக்கைகளில் பதியப்பட்டதை அடுத்து, அந்த விவகாரம் நீதிமன்றத்தின் கவனத்துக்குப் போனது. அதனை முழுமையாக விசாரணை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்ற பொலிஸார், அந்தப் பெண்ணை வைத்தியசாலையின் பெண்கள் விடுதியில் வைத்துப் பகிரங்கமாக விசாரணை செய்தனர். ஏழெட்டுப் பொலிஸார் அந்தப் பெண்ணை இப்படிப் பகிரங்கமாக விசாரணை செய்வதாகத் தொடர்ந்து கொடுத்த மன உளைச்சலால், அந்த வழக்கைத் தான் தொடர விரும்பவில்லை என்றும் அதனை அப்படியே கைவிடும் படியும் அவர் பொலிஸாரிடம் மன்றாடினார். அவரது அந்த வாக்கு மூலத்தை அப்படியே பெற்றுக் கொண்டு அந்த வழக்கை முடித்து விட்டார்கள் பொலிஸார்.

இப்போது கூறுங்கள் சபாநாயகர் அவர்களே! ஒருவர் பாதிக்கப்பட்டால் அவரது முறைப்பாடு தொடர்பில் சந்தேகநபர்களிடம் விசாரணை நடத்தி அவர்களை நீதியின் முன் நிறுத்த முயற்சிப்பீர்களா? அல்லது பாதிக்கப்பட்டவரைத் துன்புறுத்தி அவரது முறைப்பாட்டைத் திரும்பப் பெறச் செய்வீர்களா? அந்தப் பெண்ணின் முறைப்பாடு மீது இராணுவத்தினரிடம் பொலிஸார் எந்த விசாரணையை நடத்தினர் என்று நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்படவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது? சிங்களவர்களைப் பெரும்பான்மையிலும் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கக்கூடிய இராணுவத்தினரைக் காப்பாற்றுவதற்காக அப்பாவித் தமிழர்களை வதைப்பதையே இந்தப் பொலிஸ் தரப்பு தனது கடமையாக, கண்ணியமாக நினைக்கிறது என்று தெரிகிறது.

பொலிஸாரின் இந்தப் போக்கினாலும்தான் இந்த நாடு இன்று ஜெனிவா வரையில் விசாரணையை எதிர்கொண்டு நிற்கிறது. ஜெனிவாவில் கொண்டு வரப்படும் தீர்மானங்கள் என்ன சொல்கின்றன? குற்றவாளிகளைத் தப்பவிடும் போக்கு (இம்பியூ னிட்டி) முடிவுக்குக் கொண்டு வரப்படுவதுடன் பொறுப்புக்கூறல் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று சொல்கின்றன.

யாழ்ப்பாணத்திலே ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டன. அவை தொடர்பான முறைப்பாட்டில் ஒரேயொரு குற்றவாளியையாவது இந்தப் பொலிஸார் நீதியின்முன் இன்றுவரை நிறுத்தியிருப்பார்களா? இந்தப் பொலிஸார் இருக்கும்வரை தாம் தண்டிக்கப்படவே போவதில்லை என்ற துணிவினால்தானே இன்று ஊடகத்துறையினரும் தாக்கப்படுகின்றனர். ஊடகங்களும் திரும்பத் திரும்ப தாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பொலிஸார் தமது கடமையைச் சரிவரச் செய்திருந்தால், ஜெனிவாவிலே ஊடக சுதந்திரத்தை நிலை நிறுத்துவதற்காக இலங்கை மீது ஒரு தீர்மானம் வந்திருக்க வேண்டிய தேவையே ஏற்பட்டிருக்காதே. இந்த நாட்டில் நிரந்தர அமைதியும் நீடித்த

சட்ட ஆட்சியும் நிலை நிறுத்தப்படுவதற்காக ஐக்கிய நாடுகள் அமைதிப்படையை இங்கே வரவழைக்க வேண்டும் என்று நான் உங்களிடம் கோரிக்கை விடுக் கிறேன். அதேநேரத்தில் மனித உரிமைகள் சபையில் ஒவ்வொரு தீர்மானமாக நகர்த்தி அழுத்தம் கொடுப்பதன் மூலம் இலங்கை அரசை வழிக்கொண்டு வர முடியும் என்று சர்வதேச நாடுகள் நினைக்குமாக இருந்தால் அவர்களுக்கும் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜெனிவாவிலே மூன்றாவது தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட உள்ள சமயத்தில் இங்கே மனித உரிமை ஆர்வலர்களையும் உரிமை கேட்டுப் போராடும் தாய்மா ரையும் சிறையில் தள்ளுவதன் மூலம் அரசு உங்களுக்குச் சொல்ல வரும் கருத்து இந்த அழுத்தங்களுக்கெல்லாம் அடிபணியமாட்டோம் என்பதுதான். எனவே தமிழர் பிரச்சினையை உடனடியாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் எடுத்து இலங்கைக்கு ஐ.நா. அமைதிப்படை ஒன்றை அனுப்பி, இனப்பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வு ஒன்றை உடனடியாக நடைமுறைப்படுத்துவதுடன் நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் சர்வதேச சமூகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் தந்தை செல்வா சொன்னதுபோல, கடவுள்தான் இந்தத் தீவையும் காப்பாற்ற வேண்டும்.

# தமிழ் மக்கள் மீதான இரத்தம் சிந்தாத ஒரு யுத்தமே 18ஆவது திருத்தச் சட்டம்

**18ஆவது திருத்தச் சட்டம் மீதான பிரேரணையின்போது நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை**

தமிழ் மக்களாகிய நாம் எமது உரிமைகள் பறிக்கப்படும் போதெல்லாம் அவற்றைப் பாதுகாக்க முனைந்த காலங்களில் எம் மீது இரத்தம் சிந்துகிற அரசியல் திணிக்கப்பட்டது. இரத்தம் சிந்தினோம். உயிர்களை இழந்தோம். உடைமைகளைப் பறிகொடுத்தோம். எரியும் நெருப்பில் கருகிச் செத்தோம். இது கடந்த காலங்களில் நடந்து முடிந்த வரலாறு.

நாம் உரிமையுடன் கூடிய ஒன்றிணைந்த வாழ்க்கையைக் கோரிய போதெல்லாம் உதைத் துத்தள்ளப்பட்ட காரணத்தால் நாம் பிரிந்து போகவேண்டும் என எமது மக்கள் முடிவெடுத் தனர். வெறுங்கையுடன் நின்ற எமது மக்களை வேட்டையாடிய ஆயுதங்களுக்குப் பதில் கொடுக்க எமது இளைஞர்களும் ஆயுதத்தைக் கையிலெடுத்தனர்.

இரத்தம் சிந்தும் அரசியல் ஒரு பெரும் யுத்தமாக விரிந்தது. இரு தரப்பிலும் உயிர்களும் உடைமைகளும் பலிகொள்ளப்பட்டன. அழகிய இலங்கைத்தேசம் ஆயுத வியாபாரிகளுக்கும் அந்நிய சுரண்டல்காரர்களுக்கும் வேட்டைக் காடாகியது.

எமது இரு இனங்களினதும் அழிவிலும் அவலங்களிலும் தங்கள் சொந்த நலன்களை மேம்படுத்திக் கொண்ட அதிகாரபீடங்களும் அந்நிய தேசங்களும் எமது உரிமைப் போராட்டத்தை ஒடுக்க மூர்க்கத்தனமான முறையில் ஒருங்கிணைந்தன. சதிகள், துரோகங்கள், சுயநலன்கள் என்பன தோள்



கொடுக்க எமது இனத்தின் உரிமைப் போராட்டத்துக்கான ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலுடன் கருகிப்போனது.

அத்துடன் இரத்தம் சிந்துகின்ற அரசியல் ஒரு முடிவை எட்டியது. ஆனால் அண்றைய தினமே ஆரம்பித்த இரத்தம் சிந்தாத யுத்தம் முழு முனைப்புடன் மேலெழுந்தவிட்டது. அதாவது ஒவ்வொருநாளும் ஒவ்வொரு விநாடியும் தமிழ் மக்கள் மீது இரத்தம் சிந்தாத ஒரு யுத்தம் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இரத்தம் சிந்தாத யுத்தத்தின் ஓர் உயர்ந்த கட்டம்தான் இன்று இச்சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 18ஆவது அரசமைப்பைப்புத் திருத்தச் சட்டம்.

எமது மக்கள் என்று யுத்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வர ஆரம்பித்தனரோ அன்றே எமது மக்கள் மீதான இரத்தம் சிந்தாத யுத்தம் தொடுக்கப்பட்டுவிட்டது.

இன்னொருபுறம் காலம் காலமாக எமது மக்கள் வாழ்ந்த காணிகள் அபகரிக்கப்பட்டு அங்கு படை முகாம்களும் இராணுவக் குடியிருப்புக்களும் அமைக்கப்படுகின்றன. எமது மக்களோ எதிர்காலம் புரியாத நிலையில் இடைத்தங்கல் முகாம்களில் அவதிப்படுகின்றனர். ஆம்! இப்படியாக இரத்தம் சிந்தாத ஒரு யுத்தம் எமது மக்களின் மேல் தொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் ஓர் உயர்ந்த கட்டம்தான் இன்றைய 18ஆவது திருத்தச் சட்டம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே 13ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இரு தேசங்களுக்கு இடையேமேற்கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தம் வடக்கு, கிழக்கைப் பிரித்ததன் மூலம் அவமானப்படுத்தப்பட்டது. இன்றைய 18ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அது தன் ஜீவனையே இழக்கிறது.

இன்றோ அந்த நிலையிலிருந்தும் பலபடிகள் கீழிறங்கி இதற்குச்சட்ட அளவில் வழங்கப்பட்ட பொது நிர்வாக பொலிவு அதிகாரங்களும் பறிக்கப்படுகின்றன. இது தமிழ் மக்கள் மீது இந்த அரசு கொடுக்கும் இரத்தம் சிந்தாத யுத்தத்தின் ஓர் உச்சக் கட்டம் என்று சொல்வதில் என்ன தவறு இருக்க முடியும்? எனவேதான் இச்சட்டத்தை எதிர்ப்பது ஒவ்வொரு தமிழரினதும் தலையாய கடமை என இங்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஒருவரை நம்பவேண்டுமானால் அதற்குரிய அறிகுறிகள் வேண்டும். எம்மைப் பொறுத்தவரை அப்படியான எந்த ஒரு சமிக்ஞையையும் எம்மால் ஜனாதிபதியிடம் காணமுடியவில்லை. மாறாக எதிர்மாறான விளைவுகளே எங்கள் முன் காட்சியளிக்கின்றன.

இதுகாலவரை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு 13ஆவது திருத்தச் சட்டத்துடன் பிளஸ் தீர்வாக அமையும் எனக் கூறி வந்தவர் ஜனாதிபதி. ஆனால் இன்றைய திருத்தச்சட்டமூலத்தினால் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு வழங்கப்படுவது மைனஸ்தான்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போதும் பின் இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போதும் ஈ.பி.டி.பியினர் இணைந்த வடக்கு கிழக்கில் மாநில சுயாட்சி என்ற கொள்கையை முன்வைத்தனர். தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் அவர்களை ஏற்றுக்கொண்டு மூன்று உறுப்பினர்களைத் தெரிவு செய்தனர். அவர்களைத் தெரிவு செய்த அந்த மக்களுக்குப் பதில் சொல்லவேண்டிய கடப்பாடு அவர்களுக்கு உண்டு.

இன்றைய சட்டமூலம் பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில்கூட ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன. அதாவது மாநில சுயாட்சி என்ற அவர்களின் கொள்கையை இந்தச் சட்டமூலம் கையாலாகாததாக ஆக்கிவிட்டது.

இச்சட்டம் தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களைக்கூட ஒரு சர்வாதிகாரத்தின் குடைநிழலுக்குள் கொண்டு செல்கிறது என்பதை எமது சகோதர உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். சுயாதீன ஆணைக் குழுக்களாக மாறுகின்றன. சிங்கள மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாணசபைகள் சட்ட அதிகாரமற்றவையாக மாறுகின்றன எனத் தெரிவித்தார்.

# சுதந்திரத்துக்கும் மக்களுக்கும் இடையே பெரும் வெளியாக அவசரகாலச் சட்டம்

**அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் ஆற்றிய உரை**

**கௌ**ரவ சபாநாயகர் அவர்களே!

உலகப் புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளரான மாக்ஸிம் கோர்க்கி ஒருமுறை கப்பலில் அமெரிக்கா நோக்கிப் பயணம் செய்தார். கப்பல் துறைமுகத்தை நெருங்கிய வேளையில் ஓர் அமெரிக்கர் கரையில் தெரிந்த சுதந்திரச்சிலையைச் சுட்டிக்காட்டி "எமது சுதந்திரச்சிலை எவ்வளவு பிரமாண்டமானது பார்த்தீர்களா?" என்றாராம். அதற்கு ஒரு மெல்லிய சிரிப்புடன் கோர்க்கி "சிலை பிரமாண்டமானதுதான் ஆனால் அடித்தளம் மிகவும் சிறியது" எனப் பதில் அளித்தாராம். அதாவது அமெரிக்காவின் சுதந்திரம் பிரமாண்டமானதாகத் தோற்றமளித்த போதிலும் அதன் அடிப்படை குறுகிய தொகையினருக்கே கிடைக்கிறது என்பதனை அவர் கிண்டலாகச் சுட்டிக்காட்டினார்.

இதே நிலைமைதான் எமது தாய்நாட்டிலும் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. இன்று ஜனாதிபதியாலும் ஏனைய பல அமைச்சர்களாலும் "போர் முடிந்த பின்பு நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றோம்" - என்று கூறப்படுகின்றது. ஆனால் இன்றுவரை இந்தச் சுதந்திரம் இந்த நாட்டின் பெரும்பான்மையான சிங்கள, தமிழ், முஸ்லிம்களுக்கு எட்டாக்கனி யாகவே இருந்து வருகிறது.

சுதந்திரத்துக்கும் எமக்குமிடையேயான நெருங்கமுடியாத ஒரு பெருவெளியை ஏற்படுத்து வதில் அவசரகாலச் சட்டத்துக்கும் பெரும்பங்கு உண்டு என்பதை எவரும் மறந்து விடமுடியாது. நடைமுறையில் இந்தச் சட்டம் ஒரு குறுகிய

வட்டத்தினரின் அதிகார விருப்புக்களுக்கு இசைவாக இந்த நாட்டின் சுதந்திரத்தை குறுக்கிவிட்டது என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். இதனை நான் இங்கு ஒரு தேசிய அக்கறையுடன் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

இந்த நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை தேசிய இனங்களின் அடிப்படை உரிமைகள், உழைக்கும் மக்களின் நியாயமான கோரிக்கைகள், ஊடகச் சுதந்திரம் என்பனவற்றுக்குப் பங்கம் ஏற்படும் போதெல்லாம், எதிர்ப்புணர்வுகள் மேலெழும் போதெல்லாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு அவை கர்ணகடூரமான முறையில் அடக்கப்படுகின்றன.

இந்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு எதிராக மட்டுமன்றி சிங்களப் பொதுமக்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினருக்கும் எதிராக ஏவிவிடப்படுகிறது. சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டநீடிப்பை ஆதரித்து வழங்கும் வாக்கு அவர்களைத் தெரிவுசெய்த சிங்கள மக்களுக்கு எதிரான வாக்குகள் என்பது மறுக்கப்பட முடியாத ஓர் உண்மையாகும்.

ஆனால் சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள்கூடக் கைது செய்யப்படுகிறார்கள். ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் போன்ற ஜனநாயக வழியிலாக போராட்டங்களை நடத்துபவர்கள் கூடச் சிறையில் அடைக்கப்படுகின்றனர். அதாவது ஜனநாயக வழியில் கூட மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முடியாதவாறு இந்தச் சட்டம் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது.

இந்தச் சட்டத்தின் துணை கொண்டு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் காணாமற்போக வைக்கப்பட்டனர். ஏராளமான தமிழ்ப் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். எந்த ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்புமின்றிப் பல தமிழ் மக்கள் சிறையில் வாடுகின்றனர்.

அப்போதெல்லாம் இந்தச் சட்டத்துக்கு நீங்கள் ஆதரவு கொடுத்தீர்கள். அதாவது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீங்களும் துணை போனீர்கள்.

இன்று அதே சட்டம் உங்கள் ஜனநாயக உரிமைகளையும் மறுக்கிறது. உங்களைக் கைது செய்கிறது. உங்களைச் சிறைகளில் தள்ளுகிறது. எந்த அநியாயத்துக்குத் துணைபோனீர்களோ அந்த அநியாயம் இன்று உங்கள் மேலேயே பாய்கிறது. நாங்கள் உங்களிடம் கேட்பதெல்லாம் சிங்கள மக்கள் மேல் இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதைப் போன்று தமிழ் மக்கள் மேல் தொடுக்கப்படும் அநீதிகளுக்கும் எதிராகவும் குரல் கொடுங்கள். சிங்களவர் மட்டுமல்ல தமிழர், முஸ்லிம்கள் அனைவருமே இந்த நாட்டு மக்கள் என்பதை நடைமுறையில் ஏற்றுக்கொள்ளுங்கள்.

அண்மையில் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது கௌரவ அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அவர்கள் இந்த நாட்டில் எந்த ஓர் இனத்துக்கும் தனித்துவமான பிரதேசங்கள் இல்லையெனவும் எவரும் எங்கும் குடியேறி வாழமுடியும் என்றும் தெரிவித்திருந்தார். எவரும் எங்கும் குடியேறி வாழ்வதை எவருமே ஆட்சேபிப்பதில்லை.

ஒரு ஜனநாயக நாட்டில் சில தேவைகளின் அடிப்படையில் மக்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டு வேறு பிரதேசங்களில் குடியேறி வாழ்வது தவிர்க்க முடியாதது. ஆனால் பெரும் தொகையான மக்களைத் திட்டமிட்டுக் குடியேற்றுவதன் மூலம் குறிப்பிட்ட பிரதேசத்தின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க முயல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.



சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்கள் இந்த நாட்டின் தொன்மை வாய்ந்த தேசிய இனங்கள். ஒவ்வொரு இனமும் தங்களுக்கென தனித்துவமான கலாசார மரபுகளைக் கொண்டுள்ளன. அமெரிக்க நாட்டின் சுதேசிகளான சிறப்பு வாய்ந்த நாகரிகத்தைக் கொண்டிருந்த இன்கா, மாயா இன மக்கள் ஐரோப்பியர்களின் குடியேற்றங்களால் அழிக்கப்பட்டனர். அந்த இனங்கள் வாழ்ந்த சுவடே இல்லாமல் போய்விட்டது. இன்று முழு அமெரிக்காவும் ஐரோப்பியக் குடியேறிகளின் நாடாகிவிட்டது.

இப்படி ஒரு நிலைமை ஏற்படுவதை எந்த ஒரு தமிழனும் விரும்பமாட்டான் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறைகளே ஓர் ஆயுதப் போராட்டத்துக்கு வழிகோலின.

இன்று ஆயுதப் போராட்டம் பெரும் பேரழிவுகளின் பின்பு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது. ஆனால் ஆயுதப்போராட்டத்துக்கு அடிப்படைக் காரணமாக இருந்த ஒடுக்குமுறைகள் கைவிடப்படவில்லை. போரில் பட்ட வடுக்கள் இன்னும் ஆறாத நிலையில் நாம் மீண்டும் மீண்டும் காயப்படுத்தப்படுகிறோம். இது இனங்களுக்கிடையேயான நிரந்தர அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதைத் தடுத்துவிடும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

நிர்வாக சேவை என்பது மக்களுக்கும் அரசுக்கும் இடையேயான ஓர் உறவுப் பாலம் என்பதை நீங்கள் அறிவீர்கள். மக்களின் நாளாந்த தேவைகளை அந்தச் சேவையே நேரடியாக நிர்வாகம் செய்கிறது. ஆனால் இந்த வருடமும், கடந்த வருடமும் நிர்வாகசேவைப் போட்டிப் பரீட்சையில் ஒரு தமிழர்கூடத் தெரிவு செய்யப்படவில்லை. எதிர்காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களைச் சேர்ந்த சிங்கள அதிகாரிகளே நிர்வகிக்கும் நிலை தோன்றும்.

அதாவது சிங்களவர் ஆளும் இனமாகவும் தமிழர்கள் ஆளப்படும் இனமாகவும் மாறும் ஒரு துரதிர்ஷ்டவசமான நிலைமை உருவாகும். இது இனங்களுக்கு

இடையிலான ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டி வளர்க்காது. அதற்கு எதிரானது என்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் இன மேலாதிக்க சிந்தனையை வளர்த்து விடுவதன் மூலம் இனவாதத்தை மக்கள் மயப்படுத்தும் ஒரு திட்டமிட்ட சதி மேற்கொள்ளப்படுகிறதா என எண்ணத் தோன்றுகிறது.

ஓர் இனக்கலவரம் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு முயற்சிகளைத் திசை திருப்பவும் தடுக்கவுமான ஒரு சூழலை ஏற்படுத்தும் முயற்சியாகவும் இது இருக்கலாம்.

சுற்றுலாப் பயணிகளாக வந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தமிழ் மக்கள் புனிதமான ஆலயமாகக் கருதும் யாழ். பொதுநூல் நிலையத்துக்குள் அத்துமீறிப் புகுந்து புத்தகங்களை எடுத்துத் தரையில் வீசிப் பெரும் அடாவடித்தனத்தில் ஈடுபட்டனர். அதேபோன்று தமிழ் மக்களால் ஈழத்துக் காந்தி எனக் கொண்டாடப்படும் தந்தை செல்வாவின் தூபி அமைந்துள்ள வளாகத்துக்குள் புகுந்த சிலர் அங்கு பெரும் சேதங்களை விளைவித்தனர்.

இந்தச் சம்பவம் தமிழ் மக்களின் மனங்களைக் காயப்படுத்தும், அவர்களை உணர்ச்சிவசப்படுத்தும் நடவடிக்கைகளாகும். இவை பொலிஸார் முன்னிலையிலும் ஆயுதப் படையினரின் முன்னிலையிலுமே இடம்பெற்றன. இதற்காக யாரும் தண்டிக்கப்படவில்லை.

நாம் இந்தச் சந்தர்ப்பங்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் மேலும் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்க வேண்டும் என இந்தச் சபையைக் கேட்டுக் கொள்ள விரும்புறேன்.

இந்த அவசரகாலச் சட்டம் இன்று வரை தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை நிலைநிறுத்தவும் இனங்களுக்கிடையேயான கசப்புணர்வை வளர்க்கவும் ஜனநாயகப் பாரம்பரியங்களைக் காலில் போட்டு மிதிக்கவுமே பயன்பட்டுள்ளது. தமிழ் மக்களை நோக்கி ஏவி விடப்பட்ட இந்தச் சட்டம் இப்போது சிங்கள மக்களையும் நோக்கித் திருப்பப்பட்டுவிட்டது. எனவே நீங்கள் அனைவரும் இந்தச் சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களித்துத் தோற்கடிப்பதன் மூலம் இந்த நாட்டின் ஜனநாயக மரபுகளுக்கு ஏற்பட்ட கறையைத் துடைப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

# சிறைகளில் வதைபடுகின்றனர் தமிழர்கள்

**அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பதை எதிர்த்து ஆற்றிய மற்றொரு உரை**

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நிலைபெற்று ஒவ்வொரு மாதமும் தனது ஆயுளை இச்சபையின் மூலமாக நீடித்துக் கொண்டிருக்கும் இந்த அவசரகாலச்சட்டத்திற்கு எதிராக மீண்டும் எனது கருத்தை முன்வைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன். இது ஒரு கசப்பான அனுபவம் என்றாலும்கூட கருத்துக்களை என்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்த மக்களின் சார்பில் முன்வைப்பது எனது கட்டாயமாக்கப்பட்ட கடமையாகும்.

இன்று ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளருக்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட குழு, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் எனப் பல தரப்பினரும் எமது நாட்டின் பெருமைக்கும் நற்பெயருக்கும் களங்கம் கற்பிக்கும் வகையிலும் எமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடும் வகையிலும் செயற்படுமளவுக்கு ஒரு நிலைமை தோன்றியுள்ளது.இப்படி ஒரு நிலைமை ஏற்பட இந்த அவசரகாலச்சட்டமும் அதனடிப்படையில் மேற்கொள்ளப்படும் முறைமீறல்களுமே அடித் தளம் அமைத்துக் கொடுத்தன. என்பதை இந்த நாட்டை நேசிக்கும் குடிமகன் என்ற வகையில் சுட்டிக்காட்டுவது எனது கடமை என்றே நான் நம்புகின்றேன்.

மனித உரிமை மீறல்களை இச்சட்டம் நியாயப் படுத்துகிறது. ஊடக சுதந்திரத்தை இச்சட்டம் அச்சுறுத்துகிறது.ஜனநாயக வழியில் எதிர்ப்பு களைத் தெரிவிப்பதைக்கூட பல சந்தர்ப்பங்களில் இச்சட்டம் அனுமதிப்பதில்லை. எந்தவொரு



நீதிமன்றத்தின் கட்டளையுமின்றி எந்த ஒருவரை யும் காலவரையின்றி தடுத்து வைத்திருப்பதை இச்சட்டம் அனுமதிக்கிறது. ஒட்டு மொத்தத்தில் ஜனநாயகம் இந்நாட்டு மக்களுக்கு வழங்கிய உரிமைகளைப் பறிப்பதில் இச்சட்டம் பிரதான ஆயுதமாகப் பிரயோகிக்கப்படுகின்றது. அண்மையில் நான் அநுராதபுரம், வவுனியா, மகசின், வெலிக்கடை, யாழ்ப்பாணம் ஆகிய சிறைச்சாலைகளுக்குச் சென்றிருந்தபோது இச்சட்டத்தின் அநீதியான வடிவத்தையும் அதன் கோரங்களுக்குள் சிக்குண்டு வதைப்படும் உயிருள்ள சாட்சிகளாக தமிழ்க் கைதிகளையும் சந்திக்கமுடிந்தது.

எந்தவித விமோசனத்திற்குமான நம்பிக்கை அனைத்தும் பறிபோன நிலையில் 18வருடங்கள் தொடக்கம் 05வருடங்கள் வரை தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் சோகங்களை என்னால் கேட்டறிய முடிந்தது. எமது நாட்டின் நீதியின் உயர்பீடமான பிரதம நீதியரசர் அண்மையில் குற்றம் சுமத்தப்பட்டோருக்கு மேல் வழக்குத் தொடரும்படியும் ஏனையோரை உடனடியாக விடுதலை செய்யும் படியும் கட்டளையிட்டிருந்தார். சட்டமா அதிபரின் அனுமதி இன்னமும் கிடைக்காத நிலையில் விடுவிக்கப்பட வேண்டிய பலர் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இந்நாட்டு பிரதம நீதியரசரின் கட்டளையைக்கூட உதாசீனம் செய்யுமளவுக்கு இந்நாட்டில் ஜனநாயகம் கேள்விக்குள்ளாக்கப்பட்டு விட்டதா? என்ற சந்தேகம் எழுகிறது.

ஒரு சந்தேகநபர் மீது அந்த நபருக்கெதிராககுற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சட்டமா அதிபர் திணைக்களம் செயற்றிறன் அற்றதா அல்லது மோசமான இனவாத நோக்கத்துடன் செயற்படுகிறதா என நான் கேட்க விரும்புகின்றேன்.

ஒரு மனிதனின் வாழ்வில் 18 வருடங்கள் எவ்வளவு ஒரு கணிசமான பகுதி என்பதை நீங்கள் அறிவீர்கள். எவ்வித குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படாமலே ஒருவர்

18 வருடங்கள் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது எவ்வளவு கொடுமையானது எவ்வளவு அநீதியானது!

நீதிமன்றத் தீர்ப்பின்படி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதி 20 வருடங்கள் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியவனாகிறான். அதில் அவனின் நன்நடத்தை அடிப்படையில் 5 வருடங்கள் கழிக்கப்படுகின்றன. மேலும் சலுகைகள் லீவுகள் அடிப்படையில் ஒரு ஆயுள் கைதி 10 அல்லது 12 வருடங்களில் வெளியே வரமுடியும். ஆனால் ஒரு சந்தேக நபர் எவ்வித நீதிமன்றத் தீர்ப்புமின்றி 18 வருடங்கள் சிறைவாசம் அனுபவிப்பது ஜனநாயக தர்மத்திற்கு எவ்வளவு தூரம் விரோதமானது?

ஒருவன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்போது தன் பெற்றோரிடமிருந்து தன் சகோதரர்களிடமிருந்து தன் சமூகத்திடமிருந்து பிரிக்கப்படுகின்றான். அவன் தனது பாரம்பரிய சம்பிரதாயங்களிலிருந்தும் சடங்குகளிலிருந்தும் பிரிக்கப்படுகின்றான். அவன் தனது இனத்துக்குரிய கலாசார வேர்களிலிருந்து பிரிக்கப்படுகின்றான். இது ஒரு பாரதூரமான மனித உரிமை மீறலாகும்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தன் தாயாரின் இறுதிச் சடங்கைக் கூட நிறைவேற்ற முடியாத நிலை தனக்கு ஏற்பட்டமைக்காக ஒரு இளைஞன் தாள முடியாத வேதனையில் தவித்ததை நான் கண்டேன். இப்படியாக நான் அங்கு சந்தித்த ஒவ்வொருவரும் நம்பிக்கையிழந்து விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதை என்னால் காண முடிந்தது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரதுங்கா மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு சிறைவாசம் அனுபவிக்கிறார். ஆனால் அது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த இந்து மத குருவும் அவரின் மனைவியும் ஏறக்குறைய எட்டு ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் இரு பிள்ளைகளும் அநாதை ஆச்சிரமத்தில் வளர்கின்றனர்.

சிலர் மீது குற்றச்சாட்டுகளின் பெயரில் வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவ்வழக்குகள் ஒத்திவைப்புகளாகவே தொடர்கின்றன. சாட்சியங்கள் வரவில்லை, ஆவணங்கள் சமர்ப்பிக்க முடியவில்லை, சட்டத்தரணிகள் சமூகமளிக்கவில்லை. எனப் பல்வேறு சாட்டுகள் சொல்லப்பட்டு விசாரணைகள் இடம்பெறாமலே இழுத்தடிக்கப்படுகின்றது. வழக்குத் தொடரப்பட்டவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற பிரதம நீதியரசரின் ஆலோசனையும் அலட்சியப்படுத்தப்பட்டு விட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களுக்கு இந்த அவசரகாலச் சட்டம் துணைபோகிறது என்பதை ஜனநாயகத்தை நேசிக்கும் இச்சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களும் இச்சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதேவேளை தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் போராளிகள் தொடர்பாகவும் எனது கோரிக்கையை இச்சபையின் முன்வைக்கும் கடமையிலிருந்து நான் தவறிவிடமுடியாது.

இலங்கை அரசாங்கக் குழுவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் போராளிகளின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது. நாமும் மகிழ்ச்சியுடன் அதனை வரவேற்கிறோம். ஆனால், பேச்சுக்கள் நான்கு கற்றைக் கடந்துவிட்டபோதிலும் பட்டியல் வெளியிடுவதற்கான திகதிகள் மூன்று முறை அறிவிக்கப்பட்டபோதிலும் நாம் சந்தித்தது ஏமாற்றமே!

முன்னாள் போராளிகள் எனக் கூறப்படும் தங்கள் கணவர்கள் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்பதை அறியும் தவிப்பு மனைவிமாருக்கு எவ்வளவு பாரதூரமானது என்பதை நீங்கள் அறிவீர்கள். தங்களின் பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றார்களா என்பதை அறியத்துடிக்கும் பெற்றோர்களின் ஏக்கமும் அலட்சியப்படுத்தப்படக்கூடியதா?

எத்தனையோ மனைவிமார்கள் தங்கள் நெற்றிப்பொட்டை அழிப்பதா இல்லையா எனவும் தங்கள் தாலிகளைக் கழற்றுவதா இல்லையா எனவும் தடுமாறுகிறார்கள். காணாமற்போய்விட்டவர்களாகவோ அல்லது அவர்களின் நிலை என்னவென்று தெரியாத வகையிலே மனைவிமார்களும் பெற்றோர்களும் சகோதர சகோதரிகளும் துயரம் சுமந்திருப்பதை ஒரு ஜனநாயக நாட்டில் அனுமதிக்க முடியுமா?

ஆரம்பக்கட்டங்களிலே கொடுக்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வில்லையாயின் தொடரும்இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுகளில் எட்டப்படும் முடிவுகள் நடைமுறைப்படுத்தப்படும் என நம்ப முடியுமா?

முதற்கோணல் முற்றும் கோணலாகிவிடக் கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகும். எப்படியிருந்த போதிலும் இப்படியான அத்துமீறல்களைச் செய்வதற்கோ சட்டமா அதிபர் திணைக்களத்திற்கோ இவ் அவசரகாலச்சட்ட விதிகள் வாய்ப்பை வழங்குகின்றன என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

# ஊடகங்கள் மீதான தாக்குதல் ஊடக சுதந்திரப் படுகொலையே!

**தகவல் ஊடகத்துறை அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் ஆற்றிய உரை**

இன ஒடுக்குமுறைக்கு எதிராக உறுதியான போராட்டத்தை நடத்தி 27 வருடங்கள் கொடிய சிறைவாசம் அனுபவித்த போதிலும் கூட தனது இலட்சிய உறுதியில் தளராது நின்று கறுப்பின மக்களை விடுவித்த மாமனிதர் நெல்சன் மண்டேலா வுக்கு இனவாத அநீதிகளுக்கு எதிராகப் போராடும் தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் எனது மனப்பூர்வமான அஞ்சலியைச் செலுத்தி எனது உரையை இங்கு நான் ஆரம்பிக்கின்றேன்.

மாமனிதர் நெல்சன் மண்டேலா இன ஒடுக்குதல் நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடிய அதே வேளையில் கருத்துச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் என்பவற்றை அடைவதிலும் தன் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வந்துள்ளார். குறிப்பாக நீதிமன்றத்தைக் கூட ஓர் ஊடகமாக்கி மக்களை எழுச்சிபெற வைக்கமுடியும் என்பதற்கு, அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டபோது அவர் ஆற்றிய நீதிமன்ற உரை சாட்சியம் சொல்லி நிற்கின்றது. அவரது போராட்ட வலிமையையும் நியாயத்தையும் ஊடகங்கள் உலகெங்கும் கொண்டு சென்றன. அதன் காரணமாக அவரைப் பயங்கரவாதியாகப் பிரகடனம் செய்த நாடுகள் கூட அவரது கருத்துக்களை ஆதரிக்கவேண்டிய நிலை எழுந்தது.

முழு உலகத்துடனும் இணைந்து எமது நாடும் அந்த மாமனிதருக்கு இன்று அஞ்சலி செலுத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் சட்ட பூர்வமாகவும், சட்ட பூர்வமற்ற வழிமுறைகள் மூலமும் ஊடக ஒடுக்குமுறை தலைவிரித்தாடும் எமது நாட்டில் நாம் அவருக்கு அஞ்சலி செய்யும்

தகுதி உள்ளவர்கள் தானா என எம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டியவர் களாயுள்ளோம்.

இங்கு இந்தச் சபையில் பல உறுப்பினர்கள் பல விடயங்கள் பற்றியும் பேசினார்கள். தொழில் துறைகளில் இருப்பவர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் போன்ற பல்வேறுதுறைகளில் உள்ளவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள், வசதியீனங்கள் யாவும் எடுத்துக் கூறப்பட்டன. அவைகள் தேவையானவை தான். அதைப்போலவே எமது சமூகத்தில் இருக்கும் இன்னொரு சமூகத்தினரைப் பற்றி நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அவர்கள் தான் இந்த நாட்டிலுள்ள ஊடகவியலாளர்கள். இவர்கள் பலதரப்பட்ட ஊடகங்களில் பணிபுரிகின்றார்கள்.

ஏனைய தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் போலவே இவர்களும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பணிபுரிகிறார்கள். ஏதோ செய்திகளை எடுத்துப் பிரசுரித்துவிட்டு அல்லது வெளிப்படுத்திவிட்டு அவர்கள் சொகுசாக வாழ்க்கை நடத்துவதாக எவரும் நினைப்பார்களானால் அது மிகவும் தவறான ஒரு விடயம்.

அன்றாட வாழ்வில் அவர்களும் மற்றவர்களைப் போலவே கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். அவர்களுக்கும் குடும்பங்கள் இருக்கின்றன. பிள்ளைகள் இருக்கின்றார்கள். குடும்பப் பொறுப்புகள் இருக்கின்றன. வீட்டுப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை என்று நிறையப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள்.

அவர்கள் வெளியிடும் செய்திகள், கட்டுரைகள், படங்கள் போன்றவற்றுக்காக எத்தனையோ விதமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். ஆபத்துக் களைச் சந்திக்கின்றார்கள். இரவு பகல் பார்க்காமல் உழைக்கின்றார்கள். சில பல வேளைகளில் சரியான நேரத்தில் சரியாகச் சாப்பிடாமல் ஒரு பணிஸ், ஒருவடையைச் சாப்பிட்டு தேநீர், கோப்பியை அருந்திவிட்டு கடமை புரிகின்றார்கள். சில வேளைகளில் அதிகாரிகளின் கோபம், படையினரின் தாக்குதல், சில வேளைக ளில் தம் உயிரையும் பணயம் வைக்கி றார்கள் இந்த ஊடகவியலாளர்கள். இவை களைக் கவனித்து அவர்களுக்கும் நிவார ணம் அளிக்கவேண்டும் என்று எவரும் சிந்திக்காமல் இருப்பது கவலையளிக்கிறது.

கடந்த வருடம் ஊடகவியலாளர்களுக்கு 12 லட்சம் ரூபாய் கடனாக தருவதாக ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டது. அது உண்மையில் வரவேற்கவேண்டிய ஒன்று. அதேபோன்று ஊடகவியலாளர்களுக்கென்று அரசு திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது அவசியம் என்று நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

கடந்த காலங்களில் கொழும்பிலுள்ள ஊடகவியலாளர்களுக்கென்று வீடு வழங்கும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்ற திட்டங்கள் கொழும்பு ஊடகவியலாளர்களுக்கு மட்டுமின்றி வெளியூர் ஊடகவியலாளர்களுக்கும் பயன்படும் படியாக நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம்.

மடிக்கணினிகளும் புகைப்படக் கருவிகளும் அவசியம்தான். அதேபோல் வீட்டு வசதி, வாகன வசதி, போன்ற விடயங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கு நிதி வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

இன்னொரு விடயம், நாடு முழுவதிலும் உள்ள ஊடகவியலாளர்கள் தமது பணிகளில் ஈடுபடும்போது தாக்குதலுக்கு உள்ளாவது, விபத்துகளில் சிக்குவது போன்றவற்றுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அவ்வாறான சம்பவங்களில் உயிர் இழக்க நேரிடுமானால் அவர்களுக்கு மிக இலகுவாக நிதி வசதிகள் கிடைக்கும் வகையில் காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டில் நடப்பவைகள் யாவும் நாளைய தினம் பத்திரிகைகளிலும் ஏனைய ஊடகங்களிலும் வெளிவந்து விடுகின்றன. அதற்காக உழைக்கும், இரவு பகல் பாராது பணியாற்றும் ஊடகவியலாளர்களை நாம் மறந்துவிடகூடாது என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

எமது நாட்டில் துணிச்சலுடனும் நேர்மையுடனும் உண்மைகளை வெளியிட்ட, நியாயங்களுக்கெதிராகக் குரல் கொடுத்த எத்தனையோ ஊடகவியலாளர்கள் நட்ட நடுவீதியில் பலர் பார்க்கப் படுகொலை செய்யப்பட்டனர். பலர் காணாமற்போய் விட்டனர். பலரின் வீடுகள் தாக்கப்பட்டன. பலருக்குக் கொலை மிரட்டல்கள் விடுக்கப் பட்டன. பலர் சிறை செய்யப்பட்டனர். பலர் உயிர்ப் பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர்.

இப்படியான நிலையில் ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகள் தொடர்பாக எவரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை.

எம்.ரி.வி., லங்கா ஈ நியூஸ், உதயன் போன்ற ஊடக நிறுவனங்கள் மீண்டும் மீண்டும் தாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றுக்குப் பொருள் சேதங்களும் பணியாளர்களுக்கு உயிர்ச் சேதமும் விளைவிக்கப்பட்டன. ஆனால் இன்று வரை இப்படியான வன்முறைகள் தொடர்பாக நீதி கிடைக்கவில்லை. இந்நிறுவனங்க ளுக்கு எவ்வித நட்டஈடுகளும் வழங்கப்படவில்லை. ஆனால் ஊடகங்களின் குரலை ஒடுக்க ஊடக ஒழுக்கக் கோவையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்படியான ஒரு சூழ்நிலையில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் நடத்தப்படும் சட்ட விரோத வன்முறைகளின் பின்னால் அதிகாரம் படைத்த அரசசார்பு சக்திகள் உண்டு என நாம் சந்தேகப்படுவதை எவராவது தவறு என்று சொல்லிவிட முடியுமா?

வடக்கில் பிரபல ஊடகவியலாளராக விளங்கிய நிமலராஜன் அவரது வீட்டில் வைத்து அவரது குடும்பத்தினர் முன்னிலையில் படுகொலைசெய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பியின் முக்கியஸ்தர் உட்பட மூவர் கைதுசெய்யப் பட்டனர். பின்பு அவர்கள் சட்டமா அதிபரின் சம்மதத்துடன் பிணையில் விடப்பட்டனர். இவ்வழக்கில் பிரதான எதிரியான ஈ.பி.டி.பி உறுப்பினர் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்படுகின்றது. இன்றுவரை அவர் கைதுசெய்யப்படவோ அல்லது அவரைக் கைதுசெய்ய இன்டர்போல் அமைப்பைக் கோரவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர் கொல்லப்பட்டு 10 ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும் இன்றுவரை நீதி கிட்டவில்லை. இதில் அதிகாரம் படைத்தவர்களின் பின்னணி இல்லையெனச் சொல்லி விடமுடியுமா?

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க சர்வதேச அளவில் மதிக்கப் பட்ட ஒரு பிரபல ஊடகவியலாளர். அவர் பட்டப் பகலில் நட்ட நடுவீதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது படுகொலை தொடர்பாக இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

ஒருவர் தடுப்புக் காவலில் இருந்தபோதே நோய் வாய்ப்பட்டு இறந்துவிட்டார். மற் றவர் போதிய ஆதாரங்கள் இல்லை எனச் சட்டமா அதிபரால் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர் விசாரணையின்றியே விடுதலை செய்யப்பட்டார். இவற்றின் பின்னணியில் அதிகாரங்கள் இல்லை என்பதை நம்பமுடியுமா?

லங்கா ஈ.நியூஸ் ஊடகவியலாளரும் கேலிச் சித்திரகாரருமான பிரகீத் எக்னெலிகொட இருவருடங்களுக்கு முன்னர் காணாமற் போய்விட்டார். அது தொடர்பாக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் கேள்வி எழுப்பப்பட்டபோது அவர் வெளிநாடொன்றில் தலைமறைவாக இருப்பதாக இலங்கையின் சார்பில் பதிலளிக்கப்பட்டது.

இப்பிரச்சினை நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டபோது உறுப்பினர் ஒருவர் நான் பிரகீத்தை பிரான்சில் சந்தித்ததாகக் கூறியிருந்தார். எனவே, அப்பிரச்சினை நீதிமன்றம் வரை சென்றது. அங்கு சாட்சியமளிக்க குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் தனக்கு பிரகீத்தை நேரடியாகத் தெரியாது எனவும் தனக்கு வேறு ஒருவர் பிறிதொருவரைக்காட்டி இவர்தான் பிரகீத் என அறிமுகம் செய்ததாகக் கூறினார். ஆனால், குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட அந்த நபர் அப்படி எதுவும் இடம்பெறவில்லை என பிரான்சிலிருந்து அறிவித்துவிட்டார். இப்படியான நிலையில் பிரகீத் உயிருடன் இருப்பதாக ஒரு போலியான தோற்றப்பாடு உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை தெளிவாகப் புலனாகின்றது. இம் முயற்சியில் இலங்கையின் ஐ.நா. பிரதிநிதி, குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கும் பங்கு உண்டு என நம்பாமல் இருந்துவிட முடியுமா?

அண்மையில் கொழும்பிலுள்ள சண்டே லீடர் பத்திரிகையின் துணை ஆசிரியை மந்தனா இஸ்மாயில் வீட்டிற்குள் நட்டநடுநிசியில் புகுந்த இனந்தெரியாத நபர்கள் அங்குள்ளவர்களைத் துப்பாக்கி முனையில் வைத்துக் கொண்டு சில ஆவணங்களைத் தேடியுள்ளனர். அவர்கள் பொலிஸாரால் சுட்டுக்கொல் லப்பட்டுவிட்டபோதிலும் அவர்களின் பின்னணியில் நின்றவர்கள் யார் என்ற விடயம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. மந்தனா இஸ்மாயில் உயிர்ப் பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்.

இவ்வாறே மௌபீம பெண் பத்திரிகையாளர் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டபின் குற்றச்சாட்டு எதுவுமின்றி விடுவிக்கப்பட்டதும் ஊடகவியலாளர் திசாநாயக்கவுக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டதும், இலங்கை ஊடக வரலாற்றில் மறந்துவிடக்கூடிய விடயங்களல்ல.

இங்கு என்னால் தெரிவிக்கப்பட்டவை ஊடகவியலாளர்கள் மேல் மேற்கொள்ளப் பட்ட அநீதிகளில் ஒரு சில மட்டுமே. இலங்கையில் வேறும் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர் என்பதையும், பலவித துன்பங்களுக்கு உட்படுத்தப்பட்டனர்

என்பதையும் உயிரச்சம் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர் என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது.

ஏற்கனவே நான் குறிப்பிட்டமை போன்ற சுதந்திரமான கருத்துக்களை வெளியிடும் ஊடகங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதும் அவை தொடர்பாக எவரும் கைது செய்யப்படாமையும் இந்த நாட்டில் ஊடக சுதந்திரத்தைக் கொலை செய்யும் நடவடிக்கைகளாகும்.

இவற்றின் பின்னால் அரசசார்பு அதிகார பீடங்கள் உள்ளன என்பதை இடம்பெறும் ஒவ்வொரு சம்பவங்களும், அவை தொடர்பாக உரிய நடவ டிக்கைகள் எடுக்கப்படாமையும் துல்லியமாகத் தெளிவுபடுத்துகின்றன.

இன்று எமது நாட்டில் இடம்பெறும் ஊடக ஒடுக்குமுறைகள் தொடர்பான கேள்விகள் எமது நாட்டின் எல்லைகளுக்கு வெளியே விரிந்துவிட்டன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேசம் எம்மைக் குற்றக் கூண்டில் ஏற்றும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை இலங்கையில் நிலவும் ஊடக ஒடுக்குமுறை தொடர்பாக வெளியிட்ட கண்டனத்தை நாம் அலட்சியப்படுத்தி விடமுடியாது.

அது மட்டுமன்றி டேவிட் கமரூன் உதயன் நிறுவனத்துக்கு வருகை தந்தமையும் அங்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டமையும் புறமொதுக்கப்படக்கூடிய விடயங்களல்ல.

எமது அரசும் அரசின் அதிகார பீடங்களும் ஊடக சுதந்திரம் உட்பட ஜனநாயக விழுமியங்களைப் பேணி சர்வதேச நெருக்கடிகளுக்குள் சிக்கும் அபாயத்திலிருந்து மீளும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று நானும் ஓர் இலங்கையன் என்ற உரிமையுடன் கேட்டுக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

# இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் உதவியை நாடவேண்டியவர்களாக உள்ளோம்

**வரவு - செலவுத் திட்ட வாசிப்பின்போதான உரை**

**கௌ**ரவ தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே!

இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக எனது கருத்துக்களை வெளியிட ஒரு சந்தர்ப்பம் வழங்கியமைக்காக முதலில் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பிரதம மந்திரி அவர்கள் சகல பேதங்களையும் புறந்தள்ளி எதிர்க்கட்சிகள் உட்பட அனைவரும் இந்த நாட்டின் அபிவிருத்தியில் ஒன்றிணைய வேண்டுமென அழைப்பு விடுத்தார். அனைவரையும் ஒன்றிணைத்துச் செல்லும் அவரின் உயர்ந்த இலக்குடன் கூடிய பரந்த நோக்கத்தை நாங்கள் மகிழ்ச்சியுடனும் மனப்பூர்வமாகவும் வரவேற்கின்றோம்.

இலங்கைத் தீவின் அபிவிருத்தியில் தமிழ் மக்களின் அபிவிருத்தியும் பின்னிப்பிணைந்துள்ளதென்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம். எனவே, இப்பணிகளில் நாமும் இணைந்து கொள்வது எமது தேவையாகவும் உள்ளதென்பதை எவருமே மறுக்கமுடியாது. எனினும் இவ்வேளையில் எமது பங்களிப்பு என்பது எவ்வளவு தூரம் நடைமுறைச்சாத்தியமானது என்ற கேள்வி இங்கு எழுவதைத் தவிர்க்கமுடியாததாகின்றது.

எம் மீது திணிக்கப்படும் அந்நிய சக்திகளின் அழுத்தங்களுக்கு முகம்கொடுத்து நாம் வளர்ச்சிப் பாதையில் முன்செல்ல எமது ஐக்கியம் மிகவும் தேவையென்பது உணரப்பட்டபோதிலும் அதற்கான தடைகள் இன்னும் அகற்றப்படாதிருப்பதை நாங்களோ நீங்களோ மறுத்துவிடமுடியாது.

இனப்பிரச்சினையையும் இந்தியா இவ்வகையிலேயே கையாண்டு வந்தது. எதிர்காலத்திலும் இந்த நிகழ்ச்சி நிரலே தொடரும்.

இந்நிலைமைகளைப் புரிந்துகொண்டிருந்தபோதும் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக நாம் இந்தியாவின் உதவியை நாடவேண்டியவர்களாயுள்ளோம். இவ்விவகாரம் தொடர்பாக இந்தியாவின் அழைப்பையேற்றுப் பேச்சுக்களை நடத்த நாம் அங்கு செல்லவுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் சபையோ ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளோ அல்லது இந்தியாவோ இனப்பிரச்சினை விவகாரத்தையும் மனித உரிமை மீறல்களையும் முன்வைத்து இலங்கையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயல்கின்றன. இது எமது பொருளாதாரத்தை தங்கள் நலன் சார்ந்து வடிவமைப்பதை நோக்கமாகக் கொண்டது என்ற அபாயத்தை நீங்கள் ஏன் உணர மறுக்கின்றீர்கள்? என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அந்நிய சக்திகள் எமது விவகாரங்களில் தலையிடும் அளவுக்குத் தளம் அமைத்துக் கொடுத்துவிட்டு எமது பொருளாதாரம் பறிக்கப்படுகின்றது என்று கூச்சலிட்டுக் கொண்டிருப்பதில் என்ன அர்த்தம் இருக்கமுடியும்? ஆனால் எமது நாட்டினுடைய உள்விவகாரங்களில் அந்நியநாடுகள் தலையிட முடியாத ஒரு சூழல் ஏற்படும் பட்சத்திலேயே அவற்றை நாம் தடுத்து நிறுத்தமுடியும். இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கத்துக்கே பாரிய பொறுப்புண்டு.

தமிழ் மக்களின் மீது மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட்டு தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்பட்டு இனப்பிரச்சினைக்கான ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படும்போது எமது விவகாரங்களில் எவரும் தலையிடக் கூடிய வாய்ப்பு தாமாகவே இல்லாமல்போய்விடும். அப்படியான ஒரு நிலையிலும் அந்நியத் தலையீடுகள் ஏற்படுமானால் அவற்றுக்கு எதிராக சிங்கள மக்கள் நடத்தும் போராட்டங்களில் தமிழ் மக்களும் இணைந்து கொள்வார்கள் என்பதை நான் இச்சபையில் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளவிரும்புகின்றேன்.

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தை இழுத்தடிப்பதற்கும் மழுங்கடிப்பதற்கும் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு என்ற மாயை முன்வைக்கப்படுகின்றது.

எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு என்பது என்றுமே சாத்தியமில்லை என்பதற்கு இலங்கைத் தீவினுடைய வரலாற்றில் ஏராளமான உதாரணங்கள் உள்ளன. பெருந் தேசிய இனவாதம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும்போதெல்லாம் எதிர்த்தரப்பு அதனைக் குழப்புவதில் தீவிரமாகச் செயற்பட்டதை நாமறிவோம்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் ஐம்பது வருடங்களுக்கு மேலாக நாம் சந்தித்த பேரழிவுகள் இடம்பெறாமலே போயிருக்கும். ஆனால் அன்று பௌத்த பிக்குகளின் ஒரு பகுதியினர் நடத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாகவும் முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர்.ஜயவர்த்தன தலைமையில் மேற்கொள்ளப்பட்ட கண்டி யாத்திரை, இனக்கலவரங்கள் போன்றவற்றாலும் அது கிழித்தெறியப்பட்டது. இதேபோல் டட்லி - செல்வா ஒப்பந்தம், நியாயமான

எவ்வளவுதான் அரச தரப்பினரால் இந்த வரவு- செலவுத் திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தம் இல்லையென உரத்துக் கூறப்பட்டபோதிலும் வெளிப்பாடுகள் எதிர்மறையான தோற்றத்தையே காண்பிக்கின்றன.

அரச செலவீனங்களை மட்டுப்படுத்தல், தனியார் முதலீடுகளுக்கு ஊக்கமளித்தல் போன்ற உலக நிதி நிறுவனங்களின் வழமையான நிபந்தனைகளுக்கு அமைவாகவே இந்த வரவு- செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்களின் வேதனம் உயர்த்தப்படாமை, கல்வி, சுகாதாரம் போன்றவை சர்வதேச நாணய நிதியத்தை நிலைப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் கட்ட கடனுதவி ஒரு சில நாட்களுக்கு முன் விடுவிக்கப்பட்டமையை நாம் இங்கு கவனத்தில் கொள்ளாமல் இருக்கமுடியாது.

அண்மையில் போரின் இறுதி நாட்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு ஆலோசனை வழங்க நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டமையும் GSP Plus வரிச் சலுகையை நீடிப்பது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தினால் சில கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டமையும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளாக எழுச்சி பெற்றுள்ளன. இவை இலங்கையின் இறைமையை மறுதலிக்கும் செயலாக அமைந்திருப்பதாக அரச தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டது.

அதுமட்டுமன்றி கௌரவ அமைச்சர் விமல் வீரவன்ச அவர்கள் ஐக்கிய நாடுகள் காரியாலயத்தைச் சுற்றி முற்றுகைப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருப்பதும் சர்வதேச அளவில் பிரச்சினைக்குரிய விடயங்களாக மாற்றம் பெற்றுள்ளன. அதாவது இன்று சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் எனப் பலமுனைகளில் அழுத்தங்களும் நெருக்கடிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்படியான நடவடிக்கைகளுக்குப் பின்னால் உலக மேலாதிக்க சக்திகளின் தேவைக்கேற்ப வளர்முக நாடுகளை வடிவமைக்கும் நோக்கம் விரவி நின்றாலும் இங்கு முன்வைக்கப்படுவது தமிழ் மக்களின் மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரச்சினைகளேயாகும். போர்க்காலத்தில் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளைக் காரணம் காட்டி ஐக்கிய நாடுகள் சபையும் தற்சமயம் நிலவும் மனித உரிமைகளை உதாசீனம் செய்யும் சட்டங்கள் நடைமுறைகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைச் சர்வதேச அளவில் பிரச்சினைக்குரிய ஒரு நாடாகக் காட்டுகின்றன.

இவை எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தில் எவ்வளவு பாதிப்புகளை ஏற்படுத்துமென்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்விடயத்தில் நாம் இந்தியாவின் தலையீடு பற்றியும் இங்கு பேசாமலிருக்க முடியாது. இந்தியா இலங்கையின் நலன் சார்ந்ததாகவோ அல்லது தமிழ் மக்களின் நலன் சார்ந்ததாகவோ அமையாதென்பதை நீங்களும் அறிவீர்கள். நாங்களும் அறிவோம். இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு என்ற வகையில் தனது பிராந்திய மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் நோக்குடனேயே சகல விடயங்களையும் கையாளும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. கடந்த காலங்களில் இலங்கையின்

தமிழ் உபயோக மசோதா போன்றனவும் இனவெறியரின் எதிர்ப்புக் காரணமாக நிறைவேற்றப்படாமலே போயின.

இவ்வாறே, இந்தியா தலைமையில் இடம்பெற்ற அரசு விடுதலைப் புலிகள் பேச்சு என அனைத்துமே குழப்பியடிக்கப்பட்டன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஒரு தீர்வை முன்வைத்தால் அதை ஐக்கிய தேசியக் கட்சி குழப்புவதிலும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு தீர்வை முன்வைத்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குழப்புவதும் மரபாகவே பேணப்பட்டு வந்தது. இதன் விளைவு ஒரு கொடிய போராக உருவெடுத்து இலட்சக்கணக்கான மக்களைப் பலிகொண்டதுடன் பெரும் பொருளாதார இழப்புக்களையும் ஏற்படுத்தியது. எனவே எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு என்பது சாத்தியமற்ற ஒன்று என்பதே எமது அனுபவப் பாடமாகும்.

இன்று அரசுக்கு மக்கள் வழங்கியுள்ள பெரும்பான்மையானது இனப்பிரச்சினைக்கான ஒரு நிரந்தரத் தீர்வை உருவாக்குவதற்கான பலத்தை வழங்கியுள்ளது. இதனைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் அந்நிய சக்திகளின் தலையீடுகளுக்கு எதிரான வலிமையான சக்தியாகச் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஒன்றிணைக்க முடியும்.

அண்மையில் கௌரவ அமைச்சர் பொலிஸ் ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்த ஒரு கருத்தை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். முதலில் நாட்டில் நிலவும் சட்டவிரோத ஆயுதங்களைக் களைதல் அடுத்து மாகாண, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடாத்துதல் அதன் பிறகுதான் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்திருந்தார். இதை ஒரு பொருத்தமான கருத்தாகச் சொல்லிவிட முடியாது. இதை இனப்பிரச்சினைத் தீர்வை மேலும் இழுத்தடிக்கும் நோக்கம் கொண்ட கருத்தாகவே நாங்கள் பார்க்க முடிகிறது. கடந்த காலங்களில் சர்வகட்சி மாநாடு உட்பட பல சந்தர்ப்பங்களில் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் காலம் கடத்தும் ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தப்பட்டு வந்ததை நாமறிவோம். கௌரவ அமைச்சர் அவர்களின் கருத்துக்களும் அவ்வாறே அமைந்திருப்பது தமிழ் மக்கள் மத்தியில் மேலும் நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்தும். இவையனைத்தும் அந்நிய சக்திகள் எமது விவகாரங்களில் தலையிடுவதற்கான கதவுகளைத் திறந்துவிடும் நிலைமையையே உருவாக்கும்.

# பாதுகாப்புக்கு இவ்வளவு பெருந்தொகை ஏன்?

**வரவு - செலவுத் திட்ட வாசிப்பு மீதான மற்றொரு உரை**

**கௌ**ரவ பிரதித் தவிசாளர் அவர்களே! பெருமைக்குரிய இச்சபையின் கௌரவ உறுப்பினர்களே!

இந்த நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும் பகுதியைச் சுவீகரித்துள்ள ஓர் அமைச்சுத் தொடர்பாக இங்கு உரையாற்ற எண்ணும் நான், எனக்குள் எழுகின்ற நியாயங்களைத் தேடும் கேள்விகளுக்கு விடைகாண முயல்கின்றேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அபிவிருத்தி என்ற மந்திரத்தை இடைவிடாது ஒலித்துக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு ஆறாயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியுள்ள அதேவேளையில் பாதுகாப்பு அமைச்சுக்கு இருபதாயிரத்து இருநூறு கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. அதாவது பொருளாதார அபிவிருத்தியை விட பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு அதனை விட மூன்று மடங்குக்கும் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுடனான யுத்தம் முடிவடைந்து ஒரு வருடம் கடந்து விட்டது. அவர்களின் படை வலிமை முற்றாகவே அழிக்கப்பட்டுவிட்டது. போரை வெற்றி கொண்டது போலவே நாட்டை அபிவிருத்தி செய்ய அனைவரும் அர்ப்பணிப்புடன் பங்குகொள்ள வேண்டுமென மேதகு ஜனாதிபதி அவர்கள் அறைகூவல் விடுக்கின்றார்.

போர் முற்றாகவே முடிவுக்கு கொண்டுவரப்பட்டு விட்டால் பாதுகாப்புக்காக ஏன் இவ்வளவு பெருந்தொகை ஒதுக்கப்படுகிறது? இப்படியான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படை நோக்கம் என்ன? பாதுகாப்பு என்பது இந்த நாட்டின் உயிர் மூச்சு என்பதை நாம் அறிவோம். தேசத்தையும் தேச

மக்களையும் அந்நிய சக்திகளிடமிருந்தும் தேச விரோத, மக்கள் விரோத சக்திகளிடமிருந்தும் பாதுகாப்பது பாதுகாப்புத் தரப்பினது கடமையாகும். ஆனால் இங்கு யாரை யாரிடமிருந்து பாதுகாக்கிறார்கள் என்று பார்க்கும் போது, எங்கள் வேதனையையும் வெறுப்பையும் வெளியிடாமல் இருக்க முடியாது.

கிளிநொச்சியில் இரு பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டனர். கணவனுடன் அருகில் படுத்திருந்த மனைவியைப் பலாத்காரம் செய்ய முயன்ற படைவீரன் ஒருவன் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டான். போரில் எல்லாவற்றையும் இழந்து ஒன்றிரண்டு நகைகளை மீதமாக வைத்திருப்பவர்களிடம் கூட இரவு வேளைகளில் மோட்டார் சைக்கிளில் சென்று கொள்ளையிடுகின்றனர்.

வீடு வளவுகளைச் சுத்தம் செய்யும்போது புதைகுழிகளிலிருந்து எலும்புக் கூடுகள் மீட்கப்படுகின்றன. இன்று மீள்குடியேறிய மக்கள் பல்வேறு வகையிலும் துன்பப்பட்டு, வறுமையில் வாடுவது மட்டுமன்றி, அச்சத்துடனும் நிம்மதியற்றும் வாழ வேண்டிய நிலையே நிலவுகிறது. இதற்குப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒரு சிலரே காரணாமாயிருக்கும்போது பொதுமக்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியுமா? இப்படியான அச்சமூட்டும் பயங்கர சூழ்நிலையைத் தக்கவைக்கவா இவ்வளவு பெருந்தொகைப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது? மக்களைப் பாதுகாக்க வேண்டிய ஆயுதப் படையினரிடன் மக்கள் விரோத நடவடிக்கைகள் தொடரத்தான் வேண்டுமா? மேதகு ஜனாதிபதி அவர்கள் அடிக்கடி எங்கள் படையினர் ஒழுக்கம் தவறாதவர்கள் என்று சொல்வதன் அர்த்தம் என்ன?

யாழ். குடாநாட்டில் நிலைமை இன்னும் மோசமாகவுள்ளது. அங்கு இடம்பெறும் கப்பம், கொலை, கொள்ளை போன்ற அராஜகங்களுக்கு, ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டதாக கூறிக் கொண்டு அரசியல் நாடகம் ஆடும் ஓர் ஆயுதக் குழுவே காரணம். என்றாலும் பொலிஸாரோ ஆயுதப்படையினரோ அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

சாவகச்சேரியில் கப்பம் கோரிக் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட ஒரு மாணவனின் கொலை தொடர்பான சந்தேக நபர்களில் ஒருவர் ஈ.பி.டி.பீ. உறுப்பினர் எனச் சாவகச்சேரி நீதிபதி திரு. பிரபாகரன் அவர்கள் தெரிவித்திருந்தாலும் சந்தேகநபர் ஈ.பி.டி.பியைச் சேர்ந்தவர் அல்லர் என யாழ். மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் மறுப்புத் தெரிவித்து அந்தச் செய்தியைப் பிரசுரிக்கும் படி பத்திரிகைகளைக் கேட்டிருந்தார். கொலை, கப்பம் தொடர்பான சந்தேகநபர்களுக்கு உயர் பொலிஸ் அதிகாரிகளே கசவமாக விளங்கினால் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியுமா? இந்த நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியுமா? அதனால் தான் மீண்டும் கேட்கிறேன். யாரிடமிருந்து யாரைப் பாதுகாக்க இப்பெரும் செலவீனம்? இப்பணத்தின் மூலம் இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட முடியுமா? போர் முடிந்து புலிகள் அழிக்கப்பட்டதாக பிரகடனம் செய்யப்பட்டு ஓராண்டு கழிந்து விட்டது. அப்படியானால் இப்பொழுது ஏன் உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படவில்லை? படையினரின் பாதுகாப்புக்குத் தான் பாதுகாப்பு வலயங்கள் என்றால், படையினரால் புலிகள் அழிக்கப்பட்ட நிலையில், படையினர் யாரிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளப் போகிறார்கள்?



தமது சொந்த மண்ணான வலிகாமத்திலிருந்து இராணுவத் தேவைகளுக்காக வெளியேற்றப்பட்ட மக்கள் 30 வருடங்களாகியும் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந் தவர்களின் வீடுகளிலேயே இன்று அவர்களில் பெரும்பாலானோர் தங்கியுள்ளனர். இப்போது அந்த மக்கள் தங்கள் வீடுகளில் வந்து மீளக்குடியேறும்போது, அந்த வலிகாமத்து மக்கள் தெருவில் நிற்க வேண்டிய அவலம் ஏற்பட்டுவிட்டது.

வலிகாமம் இடம்பெயர்ந்த மக்கள் அமைப்பின் தலைவர் கூட இருக்க இடமின்றி தவிப்பது மட்டுமன்றி, ஓர் ஆசிரியரான அவர் தனது புத்தகங்களை வைக்கவே இடமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். தமது உழைப்பால் வளமாக்கிய அந்த மண்ணை அந்த மக்கள் 30 வருடங்களின் பின்னரும் சென்று பார்ப்பதற்கு முடியவில்லை. என்றால், மனிதாபிமானம் எங்கே போய்விட்டது? எனக் கேட்க விரும்புகிறேன்.

ஒரு தலைமுறையே தம் சொந்த மண்ணை அறியாத பெரும் சோகம் எமக்கு விதிக்கப்பட்ட விதியா எனக் கேட்க விரும்புகிறேன். இவ்விடயத்தில் உயர் நீதிமன்றத் தீர்ப்புக் கூட உதாசீனம் செய்யப்பட்டு, அது செயற்படுவது இழுத்தடிக்கப்படுகிறது என்றால் ஜனநாயகத்தின் நிலை தான் என்ன? அந்த மண்ணில் மக்கள் குடியேறப் பாதுகாப்புக் காரணங்கள் காட்டப்பட்டுத் தடைகள் போடப்படும்.

அதேவேளையில், தென்னிலங்கையிலிருந்து வந்து சிலர் அங்கிருந்து பெருந்தொகையில் சுண்ணாம்புக் கற்களை அகழ்ந்து கொண்டு செல்கின்றனர். இதன் காரணமாக குடாநாட்டுக்குள் கடல்நீர் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அப்படியானால் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு உயர் பாதுகாப்பு வலயம் மூலம் ஆயுதப் படையினர் பாதுகாப்பு வழங்குகின்றனரா?

அண்மையில் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய அவர்கள் வன்னியில் இராணுவக் குடியிருப்புக்களை அமைக்கப்போவதாகவும் அவர்களுக்கு வயல் நிலங்களை வழங்கப்போவதாகவும் கண்டி மல்வத்தை பீடாதிபதிகளிடம் தெரிவித்திருந்தார். இப்பொழுது சாந்தபுரம், அக்கராயன், கனகராயன்குளம் ஆகிய பகுதிகளில் மக்கள் குடியேற அனுமதிக்கப்படவில்லை. அவர்களுடைய சொந்த நிலங்கள் பறிக்கப்படுகின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றன. அங்கே இராணுவக் குடியிருப்புக்களை அமைக்க ஏற்பாடுகள் தொடங்கியுள்ளன.

ஒட்டு மொத்தத்தில் தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்தல், வளங்களை கொள்ளையடித்தல் மற்றும் உயிர், உடல் அச்சுறுத்தல்கள் போன்றவற்றுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுகின்றதா என்ற கேள்வியே இங்கு எழுகின்றது. தமிழ் மக்களின் தாயகப் பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகள் தட்டிக் கேட்கப்படாமலே தொடர்கின்றன. இதற்கு எதிராக வாய்திறக்கவே மக்கள் அஞ்சுகின்றனர். அப்படி யாரும் குரல் கொடுத்தால் கடத்தப்படலாம், கொல்லப்படலாம் அல்லது காணாமற் போகலாம். இத்தனைக்கும் முழத்துக்கு முழம் காவலரண்களும் இராணுவ முகாம்களும் அமைந்திருக்கும் வட பகுதியிலேயே இவை இடம்பெறுகின்றன.

யாழ்ப்பாணத்தில் தற்போது பதவியிலிருக்கும் 69 வயதுடைய அரச அதிபர் திரு.கணேஸ் அவர்கள் ஓர் அற்பமான சலுகையை எதிர்பார்த்து ஒரு பொது வைபத்தின் போது தற்போதைய வடமாகாண ஆளுநர் கௌரவ சந்திரசிறி அவர்களின் காலில் வீழ்ந்தமையானது. அவர் இதுவரை காலமும் வகித்து வந்த உயரிய பதவிக்கு மாசினை ஏற்படுத்தியுள்ளது. இது தமிழ் மக்களின் தன் மானத்துக்கு விடப்பட்ட ஒரு பெரும் சவாலாகவும் பார்க்கப்படுகிறது. இது ஓர் அருவருப்பான செயற்பாட்டுக்கு முன்னுதாரணமாக அமைவதோடு இது போன்ற இழிவான செயலை ஏனையோரும் செய்வதற்குக் தூண்டுதலாகவும் அமையலாம் என்று கருதப்படுகிறது.

திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள் யாழ். அரசாங்க அதிபர் யூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து நியமனம் பெறுவதாக இருந்தது. ஆனால் அவருக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. 69 வயதான திரு கணேஸ் அவர்கள் யாழ். அரச அதிபர் பதவியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். எனவே, இச்சந்தர்ப்பத்தில் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் ஒட்டுமொத்தத் தமிழினத்துக்கும் தலைகுனிவை ஏற்படுத்தும் இச்செயலைக் கண்டு வாழாவிருந்திடாமல் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றேன். பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் மீண்டும் சிவில் சேவையில் உயர் பதவிகளில் நியமிக்கப்படுவதால் இது போன்ற நிகழ்வுகள் மேலும் தொடர வாய்ப்பிருப்பதாகவே நாம் கருத வேண்டியுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பாராளுமன்றத்தில் மகேஸ்வரி நிதியம் சம்பந்தமாக ஆற்றிய உரை உண்மைக்குப் புறம்பானது. தமிழ் மக்களைத் திட்டமிட்டுத் திசை திருப்பும் உள்நோக்கம் நிறைந்தது என்ற உண்மையை சட்டமூல அலுவலக அதிகாரிகளின் தெளிவுபடுத்தலிருந்து நான் அறிந்து கொண்டேன். இன்னும் சட்டமாக்கப்படாத இந்த மகேஸ்வரி நிதியத்தின் பெயரால் பொதுமக்களிடமிருந்து நிதி சேகரிப்பதை நிறுத்துமாறு கௌரவ சபாநாயகர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென நான் வேண்டுகின்றேன். அந்த நிதியம் முதன்முறை மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அதன் பின்னர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நான் இன்று அது தொடர்பான முழு விபரங்களையும் சேகரித்துள்ளேன் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இறுதியாக போரையும், சாவையும் அழிவுகளையும் சந்தித்த எமது மக்களின் மீது மேலும் துன்பச் சுமைகளை ஏற்றும் வகையிலேயே இந்த வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது என்பதையும் தமிழ் மக்கள் மீண்டும் தங்கள் பழைய வாழ்வை எட்டக்கூடிய எந்த ஒரு விமோசனமான நடவடிக்கையையும் இந்த வரவு- செலவுத் திட்டம் கொண்டிருக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

# அநுராதபுரம், வவுனியா சிறைகளில் வாடும் தமிழ்க் கைதிகளுக்கு விடிவு கிட்டுவது எப்போது?

**யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் விளக்கம்**

## யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சுடரொளிக்கு வழங்கிய பேட்டியிலிருந்து...

**கேள்வி:** நீங்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள அதேவேளையில் ஓர் ஊடகத் துறை சார்ந்தவராகவும் உள்ளீர்கள் அந்தவகையில் அநுராதபுரம், வவுனியா ஆகிய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளை நீங்கள் சந்தித்தபோது உங்களிடம் ஏனைய அரசியல்வாதிகளைவிட வேறுபட்ட உணர்வுகளை தோன்றியிருக்கக்கூடும். அவை பற்றி நீங்கள் விளக்க முடியுமா?

**பதில்:** நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதை விட ஓர் ஊடகத்துறையைச் சேர்ந்தவன் என்பதைவிட நான்ஒரு மனிதனாக நின்று அனுபவித்த உணர்வுகளை உங்கள் முன் முதலில் வைக்க விரும்புகின்றேன். நாங்கள் பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையேயான பாசம், சகோதரங்களுக்கு இடையேயுள்ள பாசம் போன்ற குடும்ப உறவுகளாலும் சொந்த பந்தங்கள், அயல் நண்பர்கள் சடங்குகள் போன்ற சமூக உறவுகளாலும் பிணைக்கப்பட்டவர்கள்.

அதுமட்டுமன்றி பிள்ளையைத் தொட்டிலில் போடுதல், தலைதொடல், பூப்பெய்திய பெண்களுக்குத் தலைக்குத் தண்ணி வார்த்தல், மணப்பெண்ணை தத்துக்கொடுத்தல், கைப்பிடித்தல், தாலி கட்டல், பிறந்த குழந்தைக்குத் துடக்குக் கழித்தல், கொள்ளி வைத்தல், எட்டுச் செலவு, அந்தியேட்டி செய்தல், திவசம் கொடுத்தல், பிதிர்க்கடன் நிறைவேற்றல், எனப் பாரம்பரிய சடங்குகள் எங்கள் பண்பாட்டு வேர்களில் பிரிக்க முடியாத அம்சங்கள்.

அந்தச் சிறைச்சாலை மதில்களும் இரும்புக் கதவுகளும் எமது இரத்தத்தில் ஊறிவிட்ட உறவுகளைப் பேணல் போன்ற பண்பாட்டு அம்சங்களிலிருந்து அந்தக் கைதிகளைப் பிரித்துவிட்ட கொடுமையை நான் அங்கு உணர்ந்துகொண்டேன். எனக்கு அது ஒருபுறம் தாங்க முடியாத வேதனையையும் ஆட்சியாளர்கள் மீது எல்லையற்ற கோபத்தையும் ஏற்படுத்தியது. இப்படியான மரபுசார் நடவடிக்கைகளிலிருந்து பிரிக்கப்படுதல் எவ்வளவு தூரம் அவர்களுக்கு மன அழுத்தத்தையும் வேதனையையும் ஏற்படுத்தும் என்பதைப் புரிந்துகொண்டேன்.

ஒரு மனிதனாக அங்கு என்னால் இவைகளை உணர முடிந்தது. அதேவேளையில் ஓர் ஊடகத்துறை சார்ந்தனவாக இப்படியான அப்பட்டமான மனித உரிமை மீறல்களையும் ஓர் இனத்தின் தனித்துவத்தையே அவர்களுக்கு மறுக்கும் கொடுமையையும் உலகின் முன் அம்பலப்படுத்துவது என முடிவுசெய்தேன். இன்னொருபுறம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்குள்ள அதிகாரங்களையும் உரிமைகளையும் பயன்படுத்தி அவர்களின் விடுதலைக்கும் விமோசனத்துக்கும் முனைப்புடன் செயற்படுவது எனவும் உறுதி பூண்டேன்.

**கேள்வி:** எல்லோரும் இந்தக் கைதிகள் சமூகத்திலிருந்து தடுத்துவைக்கப் பட்டிருப்பதைத்தான் பார்ப்பார்கள். நீங்கள் மேலும் ஆழமாக எமது இனத்தின் மரபுசார் அம்சங்களிலிருந்தும்கூட பிரிக்கப்பட்டிருக்கும் கொடுமைகளையும் அதனால் ஏற்படும் மனத்தாக்கங்களையும் பார்த்திருக்கிறீர்கள். நீங்கள் அவர்களைச் சந்தித்தபோது அவர்களின் உணர்வுகள் எப்படி இருந்தன?

**பதில்:** முதன்முதலில் அவர்களைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் நான் என்ற வகையில் அவர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருந்தனர். அந்தச் சந்திப்பு அவர்கள் தங்கள் துயரங்களைத் தற்காலிகமாக மறந்து கொஞ்சநேரம் சந்தோஷ மாக இருக்கக் கிடைத்த ஒரு சந்தர்ப்பம் என நினைப்பது போலவே எனக்குத் தோன்றியது. அவர்கள் தங்கள் மன உணர்வுகளையும் பிரச்சினைகளையும் என்னிடம் மனம்விட்டுப் பேசினார்கள்.

1500 சிங்களக் கைதிகள் மத்தியில் – அதிலும் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போதைவஸ்துக் குற்றங்கள் போன்ற கொடிய குற்றங்களின் பேரில் தடுத்துவைக்கப்பட்டவர்கள் மத்தியில் சிங்களம் தெரியாத 55 தமிழ்க் கைதிகள் இருப்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என நம்புகின்றேன். ஒவ்வொரு கூண்டிலும் ஐந்து பேர் வீதம் பதினொரு கூடுகளில் இவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சட்ட உதவிகள் கூட வழங்கப்படுவதில்லை. அப்படி வழங்கப்பட்டாலும் சிங்கள மொழி பேசும் சட்டத்தரணிகளே ஏற்பாடு செய்யப்படுகின்றனர்.

ஒரு பக்கம் இவர்கள் சொல்வதை அவர்களால் விளங்கிக்கொள்ள முடியாது. மற்றது அவர்கள் இனவாதிகளாக இருந்துவிட்டால் விளைவுகள் வேறு விதமாக மாறிவிடும் என்ற அச்சம் கைதிகளிடம் உண்டு.

**கேள்வி :** இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணமுடியும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

**பதில்:** அவர்களே அதன் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்தார்கள். நான் அதை நிறைவேற்றுவது தொடர்பாக முயற்சிப்பதாக வாக்களித்துள்ளேன்.

**கேள்வி:** ஒரு தீர்வுத் திட்டத்தை அவர்களே முன்வைப்பது அனுபவபூர்வ மானதும் ஆக்கபூர்வமானதாகவும் அமைய வாய்ப்புகள் உண்டு. அவர்கள் எப்படியான தீர்வை முன் வைத்தனர்?

**பதில்:** அவர்கள் தங்களைத் தமிழ்ப் பகுதிகளில் உள்ள சிறைகளுக்கு மாற்றும்படி கேட்டார்கள். அது தங்களைச் சந்திக்கவரும் உறவினர்களின் சிரமங்களைக் குறைக்கும் எனவும் மொழி தெரியாமையால் தமக்கு ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கும் எனவும் தெரிவித்தனர்.

மேலும், அது தமக்கு வசதியான தமிழ் சட்டத்தரணிகளை ஏற்பாடுசெய்யவும் வசதியாயிருக்கும் எனவும் தெரிவித்தனர்.

பல வழக்குகள் சாட்சிகள் ஒழுங்காக வராமையால் இழுபடும் நிலையில் உள்ளன. வழக்குகள் தமிழ்ப் பகுதிகளுக்கு மாற்றப்படும்போது இப்பிரச்சினையும் தீர்க்கப்படும்.

**கேள்வி:** இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளீர்கள்?

**பதில்:** இதுபற்றி நான் சட்டமா அதிபருடன் நீதி அமைச்சருடனும் ஆக்கபூர்வமான பேச்சுகளில் ஈடுபட்டுள்ளேன்.

**கேள்வி:** ஏற்கனவே இப்படியான கோரிக்கைகளை முன்வைத்து வெலிக்கடை, மகஸின், களுத்துறை போன்ற சிறைகளில் உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களை நடத்தினர். அப்போதெல்லாம் பல அரசியல் வாதிகள் அங்கு சென்று பல வாக்குறுதிகளை வழங்கினர். இதுவரை அவை எவையும் நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லையே?

**பதில்:** உண்மைதான்! அதற்காக நாம் முயற்சிக்காமல் இருக்க முடியாதல்லவா? இனவாதம் மேலோங்கியிருக்கும் இந்நாள்களில் ஒவ்வொரு விடயத்தையும் பலத்த சிரமங்கள் மத்தியிலேயே நிறைவேற்ற வேண்டியுள்ளது. ஆனால் நான் தனிப்பட்ட முறையில் உரியவர்களுடன் தொடர்புகொண்டு முயற்சிக்கும் அதேவேளையில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையே இடம்பெறும் பேச்சுக்களின் போதும் இப்பிரச்சினைகளை முன்வைப்பேன்.

தற்போது நீதியமைச்சராக இருப்பவர் ஒரு சிறுபான்மைச் சமூகத்தவர் என்ற வகையில் எமக்குச் சில வாய்ப்புகள் ஏற்படக் கூடும் என நினைக்கின்றேன்.

**கேள்வி:** இலங்கையின் பல சிறைகளிலும் விசாரணைகளே இன்றிப் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அநுராதபுரம் சிறையில் இப்படியானவர்கள் இருக்கிறார்களா? இருந்தால் அவர்கள் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றீர்கள்?

**பதில்:** ஆம்! இங்கும் எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாமல் 8 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். பொலிஸாரின் பொறுப்பற்றதனம், சட்டமா அதிபர் திணைக்களத்தினரின் அசிரத்தை என்பன எத்தனையோ பேரின் வாழ்க்கையையும் பொது நீதியையும் மனித நேயங்களையும் பாழடித்துக்கொண்டிருக்கின்றன.

இவற்றைப் பார்க்கும்போது ருஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய் அவர்களின் புத்துயிர்ப்பு நாவல் தான் நினைவுக்கு வரும். நீதிபதி தன் மனைவியுடன் ஏற்பட்ட கோபத்துடன் வந்து கதாநாயகனுக்கு ஒரு சிறிய குற்றத்துக்கு கடும் தண்டனை விதிக்கின்றார். சிறைச்சாலை அதிகாரிகளின் பொறுப்பின்மை காரணமாக அவன் பற்றிய கோவைகள் தொலைந்துவிட அவன் தண்டனைக் காலம் முடிந்து பல காலமாகியும் சிறையில் வாடுகின்றான். அது கொடுங்கோலன் ஜார் சக்கரவர்த்தியின் காலம். ஆனால் எமது நாட்டிலும் ஜனநாயகத்தின் பேரால் அதே நிலைமைதான் நிலவுகின்றது. எப்படியிருப்பினும் நான் சட்டமா

அதிபர் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளேன்.

**கேள்வி:** அவர்களின் மனநிலை எப்படி இருக்கிறது?

**பதில்:** அடைக்கப்பட்ட கதவுகளின் பின்னால் ஒரு கூண்டுக்குள் ஐந்து பேர் மாறி மாறி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தால் எப்படி இருக்கும்? தங்களுக்குத் தமிழ்ப் பத்திரிகைகள் கூடக் கிடைப்பதில்லை என என்னிடம் முறையிட்டனர். உடனடியாகவே நான் அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருடன் கதைத்து தமிழ்ப் பத்திரிகைகள் கிடைக்க ஏற்பாடு செய்தேன்.

ஒரு கைதியின் தாய் சுகவீன முற்றிருப்பதாக முதல்நாள் அறிவித்தல் கிடைத்ததாம். அவர் தாயைப் பார்க்கப்போக அனுமதி கோரினாராம். ஆனால் அடுத்த நாளே தாயார் இறந்துவிட்டசெய்தி கிடைத்ததாம். இதைக் கண்ணீர்மல்க என்னிடம் கூறினார்.

இவர்களில் ஒருவர் ஆயுள் தண்டனைக் கைதி. அவர் ஒரு பெண் கைதியை சிறையிலேயே திருமணம் செய்தாராம். இப்போது இருவரும் வெவ்வேறு சிறைகளில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

**கேள்வி :** அதாவது தாய் - பிள்ளைப் பாசம், கணவன் - மனைவி உறவு போன்ற இயல்பான மனித உணர்வுகள் கூட நசுக்கப்படுகின்றன. இது ஓர் அப்பட்டமான மனித உரிமை மீறல் அல்லவா?

**பதில்:** உண்மைதான். ஆனால், இந்தக் கொடுமைகளைச் சட்டபூர்வமாக நியாயப்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பன துணை நிற்கின்றன.

**கேள்வி:** அப்படியானால் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவு வழங்குகின்றனரே?

**பதில்:** அவர்கள் தெரிவுசெய்யப்பட்டமை தமிழ் மக்களால் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் பதவி வகிப்பது அரசின் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்தவே.

அவர்கள் நினைத்தால் அமைச்சரவையிலோ? நாடாளுமன்றக் குழுவிலோ? வாதாடி இந்தக் கைதிகளின் விடுதலைக்கு வழி வகுத்திருக்கலாம். ஆனால் அவர்களுக்கு அதற்கான மனமும் இல்லை. அதற்கான துணிவும் இல்லை.

அந்தக் கைதிகள் என்னிடம் இராணுவத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தி நேரடியாகப் போரிட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் முதலமைச்சராகவும், அமைச்சராகவும் இருக்கும்போது சிறு

குற்றச்சாட்டுக்களின்பேரில் நாங்கள் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை எந்த வகையில் நியாயம் என்று கேட்டனர்.

ஓர் இளைஞர் தான் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தால் 2 வருடம் சிறைத் தண்டனையை முடித்து வெளியேறியிருக்கலாம் எனவும் குற்றத்தை ஏற்க மறுத்தமையால் நான்கு வருடங்களாகத் தடுப்பில் இருக்கின்றார் எனவும் தெரிவித்தார். இதுதான் அங்கு நிலவும் யதார்த்தம்.

**கேள்வி:** வவுனியா சிறைச்சாலைக் கைதிகளுடனான சந்திப்புப் பற்றி?

**பதில்:** அவர்களுக்கும் இதே பிரச்சினைகள் அத்தனையும் உண்டு. மேலதிகமாக அவர்கள் தண்ணீர்ப் பிரச்சினை பற்றிக் கூறினார்கள். இதுபற்றிச் சிறைச்சாலை அத்தியட்சகருடன் கதைத்தபோது அங்கு ஒரு குழாய்க்கிணறு அமைக்க நிதி இல்லையெனத் தெரிவித்தார். நான் சில நலன்விரும்பிகளின் உதவியுடன் அந்த நிதியை நானே பெற்றுத் தருவதாகக் கூறியுள்ளேன்.

**கேள்வி:** இந்தச் சந்திப்புத் தொடர்பாக இறுதியாக என்ன கூற விரும்பு கின்றீர்கள்?

**பதில்:** இதுவரை அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை பற்றி அறிந்தோம். ஆனால் அவர்கள் மனங்கள் சிறைப்பட்டு, காயப்பட்டு குருதி ஒழுகுவதை அங்கு சென்ற பின்புதான் என்னால் அறிய முடிந்தது.

அவர்களின் விடிவுக்கு முழுமூச்சுடன் ஈடுபடவேண்டிய பெரும் பொறுப்பு எங்களுக்கு உண்டு என்பது எமக்கு ஆணித்தரமாக உணர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு ஈ.சரவணபவன் எம்.பி. தனது பேட்டியில் தெரிவித்தார். (ம)

இந்தியாவைப் பொறுத்தவரையில் அதனிடம் ஏமாறுகிறோம் என்று தெரிந்தும் நாம் ஏமாற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் மேலோங்கக் கூடாது என்பதற்காகவே இந்தியா, இலங்கை விவகாரத்தில் மென்போக்கைக் கடைப்பிடிப்பதாகக் கூறப்பட்டது. ஆனால், இதில் இந்தியா தோல்வியையே அடைந்து வருகின்றது. இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் மேலும் வலிமையடைந்தே வருகின்றது எனக் கூறுகின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்.

'இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக்காண '13' ஆவது திருத்தம் போதுமானதல்ல என்பதே எமது கருத்து. எனினும் காணி,

பொலிஸ் அதிகாரம் போன்றன அதில் உள்ளன. எனவே, '13' ஆவது திருத்தம் தீர்வாக அமையாது என்றாலும் அதனை நீக்கக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம்' என்று ஞாயிறு தினக்குரலுக்கு அளித்துள்ள பேட்டியில் சரவணபவன் மேலும் தெரிவித்துள்ளார். அவரது பேட்டியின் விவரம் வருமாறு:-

**கேள்வி:** இன்று அரசு தரப்பிலிருந்து 13 ஆவது திருத்தச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து மேலோங்கி வருகிறது. அதைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

**பதில்:** இனப்பிரச்சினைக்கான ஒரு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு '13' ஆவது திருத்தச் சட்டம் போதுமானதல்ல என்பது எனது திட்டவட்டமான கருத்து. எனினும், அதில் மாகாண சபைக்கான காணி, பொலிஸ், பொதுநிர்வாகம் என்பனவற்றின் மீதான அதிகாரம், உள்ளூராட்சிச் சபைகள் மீதான அதிகாரம் போன்ற சில அதிகாரங்களைப் பரவலாக்க நல்ல அம்சங்கள் உண்டு. எனவே, நாம் '13' ஆவது அரசியல் சட்டம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது எனக் கருதும்போது அது ஒழிக்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

ஆனால், அரசாங்கம் இதே காரணங்களுக்காக இதை ஒழிக்க விரும்புகின்றது. ஒன்று மாகாண சபைகள் மூலம் தமிழ் மக்களது சில உரிமைகளையாவது விட்டுக்கொடுக்க அரசாங்கம் விரும்பவில்லை. குறிப்பாக மாகாணசபைகள் மூலம் நிலம், பொலிஸ், நிர்வாக சேவை, உள்ளூராட்சி சபைகள் என்பனவற்றின் மீதான அதிகாரம் வடக்கும், கிழக்கும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களிடம் சென்றடைவதை அரசு விரும்பவில்லை. அடுத்து 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் சில குறைந்தபட்ச அதிகாரங்கள் 9 மாகாண சபைகளுக்கும் பரவல்படுத்தப்படுகின்றன. '13' ஆவது திருத்தத்தை ஒழிப்பதன் மூலம் தமிழ் மக்கள் உரிமைகள் மட்டுமன்றி சிங்கள மக்களின் உரிமைகளும் பறிக்கப்படுகின்றன.

இது ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு அடித்தளமிடும் முயற்சியாகும். மாகாண முதலமைச்சர் பதவியென்பது பெரியளவில் அதிகாரமற்ற பதவியாகும். இருந்தும் மாகாண மக்களால் அவர் தெரிவு செய்யப்பட்டவர் என்றளவில் அவரின் குரல் தேசிய அளவிலும், அவரின் குரல் தேசிய சர்வதேச அளவிலும் கவனம் பெறும் என்பதுடன் அரசுக்குப் பதில் சொல்ல வேண்டிய சில நிர்ப்பந்தங்களையும் உருவாக்கும். இது அடிப்படையில் நிறைவேற்று அதிகாரத்தை நோக்கிய அதிகாரக் குவிப்பு முயற்சி என்பதில் ஐயமில்லை!

**கேள்வி:** அரசுக்கு வெளியேயுள்ள ஒரு சிலரும் '13' ஆவது திருத்தச்சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் எனக் கருத்து வெளியிட்டுள் ளனரே?

**பதில்:** உண்மைதான். ஐக்கிய தேசியக் கட்சியினர்கூட அதிகாரப் பரவலாக்கலை ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல. 1987 இல் நிலவிய நெருக்கடி நிலையிலேயே ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தின் மூலம் அவர்கள் '13' ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தனர். இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஜோன் அமரதுங்ககூட தாங்கள் வடக்குக் கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஏற்படுத்தியதே ஐக்கிய தேசியக் கட்சியல்லவா?

1978இல் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நிறைவேற்று அதிகாரத்தை உருவாக்கினார். அதை அடித்தளமாகக் கொண்டு, 18 ஆவது திருத்தச் சட்டம் மூலம் மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தினர். இனி 19 ஆவது திருத்தச் சட்டமூலம், மாகாண சபையை இல்லா தொழிக்கவும் முயற்சிகள் ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. அடிப்படையில் ஐக்கிய தேசியக்கட்சி என்றாலென்ன? ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு என்றால் என்ன? ஒரே அச்சில் சுழலும் இரு சக்கரங்கள்தான்.

**கேள்வி:** ஐ.தே.கட்சி இனப்பிரச்சினை, நிறைவேற்று அதிகாரம் என்பவற்றுக்கு அடித்தளமிட்டதாகக் கூறும் நீங்கள்! அதனுடன் இணைந்துதானே செயற்படுகின்றீர்கள்?

**பதில்:** எதிர்க்கட்சிகள் என்ற அடிப்படையில் சில விடயங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றோம். எவ்வகையிலும் இனப்பிரச்சினைக்கு எடுக்கப்படும் தீர்வு முயற்சிகளில் எமக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக எழுதாத உடன்படிக்கை ஒன்றை வழங்கியுள்ளனர். அதைத் தொடர்ந்து உதவுவதாக வாக்களித்துள்ளனர். இன்று ஐ.தே.கட்சியினால் எதுவும் செய்யமுடியாவிட்டாலும் எதிர்க்கட்சியென்றவகையில் அவர்களிடம் எமது ஆதரவை எதிர்பார்க்கலாம்.

**கேள்வி:** '13' ஆவது திருத்தத்தை நீக்க அரசு முயற்சிக்கின்றது என எப்படிக்கூறமுடியும்?

**பதில்:** அமைச்சரவை அந்தஸ்து உள்ள அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ போன்றோர் இதனைப் பகிரங்கமாகக் கூறிவருவதுடன் இதற்கு மக்கள் மத்தியில் ஆதரவும் திரட்டி வருகின்றனர். அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பு என்றவகையில்

இவர்களின் நடவடிக்கைகளை அலட்சியம் செய்துவிடமுடியாது. எல்லாவற்றையும்விட வரவு - செலவுத் திட்ட உரையின்போது ஜனாதிபதியே இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார். ஜாதிக ஹெல உறுமயவும் இதையே கூறுகின்றது.

**கேள்வி :-** '13' ஆவது திருத்தச்சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என இலங்கையின் அரசியல்சக்திகள் வலியுறுத்துவது தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பாக நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:** இந்திய அரசின் நிலைப்பாடு பற்றி நாம் கூறுவதானால் அப்பட்டமான கபடத்தனமென்றே சொல்லவேண்டும். நாம் இந்தியாவைப் பொறுத்தவரை ஏமாறுகிறோம் என்று தெரிந்தும், நாம் ஏமாற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளோம். அது மிகவும் துயரமானது.

நவம்பர் முதலாம் ஆம் திகதி ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் பேரவைக்கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அங்கத்துவ நாடுகளால் 200 இற்கு மேற்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. இவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க இந்தியா, ஸ்பெயின்.பெனின் என மூன்று நாடுகள் நியமிக்கப்பட்டன. அங்கத்துவ நாடுகளின் பரிந்துரையில் பின்வரும் முக்கிய விடயங்களாய் குறிக்கப்பட்டிருந்தன.

வடக்குக், கிழக்கில் இராணுவக் குவிப்பு குறைத்தல், அதிகாரப் பரவலாக்கம், வடமாகாண சபைத் தேர்தல், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்.

ஆனால், அங்கத்துவ நாடுகளின் பரிந்துரைகளை இந்தியா இலங்கையிடமே வழங்கி பரிந்துரை சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டது. அடுத்தநாள் இலங்கை எந்தப் பிரச்சினையும் இல்லாததொரு நாடாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக இந்தியா உறுப்பு நாடுகளின் மறைமுகமான கண்டனங்களுக்கு உள்ளானது.

இலங்கையில் நடந்த இனப்படுகொலைகள் தொடர்பாக இந்தியா நன்கு அறிந்திருந்த போதும்; தெரிந்தும் தெரியாததுமாதிரி நடித்து இலங்கைக்கு உதவி புரிந்துள்ளது.

**கேள்வி:** '13' ஆவது திருத்தத்தை ஒழிக்கும் இலங்கையின் முயற்சியைக் கண்டும் இந்தியா மௌனமாக இருப்பதன் காரணம் என்ன?

**பதில்:** ஐ.தே.கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க '13' ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிக்க ஒரு இரகசிய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளனர்

எனக் கூறுகின்றார். அப்படியானால் இது ஏன்? அவ்வளவு தாமதமாக வெளிப்படுத்தப்பட வேண்டும்? அதாவது இன்று இந்தியாவின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை வைத்துக்கொண்டு அரசியல் பிழைப்பு நடத்துகின்றனர். இந்தியா தமிழரை ஏமாற்றுகின்றது. நாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:** இந்தியா தமிழரை ஏமாற்றுகின்றது என்கின்றீர்களா? அப்படியானால் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவை நாடிச் செல்வது ஏன்?

**பதில்:** முதலாவது ஆயுதப் போராட்டத்தை வளர்த்தது. இலங்கை அரசுடன் இணைந்து அழித்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் '13' ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தது எனத் தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகளில் இந்தியாவின் கைகளே மேலோங்கி இருந்தது. எனவே, இனப்பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வு காணவேண்டிய தார்மீகக் கடப்பாடு இந்தியாவிற்கு உண்டு. இரண்டாவது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு. அதை மீறி எந்தவொரு சர்வதேச நாடும் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையீடு செய்யப்போவதில்லை. மூன்றாவது இந்தியத் தமிழக மக்கள் எமக்கு வழங்கும் ஆதரவு இந்தியாவுக்கு அழுத்தங்களைக் கொடுக்கும். எனவே, இந்தியாவை எதிர்பார்க்க வேண்டிய தேவை தவிர்க்கமுடியாததாகின்றது.

**கேள்வி:** '13' ஆவது திருத்தத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள் கின்றதா?

**பதில் :** இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்தபோது 13+ என்ற அடிப்படையில் இலங்கை இனப்பிரச் சினைக்குத் தீர்வு காண இந்தியா அழுத்தம் கொடுக்குமெனத் தெரிவித்திருந்தார். அந்தப் பிளஸ் ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணத்தில் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பகிர்வு என்ற அடிப்படையில் அமையுமானால், ஏற்றுக்கொள்வோம். இல்லையேல் அதை எட்டுமட்டும் போராடுவோம்.

**கேள்வி:** '13' ஆவது திருத்தச் சட்டத்தை அரசியல் யாப்பிலிருந்து நீக்க முயன்றால் கூட்டமைப்பு என்ன செய்யும்?

**பதில்:** அது அவ்வளவு இலகுவான விடயமாக இருக்கப் போவதில்லை. தமிழ் மக்களை மட்டுமன்றி முஸ்லிம் மக்களையும் இணைத்துப் போராட்டங்களை நடத்துவோம். அது சிங்கள மக்களையும்

பாதிக்குமானால் அவர்களின் ஒரு பகுதியினரும் களத்தில் இறங்கும் நிலைஏற்படும்.

**கேள்வி:** '13' ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்கின்றனரா?

**பதில் :** இது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டாலும், எமது மக்களின் 30 வருடப் போராட்டத்தின் ஒரு பலன் 13 ஆவது திருத்தச் சட்டம். பெரும் பதிலுக்காக எத்தனையோ தியாகங்களைச் செய்த எமது மக்கள், கிடைத்த ஒரு சிறுபலனை இழக்கச் சம்மதிப்பார்களா? இவ்விடயத்தில் எமது மக்கள் தெளிவாகவே உள்ளனர்.

**கேள்வி:** இலங்கையின் அபிவிருத்தியில் இந்தியாவின் பங்களிப்பு தமிழ் மக்களுக்கு சாதகமான நிலையைத்தோற்றுவிக்குமென நம்புகிறீர்களா?

**பதில்:** இல்லை! என்றே நான் நம்புகின்றேன். முன்னாள் இந்தியத் துணை ஸ்தானிகர் மாணிக்கத்துடன் நான் தமிழ் மக்களின் மீள் குடியேற்றம் பற்றி சம்பூரில் போர் முடிந்ததும் கதைத்தபோது; நிச்சயமாக அவர்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் எனத் தெரிவித்தார். ஆனால், இன்றுவரை அம் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவில்லை. மாறாக இந்தியா, சம்பூரின் ஒரு பகுதியில் அவர்களின் அனல்மின் நிலையத்தை அமைத்து வருகின்றது.

இன்றும் - அவர்கள் நினைத்தால் அனல்மின் நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றிவிட்டு மனிதாபிமான அடிப்படையில் சிறு தகரக் கொட்டில்களில் வசிக்கும் சொந்த மக்களிடம் சம்பூரை ஒப்படைக்கலாம். இதிலிருந்து மக்கள் நலன்பற்றி அவர்கள் சிந்திப்பது எல்லோருக்கும் புரியும் என்று நினைக்கின்றேன்.

**கேள்வி:** இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் மேலோங்கக் கூடாது என்பதற்காகவே இந்தியா இலங்கை விடயத்தில் மென்போக்கைக் கடைப்பிடிப்பதாகக் கூறப்படுகின்றதே?

**பதில்:** இருக்கலாம்! ஆனால், அதில் இந்தியா தோல்வியையே அடைந்து வருகின்றது. இலங்கையில் சீன ஆதிக்கம் மேலும் மேலும் வலிமையடைந்தே வருகின்றது. சுற்றுலாத்துறை, மின்சாரம், நெடுஞ்சாலைகள், தாமரை ஒலிபரப்புக் கோபுரம் என இலங்கையில் சீனாவின் கை மேலோங்கியே வருகின்றது. மகிந்த ராஜபக்ஷ இந்தியா தனது சகோதரர் எனவும் சீனா தனது நண்பர் எனவும் கூறினார். எப்படியும் இங்கு நண்பனுக்கே முதலிடம் கொடுக்கப்படுகின்றது.

இந்தியா பெரிய அண்ணன் என்றுதான் நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். பெரிய அண்ணன் இந்தத் தமிழ்த் தம்பிமாரை கௌரவமாக இங்கு வாழவைப்பார்கள் என்ற மனோ நிலை உருவாகும் பட்சத்தில் - தம்பிமார்கள் இலங்கையின் நண்பனை நாடமாட்டார்கள். அறுபது ஆண்டுகாலமாக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் தமிழர்களை அவர்களுக்குச் சாலவும் சிறந்தது. இலங்கையின் நண்பன் யார்? என்று எண்ண வைக்காமல் இருப்பதே.

**கேள்வி:** '13' ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கிவிட்டு '19' ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டால் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** சட்டத்தின் பெயர்கள் எதுவுமில்லை. அச்சட்டம் இனப் பிரச்சினைக் கான நியாயமான தீர்வைக் கொண்டுள்ளதா? இல்லையா? என்பதுதான் முக்கியம்.

**கேள்வி:** 19 ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டால் இந்தியாவின் தலையீடு இருக்குமா?

**பதில்:** இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கை தன்னை மீறிச் சென்று விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கும். இலங்கை தன்னை நாடி வரும் வகையில் நிலைமைகளை உருவாக்கும். இச் சட்டங்கள் அந்த நிலைமைக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வரையும் இந்தியா தலையிடாது. இலங்கையும் அதைப் புரிந்து வைத்துள்ளது.

**கேள்வி:** நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து செயற்பட்டால் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான வழியொன்றை உருவாக்க முடியுமா?.

**பதில்:** நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற கருத்து இன்று. நேற்று உருவானதல்ல. தீர்வுக்கான எந்தத் திட்டமோ? ஆர்வமோ? அரசிடம் இல்லை. நாம் பேச்சு வார்த்தை நடைபெறுமா? இல்லையா? எனக் காத்திருந்த காலங்கள் உண்டு. தெரிவுக்குழு எதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பேசும்? இதற்கு ஒரு கால வரையறை உண்டா? அது இந்த நாடாளுமன்றக் காலம் முடிந்த பின்பும் தொடருமா? எட்டப்படும் முடிவுகளுக்கு என்ன நடக்கும்? இப்படி விடைகாண முடியாத கேள்விகள் நிறையவே உள்ள நிலையில் நாம் இதில் நம்பிக்கை வைக்கமுடியுமா?

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தமிழர்களை ஏமாற்றுகிறது. அவர்கள் தெரிவுக்குழுவில் இணைந்து பேச வரவேண்டும் என அமைச்சர் டிலான் பெரேரா கூறுகின்றாரே?

**பதில்:** பண்டா - செல்வா ஒப்பந்தம். டட்லி - செல்வா ஒப்பந்தம். சர்வகட்சி மாநாடு. சந்திரிகா அம்மையாரின் தீர்வுப் பொதி. நாடாளுமன்றத்

தெரிவுக்குழு என நாம்தான் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறோம். அமைச்சர் தொடர்ந்து எம்மை ஏமாறச் சொல்லிக் கேட்கிறார். அவ்வளவுதான்.

**கேள்வி:** அப்படியென்றால் நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பு என்ன?

**பதில்:** ஏற்கனவே, நாம் அரசுடன் பலசுற்றுக்கள் பேசியிருக்கிறோம். அது தொடர்புபட்ட ஒரு இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும். அந்த இணக்கப்பாட்டை அடிப்படையாக வைத்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பேசப்பட வேண்டும். அதில் எடுக்கப்படும் முடிவுகள் எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**கேள்வி:** முன்னாள் போராளிகள் முழுநேரப் பாதுகாப்புப் படையில் இணைத்துக் கொள்ளப்படுவது உண்மையா?

**பதில் :** அவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்படுவார்கள் என்றே கூறப்பட்டது. இப்போது இராணுவத்தில் சேர்த்து அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர் என்று கூறப்படுகின்றது. இது மீண்டும் அவர்களைச் சமூகத்திலிருந்து பிரித்து வைக்கும் ஒருசெயற்பாடாகவே நாம் கருதுகின்றோம். இது சிவில் பாதுகாப்புப் படை எனக் கூறப்பட்டாலும் இராணுவத்திற்குள்ளேயே இருக்கின்றது.

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவதில் என்ன பிரச்சினை இருக்கின்றது.

**பதில் :** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயமாக ஒரு கட்சியாகப் பதிவுசெய்யப்பட வேண்டும். வெவ்வேறு அமைப்புக்களிலிருந்து வந்தவர்கள் என்ற அடிப்படையில் சில கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். அவை புரிந்துணர்வின் அடிப்படையில் சரி செய்யப்படுகின்றன. கொள்கையளவில் நாம் அனைவரும் ஒருமித்தே இருக்கின்றோம். அதன்படி கட்சி நிச்சயம் பதிவு செய்யப்படும்.

# இருப்பைத்தக்க வைக்கவே அடாவடியில் இராணுவம்

**சரவணபவன் எம்.பி. காட்டம்**

**யா**ழ். குடாநாட்டில் இராணுவத்தினர் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே யாழ். பல்கலைக்கழகத்தில் நுழைந்து அடாவடித் தனத்தில் ஈடுபடுகின்றனர். முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவை படுகொலை செய்வோம் எனக் கூறி தென்பகுதியில் ஈடுபட்ட ஜே.வி.பியினர் 'கார்த்திகை தினம்' என்ற பெயரில் அவர்களது இறந்த கிளர்ச்சியாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும்போது 30 வருடகால யுத்தத்தில் தமது உறவுகளை இழந்தவர்கள் அவர்களது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக மாவீரர் தினத்தை அனுஷ்டித்தால் என்ன என்று யாழ்.மாவட்டத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கேள்வி எழுப்பினார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 26ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க முற்பட்டபோது பல்கலைக் கழகத்துக்குள் அத்துமீறி நுழைந்த இராணுவத் தினரும் பொலிஸாரும் மாணவர்களை ஓடஓட விரட்டி மிருகத்தனமான முறையில் தாக்குதல் நடத்தினர். மறுநாள் 27 ஆம் திகதி பல்கலைக்கழகத்துக்கு வெளியே பல்கலைக்கழக மாணவர்கள் அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றபோதும் அங்குவந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் அராஜகத்தில் ஈடுபட்டனர். இந்த இரு சந்தர்ப்பங்களிலும் களத்துக்குச் சென்ற கூட்டமைப்பு எம்.பி. ஈ.சரவணபவன் தாம் நேரில் பார்த்தவற்றையும் பொலிஸ், இராணுவத்தினரின் அராஜகங்களையும் விளக்குகின்றார். பல்கலைக் கழக வாயிலில் நிறுத்தப்பட்டிருந்த அவரது வாகனம் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்த

நிலையில் அடித்து நொறுக்கப்பட்டமை இங்கு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது. அவர் வழங்கிய பேட்டி முழுமையாகக் கீழே தரப்படுகிறது.

**கேள்வி:** யாழ். பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் மீது இராணுவத்தினரும் பொலிஸாரும் தாக்குதல் நடத்தியது ஏன்? அச்சந்தர்ப்பத்தில் நீங்களும் அங்கு இருந்தீர்கள் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன. அங்கு என்ன நடந்தது?

**பதில்:** யாழ். பல்கலைக்கழகத்துக்கு உள்ளே கடந்த 26 ஆம் திகதி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. மாவீரர் தினம் சம்பந்தமான சுவரொட்டிகளே அவை. யாழ்ப்பாணத்தில் ஒரு வழக்கம் இருக்கின்றது. சிவில் உடை அணிந்த இராணுவப் புலனாய்வாளர்கள் மக்களுடன் மக்களாக நடமாடுவது வழக்கமாகிவிட்டது. அன்றைய தினம் 26 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள். இதைக் கருத்திற்கொண்டே இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பல்கலைக்கழக வட்டாரத்தில் உலவினர். அப்போதே இரு தரப்புக்கும் முரண்பாடு ஏற்பட்டுவிட்டது. அதற்கு மறுநாள் 27 ஆம் திகதி மாவீரர் தினம். பல்கலைக்கழக மாணவர்கள், பெற்றோர்கள், சகோதரிகள் இவர்களது உறவினர்கள் எத்தனையோ பேர் யுத்தத்தில் இறந்துள்ளனர். இவர்கள் எல்லோரும் தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஈகைச்சுடர் ஏற்றும் நாள்தான் இந்த மாவீரர் தினம். அன்று இராணுவம் பல்கலைக்கழக ஆண்கள் விடுதிக்குள் நுழைந்துவிட்டது. உடனடியாக எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. நான் அங்கு விரைந்தேன். நான் பல்கலைக்கழக வாசலுக்குச் சென்றபோது அங்கு இராணுவம் மற்றும் பொலிஸாரும் கூடி நின்றனர். சிவில் உடையிலும் பலர் காணப்பட்டனர். இவர்கள் புலனாய்வுப் பிரிவினர் என்பது எனக்குப் புரிந்தது. நான் என்ன நடந்தது என மாணவர்களிடம் கேட்டுக்கொண்டிருந்தபோது ஒரு பத்துப் பேர் அடங்கிய இராணுவத்தினர் கூட்டமாக என்னை நோக்கி வந்தனர். அப்போது சுமார் 6 மணி இருக்கும். இவர்கள் மாணவர்களின் விடுதி வளாகத்துக்குள்ளிருந்தே வந்தனர்.

இந்த நேரத்தில் மாணவிகளின் விடுதியில் ஈகைச்சுடர் ஏற்றுவதாக அவர்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவர்கள் விரைந்து சென்றபோது வளாகத்தில் உள்ள கோவிலுக்கருகே ஒரு ஊடகவியலாளர் நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தார். அதைத்தாண்டிச் சென்றுகொண்டிருந்த இராணுவ அதிகாரி குழுவினருடன் திரும்பி வந்து அந்த ஊடகவியலாளரின் கழுத்தைப் பிடித்து சுவருடன் அழுத்துவதை நான் கண்டேன். உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்தேன். அங்கு செல்வதற்கு முன்னரே அந்த ஊடகவியலாளரின் முகத்தில் இராணுவத்தினர் தாக்கியதைக் கண்டேன். நான் அங்கு விரைந்தபடியே உரத்த குரலில் 'உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது ஒரு பொதுமகனைத் தாக்குவதற்கு,

இதுதான் ஜனநாயகமா?' எனக் கேட்டுக்கொண்டே சென்றேன். உடனே தாக்குதல் நிறுத்தப்பட்டது. அந்த அதிகாரி என்னைப் பார்த்தார்.

உடனே எனது பாதுகாப்பு உத்தியோகத்தர் 'இவர் ஒரு எம்.பி.' எனக் கூறினார். அந்த இராணுவ அதிகாரி ஊடகவியலாளர் மீதான பிடியை விட்டுவிட்டு உடனே அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். அவர் சென்ற சிறிது நேரத்தில் பெண்கள் அவலக்குரல் எழுப்பினர். அவர்கள் அச்சமடைந்திருக்கலாம். அதன் பின்னர்தான் எனக்குத் தெரிந்தது தாக்கப்பட்ட ஊடகவியலாளர் 'உதயன்' பத்திரிகையின் ஆசிரியர் என்ற விடயம். நான் இனங்கண்ட அதே நேரத்தில் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரது கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த கெமராவைப் பறிக்க முயற்சித்தனர். இச் சந்தர்ப்பத்தில் சிலர் அங்கு விரையவும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர். பின்னர் சிலர் வந்து என்னையும் எனது வாகனத்தையும் படம் எடுத்தனர். அதன் பின்னர் சற்று நகர்ந்து சென்று என்னை நோக்கி கற்களை எறிந்தனர். உடனடியாகச் செயற்பட்ட எனது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்னைப் பாதுகாப்பாக வாகனத்தில் ஏற்றி அழைத்துச் சென்றனர். பின்னர் நான் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்தேன். நான் உதயன் ஆசிரியரைச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்த்தேன்.

**கேள்வி:** இந்தக் களேபரத்தில் உங்களுக்கோ அல்லது உங்கள் வாகனம் மீதோ தாக்குதல் நடத்தப்பட்டதா?

**பதில்:** அன்று காலை என்மீது கற்கள் எறியப்பட்டும் எனக்கோ வாகனத்துக்கோ எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. நான் 27 ஆம் திகதி எனது கடமைகளை மேற்கொண்டிருந்தபோது பகல் 12 மணியளவில் மீண்டும் பல்கலைக்கழக மாணவர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டனர். இராணுவத்தினரும் பொலிஸாரும் மாணவர்கள் மீது மிருகத்தனமாகத் தாக்குதல் நடத்துகின்றனர் என அவர்கள் தெரிவித்தனர். நான் உடனடியாக அங்கு விரைந்தேன். பல்கலைக் கழக இருவாயில்களையும் யாரும் உட்புகா வண்ணம் இழுத்துமூடிவிட்டார்கள். இரண்டு வாயில்களுக்குமிடையிலான தூரம் நூறு மீற்றர்கள் இருக்கும். இங்கு பெருந்தொகையான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்ததை நான் கண்டேன்.

நான் அங்கு செல்ல முயன்றபோது இராணுவத்தினர் அங்கு செல்லக்கூடாதெனத் தடுத்தனர். நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எனக் கூறி இராணுவத்தினர் திரண்டுநின்ற இடத்தில் எனது வாகனத்தை நிறுத்திவிட்டு பல்கலைக்கழக வாயிலை நோக்கி நடந்து சென்றேன். அங்கு யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிகேரோ நின்றார். நான் அவரிடம் சென்று என்ன நடந்தது என்றேன்.

அவர் பாரதூரமாக ஒன்றுமில்லை. இப்போது நிலைமை சுமுகமாக உள்ளது என்றார் ' இல்லை நீங்கள் நான்கு மாணவர்களைக் கைதுசெய்துள்ளீர்கள். அவர்கள் செய்த தவறு என்ன?' எனக்கேட்டேன். அவர் இல்லை, இல்லை அவர்களை விட்டுவிட்டோம் எனக் கூறினார். நான் அங்கு நின்ற ஒரு ஆசிரியரை அழைத்து கைதான மாணவர்கள் விடுவிக்கப்பட்டுவிட்டார்களா? என்றேன். அவர் அதை உறுதிப்படுத்தினார். பின்னர் நான் பல்கலைக்கழக வாயிலுக்குச் சென்றபோது என்னிடம் வந்த மாணவர்கள் மேலும் ஒரு ஊடகப் பிரிவு மாணவர் விடுவிக்கப்படவில்லை என்ற தகவலைத் தெரிவித்தனர். நான் மீண்டும் பொலிஸ் அதிகாரியிடம் சென்று அவருடன் பேசி அந்த மாணவனையும் விடுவித்தேன்.

**கேள்வி:** அதன் பின்னர் என்ன நடந்தது?

**பதில் :** நான் திரும்பிச் செல்வதற்காக வாகனத்தைக் கொண்டு வரும்படி எனது சாரதியிடம் தெரிவித்தேன். அவர் ஓடிவந்து வாகனம் முற்றுமுழுதாக நொறுக்கப்பட்டுவிட்டது என்றார். நான் வாகனத்தை உள்ளே கொண்டுவரும்படி கூறினேன். வாகனத்தின் முன்கண்ணாடி பெரிய கல் ஒன்றினால் நொறுக்கப்பட்டிருந்தது. வாகனத்தில் உள்ள முழுக்கண்ணாடிகளும் நொறுக்கப்பட்டிருந்தன. இது எப்படி நடந்தது என நான் அந்த இராணுவ அதிகாரியிடம் கேட்டபோது, எங்களுக்கு எப்படித் தெரியும் இனந்தெரியாதோர் உடைத்திருக்கலாம் என்றார்.

யாராவது ஒரு வாகனத்தை அடித்து நொறுக்கினால் அந்த நபரைக் கைதுசெய்யும் பொறுப்பு அதைப் பார்த்துக்கொண்டிருந்த இராணுவத்தினருக்கு இருக்கின்றது என்றேன். அப்போது அந்த வாகனத்தை இராணுவத்தினர் அடித்து நொறுக்கினர் என்கிறீர்களா? என்றார். வேறு எப்படி நான் சிந்திப்பது? என்றேன். மற்றொரு அதிகாரி 'இராணுவம் நினைத்தால் எதையும் செய்யலாம்' என ஆங்கிலத்தில் அழுத்திக் கூறினார். இச்சந்தர்ப்பத்தில் நானும் அவர்களுடன் தர்க்கப்பட்டால் ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடும் என்று அச்சமுற்ற பொலிஸ் அதிகாரி சமன் சிகோரா என்னை அப்படியே கட்டியணைத்தவாறு என்னை எனது நொறுக்கப்பட்ட வாகனத்தில் ஏற்றி அனுப்பிவிட்டார்.

இதுதான் அன்று நடந்தது என்றார் சரவணபவன் எம்.பி.

அவர் மேலும் இது குறித்துக் கூறுகையில்,

அன்று நடந்த சம்பவங்கள் சரியா? தவறா? என்பதைப் பொதுமக்களும் புத்திஜீவிகளும் ஊடகவியலாளர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமே தீர்மானிக்க வேண்டும். இந்த மாவீரர் தினத்தை அந்தப் பல்கலைக்கழக சமூகம் அமைதியாகப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அனுஷ்டிக்கப்படத் தயாரானது. இவர்கள்தானே அத்துமீறி உள்ளே நுழைந்து மாணவர்களை

றையப் புடைத்து மாணவிகளின் விடுதிக்குள் நுழைந்து கட்டடத் தளபாடங்களை உடைத்து நொறுக்கி அடாவடித்தனம் செய்தனர். இதன் காரணமாகத்தான் மாணவர்கள் மறுநாள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்த முற்பட்டனர்.

**கேள்வி:** இதில் எத்தனை மாணவர்கள் காயமுற்றனர்?

**பதில்:** ஏழு மாணவர்கள் காயமுற்றனர். மேலும் 20 மாணவர்கள் சிறு சிறு காயங்களுக்கு உள்ளாகினர். ஏழுபேரில் இருவர் மாணவிகளாவர்.

**கேள்வி:** இப்போது நிலைமை எப்படி இருக்கின்றது?

**பதில் :** கடந்த வெள்ளிக்கிழமை இராணுவம் பல்கலைக்கழகத்தைச் சுற்றி நிறுத்தப் பட்டிருந்தனர். ஆனால், மாணவர்கள் வருகை தரவில்லை. ஆனால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெள்ளியன்று இச்சம்பவத்தைக் கண்டித்து சத்தியாக்கிரகம் செய்வதாகத் தெரிவிக்கின்றது.

**கேள்வி:** இந்தச் சம்பவம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

**பதில்:** இது தொடர்பாகக் கூட்டமைப்பு கடும் அதிருப்தியைத் தெரிவித்துள்ளதுடன் 3 ஆம் திகதி திங்கட்கிழமை நல்லூரில் எதிர்ப்புப் போராட்டமொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

**கேள்வி:** தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்வரும் 4 ஆம் திகதி இச்சம்பவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளதே. இதை ஒன்றிணைந்து மேற்கொள்ளக்கூடாதா?

**பதில்:** இது தொலைத் தொடர்பு பிரச்சினையால் ஏற்பட்ட சிக்கல். இப்போது ஒன்றிணைந்து கடந்த பேச்சு வார்த்தை நடத்தப்படுகின்றது. இந்த விடயத்தை நாம் அரசியலுக்கு அப்பாலிருந்து பார்க்கவேண்டும். கண்டனம் தெரிவிப்பதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்.

**கேள்வி:** தென்னிலங்கையில் தொடர்ந்து பல்கலைக்கழகங்களில் மாணவ ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கொழும்பு, ருகுணு, உடரட்ட போன்ற சகல பல்கலைக்கழக மாணவர்களும் கடந்த ஆறு மாதங்களாக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். அப்படியிருந்தும் பல்கலைக்கழகங்களுக்குள் இராணுவம் நுழையவில்லை. யாழ். பல்கலைக்கழகத்துக்குள் இராணுவம் நுழைவதற்குக் காரணம் என்ன?

**பதில்:** இது முழுக்க முழுக்க அரசின் தவறு. நல்லிணக்கத்துக்கு வரும் சிந்தனை அரசிடமோ அல்லது பெரும்பான்மை இனத்திடமோ இல்லை. நாங்கள் சொல்கின்றோம், நீங்கள் செய்யுங்கள் என்ற பாணியிலான நல்லிணக்கம் தான் அவர்களிடம் இருக்கின்றது

போல் தெரிகின்றது. தமிழ் மக்களை அடக்கியாள வேண்டும் என்ற எண்ணமே இன்னும் அவர்களிடம் இருக்கின்றது.

**கேள்வி:** நீங்கள் என்ன சொன்னாலும் இராணுவமும் பொலிஸாரும் யாழ்.பல்கலைக்கழகத்தில் மீண்டும் புலிகள் தலையெடுக்கப் பார்க்கின்றனர். அதை நாங்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஒரே வார்த்தையில் உள்ளூருக்கும் சர்வதேசத்துக்கும் தெரிவித்து விடயத்தை திசை திருப்பி விடுவார்கள். இதற்கு என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:** ஜனாதிபதி புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டார்கள் எனத் தெளிவாகத் தெரிவித்துள்ளார். ஏனைய அமைச்சர்களும் இதையே கூறுகின்றனர். ஏதோ ஒரு காரணத்துக்காக இராணுவமும் பொலிஸாரும் யாழ். குடாநாட்டில் இராணுவம் அளவுக்கதிகமாக நிலை கொண்டிருப்பது குறித்து நாங்கள் சர்வதேச நாடுகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

இந்த நிலையில் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டோம் என அரசு கூறியபோதும் முறையான எண்ணிக்கை யாருக்குமே தெரியாது. யாழ்.பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஒருபாடம் படிப்பிக்க வேண்டுமென்ற திட்டத்துடனேயே யாழ். பல்கலைக்கழகத்துக்குள் இராணுவத்தினர் நுழைந்திருக்கின்றனர். தமிழர்களைத் தமது சகோதரர்கள் என ஜனாதிபதி கூறிக்கொண்டிருக்கிறார். அந்த எண்ணம் இந்த இராணுவத்தினருக்கு இருந்திருந்தால் இந்த மாணவர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல் நடத்துவார்களா? கொழும்பில் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்த யாரிடமும் அனுமதிபெறத் தேவையில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் நடத்த அனுமதி பெறவேண்டும். இதுதான் ஜனநாயகமா? மொத்தத்தில் யாழ். குடாநாட்டில் தங்கள் இருப்பை உறுதி செய்து கொள்வதற்காகவே இராணுவத்தினர் இதுபோன்ற அடாவடித்தனம், அராஜகங்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# உதயநாயகன்

## ஆற்றிய உரைகளும் விடுத்த அறிக்கைகளும்

# சிறிலங்காவில் தமிழ் ஊடகங்களும் ஊடகர்களும் எதிர்நோக்கும் சவால்கள் சர்வதேச பங்களிப்பு

சுவிற்சர்லாந்து சூரிச் நகரில் சிவராம் நினைவு மன்றம் நடத்திய சிவராம் நினைவுக் கருத்தரங்கில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆற்றிய உரை அமரர் தராகி சிவராமின் நினைவுப் பேருரையை ஆற்றுவதற்காகத் தாங்கள் என்னை அழைத்தமையையிட்டு நான் பெருமைப் படுகிறேன். அதேநேரம், வருத்தமும் அடைகிறேன்.

வயதில் என்னைவிட இளையவரான சிவராமின் நினைவுரையை ஆற்றும்படி என்னை நிர்ப்பந்தித்திருக்கும் இலங்கையின் காலச் சூழல் குறித்தும், குறிப்பாகத் தமிழ் ஊடகத்துறையின் களநிலை குறித்தும் நான் கவலையும் வருத்தமும் அடைகின்றேன்.

சிவராமைப் பலியெடுத்த சூழல் இன்று வரையில் இலங்கையில் மாற்றமில்லாமல் தொடர்வது குறித்தும் சிவராமைக் கொலை செய்தவர்கள் மட்டுமன்றி ஏனைய பத்திரிகையாளர்களைக் கொலை செய்தவர்களும் ஊடக நிறுவனங் களைத் தாக்கியவர்களும் இன்னும் சுதந்திரமாக நடமாடுவதற்கு இலங்கையில் இடமளிக்கப்பட்டுள்ளமை குறித்தும் எதுவுமே செய்ய முடியாத கையறு நிலையில் நாங்கள் இருப்பது வருத்தமளிக்கிறது.

அச்சுறுத்தலை எதிர்கொண்ட பத்திரிகை யாளர்கள் பலர் இலங்கையை விட்டு உயிர்காக்க வெளியேறி வேறு நாடுகளுக்கு ஓடவேண்டி யிருந்தது. அப்படி 50 பத்திரிகையாளர்கள்

இலங்கையை விட்டு வெளியேறி இருந்தார்கள் என்று இரண்டு வருடங்களின் முன்னர் சுனந்த தேசப்பிரிய. இதே மன்றத்தில் கூறியிருக்கிறார்.

இந்த எண்ணிக்கை 2013ஆம் ஆண்டில் 80 ஆக அதிகரித்துவிட்டது என்று தெற்காசிய சுதந்திர ஊடகச் சங்கம் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இலங்கையின் ஊடக சுதந்திரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை வரையில் விவாதப் பொருளாக மாறிவிட்டபோதும் நிலைமையில் மாற்றமோ முன்னேற்றமோ ஏற்படவில்லை என்பதைத்தான் இன்றும் தொடரும் தாக்குதல்கள் உணர்த்துகின்றன.

2013ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதி வாரத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இரு வாரங்களில் உதயன் பத்திரிகை அலுவலகத்தின் முதன்மை அச்சு இயந்திரம் முற்றாக எரித்து அழிக்கப்பட்டது. சரியாக ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையிலும் அந்த அச்சு இயந்திரத்தை திருத்தி மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர எம்மால் முடியாதுள்ளது. காப்புறுதி நிறுவனத்தினர் அதற்குரிய பணத்தை இன்னும் தருகிறார்கள் இல்லை.

முதலில் காவல்துறையினரின் விசாரணை அறிக்கை வேண்டும் என்றார்கள். உங்களுக்கே தெரியும் இத்தகைய தாக்குதல்களில் காவல்துறையினர் என்றாவது விசாரணைகளைப் பூர்த்தி செய்திருக்கிறார்களா என்பது. தமது விசாரணை இன்னும் பூர்த்தி அடையவில்லை என்றுதான் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பலத்த போராட்டத்தின் பின்னர் ஒருவாறு அந்தத் தடையைத் தாண்டிச் சென்றாலும் தரவேண்டிய காப்புறுதித் தொகையை முழுமையாகத் தராமல் இந்த விடயத்தைத் தொடர்ந்தும் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள் காப்புறுதி நிறுவனத்தினர்.

இதன் பின்னால் அரசின் அழுத்தம் இருக்கும் என்று நான் திடமாகச் சந்தேகப்படுகிறேன். நாங்கள் (உதயன்) மீண்டும் முழு வீச்சில் பிரதிகளை அச்சிடக்கூடாது என்பதே அவர்களது நோக்கம். எம்மை முடக்காமல் வடக்கில் இலங்கையின் தேசியக் கட்சிகள் காலூன்ற முடியாது என்று அவர்கள் நம்புகிறார்கள்.

எனவேதான் எமது அச்சிடும் வல்லமையை முடக்கும் நோக்கத்துடன் மிகத் திறம்படத் திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. அச்சு இயந்திரத்தின் முக்கிய இயக்கு கருவி எங்கிருக்கிறது. அச்சு இயந்திரத்துக்கான மின் விநியோக மார்க்கம் எங்கிருக்கிறது போன்ற விவரங்கள் தாக்குதலாளிகளுக்குத் துல்லியமாகத் தெரிவிக்கப்பட்டே தாக்குதல் நடத்தப்பட்டது.

அதற்குப் பத்து நாள்களுக்கு முன்னர்தான் உதயன் பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் தாக்கி நொருக்கப்பட்டது. பத்திரிகைகளை விநியோகிக்க ஊழியர்கள் வரும்வரை காத்திருந்து அந்தத் தாக்குதலை நடத்தியிருந்தார்கள். மூன்று ஊழியர்கள் அந்தத் தாக்குதலில் காயமடைந்திருந்தார்கள். அதன் பின்னர் நடந்த

விசித்திரமான சம்பவம் உங்கள் எல்லோருக்கும் தெரியும். வடக்கு மாகாண சபைத் தேர்தல் அன்று போலி உதயன் பத்திரிகை ஒன்றை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

தேர்தலைக் கண்காணிக்க வந்திருந்த இந்தியத் தேர்தல் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் சேஷன். இந்தியாவிலேகூட இப்படித் தேர்தல் மோசடி இடம்பெற்றதில்லை. இவர்கள் இந்தியாவையும் மிஞ்சி விட்டார்கள் என்று தெரிவித்திருந்தார். அந்தப் போலிப் பத்திரிகையை இராணுவத்தினர்தான் வீடுவீடாகக் கொண்டு சென்று விநியோகித்தார்கள். பொலிஸாரிடம் முறையிட்டும் அதற்கு எதிராக அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

ஐ.நா. தீர்மானத்தின் பின்னர் மட்டுமல்ல அதற்கு முன்னரும் 2013 ஜனவரி முதல் யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் மீது தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஊடகவியலாளர்கள் மட்டும் இலக்கல்ல. ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் எல்லோருமே இலக்காக்கப்படுகிறார்கள். இதனால் ஊடக நிறுவனங்களில் பணியாற்ற இளைஞர்கள் பின்னடிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இந்த நிலைமையை அதிகம் அவதானிக்கலாம். அங்கு தொழில் வாய்ப்புக்கள் ஏதுமின்றி பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இருக்கின்றனர் என்றபோதும் அவர்களை ஊடக நிறுவனங்களில் வேலைக்கு சேர்க்கப் பெற்றோர் பயப்படுகிறார்கள்.

இதையும் தாண்டி ஒரு சில இளைஞர்கள் முன்வந்தால் அவர்களது குடும்பத்தினர் அதனை விரும்புவதில்லை. தமிழ்ப் பரப்பில் இது மிக அதிகமாக இருக்கிறது. ஓர் இளைஞன் ஊடகத்தில் இணைந்து கொண்டால் அவனை எப்படி அங்கிருந்து பாதுகாப்பாக சேதங்கள் ஏதுமின்றி வெளியேற்றுவது என்றே பெற்றோரும் குடும்பத்தினரும் நினைக்கிறார்கள்.

இளம் பெண்கள் திருமணம் செய்தால் அதன் பின்னர் ஊடகங்களில் பணியாற்றுவதைத் தொடர்வது என்பதை அவர்களால் நினைத்தும் பார்க்க முடிவதில்லை. இளம் ஆண்களாக இருந்தால் அவர்களது வாழ்க்கைத் துணைகள் இந்தத் தொழிலில் அவர்கள் தொடர்வதை அனுமதிக்க விரும்புவதில்லை. ஊடகப் பணியில் இருந்து ஒதுங்கி வேறு வேலைகளுக்குச் செல்லுமாறு வாழ்க்கைத் துணைகளால் இளைஞர்கள் தொடர்ச்சியான நெருக்குவாரங்களுக்கு உள்ளாகிறார்கள். இந்தப் பணியில் இன்றும் தொடர்ந்து இருக்கும் உயிர் ஆபத்துத்தான் இதற்கான காரணம்.

இளைஞர்களுக்கு மட்டும்தான் என்றில்லை. எல்லோருடைய நிலையும் கிட்டத்தட்ட இதுதான். அரச வேலையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள்கூட எமக்கேன் வம்பு என்ற ரீதியில் ஒதுங்கிச் செல்லும் நிலைமைதான் இருக்கிறது.

அந்தளவுக்கு ஊடகத்துறையை ஏதோ பயங்கரவாத அமைப்புக்கள் போன்று இலங்கை அரசும் அதன் சட்டம் ஒழுங்குக் காவலர்களும் உருவகப்படுத்துகிறார்கள். உதயன் இந்தத் தாக்குதலில் நேரடியாகப் பாதிக்கப்பட்டது.

ஒரு கட்டத்தில் அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகையான டெய்லி நியூஸ் அதனது மூன்றாம் பக்கத்தில் உதயனுக்கு எதிரான செய்திகளைத் தினசரி பிரசுரித்தது. வடக்கில் பணியில் இருந்த அத்தனை இராணுவ ஜெனரல்களும் உதயன் பத்திரிகைக்கு எதிராக டெய்லி நியூஸில் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். முன்னாள் இராணுவ ஜெனரலும் தற்போதைய ஆளுநருமான ஜி.ஏ.சந்திரசிறியும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவித்தார்.

உதயன் வெளியிடும் ஒவ்வொரு செய்தியும் தவறானவை இராணுவத்துக்கும் அரசுக்கும் எதிரானவை, இன நல்லிணக்கத்துக்கு விரோதமானவை, பயங்கரவாத நடவடிக்கைகளை ஊக்குவிப்பவை, பயங்கரவாதத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கங்கொண்டவை என்று இவர்கள் ஒவ்வொருவரும் விசத்தைக் கக்கினார்கள்.

உதயனுக்கு எதிராக இப்படியான கருத்துருவாக்கம் ஒன்றைச் செய்து அதன் மூலம் சிங்கள மக்களைத் தூண்டிவிட்டு காடையர்களை ஒழுங்கமைத்து உதயன் மீதும் அதன் ஊழியர்கள் மீதும் தாக்குதல்களை நடத்துவதற்கான சதியின் ஓர் அங்கமோ இது என்று நாம் அச்சப்படும் அளவிற்கு நிலைமை இருந்தது.

பயங்கரவாத முத்திரை குத்தப்படும் இந்த நடைமுறையின் பிரதான இலக்காக இணையத் தளங்கள் மாறியிருக்கின்றன. புலத்திலும் தாயகத்திலும் புகழ்பெற்றிருந்த பல இணையத் தமிழ்ச் செய்தித் தளங்கள் கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலுமாகத் தடை செய்யப்பட்டுவிட்டன.

இவை பயங்கரவாத அமைப்புக்களின் முகவர் நிலையங்கள் என்பது போன்று அரச சார்பு ஊடகங்கள் கருத்துக்களைப் பரப்புகின்றன. இலங்கை அரசை விமர்சிப்பதும், படையினர் செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவதும் பயங்கரவாதமா?

அரசை விமர்சித்த சிங்கள இணையத் தளங்களுக்கும் கடந்த காலங்களில் - போர் முடிந்த பின்னரான காலத்தில் - இதுதான் நடந்தது. லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் பத்திரிகையாளர்களை அரசு நடத்திய விதத்தை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அரசை விமர்சித்ததைத் தவிர அந்தப் பத்திரிகையாளர்கள் செய்த தவறு ஒன்றும் இல்லை.

நிலைமைகள் இப்படி இருக்கும்போது எவ்வாறு ஊடக நிறுவனங்களுக்கு ஆள்களைப் பணிக்கு எடுக்க முடியும்? ஊடகத்துறையில் படித்துப் பட்டம் பெறும் மாணவர்களே ஊடகங்களில் பணியாற்றப் பின்னடிக்கும் நிலைமைதான் இலங்கையின் வடபகுதியில் காணப்படுகிறது. அவர்கள் தாம் படித்ததற்கும் தமது அறிவுக்கும் தொடர்பில்லாத அரச வேலைகளையே நாடிப்போகிறார்கள்.

### சவால்கள் இவை மட்டுமல்ல

இன்று ஊடகத்துறை எதிர்கொள்ளும் சவால்கள் இவை மட்டுமல்ல. ஊடகங்களை குறிப்பாக அரசை விமர்சிக்கும் ஊடகங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டு வருவதற்கு அரசு சாம, தான, தண்ட, பேத முறைகள் அனைத்தையும்

கையாள்கிறது. இப்போது வடக்குக்கு வெளியே உதயன் பத்திரிகையை எடுத்துச் செல்லும் திட்டம் அப்படியே தேங்கி நிற்கிறது. நாங்கள் எதிர்பார்த்த அச்சு இயந்திரம் எமக்குக் கிடைக்கவில்லை என்பதும் அதற்கு மற்றுமொரு காரணம். எனினும் எனக்குச் சொல்லப்பட்டிருக்கும் தகவல் மறைமுகமான எச்சரிக்கை என்றே நான் நினைக்கிறேன்.

நிறுவனத்தை நம்பியுள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்களின் நலன்களையும் கருத்தில் கொண்டே எந்தவொரு முடிவையும் நான் எடுக்க வேண்டியிருக்கிறது.

இதேவேளை, கொழும்பில் இருந்து வெளிவரும் சுடர்ஒளி பத்திரிகையை என்னிடம் இருந்து வாங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புலத்தில் உள்ள அரசுக்குச் சார்பான தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் மூலம்தான் அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எத்தகைய நிலையிலும் பத்திரிகையைக் கைமாற்றத் தயாரில்லை என்ற செய்தியை அவருக்குக் கொடுத்திருக்கிறோம். நிலைமை தலைக்கு மேலே சென்றால் பத்திரிகையை மூடிவிடுவோமே தவிர, தமிழ்த் தேசியத்துக்கு எதிரான எந்தச் சக்திகளுக்கும் அது கொடுக்கப்படமாட்டாது என்ற செய்தி அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்த முயற்சியை அவர்கள் கைவிட்டு விட்டார்கள் என்று நான் நினைக்கவில்லை.

போர் முடிந்த பின்னர் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான மற்றொரு வழிவகையாக நீதிமன்றங்களிலே வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. உதயன் பத்திரிகைக்கு எதிராகக் கடந்த மூன்று ஆண்டுகளில் 7 வழக்குகள் போடப்பட்டுள்ளன.

### குற்றவாளிகளைத் தண்டிக்காமல் தப்ப விடும் போக்கு

ஊடகத்துறைக்கு எதிரான அடக்குமுறைகளைத் தடுக்க வேண்டும் என்றால், நிறுத்த வேண்டும் என்றால் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். ஆனால் இலங்கையில் அது நடப்பதே இல்லை. ஊடகங்கள் மீதான அடக்கு முறைக்கு காரணமானவர்களாக அரச சார்புக் குழுவினர் அல்லது படையினரே இருக்கின்றனர் என்பது அதற்குக் காரணம்.

அதிலும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்களில் இராணுவம் உள்ளிட்ட படையினரின் பங்களிப்பு அதிகமாக இருக்கின்றது. ஆனால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் காவல்துறையினர் தயங்குகிறார்கள். இப்படிப்பட்ட தருணங்களில் அவர்கள் இனரீதியாகச் செயற்படுகிறார்களே தவிர நீதியின்பாற்பட்டு அல்ல.

ஓர் உதாரணத்தை இங்கு முன்வைக்கலாம். 2012 நவம்பர் 26ஆம் நாள் யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதிப் பகுதியில் வைத்து இராணுவ அதிகாரி ஒருவர் உதயன் ஆசிரியரைத் தாக்குகிறார். அந்த இடத்தில் யாழ். பொலிஸ் நிலையத் தலைமையக இன்ஸ்பெக்டர் சமன் சிகேராவும் இருந்தார். சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தமிழ்ப் பத்திரிகையாளர்களைத் தாக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் விடுவதன் அர்த்தம் அவ்வாறான தாக்குதல்களை ஊக்குவிப்பது தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? இத்தகைய நிலைமையினால்தான் ஊடக சுதந்திரம் குறித்த 179 நாடுகள் கொண்ட பட்டியலில் இலங்கையை 162ஆவது இடத்தில் தரப்படுத்தியுள்ளது எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு. கடந்த ஆண்டு (2013) இந்த அமைப்பே, ஊடக சுதந்திரத்துக்காகத் தொடர்ந்து போராடியமைக்கான சர்வதேச விருதையும் உதயன் பத்திரிகைக்கு வழங்கியிருந்தது. இப்படிப்பட்ட நிலையில் இலங்கையில் ஊடக சுதந்திரம் மேம்படும் என்ற நம்பிக்கை எதுவும் எனக்கில்லை.

**தமிழர்களின் போராட்டமும் ஊடக சுதந்திரமும்**

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இருக்கும் வரையில் இலங்கையில் ஊடக சுதந்திரத்தை அனுமதிக்க இலங்கை அரசுகள் தயாராகும் என்று நான் நம்பவில்லை. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கும் இலங்கையில் ஊடகங்கள் நசுக்கப்பட ஆரம்பித்த காலத்துக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்பு உண்டு என்று நான் நினைக்கின்றேன். இரண்டுமே 1981ஆம் ஆண்டளவில் தான் தீவிரம்பெற ஆரம்பித்தன. எனவே தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இலங்கையில் ஊடக சுதந்திரத்தின் நிலைமை மேம்படுவதற்கான சாத்தியங்கள் ஏற்படும் என்று நான் கருதவில்லை.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் நடந்த காலப்பகுதி முழுவதும் இலங்கை அரசுகள் ஊடகங்களை நசுக்குவதில் ஊடகவியலாளர்களை அடிபணிய வைப்பதில் முழுக் குறியோடு செயற்பட்டிருக்கின்றன. எல்லாப் போர்களிலும் முதலில் சாகடிக்கப்படுவது உண்மை என்பதைப்போலவே உண்மையைச் சொல்லும் ஊடகவியலாளர்களைச் சாகடிப்பதன் மூலம் உண்மையைச் சாகடிக்க முயன்றிருக்கின்றன இலங்கை அரசாங்கங்கள். குறிப்பாகத் தமிழ் ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் இந்தத் தாக்குதல்களின் முதற் குறியாகவும் முழுக் குறியாகவும் இருந்திருக்கிறார்கள் இருந்திருக்கின்றன.

அரசியலுக்கும் ஊடக அடக்குமுறைக்கும் இடையிலான இந்தத் தொடர்பு மிக முக்கியமான விடயத்தைச் சொல்கிறது. அதாவது இலங்கையில் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படாத வரையில் ஊடக சுதந்திரம் அங்கு மேம்படுவதற்கோ மனித உரிமைகள் மேம்படுவதற்கோ சாத்தியங்கள் ஏதுமில்லை.

ஏனெனில் ஊடகங்களை அடக்கி ஒடுக்காமல் இலங்கை அரசுகளால் தமிழ் மக்களை வெற்றிகரமாக அடக்கி ஒடுக்க முடியாது. ஊடகங்கள் அனைத்திடம் இருந்தும் மறைக்கப்பட்ட வன்னியின் இறுதிப் போர் எப்படி நடத்தப்பட்டது? எவ்வளவு கொடூரங்கள் நிகழ்த்தப்பட்டன? எவ்வளவு தூரத்துக்கு மனித உரிமைகள் மீறப்பட்டன? மனித குலத்துக்கே எதிரான குற்றங்கள் எவ்வளவு புரியப்பட்டன என்பதெல்லாம் இப்போது சர்வதேச அரங்கில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் உண்மையான விசாரணை அறிக்கை வெளிவரும்போது இன்னும் கூடுதலான உண்மைகள் வெளிவரும்.

சுதந்திரமான ஊடகங்கள் போர் முனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் இத்தனை கொடிய போர் ஒன்றை இவ்வளவு துணிச்சலாக மேற்கொண்டிருக்க முடியுமா? இன்று மனித உரிமைகள் குறித்து பெருமெடுப்பில் குரல் கொடுக்கும் நாடுகள் அன்று இலங்கைக்கு ஆதரவாக இந்தப் போரில் பங்காளிகளாக வெட்கம் கெட்ட தனமாக இருந்திருக்க முடியுமா?

**சர்வதேசப் பங்களிப்பு**

அதேசமயத்தில் புலம்பெயர் தமிழ் சமூகத்தினர் இலங்கையில் ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களினதும் இருப்புக்கு முக்கிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் நான் கருதுகின்றேன். தொழில் நுட்பரீதியிலும் அறிவுரீதியிலும் அங்குள்ள பத்திரிகையாளர்களை மேம்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. அதற்கு புலம்பெயர் சமூகம் உதவவேண்டும். தொழில் ரீதியிலான பட்டறிவை மேற்குலக நாடுகளில் பெற்றுக்கொள்வதற்கு சிவராம் நினைவு மன்றம் போன்ற அமைப்புகள் அவர்களுக்கு உதவவேண்டும்.

அதேபோன்று இங்கு பத்திரிகைத் துறையில் படித்துப் பட்டம் பெற்ற தமிழ் இளையவர்கள் இலங்கைக்கு வந்து பணியாற்றுவதற்கும் முன்வரவேண்டும். அது இரு தரப்பினரையும் வளப்படுத்துவதுடன் அங்குள்ள உண்மை நிலவரத்தை புலம்பெயர் தமிழ் இளையோர்கள் அறிந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும். சர்வதேச பங்களிப்பு என்ற விடயத்தில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பங்களிப்பையும் சேர்த்தேதான் நான் நோக்குகிறேன்.

# சர்வதேச விசாரணையில் இருந்து தப்பமுடியாது

**ஏழாலையில் ஆற்றிய உரை**

மனிதப் படுகொலைகளுக்கு காரண மானவர்கள் எவரும் சர்வதேச விசாரணையில் இருந்து தப்பியதில்லை. இதன் படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் என்றோ ஒருநாள் சர்வதேச போர்க்குற்ற விசாரணையின் முன் நிற்க வேண்டிவரலாம்.

வட மாகாணத்தில் இராணுவத்தினரின் அட்டகாசமும் கெடுபிடிகளும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயில் திடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டத்தில் கலந்து கொள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மாகாண சபை வேட்பாளருமான சித்தார்த்தன் மற்றும் கஜதீபன் ஆகியோர் அங்கு சென்றபோது கூட்டத்துக்கு வந்த மக்களை இராணுவத்தினர் துப்பாக்கியை காட்டி மிரட்டி வீடுகளுக்குச் செல்லு மாறு கலைத்துள்ளனர்.

இதுதான் இராணுவத்தின் வேலை. இந்த விடயம் உடனடியாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது. தேர்தல் திணைக்கள அதிகாரி கள் வந்தபோது இராணுவத்தினர் மறைந்து விட்டனர்.

இன்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் அரசியல் பிரச்சினையை தெருச்சண்டை போலாக்கி விட்டனர். ஜனாதிபதியின் அனுசரணையுடன் இயங்கும் ஜாதிக ஹெல உறுமய, பொது பல சேனா போன்ற அமைப்புக்கள் துவேசத்தைக் கக்குகின்றன. தென்பகுதி மக்களை குழப்புபவர்கள் இவர்கள் தான் நாமல்ல. எமது இளைஞர்களின் போராட்டத்தை தனித்து நின்று இவர்களால் வெற்றிகொள்ள முடியவில்லை. இதனால்

இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்று சர்வதேச நாடுகளிடம் உதவி பெற்றனர்.

விசேடமாக போர் முடிந்தவுடன் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை ஏற்படுத்துவேன். 13 ஆம் திருத்தத்துக்கு மேலான அதிகாரங்களை வழங்குவேன் என்று வாக்குறுதி அளித்தே சர்வதேச உதவிகளைப் பெற்று போராட்டத்தை மௌனிக்கச் செய்தனர். பின்னர் சர்வதேசத்தையே ஏமாற்றும் அளவுக்கு மஹிந்த அரசு செயற்படுகின்றது.

இலங்கை அரசின் ஏமாற்று நடவடிக்கைகளை இப்போது சர்வதேசம் புரிந்து கொண்டுள்ளது. சர்வதேச சமூகம் வட மாகாணத்தில் இருந்து இராணுவம் அகற்றப்படவேண்டும். அத்துடன் முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

ஆனால் இராணுவத்தின் அடக்கு முறைகளும் அட்டகாசமும் ஓயவில்லை. ஜனாதிபதியோ தேர்தல் ஆணையாளரோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மனிதப்படுகொலைகள் செய்பவர்கள் எவரும் சர்வதேச விசாரணையில் இருந்து தப்ப முடியாது. சர்வதேசத்தின் முன் பதில் சொல்லியே ஆக வேண்டும். இந்த நிலை நமது ஜனாதிபதிக்கும் ஏற்படலாம்.

சர்வதேசத்துக்கு எமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஓர் அரிய சந்தர்ப்பம் இந்த வடமாகாண சபைத் தேர்தல். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ எங்களுக்கோ வாக்கு அளிப்பதல்ல.

இது நமக்கு நாமே வாக்களிப்பது. நமது ஏகோபித்த தீர்ப்புத் தான் இந்தச் சிங்கள இராணுவத்தை நமது மண்ணில் இருந்து வெளியேற்ற உதவும்.

# மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றோம்

**தென்மராட்சி பிரதேச சபையில் ஆற்றிய உரை**

**நா**ம் வீடுகளில் தீபம் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றோம். இதை யாராலும் தடுக்கமுடியாது. இப்படி இருக்கையில் கிளிநொச்சியில் கீதாஞ்சலி அம்மையார் மாவீரர் தினம் கொண்டாட அரசிடம் அனுமதி பெற்றுத் தருவேன் என்கிறார். இவர் யார் எமக்கு அனுமதி பெற்றுத்தர? காணாமற் போன தன் கணவரைத் தேட முயற்சிக்காத இவர் வாக்குப் பெறுவதற்காக கதைவிடுகிறார். இவரிடம் ஒரு சவால் விடுக்கிறேன் முடிந்தால் சிங்கள அரசினால் தரை மட்டமாக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களை மீண்டும் கட்டி எழுப்பி மக்கள் வழிபாட்டுக்கு அனுமதிக்க முடியுமா?

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் சக்திமிக்க வேட்டுகளுக்கு சமமானவர்கள். இவர்கள் பெறும் வாக்குகளால் கிடைக்கும் வெற்றி, தமிழனைப் பார்த்து ஏளனம் செய்தவர்கள் வெட்கித் தலைகுனியவேண்டும். அது உங்கள் கைகளிலேயே இருக்கிறது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி.தமிழ் இனம் தாங்க முடியாத துன்பத்தில் ஆழ்ந்திருக்கையில், வெற்றிக்களிப்பில் வெடி கொளுத்தி ஆரவாரமாக கொண்டாடினர். மண்ணைத் தொட்டு முத்தமிட்டு கும்பிட்டனர். தமிழர்களின் வலியில் இன்பம் கண்டனர்.

இவர்களுக்கு பதிலடி கொடுக்கும் வாய்ப்பை நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. 1971ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், 70 வீதமான மக்கள் வாக்களித்து 18 பேரை

நாடாளுமன்றத்திற்கு அனுப்பினோம். இதேபோன்றே எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமாகாணசபைத் தேர்தலிலும் 80, 90 வீதம் வாக்களித்து மாகாணசபைக்கான அனைத்து ஆசனங்களையும் கூட்டமைப்பு கைப்பற்றும் வகையில் அணிதிரள்வோம். 22ஆம் திகதி கிடைக்கும் தேர்தல் முடிவின் போது நாமும் வெடி கொளுத்திக் கொண்டாடுவோம்.

அந்த வெடிஓசை நமது வலியில் இன்பம் கண்டவர்களுக்கும், மண்ணைத் தொட்டுக் கும்பிட்டவர்களுக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும். முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்குப் பதிலடியாக அமைய வேண்டும்.

ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், தான் மக்களோடு மக்களாக இருந்து செயற்படுவதாகக் கூறுகின்றார். அது உண்மைதான் மக்களோடு மக்களாக நின்று தான் நம்மைக் காட்டிக் கொடுக்கின்றனர். இவர்கள்தான் ஊடகவியலாளர் மீதான படுகொலைகளுக்கும், தாக்குதல்களுக்கும் துணை போகின்றனர்.

தமிழ் மக்களுக்கு நியாய பூர்வமாகக் கிடைக்க வேண்டிய பல்வேறு உதவிகளைத் தடுக்கின்றனர். சிங்கள அரசு வடக்குக்கு பொருளாதாரத் தடை விதித்து துன்புறுத்தியபோது ஒரு சோப் துண்டு நூறு ரூபாவுக்கும், மண்ணெண்ணெய் ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்தனர்.

மக்கள் ஒரு பொருளையும் இங்கு கொண்டுவர முடியாத நிலையில், இவர்கள் இராணுவத்தின் பங்களிப்புடன் பொருள்களைக் கொண்டுவந்து கோடி கோடியாகக் கொள்ளை இலாபம் அடித்தனர்.

இவை எல்லாம் ஈ.பி.டி.பி. யினர் மக்களோடு மக்களாக நின்று செய்த சேவைகள்தான் என்பதை எம்மக்கள் மறந்து விடவில்லை.

# அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்று கொல்லும் என்பர்

**வழக்கம்பரையில் ஆற்றிய உரை**

**அ**து இன்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. தெய்வம் இன்று எமது பக்கம் நிற்கிறது. இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் தவற விட்டுவிடக்கூடாது. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

கடந்த மாநகரசபைத் தேர்தலில் வாக்களிப்பு வீதம் 18ஆக இருந்தது. தொடர்ந்து நடை பெற்ற பிரதேச சபைகளுக்கான தேர்தலில் வாக்களிப்பு வீதம் 48 ஆக அதிகரித்தது. இம்முறை நடைபெற வுள்ள மாகாண சபைக்கான தேர்தலில் நாம் 90 வீதமானவர்களாவது கட்டாயமாக வாக்களிக்க வேண்டும்.

தன்மானமுள்ள தமிழர்கள் என்று நிரூபிக்க நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக வாக்களித்தால் மாகாண சபைத் தேர்தலில் அனைத்து ஆசனங்ளையும் கைப்பற்ற முடியும்.

அரசும் ஈ.பி.டி.பியும் இணைந்து தேர்தலைக் குழப்பவும் கலவரங்களைத் தூண்டிவிடவும் முயற்சிக்கின்றன. இவ்விடயத்தில் நாம் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

அரச கூட்டணிக்குள் இன்று குத்து வெட்டுகளும், குழி பறிப்புகளும் தலை தூக்கிவிட்டன. கடந்த ஞாயிற்றுக்கிழமை மக்களிடம் வாக்கு கேட்டுச் சென்ற அரசதரப்பு வேட்பாளர் ஒருவர் மக்களால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். உம்முடைய சட்டத்தரணி தொழிலை நீதிமன்றத்தில் போய் செய்யும். இங்கு வந்து தரகர் வேலை செய்ய வேண்டாம் என்று கூறிய மக்கள் அவரைப்

பேசக்கூடவிடாமல் திருப்பி அனுப்பிவிட்டனராம். இது மட்டுமல்ல வட மாகாணத்தில் இடம்பெறும் காணி அபகரிப்புகள், சிங்களக் குடியேற்றம், முஸ்லீம் பள்ளி வாசல்கள் உடைப்பு, இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் தொடர்பாக எமது தலைவர் நாடாளுமன்றத்தில் ஒத்தித்துள்ளார். அரசின் குற்றேவல்காரனான, சிங்களவர்களினதும் அரசினதும் பாதுகாவலனாக இந்த அமைச்சர் அங்கு பதில் அளித்தார். யாழ். மண்ணில் எந்தவிதமான குறையும் இல்லை.

இராணுவத்தால் எதுவித பாதிப்பும் இல்லை. அவர்கள் பாதுகாப்புப் பணியுடன் அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர் என்று வக்காலத்து வாங்கிப் பேசியதுடன் காணி அபகரிப்பு, சிங்களக் குடியேற்றம் தொடர்பாக வாயைக் கூடத் திறக்கவில்லை.

இப்படியான இனத்துரோகிகள் இன்று வந்து உங்களிடம் வாக்குக் கேட்கின்றனர். உண்மையான தமிழன் ஒருவன்கூட இவர்களுக்கு வாக்களிக்கமாட்டான். தமிழ் மக்கள்மீது சர்வாதி காரம் புரியும் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் வடமாகாண சபையின் ஆளுநராக மீண்டும் வந்துவிடலாம் என்ற மிதப்பில் செயல்படுகின்றார். இவர் தனது கட்டுப்பாட்டில் தலையாட்டிப் பொம்மைகளாக செயற்படக்கூடிய நான்கு கைக்கூலிகளை மாகாண சபைத் தேர்தலில் களமிறக்கியுள்ளார்.

இவர்களை இனங்கண்டு மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும். ஜனாதிபதி தம்மை மாகாண சபையின் முதலமைச்சராக அறிவிக்கவில்லையே என்ற ஆதங்கத்தினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மௌனம் சாதிக்கின்றார். அதுமட்டுமல்லாது தமது கட்சி வேட்பாளர்களுக்காக பரப்புரைச் செய்வதிலும் இவர் அக்கறை கொள்ளவில்லை. யாழ். மாவட்டத்தில் இருபத்து ஐயாயிரம் வாக்குகளைப் பெற்றுவிட்டு தமிழ் மக்கள் மத்தியில் ஆகக் கூடுதலான செல்வாக்குடையவர் தான் என பொது மேடைகளிலும் நாடாளுமன்றத்திலும் தம்பட்டம் அடித்துக் கொள்கிறார்.

25 ஆயிரம் வாக்குகளும் தீவுப் பகுதிகளில் வாழும் மக்களை துப்பாக்கி முனையில் மிரட்டி அடாவடித்தனத்தால் பறித்தெடுக்கப்பட்ட வாக்குகள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

இந்த நிலையில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் தனது கட்சிக்காரர்கள் தன்னை விடக் கூடுதலான வாக்குகளைப் பெற்று விட்டால் தனது வெத்து வேட்டுகள் அம்பலமாகிவிடுமே என அஞ்சுகின்றார் இந்த அமைச்சர்.

இன்று யாழ் மண்ணில் ஆளுநராக இருக்கும் முன்னாள் இராணுவ கட்டளைத் தளபதி ஒருவரின் மறு அவதாரமாக செயல்படுகின்றார் இராணுவத்திற்கு பொறுப்பான மற்றுமொரு உயரதிகாரி. இவர் தான் வடமாகாண சபையின் அடுத்த ஆளுநராக வந்துவிடலாம் எனவும் நம்புகின்றார்.

இராணுவத்தால் களமிறக்கப்பட்டுள்ள நால்வரில் ஒருவர் றெமிடியஸ். இவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் நகரசபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினராக இருந்துகொண்டே கட்சிக்கு எதிராக செயற்பட்டு பச்சைத் துரோகம் செய்தவர். இவர் இன்று இராணுவத்துடனேயே காணப்படுகின்றார். இராணுவத்தினர்

இவருக்கு ஆதரவாகப் போஸ்டர் ஒட்டுகின்றனர். மக்களை அச்சுறுத்தி வாக்குக் கேட்கின்றனர். எதிரானவர்களை வாக்களிக்க கூடாது என அச்சுறுத்துகின்றனர். இது அப்பட்டமான தேர்தல் அத்து மீறலாகும்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. றெமீடியஸின் இராணுவ உறவுகளை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தியும் தேர்தல் ஆணையாளர் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத முதுகெலும்பு இல்லாதவராகவே இருக்கின்றார்.

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் தமிழ் மக்களின் தாயக உணர்வை நாடிபிடித்துப் பார்க்கும் ஒரு கருத்துக் கணிப்பாகவே அமையப் போகின்றது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

மாநகர சபைத் தேர்தலின் போது மக்கள் கணிசமான அளவில் வாக்களிப்பில் கலந்து கொள்ளாததினால்தான் மாநகர அதிகாரத்தை இழக்க நேரிட்டது. இந்த நிலை இம்முறை நடை பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலிலும் ஏற்படக்கூடாது.

இந்தத் தேர்தலை இந்தியாவும் சர்வதேச நாடுகளும் மிகவும் அவதானமாக உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன. எனவே எந்தவிதமான அச்சமும் இன்றி நாம் அனைவரும் வாக்களிக்க வேண்டும். முதலில் நமது தமிழ்த் தாயகத்தின் வீட்டு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

நமது தமிழ் மண்ணில் இருந்து சிங்களக் கட்சியின் வெற்றிலை சின்னத்திற்கு ஒரு வாக்கு கூடக் கிடைக்கக் கூடாது. நமது தனித்துவமும் தன்மானமும் பாது காக்கப்பட வேண்டும்.

இணக்க அரசியல், நல்லிணக்கம் என்றெல்லாம் வாய் கிழியக் கத்துகின்றனர். ஆனால் இவை குறித்து எந்த வொரு சந்தர்ப்பத்திலாவது சமிக்ஞையை காட்டியுள் ளார்களா?

நமது வேட்பாளர்கள் சுதந்திரமாக பிரசாரம் செய்ய முடியவில்லை. இங்கு நடைபெறும் பிரசாரக் கூட்டத்திற்கான விளம்பரப்பதாதைகள் கூட பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

அதேவேளை ஆளும் கட்சியின் போஸ்டர்களுக்கும் வேட்பாளர்களுக்கும் இராணுவம் பாதுகாப்பு வழங்குகின்றது. இவ்வாறான அடக்கு முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக வீட்டு சின்னத்திற்கு வாக்களிக்கவேண்டும் என்றார்.

# வடமாகாணக் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி மிகக்குறைவே!

**வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் ஆற்றிய உரை**


இலங்கையின் ஏனைய மாகாணங்களைவிட வட மாகாணத்தில் கல்விக்காக ஒதுக்கப்படும் வளங்கள் மிகவும் குறைவாகவே காணப் படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் பிரதான மண்டபத்துக்கான கதிரைகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் சி.தனஞ்சயன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் கனகசபாபதி, வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி. ந.ஐங்கரன், உப தலைவர் சஜீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்ததாவது: தென்னிலங்கையில் தமது பிரதேச பாடசாலைகளுக்கே அரசு அதிக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துகின்றது. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டப் பாடசாலைகள் கொழும்பிலுள்ள பாடசாலைகளை விட அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

உதாரணமாக அங்குள்ள தேசிய பாட சாலைகளின் அதிபர்களுக்கு பிரத்தியேக வாகனங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் எமது பகுதிகளிலே எத்தனையோ பாடசாலைகள் யாரும் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றன.



யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்களில் அரசநிதி அதிகளவில் பயன்படுத்தப்படுவதில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களே வட பகுதியில் அதிக அபிவிருத்தி வேலைகளைச் செய்கின்றன. ஆனால் அதனை மக்களுக்கு வழங்கும்போது ஆளுநரும், அமைச்சரும் வந்துதான் மக்களிடம் கொடுப்பார்கள்.

தாங்கள் கொடுப்பது போல மக்களுக்குக் கொடுக்கின்றார்கள். மக்களுக்கு அரசு என்ன செய்கின்றது. அபிவிருத்தித் திட்டங்களில் அரசின் நிதி எவ்வளவு? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்:

வலிகாமம் கல்வி வலயத்திலேயே விஞ்ஞானத்துறையில் எமது பாடசாலையில் தான் அதிகளவான மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். ஆனால் அவர்களுக் குரிய வளங்கள் போதாமலிருக்கின்றன.

இந்த முறை ஆசிரியர் தினத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இங்கு வந்த போது நாம் எமது நிலையை எடுத்துகூறி எமது தேவைகளை சொல்லியிருந்தோம். மிகக் குறுகிய காலத்திலேயே எமது தேவையை நிறை வேற்றித் தந்தமைக்காக பாடசாலைச் சமூகம் சார்பாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

# தமிழர்களின் போராட்டம் இன்னும் ஓயவில்லை.

**மே தினச் செய்தி**

உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் உன்னத நாளான மே தினத்தை அதன் புரட்சிகர மேன்மையுடன் கொண்டாடும் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் சகலவிதமான ஒடுக்கு முறைகளுக்கும் எதிரான உரிமைப் போராட்டங்கள் முன்னெடுத்து வரும் அனைத்துத் தரப்பினருக்கும் மே தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1886 ஆம் ஆண்டு அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் எட்டு மணிநேர வேலை கோரியும் ஏனைய உரிமைக் கோரிக்கைகளையும் முன்வைத்தும் எழுந்த போராட்டப் பேரலையும், உழைக்கும் மக்கள் சிந்திய இரத்தமும் உலகெலாம் பரவி இன்று பல நாடுகளை விடுவித்துவிட்டன.

ஒடுக்குமுறையாளரைக் கதி கலங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. விடுதலை கோரும் மக்களின் ஒளி விளக்காக மிளிர்கின்றன. உலகப் பாட்டாளி வர்க்கமும் நாடுகளின் தேசிய இனங்களும் காலங்காலமாக முன்னெடுத்து வரும் அடிப்படை உரிமைகளை மறுத்தல் உட்பட சகலவிதமான ஒடுக்குமுறைகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழ் மக்களாகிய நாம், இன்று ஒரு கொடிய இராணுவ சர்வதிகாரத்தின் கீழ் நசுக்கப்படுகின்றோம். இனந்தெரியாதவர்கள் என்ற பேரில் அரச சார்பு குண்டர்கள், பாதுகாப்புத் தரப்பின் ஒத்துழைப்புடன் நடத்தும் வன்முறைகளால் நாளாந்தம் இரத்தம் சிந்துகின்றோம். அழக்கூட வாய் திறக்க முடியாது அச்சுறுத்தப்படுகின்றோம்.

இன்றைய ஆட்சியாளர்களால் திட்டமிட்ட வகையில் எமது தேசிய தனித்துவத்தின் மீது, ஒரு போர் தொடுக்கப்பட்டிருக்கின்றது. எமது

மொழியுரிமை பறிக்கப்பட்டு, தேசிய கீதம் உட்பட எங்கும், சிங்கள மயம் என்பதை நோக்கி நாடு நகர்த்தப்படுகின்றது.

பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற போர்வையில் எமது மக்களுக்குச் சொந்தமான பாரம்பரிய நிலங்கள் பறிக்கப்படுகின்றன. விவசாயம், கடற்றொழில், அரச பணி என்பவற்றில் மேற்கொள்ளப்படும் இன ஒடுக்கல் மூலம் எமது பொருளாதாரம் சிதைக்கப்படுகின்றது. ஒரு பெரிய நசிவுக் கலாசாரப் பரம்பல் மூலம் எமது கலாசாரத் தனித்துவம் சீரழிக்கப்படுகின்றது.

## உறுதியுடன் போராடுவோம்

எனவே உலகத் தொழிலாளர் வர்க்கத்தைப் போலவே நாமும் எமது பறிக்கப்பட்ட உரிமைகளுக்காகவும், தொடர்ந்து பறிக்கப்படும் உரிமைகளுக்காகவும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

தமிழ் மக்களின் அந்தப் போராட்டம் உலக ஏகாதிபத்திய சக்திகளினதும் பிராந்திய வல்லரசுகளின் துணையுடனும் தோற்கடிக்கப்பட்டது. ஆனால் எமது உரிமைக் குரல்கள் ஒடுங்கிப் போய்விடவில்லை.

நாம் எமது உரிமைகளுக்கான போராட்டத்தை ஜனநாயக வழிமுறையில் உறுதியுடனும் துணிச்சலுடனும் முன்னெடுக்கிறோம். உலகத் தொழிலாளர் வர்க்கம் எமக்குக் கரங் கொடுக்குமெனத் திடமாக நம்புகின்றோம்.

இன்று இலங்கையின் ஆட்சியாளர்கள் தமிழ்மக்களின் நிலங்களை ஆக்கிரமிப்பதை தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையின் பிரதான வடிவமாகவும் தமிழ் உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களை அழிக்கும் ஓர் ஆயுதமாகவும் கையிலெடுத்துள்ளனர்.

மணலாற்றில் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் படையினரின் உதவியுடன் சிங்களவரால் ஆக்கிரமிக்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய், நாயாறு ஆகிய பகுதிகளில் சிங்கள மீனவர்கள் குடியேற்றப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் எமது மீனவர்களின் தொழில் பாதிப்படைகின்றது.

தமிழ் மீனவர்கள் தொழில் செய்ய பல நெருக்கடிகள் ஏற்படுத்தப்படும் அதேவேளையில், சிங்கள மீனவர்கள் தடை செய்யப்பட்ட வலைகளைப் பாவித்து எமது கடல் வளத்தை முற்றாகவே அழித்து வருகின்றனர்.

## விவசாய நிலங்களில் படைமுகாம்கள்

வலி.வடக்கு, கேப்பாபுலவு, மறிச்சுக்கட்டி, வவுனியா பேயாடி கூழாங்குளம் ஆகிய பகுதிகளில் எமது மக்களின் விவசாய நிலங்கள் அபகரிக்கப்பட்டு படை முகாம்கள் அமைக்கப்படுகின்றன. நில அபகரிப்பின் பல பரிமாணங்கொண்ட ஒரு பெரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே வலி.வடக்கின் நில அபகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இதில் 24 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 6,183

ஏக்கர் பிரதேசம் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மண் எமது மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து தொழில் செய்த ஒரு பிரதேசம்.

இது ஒரு நில அபகரிப்பு மட்டுமல்ல. விவசாயிகள், தொழிலாளிகள், மீனவர்கள் என உழைக்கும் மக்களின் பிரதான வருவாய் மையமாக விளங்கிய இந்தப் பிரதேசம் பறிக்கப்படுவதன் மூலம் உழைக்கும் மக்களுக்கு எதிரான ஒரு போராகவும் விளங்குகிறது.

வலி.வடக்கு செம்மண் நிறைந்த வளமான பிரதேசம். இங்கு மிளகாய், வெங்காயம், மரவள்ளி, வெற்றிலை, முந்திரிகை எனப் பல பயிர்களும் செழிப்பாக வளர்ந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தின. இன்றைய நில அபகரிப்பு மக்களின் குடியிருப்புக்களை ஆக்கிரமிப்பதுடன் விடவில்லை. விவசாயிகளின் வாழ்வையும் பறித்தெடுக்கின்றது.

இங்கு அலுமினியத் தொழிற்சாலை, சீமெந்து தொழிற்சாலை என இருபெரும் நிறுவனங்களிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றினர். அவர்கள் தொழிலிழந்து இன்று தெருவில் நிற்கின்றனர்.

மயிலிட்டி இலங்கையின் பிரதான மீன்பிடி மையங்களில் ஒன்று. அவர்கள் தொழில் செய்ய முடியாது இராணுவ ஆக்கிரமிப்புத் தடுத்துவிட்டது.

இனித் துறைமுகத் தொழிலாளர்கள், சீமெந்து ஆலைத் தொழிலாளர்கள் எனப் பெரியளவு சிங்களவர்கள் கொண்டு வரப்படுவார்கள். பின் தொழிலாளர் குடியிருப்புக்கள், இராணுவ வீரர்களின் குடும்பங்களின் குடியிருப்புக்கள் என வீடுகள் அமைக்கப்பட்டு , அங்கு சிங்களவர்கள் குடியேற்றப்படுவர்.

இறுதியில் வலி.வடக்கு ஒரு சிங்களப் பிரதேசமாக மாற்றப்படும். மணலாறு, மண்கிண்டி பாரம்பரியமாக தமிழ் மக்கள் வாழ்ந்த தென்னமரவாடி. வன்னிமை யைச் சேர்ந்த ஒரு கிராமம்.

அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் விரட்டப்பட்டு அங்கு சிங்களவர்கள் குடியேற்றப் பட்டனர். தமிழ் மக்களை விரட்டுவதிலும் சிங்களவரைக் குடியேற்றுவதிலும் தீவிரமாகச் செயற்பட்டவர் ஜானகபெரேரா என்ற இராணுவப் படைத்தளபதி அந்தக் குடியிருப்புக்கு ஜானகபுர என்ற பெயர் சூட்டி, அவர் தனது பெயரை நிலைநாட்டிக் கொண்டார்.

## ஹத்துருசிங்கபுர

இன்று வலி.வடக்கில் அபிவிருத்தி என்ற பெயரிலும், பாதுகாப்பு என்ற பெயரிலும், தமிழ் மக்கள் மீள்குடியேறுவதைத் தடுத்து, அதை ஒரு சிங்களப் பிரதேசமாக மாற்ற முன்னிற்பவர்.

மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க எதிர்காலத்தில் வலி.வடக்கு ஹத்துருசிங்கபுர எனப் பெயர் மாற்றப்பட்டாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

தமிழ் மக்களின் வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினராகி அமைச்சர் பதவி வகிக்கும் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பாக சர்வதேச ஊடகவியலாளர்




கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோது, இது தொடர்பாகத் தான் ஜனாதிபதியுடன் பேசியதாகக் கூறினார். நிருபர் மீண்டும், மீண்டும் மக்கள் குடியேற அனுமதிக்கப்படுவார்களா என்று கேட்டபோது சரியான பதில் சொல்லாமல் சமாளித்துவிட்டார்.

நாவற்குழியில் தென்பகுதி சிங்களவர் வந்து பலாத்காரமாகக் குடியேறிய போதும், அமைச்சர் தான் ஜனாதிபதியுடன் பேசுவதாகக் குறிப்பிட்டார். இன்று வரை பேசி முடிக்கவில்லை. ஆனால் சிங்களவர்களுக்கு நாவற்குழியில் நிரந்தர வீடுகள் அமைக்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

அரசின் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்குத் துணை போகும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் தொடர்பாக தமிழ் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

கொடுமையான இன ஒடுக்குமுறைக்கு உட்பட்டிருக்கும் தமிழ்த் தேசிய இனமான நாம், எமது உரிமைகளுக்காக போராடும் அதேவேளையில் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் உலகத் தொழிலாளர் வர்க்கத்துடனும் கரம் கோர்க்கிறோம். உரிமைகள் கிட்டும் வரை எத்தனை இடர்கள் வரினும் எமது போராட்டம் தொடரும்.

போராடுவது, தோல்வியடைவது, மீண்டும் போராடுவது தோல்வியடைவது மீண்டும் மீண்டும் போராடுவது மீண்டும் மீண்டும் தோல்வியடைவது இறுதிவரை! இது மக்களின் நியதி.

"போராடுவது தோல்வியடைவது மீண்டும் போராடுவது தோல்வியடைவது மீண்டும் மீண்டும் போராடுவது மீண்டும் மீண்டும் தோல்வியடைவது தங்கள் சவக்குழி வரை. இது ஒடுக்குமுறையாளர்களின் நியதி" இது சீனத் தலைவர் மா ஓ சேதுங் கூறியவை. எனவே இறுதி வெற்றி மக்களுக்கே.

# நல்லிணக்கம் எவ்விதம் சாத்தியமாகும்?

**ஜ**னாதிபதியின் கருத்துக்குப் பதிலளித்து சரவணபவன் விடுத்த அறிக்கை

இலங்கையின் 65வது சுதந்திரதின விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இலங்கை அந்நிய சக்திகளின் சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதாகவும், இனங்களுக்கிடையேயான தேசிய நல்லிணக்கத்தின் மூலமும் அபிவிருத்தியின் மூலமுமே வெற்றிகொள்ளமுடியும் எனவும் தெரிவித்திருந்தார். மேலும் இங்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சம உரிமைகளுடனும், ஐக்கியத்துடனும் வாழ்வதாகவும், தாம் நாட்டைப் பிரிக்கும் சதிகளுக்கு இடமளிக்கப் போவதில்லையெனவும் தெரிவித்திருந்தார்.

ஒரு நாட்டின் அதிபரின் சுதந்திரதின உரையென்பது அந்த நாட்டின் செல்வழிப் பயணத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கருதப்படுகிறது. ஆனால், இலங்கை ஜனாதிபதி அவர்களின் உரை தமிழ் மக்களுக்கு ஏமாற்றமளிப்பதாகவும், உண்மையிலிருந்து வெகுதொலைவில் நிற்பதாகவும் உள்ளது என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது.

இலங்கை அமைச்சரவையில் அமைச்சரவை அந்தஸ்த்தில் உள்ள அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஒரு விழாவில் பேசும்போது "தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உரிமை, உரிமை எனக் கூச்சலிட்டுக்கொண்டு, இருப்பதையும் பறிகொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்" எனத் தெரிவித்தார். இருப்பவற்றையும் பறிகொடுக்கிறார்கள் என்பதன் மூலம் இருப்பவையும் பறிக்கப்படுகின்றன என்ற உண்மையை அவர் ஒப்புக் கொள்கிறார். இருப்பவற்றைப் பறிக்கும்

அரசாங்கத்தில் அவரும் ஒரு பங்காளி என்பதும், அப்படியாயின் 18வது திருத்தச் சட்டம், 'திவிநெகும' சட்டம் என்பதற்கு ஆதரவு வழங்கி பறிப்பவர்களுக்கு கரம் கொடுத்தவர் அவர் என்பதையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஆனால், ஜனாதிபதி இங்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சம உரிமையுடன் வாழ்கின்றனர் என்ற கூற்றை, அவ தமிழ் மக்கள் இருப்பவற்றைப் பறிகொடுக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டதன் மூலம் மறுதலித்துள்ளார் என்பதுதான் உண்மை.

தேசிய நல்லிணக்கத்தின் மூலமும் ஸ்திரமான அபிவிருத்தி மூலமுமே அந்நிய சக்திகளின் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், ஜனாதிபதி தலைமை வகிக்கும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் தேசிய நல்லிணக்கத்திற்கு விரோதமான ஒடுக்குமுறை நடவடிக்கைகளே அந்நிய சக்திகளின் தலையீட்டுக்கான கதவுகளைத் திறந்து விடுகின்றன என்பதை மறுத்து விட முடியுமா?

இலங்கை அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் ஒரு புறம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பனவாகவும், இன்னொரு புறம் சாதாரண இயல்பு வாழ்வைக் கூடப் பறிப்பனவாகவும் அமையும் போது நாட்டில் தேசிய நல்லிணக்கம் எவ்வாறு உருவாக முடியும்?

ஜனாதிபதியின் பேச்சு காற்றில் கரைந்து போகுமுன்பே வலிகாமம் வடக்கில் உள்ள தமிழ் மக்களின் வீடுகள் படையினரால் இடித்து அழிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் பல ஆயிரம் ஹெட்டே காணிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு முட்கம்பி வேலியிடப்பட்டுள்ளன.

இது பற்றிக் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் வணகுலசூரிய இலங்கையில் எங்குமே உயர்பாதுகாப்பு வலயம் இல்லையெனவும், 2000 ஹெக்டே காணியில் மட்டும் வடக்கில் படைமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்திற்குக் காணி தேவைப் பட்டால் முறைப்படி கையகப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார். மேலும் அவர் படையினரால் எந்த ஒரு வீடும் அழிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

ஒரு புறம் உண்மைகளை மூடி மறைத்துக் கொண்டு, மறுபுறம் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்தும், வீடுகளை இடித்தும் வெறியாட்டம் போடும் போது தேசிய நல்லிணக்கம் உருவாக முடியுமா?

இத்தகைய அத்துமீறல்களை வெளிக்கொண்டுவரும் ஊடகங்கள் இலக்கு வைக்கப்படுகின்றன. உதயன் பத்திரிகை அலுவலகம் பல முறை தாக்கப்பட்டதும், பல பணியாளர்கள் கொல்லப்பட்டதும், பிரதமஆசிரியர், செய்தி ஆசிரியர் உட்படப் பல பணியாளர்கள் மேல் கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையும் இங்கு கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான அடக்குமுறையைத் தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளன.

கொலை, கொலைமுயற்சி, தாக்குதல், தீயிடல் எனப் பலவித வன்முறை கள் ஊடகங்கள் மீது நடத்தப்பட்டபோதும் இதுவரை எவரும் கைது செய்யப்படவு மில்லை தண்டிக்கப்படவுமில்லை. எங்கும் பரவலாகப் படைமுகாம்கள்

அமைக்கப்பட்டிருந்தும், பொலிசாருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தும் ஏன் இத்தகைய வன்முறைகள் தடுக்கப்படவில்லை? ஏன் சம்பந்தப்பட்டவர்கள் கண்டு பிடித்துத் தண்டிக்கப்படவில்லை? இப்படியாக தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் தொடரப்படுவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் சக்திகள் எவை? அவர்களுக்குப் பின்னணியில் நிற்பவர்கள் யார்? இன்று வடமாகாணசபையின் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடபகுதியின் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க என வடமாகாணத்தின் ஒவ்வொரு முனையிலும் தங்கள் அதிகாரக் கரங்களை விரித்திருக்கும் இவர்களே, இக்கேள்விகளுக்குப் பதில் வழங்கும் கடப்பாடுடையவர்கள்.

இவா்கள் வடக்கில் இராணுவ மயப்படுத்தப்பட்ட ஒரு சிவில் நிர்வாகத்தையே நடைமுறைப்படுத்தி வருகின்றன. அவர்கள் அனைவரும் தங்கள் கட்டளை களுக்குக் கீழ்ப்படியும் சிப்பாய்களாகவே அரச அதிகாரிகளையும், அரச பணியாளர்களையும் கையாள்கின்றன. இதனால் இன்று வடக்கில் ஜனநாயகம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களோ, பிரதேச சபைகளின் தலைவர்களோ, உறுப்பினர்களோ பொருட்படுத்தப்படுவதில்லை. அபிவிருத்தி தொடர்பாக அவர்களால் முன்வைக்கப்படும் திட்டங்கள் அலட்சியப்படுத்தப்படுகின்றன. தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நிலையில் மக்கள் பிரதிநிதிகள் எப்படி அபிவிருத்தியில் பங்கு கொள்ளமுடியும்?

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்களுடன் ஒட்டியிருக்கும் இளம் செயலாளரின் செயற்பாடுகள் இராணுவ சர்வதிகாரிகளின் வேலை முறை போல் அமைந்திருப்பதாகப் பல முனைகளிலும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. ஆளுநரைத் திருப்திப்படுத்தும் வகையிலும் ஈ.பி.டி.பி. தலைமையகத்திலிருந்து வரும் கட்டளைகளுக்கு அமையவுமே அவரின் செயற்பாடுகள் தொடர்வதாகவும் கருத்துகள் பலமாக நிலவி வருகின்றன. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மதிப்பளிக்கும் பண்புகூடத் தெரியாதவர் இந்த இளம் செயலாளர்.

இதன் காரணமாகப் பல அரச அதிகாரிகள் தங்கள் கடமைகளை முறைப்படி செய்யமுடியாமல் திணறுகின்றனர். சிலர் நெருக்குதல்களுக்கு அடிபணிவதா அல்லது சட்டப்படி வேலை செய்வதா என்று முடிவெடுக்க முடியாத நிலையில் தடுமாறுகின்றனர். இத்தகைய நிலையில் சில அதிகாரிகள் ஓய்வுபெற்றுச் சென்றுவிட்டனர். இன்னும் சிலர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டனர். தொலை தூரங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டால் பிள்ளைகளின் கல்வி போன்ற விடயங்களுக்கு இடையூறு ஏற்படலாம் என்ற அச்சத்தில் பல அதிகாரிகள் மனம் புழுங்கியவாறே சொல்பவற்றைச் செய்து வருகின்றனர்.

அபிவிருத்தி தொடர்பான கூட்டங்கள், கலந்துரையாடல்கள் போன்றவற்றுக்குக் கூட அழைக்கப்படுபவர்களின் பட்டியல் ஈ.பி.டி.பி தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக சில அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



அடிப்படையில் பொது நிர்வாக சேவை அதிகாரிகளோ, பணியாளர்களோ, அரச அதிபருக்குக் கட்டுப்பட்டவர்கள். அரச அதிபரைவிட வேறு எவரும் அவர்களுக்குக் கட்டளையிடமுடியாது. ஆனால், இன்று அரச அதிகாரிகள் பல முனைகளில் நெருக்குதல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

நேர்மையாகவும் துணிவுடனும் பணியாற்றும் சிலர் உதவி அரசாங்க அதிபர்கள் பலவித நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேசசபைகள் கூடச்சரியாகச் செயற்படமுடியவில்லை. அவர்களின் வேலைத்திட்டங்களுக்குப் பிரதேசசபை செயலர்களால் முட்டுக்கட்டைகள் போடப்படுகின்றன.

இன்று ஆளுநரையும், சில அரசியல்வாதிகளையும் திருப்திப்படுத்தும் முகமாக முறை மீறல்களில் ஈடுபடும் எந்த ஒரு அதிகாரியும் நாளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கையில் ஆட்சி அதிகாரம் வரும்போது பதில் சொல்லியாக வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவிக்க விரும்புகிறோம். இப்படியான ஒரு இராணுவ மயப்படுத்தப்பட்ட நிர்வாகம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுவதை அனுமதிக்கும் ஜனாதிபதி, தமிழ் மக்கள் சம உரிமையுடன் வாழ்வாதாக எப்படிக் கூற முடியும்?

வடக்கின் இயல்பு வாழ்வைச் சீர்குலைப்பதில் இன்னுமொரு முக்கிய பாத்திரம் வகிப்பவர் வடபகுதியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

இவரது அதிகாரத்தில் பாடசாலை விழாக்கள் உட்பட இங்கு நடைபெறும் ஒவ்வொரு வைபவத்திலும் இராணுவப் பிரசன்னம் எழுதப்படாத சட்டமாக்கப் பட்டுள்ளது.

இவரின் அதிகாரத்திலேயே எந்தவித சட்ட வரைமுறையுமின்றி வலி.வடக்கு மக்களின் காணிகள் படையினரால் கையகப்படுத்தப்படுகின்றன. மக்களின்

பெறுமதி மிக்க வீடுகள் இடிக்கப்பட்டு வீதிகள் அமைக்கப்படுகின்றன. ஆனால், இராணுவப் பேச்சாளரோ அப்படி எதுவும் நடக்கவில்லை என சளாப்புகிறார். அது மட்டுமின்றிப் பல இடங்களில் பொதுமக்களின் காணிகளைத் தமக்குக் கையளிக்கும்படி படையினர் பிரதேச செயலர்களை வற்புறுத்தி வருகின்றனர்.

குறிப்பாக பல்கலைக் கழக மாணவர்கள் மாவீரர் அஞ்சலி மேற்கொள்ள எடுத்த முயற்சிகள் தொடர்பாகவும், அவர்களின் கைதுகள், விடுதலை தொடர்பாகவும் இவர் ஒரு சிவில் அதிகாரி போன்று கருத்துகளை வெளியிட்டார். அது மட்டுமின்றி பல்கலைக்கழக மாணவர்கள் பிரச்சினையில் அரசியல்வாதிகள் தலையீடு செய்வதாகக் கண்டனமும் வெளியிட்டார்.

நாம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள். எமக்கெனச் சில சிறப்புரிமைகள் உண்டு. எமது மக்களுக்கு எங்கு பிரச்சினை என்றாலும் அங்கு நாம் நிற்க வேண்டியது எமது கடமை. எம்மை விமர்சிக்க எந்த ஒரு அரச பணியாளர்களுக்கும் அதிகாரம் கிடையாது என்பதைத் திட்ட வட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை இராணுவம் பாதுகாப்புப்படை என்ற வகையில் மக்களைப் பாதுகாக்கும் முகமாக, இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்படும் கொலைகள், தாக்குதல்கள், ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் போன்றவற்றைத் தடுத்து நிறுத்தவும் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கவும் முயற்சிகள் மேற்கொண்டால் அதனை வரவேற்க முடியும்.

அரச இயந்திரமும், அரச அதிகாரிகளும், அரச படையினரும், அரசுடன் இணைந்துள்ள அரசியல்வாதிகளும் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு அவர்களின் நிம்மதியையும், அமைதியையும் குலைக்கும் போது, தேசிய நல்லிணக்கம் உருவாக முடியாது என்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ளவேண்டும். இப்போதைய இராணுவ நிர்வாகத்தில் அதனையே நாம் எதிர்பார்க்கிறோம்.

# மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை தொடங்குமாறு ஐ.தே.க. கூறுகிறதா?

**நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவின் கருத்துக்கான பதில் அறிக்கை**

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆயுதக் குழுக்கள் குறிப்பாக விடுதலைப் புலிகள் தற்போது இல்லாத காரணத்தின் மத்தியில் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பிராந்தியங்களுக்குப் பகிரவேண்டிய அவசியம் இல்லையென லண்டன் பி.பிசி.யின் சிங்கள சேவைக்கு வழங்கியுள்ள ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அந்தப்பேட்டியில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக இன்று வடக்கு, கிழக்கு மக்களின் நாளாந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே அவசரத் தேவையாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் சகல துயரங்களுக்கும் பெரும் இரத்தக் களரிக்கும் காரணமாயிருக்கும் போக்கையும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதை ஆதரிக்கும் அவரின் இன ஒடுக்குமுறை மனப்பான்மையையும் நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இனவாத சிந்தனைகளைக் களைந்து இந்த நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த அவரும் அவரைப் போன்றவர்களும் முயற்சிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆயுதப் போராட்டம் இல்லாமல் போய்விட்டதால் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் அவசியமில்ல என்ற கூற்றின் மூலம் அவர் மீண்டும் ஓர் ஆயுதப் போராட்டம் தொடங்கினால்தான் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறமுடியும் என மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறாரா என நாம்

இங்கு கேட்டு வைக்க விரும்புகிறோம். இன்னுமொரு ஆயுதப் போராட்டம் மூலம் நாம் கடந்த காலத்தில் அனுபவித்த கொடூரமான கசப்பான அனுபவங்களை நாம் மீண்டும் எதிர்கொள்ள விரும்பவில்லை என்பதை நாம் தெளிவாகவே தெரிவிக்கும் அதேவேளையில் எமது உரிமைகள் பறிக்கப்பட்டு எமது தேசிய இனத்தின் தனித்துவம் அழிக்கப்படும் போது எம்மால் தலைகுனிந்து ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

திஸ்ஸ அத்தநாயக்கவின் இந்தக் கருத்தை நாம் தனி ஒரு நபரின் வாய்மொழியாகக் கருதமுடியாது. காலம் காலமாக ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்மக்கள் மீது மேற்கொண்டுவரும் இன ஒடுக்குமுறையின் ஒரு பகுதியாகவே பார்க்கிறோம். இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படும் போதெல்லாம் அதைக் குழப்பியடித்த வரலாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்டு என்பதை நாம் இங்கு நினைவுகூரப் கடமைப்பட்டுள்ளோம். இலங்கை அரசியலில் தமிழ்மக்கள் இரத்தம் சிந்தியபோதெல்லாம் அந்த இரத்தத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் கரங்கள் தோய்ந்திருந்தன என்பதை நாம் என்றும் மறந்துவிட முடியாது.

1948ஆம் ஆண்டு இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டத்தின் மூலம் 6 இலட்சம் மலையக மக்களின் பிரஜாவுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியதும் அதன் மூலம் இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைக் குறைத்தது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம். இதை நாம் ஒட்டுமொத்தமாகவே தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கை என்றே நாம் கருதுகிறோம்.

1950இல் கல்லோயா குடியேற்றம் உருவாக்கப்பட்டதன் மூலம் தமிழர் பாரம்பரியமாக வாழ்ந்த பூமி சிங்களக் குடியேற்றத்தால் ஆக்கிரமிக்கப்பட்டதுடன் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் நிலத் தொடர்பும் துண்டிக்கப்பட்டது. தமிழ் மக்களுக்கெதிராக் தூரநோக்குக் கொண்ட இந்த இரு நடவடிக்கைகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தந்தை எனக் கருதப்பட்ட டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டன.

1952ஆம் ஆண்டு சிங்களம் மட்டுமே இந்த நாட்டின் அரச கருமமொழியாக இருக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் களனி மாநாட்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை 1956இல் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவை தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்ற நிர்ப்பந்தித்தது என்பதை மறுக்கமுடியுமா?

1957ஆம் ஆண்டு இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வுகாணும் பொருட்டு பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதற்கு எதிராக அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் கண்டி யாத்திரை நடத்தப்பட்டது. வெகுஜனப் போராட்டங்கள் இடம்பெற்றன. பிரதமர் வாசஸ்தலத்தின் முன் பௌத்தபிக்குகளின் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்பட்டது. ஒரு பெரும் இனக் கலவரம் தூண்டிவிடப்பட்டு தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. உடைமைகள் அழிக்கப்பட்டன.

பண்டா-செல்வா ஒப்பந்தமும் கிழித்தெறியப்பட்டது. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக 1965ஆம் ஆண்டு டட்லி-செல்வா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடன் ஐ.தே.கட்சி தலைமையில் கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டது. இறுதியில் அதுவும் நிறைவேற்றப்பட்டது. தமிழர் தரப்புத் தொடர்ந்து நாலரை வருடங்கள் ஏமாற்றப்பட்ட நிலையில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறியது.

1977ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என தான் நாட்டின் பிரதமர் என்ற அந்தஸ்தையும் மறந்து பிரகடனம் செய்ததன் மூலம் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிரான பெரும் இன அழிப்புக் கலவரம் தூண்டிவிடப்பட்டது. இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான தலைப்பங்கு வகித்தது என்பதை எவராலும் மறந்துவிடமுடியுமா?

தமிழ் மக்களின் அரிய சொத்தாகக் கருதப்பட்ட யாழ்.நூலகமும் யாழ்ப்பாண நகரப் பகுதியும் எரியூட்டி அழிக்கப்பட்டபோது ஐ.தே.கட்சியின் இரு அமைச்சர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தனர் என்பதும் இச்செயலுக்கு ஆதரவு வழங்கினர் என்பதும் வரலாற்றில் அழிந்துவிட முடிந்த சம்பவங்களா?

1983ஆம் ஆண்டின் இன அழிப்புக் கலவரம் ஐ.தே.கட்சியால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. இதில் பல அமைச்சர்களும் அவர்களின் கையாட்களும் நேரடியாகவே ஈடுபட்டனர். சிறைச்சாலைக்குள் வைத்து தமிழ்க் கைதிகள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். பொலிஸாரும் இராணுவத்தினரும் பார்த்திருக்கவே தமிழர்கள் கொல்லப்பட்டனர். உடைமைகள் சூறையாடப்பட்டன. குடியிருப்புகளும் தொழில் நிலையங்களும் எரியூட்டப்பட்டன. உலக அரங்கில் இலங்கையின் நற்பெயரைக் களங்கப்படுத்திய இந்தக் கொடூரம் ஐ.தே.கட்சி ஆட்சியில்தானே இடம்பெற்றது. ஐ.தே.கட்சியின் ஆதரவுடன் தானே இடம்பெற்றது.

1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மாகாண சபைக்கு வழங்கப்பட்ட பற்றாக்குறை அதிகாரங்களைக் கூட நடைமுறைப்படுத்தாது அதை வெறும் காட்சிப் பொருளாக வைத்திருந்தாலும் அடுத்த ஆட்சியாளர்களுக்கு அதைத் தொடர வழிகாட்டியதும் ஐ.தே.கட்சி அல்லவா?

விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கின் பெரும் பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த நிலையில் அவர்களுடன் பேச்சுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஐ.தே.கட்சி அரசுக்கு எழுந்துள்ளது. இவ்வகையில் 2002இல் ஒஸ்லோவில் முதல் சுற்று இடம்பெற்றது. அதில் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஒரு சமஷ்டி முறையிலான தன்னாட்சி அதிகார சபை மூலம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்வது என இணக்கம் காணப்பட்டது. ஆனால் 5 சுற்றுப் பேச்சுகள் உலகின் பல்வேறு தலைநகரங்களில் இடம்பெற்ற போதிலும் எந்தவொரு சிறு முன்னேற்றமும் காணப்படவில்லை. மாறாக விடுதலைப் புலிகளின் பேரம் பேசும் சக்தியைக் குறைப்பதில் ஐ.தே.கட்சியின் மறைமுக சதிகளில் ஈடுபட்டனர். இவ்வகையிலேயே விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கருணாவை புலிகளுடன் முரண்பட வைத்து வெளியேற வைத்தனர்.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பகிரங்கமாகவே செயற்பட்டார். இவ்விடயத்தில் புலிகள் பலவீனமடைந்ததும் அவர்களின் தோல்விக்கும் அதுவும் ஒரு காரணமாய் அமைந்ததும் உண்மை தான். ஆனால், அதன் காரணமாக அடுத்து வந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறக் கூடிய ஒரே ஒரு சந்தர்ப்பத்தையும் ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க இழந்தார்.

அதாவது ஐ.தே.கட்சியின் நிலைமை "பிறர்க்கிடு பள்ளம் தான் விழுபள்ளம்" என்றாகிவிட்டது. இப்போ ஐ.தே.கட்சியிலிருந்து பலரும் பகுதி பகுதியாக வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் பலரும் வெளியேறத் தயாரான நிலையிலுள்ளனர். ஜனநாயக மக்கள் முன்னணியிலிருந்தும் ஒருவர் வெளியேறிவிட்டார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட அரசுக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளது. மலையகக் கட்சிகளும் ஐ.தே.கட்சியை விட்டு தூரப் போய்விட்டன. மெல்ல மெல்ல தனிமைப்பட்டு தன்னை அழித்துக் கொள்கிறதா ஐ.தே.கட்சி என்ற கேள்வி பலர் மத்தியிலும் எழுந்துள்ளது.

எப்படியிருந்த போதிலும் திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்ட கருத்து ஐ.தே.கட்சி கடந்த காலங்களில் மேற்கொண்ட தமிழ் மக்கள் விரோதக் கொள்கைகளின் ஒரு தொடர்ச்சி என்றே நம்புகின்றனர்.

எப்படியிருந்த போதிலும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை ஐக்கியப்படுத்தி முன்செல்லக்கூடிய ஒரு நியாயமான நேர்மையான கொள்கையை முன்வைத்து ஐக்கிய தேசியக் கட்சி தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் போகிறதா அல்லது இப்படியே தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப்போகிறதோ அல்லது இப்படியே தன்னைத் தனிமைப்படுத்தி அழிந்து போகப் போகிறதா என்பதே இப்போது எழும் கேள்வி. அதை அதன் தலைவர்களே தீர்மானிக்க வேண்டும்.

# ஊடகங்களின் மீதான அரசின் உளவியல் போர்

**ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை கண்டித்து வெளியிட்ட அறிக்கை**


மீண்டும் ஒரு முறை ஜனநாயகத்தின் குரல்வளையை வன்முறை மூலம் நசுக்குவதற்காகவே தினக்குரல் பத்திரிகை தீயிட்டு எரிக்கப்பட்டு, அதன் விநியோகப் பணி ஊழியரும் தாக்கிக் காயப்படுத்தப்பட்டுள்ளார். நாட்டில் ஜனநாயகச் சூழலும் ஊடக சுதந்திரமும் நிலைக்கக்கூடாது என்று விரும்பும் சக்திகளே இந்தக் காரியத்தில் ஈடுபட்டுள்ளன.

படையினரின் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ள குடாநாட்டில் தொடர்ந்தும் ஊடகங்கள் மீது மேற்கொள்ளப்படும் இத்தகைய அடாவடிகளுக்கு மாவட்ட கட்டளைத் தளபதி என்ற வகையில் ஹத்துரு சிங்கவே பொறுப்புக் கூற வேண்டும்.

மக்களின் உணர்வுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில், குறிப்பாக பல்கலைக்கழகச் சூழலில், தேவையற்ற வகையில் படைப் பிரசன்னத்தையும் பாதுகாப்பையும் அதிகப்படுத்தி, அறிக்கைகளை வெளியிட்டு நெருக்கடியான சூழலை ஏற்படுத்தும் ஹத்துரு சிங்க, ஊடகங்கள் மீது மேற்கொள்ளப் படும் வன்முறை சார் சம்பவங்கள் குறித்து மௌனித் திருப்பது சந்தேகத்தை உண்டு பண்ணுகின்றது.

கடந்த மாதம் ஜனவரி 10 ஆம் திகதி வடமராட்சியில் வைத்து உதயன் விநியோகப் பிரிவு ஊழியர் முட்கம்பி சுற்றப்பட்ட பொல்லுகளால் அடித்துப் படுகாயப்படுத்தப்பட்டார்.

அவரது மோட்டார் சைக்கிளுடன் உதயன் பிரதிகளும் நடு வீதியில் வைத்து எரியூட்டப்பட்டன. ஆனால் அது குறித்து இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணைகளிலும் எதுவித முன்னேற்றமும் இல்லை.




இப்போது மீண்டும் அதே பாணியில் தினக்குரல் பத்திரிகையின் விநியோகப் பணியாளர் தாக்கப்பட்டு, அவரது மோட்டார் சைக்கிளும் பத்திரிகைப் பிரதிகளும் கொளுத்தப்பட்டுள்ளன. இந்த இரு சம்பவங்களிலும் ஒரே கும்பலே சம்பந்தப்பட்டுள்ளது.

வன்முறை நிகழ்ந்த விதம், முட்கம்பி சுற்றப்பட்ட பொல்லுகளாலான ஆயுதம், சம்பவத்தின் நோக்கம் என்பன இதையே தெளிவுபடுத்துகின்றன. தற்போது யாழ்ப்பாணத்தில் அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் உண்மையின் குரலாக ஒலிக்கும், உதயன், தினக்குரல், வலம்புரி போன்ற ஊடகங்களின் குரலை இல்லாமல் செய்யும் ஒரு நிகழ்ச்சி நிரலில் அரசும், அரசுக்கு குடை பிடிக்கும் அடாவடிக் கும்பலும் திட்டமிட்டு செயற்படத் தொடங்கியுள்ளன.

அதிகார ஊதுகுழல் ஊடகங்களை மக்கள் புறக்கணித்த நிலையில், மக்கள் சார்பு ஊடகங்களை ஒடுக்குவதன் மூலமே தமது கருத்துகளை மக்களிடம் திணிக்கலாம் என அதிகாரம் சார்ந்தவர்களும், அவர்களின் அடி வருடிகளும் எண்ணுகின்றனர்.

வடமாகாணத் தேர்தலுக்கு முன்பாக தமது கருத்துகளை மக்களிடம் திணித்து, அதன் மூலம் வாக்குகளைத் தம் பக்கம் திருப்பும் மூன்றாம்தர செயற்பாடுகளிலேயே இந்தத் தரப்பினர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஜனநாயக ரீதியில் ஊடகங்களையும் அவற்றின் கருத்துக்களையும் எதிர்கொள்ள திராணியற்ற இவர்கள், புறமுதுகில் குத்துவதைப்போன்று தமது கொலைக் கருவிகளின் உதவியோடு வன்முறை வழிகளை நாடத் தொடங்கியுள்ளனர்.

## திட்டமிடப்பட்ட உளவியல் போர்

பத்திரிகைகளின் விநியோகப் பிரிவினரைத் தாக்குவதன் மூலம், ஊடகத் துறையினரின் மனோதிடத்தை சிதைப்பதே தாக்குதலாளிகளின் நோக்கமாக இருந்துள்ளது. இது ஒரு திட்டமிட்ட உளவியல் போர். இத்தகைய உளவியல் போர் ஊடகங்கள் மீது பிரயோகிக்கப்படுவது இது முதல் முறையல்ல. இதற்கு முன்னரும் பல தடவைகள் வெவ்வேறு வழிகளூடாக மேற்கொள்ளப்பட்ட இந்த உளவியல் போரை உண்மையின் துணை கொண்டு ஊடகங்கள் எதிர்கொண்டன.

இத்தகைய நெருக்குவாரங்களின் மத்தியிலும் தினக்குரல் பத்திரிகை தனது கொள்கையில் இருந்து விடுபடாது, ஜனநாயகத்தினதும், மக்களினதும், உண்மையினதும் குரலாக ஒலித்து வந்தது. எனவே அந்த ஊடகத்தை இது போன்ற வன்முறைகள் ஒரு போதும் சிதைத்துவிட முடியாது.

விழவிழ விதைகளாக எழுவதுபோல, இதுபோன்ற வன்முறைகள் தினக்குரல் பணியாளர்களை இன்னமும் மனோதிடம்மிக்கவர்களாக மாற்றி அவர்களின் உண்மையின் குரல் இன்னமும் உரத்த தொனியில் ஒலிக்கும்.

உலக அரங்கில் ஊடக சுதந்திரத்தில் 165 ஆவது இடத்துக்கு கடந்த வருடம் இலங்கை தள்ளப்பட்டிருந்தது. இன்னமும் விடாது தொடருகின்ற ஊடகங்கள் மீதான வன்முறைகளால் இந்தநாட்டில் ஊடக சுதந்திரத்தின் நிலை மேலும் மோசமாகி விடும்.

அத்துடன் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் இது போன்ற வன்முறைகள் பெரும் தடைக் கற்களாக மாறிவிடும் அபாயம் உண்டு. ஊடகங்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் வன்முறைகளை கட்டுப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறில்லாமல் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் ஜனநாயக குரலோடு வெளிவரும் ஊடகங்கள் மீது வன்முறைப் பாய்ச்சல் நிகழுமாயின் அதற்கு அரசும், அரசின் பிரதிநிதியான வடமாகாண ஆளுநரும், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியுமே மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் பொறுப்புக் கூறவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்படுவார்கள்.

# தேசியம், சுயநிர்ணயம் குறித்த கொள்கையில் தமிழ்க் கட்சி அரங்கத்தின் நிலைப்பாடு என்ன ?

**தமிழ்க் கட்சிகளின் அரங்கம் ஆரம்பிக்கப்பட்டதையொட்டி வெளியிட்ட அறிக்கை**

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் என்ற பெயரில் இணைந்திருக்கும் அனைத்துக் கட்சிகளும் நேரடியாகவோ அல்லது நடைமுறையாகவோ அரசாங்கத்தின் ஆதரவு தளத்தில் நின்றே அரசியல் பேசுபவையாகும். அது மட்டுமன்றி கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்றைய அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள ஓர் அமைச்சர் என்பதும் கவனத்தில் எடுக்க வேண்டிய ஒன்றாகும்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஒரு நியாயமான நிலைப்பாட்டை எடுக்கத் தயாரற்ற இடம்பெயர்ந்த மக்களை இன்னும் அவல நிலையில் வைத்திருக்கின்ற துரிதமான சிங்கள குடியேற்றங்கள் மூலம் எமது மக்கள் காலம் காலமாக வாழ்ந்த மண்ணைப்பறித்து எமது பகுதிகளை சிங்கள மயப்படுத்தி வருகின்ற ஓர் அரசாங்கத்திற்கு பல வழிகளிலும் ஆதரவு கொடுக்கின்ற கட்சிகள் எமது இனப்பிரச்சினை தொடர்பாக நியாயமான கோரிக்கைகளை உறுதியுடன் முன்வைப்பார்கள் என நம்பமுடியுமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் தேசியம், சுயநிர்ணய உரிமை என்பன தொடர்பான ஒரு தெளிவான பார்வை கொண்டுள்ளது என்பதை அனைவரும் அறிவர். தமிழ் மக்களின் தனித்துவத்தை சிதைக்கும் வகையிலான எந்த ஒரு தீர்வையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளாது. தமிழ்க் கட்சிகளின் அரங்கம் எனப்படும் இக்கூட்டு அக்கொள்கையுடன் உடன்படுமா என்பதே இங்கு எழுந்து நிற்கும்

பிரதான கேள்வியாகும். இப்படியான ஒரு பின்புலத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான தமிழ்க் கட்சிகளின் கூட்டு தேசியம், சுயநிர்ணயம் தொடர்பாக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது முக்கியமானது ஆகும். இல்லாத பட்சத்தில் விடுவிக்கப்படும் ஐக்கியத்திற்கான கோரிக்கை "கண்களை மூடிக் கொண்டு கம்பத்தில் நடக்க அழைப்பது" போன்றே அமையும்.

எனவே தான் இப்படியான ஐக்கியத்திற்கான கோரிக்கையானது தமிழ் மக்களின் மத்தியில் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

தற்சமயம் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உட்பட இந்திய மத்திய அரசின் உயர்மட்டத்தினரும் தமிழக முதல்வர் மு. கருணாநிதி அவர்களும் இனப்பிரச்சினை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சிறிலங்கா அரசுக்கு இந்தியா சில அழுத்தங்களை கொடுக்கலாம் என்ற ஒரு கருத்து நிலையை உருவாக்கியுள்ளது.

இனப்பிரச்சினை விவகாரத்தைத் தொடர்ந்து இழுபறி நிலையில் வைத்துக் கொண்டு வடக்குக் கிழக்கை இராணுவ மயப்படுத்தி சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமிக்கும் நோக்குடன் செயற்படும் இலங்கை அரசுக்கு இது ஏற்புடையதாக இருக்க முடியாது.

எனவே இந்தியாவின் இத்தகைய முனைப்புக்களை திசைதிருப்பவும் காலங்கடத்தி மழுங்கடிக்கவும் அரசுக்கு ஓர் ஆயுதம் தேவைப்படுகின்றது. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தன்னுடன் பேச்சுக்கள் நடத்த முன்வந்துள்ளனர் எனக் கூறி இந்தியாவின் அழுத்தத்தைக் குறைக்கு முடியும். என இலங்கை அரசு நம்பினால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதில் இணைந்து கொண்டால் இந்தியா எதுவும் செய்து கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படலாம்.

அதாவது தமிழ்க் கட்சிகளின் ஐக்கியம் என்பதே தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளை வென்றெடுப்பதற்கு எதிராக பாவிக்கப்படும் ஓர் ஆயுதமாக இலங்கை அரசால் மாற்றப்படும் நிலைமை தோன்றலாம்.

இத்தகைய எதிர்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஐக்கியத்திற்கான கோரிக்கை மூலம் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையின் விரோதி என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளவும் முனையலாம். எனவே எமது தலைமை இது தொடர்பாக விரைவில் ஓர் அறிக்கை வெளியிடவுள்ளது.

எனவே தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்விவகாரத்தில் மிகவும் விழிப்புடன் இருப்பது மட்டுமன்றி அத்தமிழ் கட்சிகளின் அரங்கம் தனது தேசியம், சுயநிர்ணயம் தொடர்பான அதன் கொள்கையை தெளிவாக வெளியிடவேண்டும்.

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்கள் பன்முக ஆளுமை கொண்ட தலைவர். எத்தனை இடர்கள் துயர்கள் வந்த போதும் தான் கொண்ட கொள்கையில் இருந்து வழுவாத மாமனிதர். அவர் ஒரு மிகச்சிறந்த தொழில் அதிபர். முன்மாதிரியான அரசியல் தலைவர். துணிச்சல் மிக்க பண்பாளன். தேசப்பற்றாளன்; தமிழ்த்தேசியவாதி. தனது 60 வயதுக்குள் அவர் சாதித்தவைகள் ஏராளம். அதனிலும் பல பல மடங்கு சோதனைகளைத் தாங்கி நின்றபோதும் தளர்ந்து துவண்டுவிடாத ஒரு வீரத்தமிழன். அவரது அரும் பெருமைகளையும் ஆற்றல்களையும் பன்முகச் சாதனைகளையும் விளக்கிட இந்த நூல் போதாது. என்றாலும் அவர் பற்றிய ஓர் அறிமுகமாக இது அமையும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

மணிவிழாக் குழு

ANDRA PRINTERS: 021 221 7279